
# சரிநிகர் சமானமாக...

முரண்நிலைகளை உருமாற்றும் முறைவழிகளை
ஆண்களும் பெண்களும் சமானமாக
முன்னெடுக்கும் ஆற்றல்களை மேம்படுத்தல்

கைநூல் 2



சாந்தி
சச்சிதானந்தம்

வெளியீடு
விழுது
ஆற்றல் மேம்பாட்டு மையம்

# சரிநிகர் சமானமாக...

முரண்நிலைகளை உருமாற்றும் முறைவழிகளை
ஆண்களும் பெண்களும் சமானமாக
முன்னெடுக்கும் ஆற்றல்களை மேம்படுத்தல்

## கைநூல் 2

சாந்தி சச்சிதானந்தம்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்.

© Shanthi Sachithanandam

First Published : November 2004
No of Copies : 400

Front Cover Photograph : Mano Rajasingam

Published by : **Viluthu** - Centre for Human Resource Development

Illustrations by : Aruna Srinath

Printed by : E-Kwality Graphics
315, Jampettah Street,
Colombo - 13.
Tel : 2389848

Printing Supported by : **Australian Government**

## முன்னுரை

இயலாற்றல்களை மேம்படுத்துவதற்காகப் பணி செய்யும் பயிற்சியாளர்களின் பாவனைக்கென்று விழுது நிறுவனம் வெளியிடும் கைநூல்களின் தொடரிலே "சரிநிகர் சமானமாக" என்கின்ற இந்த இரண்டாவது கைநூலை உங்களுக்கு அளிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம். இத்தொடரின் முதல் நூல் "தடைகளைத் தாண்டி" என்பதாகும். இது பால்நிலை, பெண்ணியம் போன்றவற்றின் கருத்தேற்புக்களைக் கையாண்டது. இவற்றைக் கொண்டு பெண்களுக்கும் ஆண்களுக்கும் மத்தியில் சமூகம் பற்றிய விழிப்புணர்வை எவ்வாறு கொண்டு வரலாம் என்பதையும், இதன் மூலம் இனங்கண்ட ஒவ்வொரு விடயப் பிரச்சனையையும் தீர்க்கும் செயலாளிகளாக, பெண்கள் தாம் எப்படி உருவாகலாம் என்பதையும், பயிற்சிப் பாடவிதானங்கள் மூலமும் விவரணங்கள் மூலமும் அது விபரித்தது. அத்துடன், ஒரு பங்கேற்புமுறைப் பயிற்சியை நடத்துவதன் அடிப்படைகளையும் எடுத்துக் கூறியது.

அதன் தொடர்ச்சியாக, "சரிநிகர் சமானமாக" என்கின்ற இந்நூல், சமாதான முறைவழிகளில் பெண்களும் ஆண்களும் பங்குபெறும் முறைகளையும் அதற்காக அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பயிற்சிகளின் பாடவிதானங்களையும் தந்துதவுகின்றது. குறிப்பாக, பெண்கள் இதற்காகத் தங்கள் சமூக வகிபங்குகளை மாற்ற வேண்டிய தேவையையும் எடுத்துரைக்கின்றது.

இந்நூல் இந்தக் காலகட்டத்தில் வெளிக்கொணரப் படுவதற்கான முக்கிய காரணத்தை இதை வாசிக்கும் பயிற்சியாளர்கள் ஏற்கனவே ஊகித்திருப்பார்கள். ஈழம் என்கின்ற தனிநாட்டுக் கோரிக்கையின் அடித்தளத்தை அகற்றுவதன் மூலம் யுத்த முரண்பாடுகளிலிருந்து எமது நாட்டை மீட்டெடுக்க சர்வதேச சமூகம் முயன்று வருகின்ற காலம் இது. இதனால் அவை உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆதரவு வழங்குவதில் மட்டுமல்ல, இந்நாட்டுப் பிரஜைகள் மத்தியில் சமாதான எண்ணக்கருக்களைத் தூவவேண்டும் என்பதிலும் ஆர்வம் கொண்டுள்ளன. அதற்கேற்பவே தமது உதவும் வளங்களைப் பிரயோகித்துள்ளன. இந்த வருடமாகிய 2004ம் ஆண்டில், இலங்கையின் அரசுசாரா நிறுவனங்கள் செயற்படுத்தும் திட்டங்களில் அதிகளவான நிதிகள் பெறும் திட்டங்கள் சமாதானத் திட்டங்களாகவே உள்ளதைக் காணலாம். சமாதானத் திட்டங்களைப் பிரதானமாகக் கொண்டு இயங்கும் கொழும்பை நிலை கொண்டுள்ள அரசுசாரா நிறுவனங்கள் பலவற்றின் சராசரி வருடாந்தப் பாதீடு 3 கோடிகளுக்கு (30 மில்லியன்கள்) மேலாகும். இவற்றில் சிவில் சமூகத்தினர் மத்தியில் செயற்படுத்தப்படும் திட்டங்கள் அனேகமாக கொழும்பைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இயங்கும் அரசு சாரா நிறுவனங்களுக்கூடாகச் செயற்படுத்தப்படுகின்றன. அதிலும் பெரும்பான்மையானவை பெண்களை சமாதான முறைவழிகளில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் செயற்படுத்தப்படும் திட்டங்களாகவே இருக்கின்றன.

இவ்வகைத் திட்டங்களின் நடவடிக்கைகள் பலவகைப்படும். அவையாவன:

### முரண்பாடுகள் தணித்தல் பட்டறைகள்

இப்பட்டறைகள் இரு மனிதர்களிடையே சரியான தொடர்பாடலைப் பேணுவதன் மூலம் முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வது பற்றியும் அதன்போதில் மத்தியஸ்தம் வகிக்கும் விதங்கள் பற்றியும் கற்றுத் தருகின்றன.

### சமாதானச் செயலமர்வுகள்

இவை பல்வேறுபட்ட விடயங்களைக் கையாளும். கடந்த கால அரசியல் போக்குகளைப் பற்றியும் சமகால நிகழ்வுகள் பற்றியும் சிற்றுரைகள் மூலம் ஆராயலாம். அல்லது சமாதானம் பற்றி பங்குபற்றுவோர் கொண்டிருக்கும் உள்ளடக்கிடக்கைகளை வெளிக்கொணர்ந்து அவை தொடர்பான நடவடிக்கைகளை எடுக்கத் தூண்டலாம்.

### சமாதானக் கருத்தரங்குகள்

நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தம் அல்லது பேச்சு வார்த்தைகள் பற்றிய ஆய்வலசல்களினை அதில் நிபுணத்துவம் கொண்டவர்கள் மூலம் சமாதானக் கருத்தரங்குகள் மேற்கொள்கின்றன.

### சமாதான மாநாடுகள்

ஒரு குறிப்பிட்ட நிலைப்பாட்டினை எடுக்கும் அறிக்கையொன்றுக்கு பரந்துபட்ட மக்களின் ஆதரவினை அந்தந்த அரசுசாரா நிறுவனங்கள் ஏற்பாடு செய்யும் சமாதானக் கருத்தரங்குகள் மூலம் திரட்டி இறுதியில் அம்மக்களை ஒரு மாநாட்டில் ஒன்று சேர்த்து குறிப்பிட்ட

அறிக்கையைப் பகிரங்கப்படுத்தலாகும். சமாதான ஊர்வலங்களும் கிட்டத்தட்ட இந்த வகைக்குள் அடங்கும்.

### இனங்களுக்கிடையிலான அனுபவப் பகிர்வுகள்

வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த நிறுவனங்கள். பெண்கள். மாணவர்கள் என வித்தியாசமான குழுமங் களுக்கிடையில் அனுபவப் பகிர்வினை ஏற்படுத்துவதன் மூலம் புரிந்துணர்வையும் சௌஜன்யத்தையும் உரு வாக்குதல்.

மேலே குறிப்பிடப்பட்ட சகல திட்டங்களையும் நாம் அருகில் சென்று ஆராய்ந்து பார்ப்போமாகில் பல குறைபாடுகளை எளிதில் இனம் கண்டுவிடலாம்.

முரண்பாடுகளைப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ளுங்கள் என்று அரசியல் தலைவர் களுக்குப் போதிக்கும் சமாதான நிறுவனங்கள் தங்களுக்குள்ளும் தங்கள் நிறுவனங்களுக்குள்ளும் தோன்றும் முரண்பாடுகளைத் தீர்க்க வழி தெரியாமல் தவிக்கின்றன. இந்த மத்திய (அ:து - கொழும்பு) நிறுவனங்கள், பிராந்திய நிறுவனங் களை வளரவிடாமல் தமது அதிகார வலுவினைக் காப்பாற்றுவதிலும், திறமையுள்ள தனிநபர்கள் வளரவிடாமல் தடுப்பதிலும், நிறுவனங்களுக்கு மத்தியில் நிதிகள் குறித்த போட்டி பொறாமை களில் அமிழ்ந்திருப்பதிலும் தமது காலத்தைச் செலவிடுவதைக் காணலாம். பொறாமை மனிதர்களின் இயல்பாகும். அதை நாம் தவிர்க்க இயலாது. ஆனால் இவையெல்லாம் தொடர்பாக எழும் முரண்பாடுகளைத் திறந்த மனதுடன் பேசித் தீர்க்க வழிதெரியாமல் இந்நிறுவனங்களும்கூட முரண்நிலைகளை வளர்த்துக் கொள்ளுவதே துரதிர்ஷ்டவசமான நிலைமையாகும்.

'ஊருக்கடி உபதேசம் உனக்கில்லைடி' என்ற இந்த நிலைமை சமூகப் பணிக்கு ஒவ்வாததாகும். சமூகப் பணியில் மக்களுடன் வேலை செய்யப்புகும்போது திறந்த நேர்மையும், போதிக்கும் கொள்கையை முதலில் நாம் எமது வாழ்க்கையில் முழுதாக நடத்திக் காட்டும் தலைமைத்துவப் பண்பும் தேவை. இக்காரணங்களினால் இந்நிறுவனங்கள் மக்கள் மத்தியில் நம்பிக்கையை வளர்க்கத் தவறிவிடுகின்றன. இதை ஆங்கிலத்தில் 'Losing the moral highground' என்பார்கள்.

யதார்த்தபூர்வமாக, அரசியல் என்பது அதிகாரவலு தொடர்பானது. எனவே, அதிகாரவலு உள்ளவர் களினால்தான் சமாதானம் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளமுடியும் என நாம் அனுமானிக்கலாம். அரசுசாரா நிறுவனங்கள் இந்த அதிகாரவலுவிற்கு வெளியே சஞ்சாரம் செய்பவை யாகும். அதிலும், தாம் அரசியல் நடுநிலைமை காப்பவை என்று சொல்லிக் கொள்ளுபவை யாகும். அரசியலும் இல்லாது அதிகாரவலுவும் இல்லாது, இவை தங்கள் சமாதானத் திட்டங் களுக்கு என்ன நோக்கங்கள் இடப்படலாம் என்பதிலேயே குழம்பி நிற்கின்றன.

சமாதானம் உருவாக்கும் கோட்பாடுகள் எல்லாம் முரண்நிலைகளின் அதிகரிப்பையும் தணிப்பையும் ஒரு நேர்கோட்டில் விளங்கப்படுத்தத் தலைப் படுகின்றன. ஆனால் நிஜத்தில் அவ்வாறு நேர்த்தியாக அரசியல் நிலைமைகள் மாறு வதில்லையென்று நாம் அறிவோம். பல நூறு தேசிய சர்வதேச காரணிகள் ஒவ்வொரு அரசியல் நிலைமையின் மாற்றத்திலும் செல்வாக்குச் செலுத்துகின்றன. ஒரு நிலைமையை விளங்கிக் கொண்டால்தான் அதிலுள்ள பிரச்சனைகளுக்குத் தீர்வு காணலாம் என்பது உண்மையானால், சமாதான நிறுவனங்களிலுள்ளவர்கள் இந்த அரசியல் குழப்பங்களுக்குள் எவ்வாறு தெளிவு காண்பது என்பதும் ஒரு கேள்வியாகும். இதனால் சமகாலப் பிரச்சினைகளை மேலோட்டமாக மட்டுமே அணுகும் நிலை ஏற்படுகின்றது.

சமாதான நிறுவனங்கள் பாரிய நிதிகளுடன் திட்டங்களைச் செயற்படுத்துவதும் ஒரு பிரதி கூலமாகும். இதனால் நிதிகளைப் பெறும் முக்கிய நோக்கத்துடனேயே திட்டங்கள் பல செயற் படுத்தப்படுகின்றன. இதனால் சமாதானத் திட்டங்களில் கையாளப்படும் யுத்திகள் ஒரே விதமானவையாக எப்போதும் இருக்கின்றன. ஒரு தரம், இரண்டு தரம், மூன்று தரம் என எத்தனையோ தடவைகள் ஊர்வலங்கள் சென்று மகஜர்கள் கையளித்து ஆர்ப்பாட்டம் செய்து பலன் கிடைக்காவிடினும் திரும்பத் திரும்ப அதே யுத்திகளே கையாளப்படுவதைக் காண்கிறோம். இதனால் மக்கள் பொது நடவடிக்கைகளிலேயே நம்பிக்கை இழந்துவிடும் ஆபத்து உருவாகின்றது. எனவே எந்த சிவில் சமூகத்தின் இயக்கத்திற்கான நோக்கத்துடன் இந்நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டனவோ அந்த சிவில் சமூகமே தனது

இயக்கத்தை இழக்கப் பண்ணும் பின்விளைவு களில்தான் கொண்டு விடுகின்றது.

☹ சமாதானப் பட்டறைகள், கருத்தரங்குகள் எனத் தொடர்ந்து நடத்தப்படுகின்றன. ஆனால் இவை யெல்லாம், வீட்டுக்கு வீடு, ஊருக்கு ஊர் சென்று மக்களை விழிப்புணரச் செய்யும் அரசியல் நடவடிக்கைகளைப் பிரதியீடு செய்ய முடியாது என்பது உணரப்படுவதில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் முனைப்பாக முன்னெடுக்கப்படும் அரசியல் விழிப்புணர்வு நடவடிக்கைகளே மக்களின் மனதில் தீர்க்கமான மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய நடவடிக்கைகளாகும்.

### சமாதானத் திட்டங்களில் காணப்படும் குறைபாடு களினால் ஏற்படும் விளைவுகள்

☞ தெளிவான நோக்கங்கள் இல்லாத திட்டங்கள் வரையப்படுதல்.

☞ மக்களின் விழிப்புணர்வினைத் தூண்டுவதும், அவர்களைத் தங்கள் சொந்தச் செயற்பாட்டில் பங்குபற்றவைப்பதுமான ஒருங்கிணைந்த திட்டச் செயற்பாடுகளைச் செய்யத் தவறுதல்.

☞ பொருத்தம் இல்லாத திட்டப் பயனாளிகளைத் தேர்ந்தெடுத்தல்.

☞ தொடர்ச்சியில்லாத அங்கொன்றும் இங்கொன்று மான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

☞ நீதி எது அநீதி எது என்கின்ற அரசியல் களையப் பட்ட 'நடுநிலையான' வெற்று சமாதானத் திட்டங் களைச் செயற்படுத்தல்.

☞ வரலாறு புரியாத நிலையில், எத்தனை பட்டறை களுக்கு மக்கள் போய் வந்தாலும், அதன்பின் இனவாதப் பிரச்சாரங்கள் அரசியல் கட்சிகளினால் முடுக்கப்படும்போது மக்கள் அப்பிரச்சாரங்களை நம்பும் தன்மை காணப்படுதல்.

☞ அதிகாரத்திலுள்ளோர் கருத்தில் கொள்ளாத அறிக்கைகளையும் மகஜர்களையும் தயாரிப்பதில் முயற்சிகளை விரயமாக்குதல்.

☞ போக்குவரத்து வசதியும் உணவுச் செலவும் கொடுத்து ஆட்களைத் தருவிக்கும் உண்மை யல்லாத ஆர்ப்பாட்டக் கூட்டங்களை ஏற்பாடு செய்தல்.

☞ சமாதான நடைமுறைகளில் இயங்காத பெண்கள் குழுக்களை சும்மா தக்கவைத்துக் கொண்டு இருத்தல்.

☞ மாறி மாறி ஒரேவிதமான செயற்பாடுகளைச் செய்து அவற்றிற்கு பலனேதும் கிடைக்காததனால் மக்கள், தாம் அரசியல் போக்குகளைத் தீர்மானிக்க முடியும் என்கின்ற நம்பிக்கையைப் படிப்படியாக இழத்தல்.

☞ பிரதேச மட்டங்களில் உள்ள அரசுசாரா நிறுவனங்கள் மூலம் தாம் செயற்படுத்திய திட்டங் களைக் காட்டி கொழும்பை நிலை கொண்டி ருக்கும் நிறுவனங்கள் மேலும் மேலும் நிதிகளைப் பெறக் கூடியதாக இருப்பதனால் பிரதேச மட்ட நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் கொழும்பு நிறுவனங்கள் இன்னும் பலம் வாய்ந்தவையாக வளருதல்.

### இந்நூலின் பணி

மேலே நிரற்படுத்தப்பட்ட குறைபாடுகளை அகற்றி, பொதுவாக எல்லோருக்கும், குறிப்பாகப் பெண்களுக்கு, பயன்தரும் சமாதானத் திட்டங்களைச் செயற்படுத்த உதவுவதே இந்நூலின் நோக்கமாகும். இதற்காக முரண்பாடுகளின் தன்மை பற்றியும் அதன் அரசியல் உள்ளடக்கத்தைப் பற்றியும் இது விளக்க எத்தனிக்கின்றது. வன்முறையை நாடாமல் முரண் பாடுகளைத் தீர்க்கும் முதிர்ச்சி கொண்ட சமூக மொன்றே எமது நீண்ட கால இலக்கு என்பதை வரையறுத்துக் கொண்டு அதற்குத் தேவையான பண்பாட்டினை மக்கள் மத்தியில் எப்படி உருவாக்க லாம் என்பதைப் பரிசீலிக்கின்றது. அதற்கான பயிற்சிப் பாடவிதானங்களையும், அதிலும் முக்கியமாக, திட்ட நடவடிக்கைகளையும் கோடு காட்டுகின்றது. முரண் நிலைகளை உருமாற்றும் திறன்களை வளர்த்துக் கொள்ள விரும்புபவர்களுக்கும், ஒரு இனப்பிரச்சனை யின் தீர்வு என்னென்ன உருவில் இருக்கலாம் என்பதை அறியவும் அந்த விடயத்தில் பிறருக்குப் பயிற்சி அளிக்கவும் விரும்புபவர்களுக்கும், இவை பற்றி விரிவாக பின்னிணைப்புக்களாகத் தரப்பட்டுள்ளது. சமாதானப் பட்டறைகளில் இவை வாசிப்புத் துணை களாக உபயோகிக்கப்படலாம்.

இந்தப் பின்னிணைப்புக்களில் கொடுக்கப்பட்டி ருக்கும் கருத்துக்கள் முடிந்த முடிபுகள் அல்ல என்பதை வாசிப்பவர்கள் நினைவில் நிறுத்திக் கொள்ளுதல் நன்று.

இவை வழிகாட்டல்கள் மட்டுமே. ஒரு விடயத்தை அல்லது பிரச்சினையின் தீர்வை இப்படியும் பார்க்கலாம் என்றே கூறுகின்றன. எங்கள் சமூகத்துக்குப் பொருத்த மான வழியைத் தேடிக் கண்டு பிடிப்பது எங்கள் ஒவ்வொருவரினதும் பொறுப்பாகும்.

இந்த விதத்தில் இந்நூல் தடைகளைத் தாண்டி என்ற நூலினுடைய தொடர்ச்சியாகும். அந்த நூலிலும் சமாதான முறைவழிகளில் பெண்கள் பங்குகொள்ள வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டிருந்தது. அதற்கான செயல்திட்டங்களும் பயிற்சிப் பாடவிதானங் களும் கொடுக்கப்பட்டிருந்தன. சரிநிகர் சமானமாக என்னும் இந்நூல் அந்நடவடிக்கைகளை அடுத்த படிநிலைக்கு இட்டுச் செல்ல முயற்சிக்கின்றது.

முக்கியமாக, முரண்பாடுகளைப் பற்றியும் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் முறைகள் பற்றியும் சிந்திப்பதிலும் பேசுவதிலும் கொழும்பைச் சார்ந்த புத்திஜீவிகள் கொண்டுள்ள ஏகபோக செல்வாக்கினை மாற்றி, அவை தொடர்பான அறிவை சகலருக்கும் பகிர்ந்தளிக்க இந்நூல் ஆரம்பித்திருக்கின்றது. இன்று முரண்நிலைகள் தொடர்பான பயிற்சித் திட்டங்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடுபவர்கள் எல்லோருமே மேல்நாட்டு நிறுவனங்களும் பல்கலைக்கழகங்களும் கொண்டு தந்த கோட்பாடுகளைத்தான் கைக்கொள்ளு கின்றனர். இக்கோட்பாடுகளெல்லாம் அனேகமாக, ஒரு சிறுபான்மைத் தேசியத்தின் சுயநிர்ணய உரிமையினை "அனுசரிப்பு" அல்லது "திறமையாகப் பேரம் பேசுதல்" என்ற போர்வையின் கீழ் விட்டுக்கொடுப்பதைப் பற்றித்தான் பேசுகின்றன எனலாம். நாம் இதிலிருந்து வேறுபடுகின்றோம். சுயநிர்ணய உரிமையை நிலை நாட்டிக் கொண்டும் நிலைபேறான சமாதானத்துடன் வாழ முறைகள் உண்டு என்று நாம் நம்புகின்றோம். வெறுமனே இனங்கள் மூன்றும் ஒன்றாக இருந்து நட்பு பேணுவதோ அல்லது எப்படி கருத்துக்கள் தெரிவிக்கப் படலாம் என்ற தொடர்பாடல் கலையைக் கற்பதோ மட்டும் சமாதானம் அல்ல. அல்லது சமாதானம் என்பது ஒரு நாடு என்று சொல்லிக்கொண்டு நாம் வாழ்வது மல்ல. உண்மையில் அது மக்களெல்லோரும் தத்தமக்கு இயலுமான படிநிலைகளில் பங்குபெறும் வண்ணம் வடிவமைக்கப்பட்ட அரசியல்கட்டமைப்புக்களை ஏற்படுத்தி அவறறை செயற்படுத்துவதற்கான பொறி முறைகளை ஸ்தாபனப் படுத்துவதாகும். இது நீதியும் ஜனநாயகமும் கொண்டவொரு நடைமுறையாகும். இது ஒற்றையாட்சியாகவும் இருக்கலாம், ஒருங் கிணைந்த ஆட்சியாகவும் இருக்கலாம், பன்னாட்சி வடிவிலும் இருக்கலாம்.

அத்தகைய சமாதான முறைவழிகள் எப்படி தோற்றுவிக்கப்படலாம் என இந்நூலை வாசிப் போர்களை சிந்திக்க வைத்தாலேயே போதும் இந்நூல் தனது நோக்கத்தை அடைந்து விட்டது என்று கூறலாம். இதனால்தான், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதைப் பற்றிய கோட்பாடுகள் எங்கள் மண்ணின் பிரத்தியேக நிலைமைகளின் அடிப்படையில் எங்களினால் உரு வாக்கப்பட வேண்டும் என இது வலியுறுத்துகின்றது. சமாதான செயற்பாடுகளுக்கெல்லாம் ஒரு தெளிவான அரசியல் உள்ளடக்கம் தேவை என்றே கூறுகின்றது.

இவற்றைத் தவிர, எமது முதல் கைநூலைப் பற்றி எழுந்த விமர்சனங்களின் பயனாகவும் இதில் திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளோம். தடைகளைத் தாண்டி என்கின்ற நூல் கூட எழுத்து நடையில் இருக்கின்றது என்றும் அதன் பக்க அமைப்புக்கள் எளிமையாக்கப்பட வேண்டும் என்றும் பலர் அபிப்பிராயப்பட்டார்கள். நாம் அதை நினைவில் கொண்டு இந்நூலில் இயலுமான வரையில் அட்ட வணைகளில் விடயங்களை எளிமையாகத் தர முயற்சித்திருக்கின்றோம். அத்துடன், கொடுக்கப்பட்ட பாடவிதானங்களை உபயோகிக்கும்போது அப் பயிற்சிகளை மீளாய்வு செய்யும் முறைகளும் கட்டாய மாகக் குறிப்பிடப்படவேண்டும் என்றும் அறியத் தந்தார்கள். அதன்படி, கொடுக்கப்பட்ட பயிற்சிகளுக்கு மட்டுமல்ல, செயற்திட்டங்களுக்கும் மீளாய்வு செய்யும் முறைகள் சிலவற்றையும் தந்திருக்கின்றோம்.

மொத்தத்தில், முரண்நிலைத் தீர்வின் நுணுக்கங் களைத் தெரிந்த, அந்த முறைவழியில் பங்குபற்றும் ஆற்றல் கொண்ட, ஒரு சமூகத்தை உருவாக்க முனையும் பயிற்சியாளர்களுக்கும் செயலாளிகளுக்கும் இந்நூல் உறுதுணையாக இருக்கும் என்று நம்புகின்றோம்.

இது உங்கள் ஒவ்வொருவரினதும் சமாதானப் பணியின் வெற்றிக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற பிரார்த்தனையுடன் தொடர்வது.


**சாந்தி சச்சிதானந்தம்**

**விழுது,** ஆற்றல் மேம்பாட்டு மையம்

நவம்பர் 2004

*A borrowed fiddle does not finish a tune.*
*- Zimbabwean Proverb*

# உள்ளடக்கம்.....




| | | | |
|---|---|---|---|
| | | அறிமுகம் | ... 6 |
| **அத்தியாயம்** | *1* | முரண்பாடுகளின் தன்மையும் அதன் வெளிப்பாடுகளும் | ... 11 |
| **அத்தியாயம்** | *2* | சமூகங்கள் அல்லது குழுக்களிடையே தோன்றும் முரண்நிலைகளின் வகைகள் | ... 17 |
| **அத்தியாயம்** | *3* | சர்வாதிகாரமா? ஜனநாயகமா? | ... 22 |
| **அத்தியாயம்** | *4* | சமாதான முறைவழிகளில் மக்கள் பங்கேற்கும் முறைகள் | ... 27 |
| **அத்தியாயம்** | *5* | பெண்களும் சமாதானமும் | ... 32 |
| **அத்தியாயம்** | *6* | மாதிரிப் பயிற்சிப் பாடவிதானங்களும் திட்டச் செயற்பாடுகளும் | ... 38 |
| | | பாகம் - 1 சமரதானத் திட்டங்கள் | ... 40 |
| | | பாகம் - 2 சமாதானப் பயிற்சிகள் | ... 46 |
| **அத்தியாயம்** | *7* | வெகுசன ஊடகங்களை சமாதான உருவாக்கத்தின் பணியில் பயன்படுத்தும் முறைகள் | ... 81 |


## பின்னிணைப்புக்கள்



| | | |
|---|---|---|
| | பெண்களின் ஆற்றல்களை வலுப்படுத்துதல் | ... 91 |
| **வாசிப்புத் துணையேடு** *1* | முரண்நிலைளை உருமாற்றுவதற்கான கருவிகள் | ... 97 |
| **வாசிப்புத் துணையேடு** *2* | ஜனநாயக அரசின் கட்டமைப்புக்கள் | ... 120 |

பதப் பிரயோகங்கள் ... 129

அறிமுகம்

# 'யுத்தமே வேண்டாம்'


யுத்தங்கள், அதாவது வன்முறையாக வெடித்த மூர்க்கமான முரண்பாடுகள், மனித வரலாற்றின் பிரிக்க முடியாத அம்சமாகவே நாம் காணலாம். எங்களுடைய வரலாறுகள் முழுவதும் இராஜாக்கள் புரிந்த போர்களைப் பற்றியும் உள்நாட்டுக் கலகங் களைப் பற்றியும் தான் கூறுகின்றன. எமது சமய இலக்கியங்கள் பலவும் யுத்தங்களை நியாயப்படுத்து பவையாகவே எழுதப் பட்டிருக்கின்றன. இதற்குக்



காரணம் இல்லாமல் இல்லை. மனிதர்களுக்குத் தெரிந்த அவர்களுடைய 5,600 வருட வரலாற்றில் 14,500 யுத்தங்கள் நடைபெற்றிருக்கின்றனவாம். இந்த எண்ணிக்கை உலக நாடுகளெல்லாவற்றிலும் இருந்த குறுநில மன்னர்களின் சிறு போர்களைக் கணக்கெடுக் காமல் பெரிய அடிபாடுகளை மட்டும் வைத்துக் கணிக்கப்பட்ட எண்ணிக்கையாகும். எனவே யுத்தம் இல்லாத வாழ்க்கையை மனிதர்களால் கற்பனை செய்யக்கூட முடியாமல் இருந்ததில் ஆச்சரியமில்லை.

ஆதி காலத்தில் மனிதர்கள் ஊரின் எல்லைகளி லேயே எப்போதும் போரிட்டனர். இதனால் அப்போர்களில் படை வீரர்கள்தாம் அனேகமாகப் பலியாக்கப்பட்டனர். இவற்றால் பாமர மக்களுடைய வாழ்க்கை பெருமளவு பாதிக்கப்படவில்லை. ஆனால் உற்பத்திகள் உபரியாகப் பெருகி செல்வம் குவிந்து அதன் பயனாக சிக்கலான தேசிய அரசு கட்டமைப்புக் கள் உருவாகிக் கொண்டுவர படிப்படியாக யுத்தம் மேற்கொள்ளப்பட்ட முறைகள் மாறத் தொடங்கின. எதிரித் தலைமையினுடைய படைப்பலத்தை மட்டும் வெற்றி கொள்வது போதாதெனக் காணப்பட்டு, அந்த எதிரியுடைய ஆதரவுத் தளமாக இருக்கும் மக்களது சமூக பொருளாதாரத் தளங்களும் அழிக்கப்படுவது வழக்கமாயிற்று. யுத்தங்கள் போர்க்களங்களுக் குள்ளிருந்து கிராமங்களுக்குள்ளும் நகரங்களுக்குள்ளும் நுழைந்தது இந்த வகையில்தான். பொதுமக்கள் யுத்தங்களில் தங்கள் உயிர்களையும் உடைமைகளை யும் இழந்து பாரிய அழிவுகளைச் சந்திப்பது இந்தக் காலகட்டத்திலிருந்து ஆரம்பமாகியது.

அம்பும் வில்லும் வாளும் கொண்டு சாதித்ததை, தன்னியக்கத் துப்பாக்கிகளும் எறிகணைகளும் விமானக் குண்டுத் தாக்குதல்களும் கொண்டு செய்தால் என்ன நடக்கும்? நாம் கற்பனை செய்ய முடியாத அழிவு நடக்கும். அதுதான் 20ம் நூற்றாண்டில் நிகழ்ந்த பேரழிவுகளாகும். உயரிய ஆயுதத் தொழில்




நுட்பத்துடன் பொதுமக்கள் மத்தியிலேயே யுத்தங்கள் புரியப்படுவதனால் அதிகளவு அழிவும் ஏற்படலாயிற்று. அரசியல் அதிகாரம் ஒரு அரசில் மையப்படுத்தப்படும் போக்கு உருவாக உருவாக அந்த அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட யுத்தங்கள் மக்கள் மத்தியில் நிலைகொண்டு போரிடப்படும் கெரில்லா யுத்த முறையாகியது. இம்முறை பல நாடுகளில் வழக்காகிய தும் அங்குள்ள பொது மக்களின் அழிவுக்கு இன்னொரு காரணமாகியது.

இன்றெல்லாம், யுத்தத்தில் இறப்போரில் 80 வீதமானோர் பொதுமக்களாகவே இருக்கின்றனர். உதாரணமாக, 20ம் நூற்றாண்டில் யுத்தத்தினால் இறந்த 90 மில்லியன் மக்களில் 70 மில்லியனுக்கும் அதிகமானவர்கள் யுத்தத்தில் எதுவிதத்திலும் நேரடியாக ஈடுபடாத பொதுமக்களாகும். அதிலும், இறப்புக்கள் யுத்தத்தினால் ஏற்படும் அழிவுகளின் ஒரு சிறிய வீதமேயாகும். அதைவிட கோடானுகோடி மக்கள் யுத்தத்தினால் தொழில் இழந்து, வீடு வாசல் இழந்து, சொத்துக்கள் இழந்து, கல்வி இழந்து, தமது கலாசாரப் பாரம்பரியங்களை இழந்து, மன நிம்மதி இழந்து, ஏன், தங்கள் எதிர்காலத்தையே இழந்து நிராதரவாக நின்றிருக்கின்றனர், நிற்கின்றனர். இதிலிருந்து யுத்தத்தின் கொடூரத்தை உணர்ந்து கொள்ளலாம்.

ஆனால் யுத்தத்தின் விளைவுகள் கண்கூடாகக் காணக் கூடிய இவ்வகையான அழிவுகள் மட்டுமல்ல. உடனடியாகக் கண்ணால் பார்க்க முடியாத பல விளைவுகளும் அதனால் ஏற்படுகின்றன. யுத்தத்தைச் சந்தித்த சமூகம் தானும் இராணுவமயப் படுத்தப்படுகின்றது. அதன் மத்தியில் அதிகாரவலுவின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட சமூக அமைப்புக் களும் அதற்கேயுரிய பண்பாடுகளும் தோன்றுகின்றன. இவை வளர விடப் பட்டால், அவற்றை அகற்றுவதற்கு பல சந்ததிகள் பிடிக்கின்றன. யுத்தச் சூழ்நிலையில் வாழுகின்ற இலங்கை யின் வட - கிழக்குப் பிரதேசங்களில் இதற்கான பல உதாரணங்களைக் காணலாம்.

முதலாவதாக, இப்பிரதேசங்களில் எங்கள் மொழிப் பிரயோகங்கள்கூட ஒரு வகையில் இராணுவமயப்படுத்தப்பட்டதாக மாறியிருப்பதைக் காணலாம். பொதுமக்கள் உட்பட எல்லோரும் ஒருவித அச்சுறுத்தல் மொழியையே எல்லோருடனும் கையாளு கின்றனர். தரமற்ற வேலைக்காக நிறுவனங்களிலிருந்து விலக்கப்படுபவர்கள் தாம் விலக்கப்பட்டால் இயக்கத்துக்குப் போய் முறையிடப் போவதாக அச்சுறுத்துகின்றார்கள். ஏன், இந்த "இயக்க" அச்சுறுத்தல் காரணமாக ஒழுங்காக வேலை செய்யாத அரச நிர்வாகிகளைக் கூடக் கண்டிக்க இயலாமல் உயர் அதிகாரிகள் தவிக்கின்றனர். ஒரு சந்தர்ப்பத்தில் ஐ.நா நிறுவனமொன்றுடன் அது செயற்படுத்தி வந்த திட்டத்தின் நடைமுறைகளைப் பற்றித் தர்க்கித்த ஒரு பிரதேச செயலாளர் "போகவேண்டிய இடத்துக்குப் போய் செய்யவேண்டியதைச் செய்ய எனக்குத் தெரியும்'' என்று விவாதத்தை முடித்தாராம். வன்முறையைக் கோடு காட்டும் வாக்கியங்கள் இப்படி இடக்கு முடக்காகத்தான் இருக்கவேண்டுமென்ப தில்லை. ஆறுதலான இனிய வார்த்தைகளின் மூலமும் அந்தச் செய்தி பரிமாறப்படலாம். "நீங்கள் செய்யிறதைச் செய்யுங்கோ. ஆனா தெரியுந்தானே, நாங்கள் சொல்லுறதைச் செய்யாட்டி என்ன நடக்கும் எண்டு....?" உண்மையில் இன்று எங்கள் பேச்சு வழக்கே வன்முறையான தொடர்பாடலாக மாறி விட்டதோ என்று அஞ்சும் அளவிற்கு இது பொது வழக்காகி விட்டது.

அரசுசாரா நிறுவங்களின் இணையங்களும் மற்றும் அரச அதிபர் அலுவலகங்களும், தங்கள் அனுமதி இல்லாமல் திட்டங்களைச் செயற்படுத்த விடமுடியாது



என்று தடாலடிக் கடிதங்களை ஏனைய நிறுவனங்களுக்கு இன்றும் அனுப்பிக் கொண்டிருக்கின்றன. தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு மேல் வராவிட்டால் மிகவும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஒரு

மாவட்ட இணையம் தனது அங்கத்துவ நிறுவனங்களுக்கு எழுதியிருக்கின்றது. ஒரு தடவை, ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் முதல் முறையாக காலூன்றும் ஒரு நிறுவனம், தனது முதல் அறிமுக விழாவுக்கு (அது ஒரு நூல் விமர்சன நிகழ்வு) அழைப்பு விடுப்பதற்காக அம்மாவட்ட அரசுசாரா நிறுவனங்களின் முகவரிகளைக் கோரி அவற்றின் மாவட்ட இணைய அலுவலகத்துக்குக் கடிதம் எழுதியது. “எங்களுடன் பதிவு செய்யாமல் எங்களுடன் ஒரு தொடர்பும் மேற்கொள்ள அனுமதி கிடையாது” என்று அங்கிருந்து பதில் வந்தது!

இது மட்டுமா? எமது பல்கலைக்கழகங்களிலும் கூட தொண்ணுறுகளில் இந்த வியாதி தொற்றிக் கொண்டு விட்டது. ‘‘எனக்கு சாதகமாக நடக்கா விட்டால் பிறகு நீர் மனவருத்தப்படுவீர்...’’ என்று விரிவுரையாளர்கள் தங்கள் மாணவர்களை மிரட்டிக் கொண்டிருக்கின்றார்கள். மாணவர்களின் தலைவிதி தங்கள் கைகளில் இருக்கின்றது என்பதை நிரூபிப்பதற்கு அவர்களின் வினாத்தாள்களுடன் பந்தாடுகின்ற கேவலம் மலிந்து விட்டது.

அடுத்தவர் என்ன செய்ய அல்லது எதைக் கூற முயற்சிக்கின்றார் என்பதை அறிய ஒருவிதமான அக்கறையுமின்றி தாம் “அனுமதி” வழங்குவது பற்றியும், ‘‘தம்மைக் கேட்டுத்தான் எல்லாம் செய்யப்பட வேண்டும்’’ என்பது பற்றியும், ‘‘தாம் நினைப்பது போலச் செய்யாவிட்டால் பிறகு மனவருத்தப்பட நேரிடுவது’’ பற்றியும். அல்லது ‘‘போகவேண்டிய இடத்துக்குப் போவேன்’’ என்று பயமுறுத்துவது பற்றியும், மட்டுமே மனிதர்கள் சிலாகிக்கும் இந்தப் பண்பாடு ஒரு இராணுவப் பண்பாடாகும். இது முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் பண்பாடென்பது சொல்லாமலே விளங்கும். இப்பண்பாடு ஒரு விடயத்தின் காரண காரியங்களை விவாதிக்காது. மற்றவர்கள் தங்கள் பக்கக் கருத்து என்று எதைக் கூறுகின்றனர் என்று செவிமடுக்க முயற்சிக்காது. ஏனையோர் கொண்டுள்ள சாதாரண கருத்து வேற்றுமைகளையே ஒரு பெரிய குற்றச் செயல் போலக் கருதும். தனது சொந்த நோக்கங்களை எதுவிதத்திலும் நிறைவேற்றுவதற்காக ஒரு அச்சுறுத்தல் தொனியைக் கையாளும்.

இப்பண்பாடு நிலவும் சமூகத்தில் உலவும் மனிதர்கள் தாம் முரண்படும் ஒருவரைப் பற்றிய வஞ்சத்தையோ அன்றி பயத்தையோதான் நித்தமும் தமது மனதில் சுமந்து கொண்டிருப்பர், ஆனால் அதைத் தீர்க்க வழி தெரியாது தவிப்பர். இந்த அழுத்தங்கள்தாம் பின்னொருகாலத்தில் அல்லது வேறோர் சந்தர்ப்பத்தில் வன்முறைகளாக வெடிக்கின்றன. இப்படி பெரும்பான்மைச் சமூகத்தினருடனான முரண்பாடுகளைத் தீர்க்கக் கிளம்பியிருக்கின்ற நாமே எங்கள் மத்தியிலேயே பலவிதமான முரண்பாடுகளுக்குத் தோற்றுவாயாக இருக்கின்றோம். இந்த முரண்பாடுகளும் வன்முறைகளும் எமது சமூக நல்வாழ்வையும், உள ஆரோக்கியத்தையும், பொருளாதார சுபீட்சத்தையும் சூறையாடுகின்றன.

இரண்டாவதாக, முறைவழிகளைப் பற்றிச் சிந்திப்பதை எமது சமூகம் மறந்து விட்டது. எல்லா விஷயங்களும் திடீர் சமையல் (Quick fix) போல் நடைபெறவேண்டும் என எதிர்பார்க்கின்றது. என்ன பிரச்சினையென்றாலும் உடனேயே ஆர்ப்பாட்டம், வேலை நிறுத்தம், உண்ணாவிரதம், ஊர்வலம். என்று இறங்குகின்றது. பாதையில் விபத்து நிகழ்ந்தால், அது யாருடைய தவறெனினும் சரி, உடனேயே அதில் சம்பந்தப்பட்ட பெரிய வாகனத்தை அடித்து நொருக்கிக் கொளுத்துகின்றது.

ஆனால் வாழ்க்கை திடீர் சமையல் அல்ல. எந்தக் கோரிக்கைகள் நிறைவேறுவதற்கும் ஒரு முறைவழியை நாம் பின்பற்றியே ஆகவேண்டும். மனு சமர்ப்பிப்பது, பேச்சுவார்த்தைகளுக்குப் போவது, நேச அணிகளைத் திரட்டுவது, சட்டத்தின் உதவியை நாடுவது, எனப் பலவாறாக முயன்ற பின்னரே அவையெல்லாம் பயன் தராவிடில் நாம் ஆர்ப்பாட்டத்தில் இறங்க வேண்டும். இப்படி ஒரு முறைவழியைப் பின்பற்றுவதனால் ஏற்படும் மகத்தான நன்மை என்னவென்றால் ஒரு சாராருடைய பிரச்சினைகளை முழுச் சமூகமும் விளங்கிக் கொள்ள வாய்ப்பாகின்றது. இதனால், பின்பு ஆர்ப்பாட்டம் என்று இறங்கவேண்டிய தருணத்தில் மக்கள் எல்லோரும் அதற்கான ஆதரவினைத் தருவர். இவ்வகையான ஆர்ப்பாட்டங்களும் நிச்சயமாக வெற்றி பெறும்.

இன்று அப்படியா நடக்கின்றது? என்னத்துக்குப் போகின்றோம் என்றுகூட அறியாத மக்களை பஸ்களில் ஏற்றிக் கொண்டு வந்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. இந்த நிலைமை தெரிந்த காரணத்தினால் அதிகாரத்தில் உள்ளவர்களும் பயப்படாமல் தொடர்ந்து தங்கள் எண்ணப்படி நடக்கின்றனர்.

இது மட்டுமல்ல. போதை வஸ்து, விபச்சாரம் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படவேண்டும் என்று மக்களே

இயக்கத்தினரிடம் இன்னொரு Quick fix கோரிக்கையை விடுக்கின்றனர். இத் தண்டனைகள் நிறைவேற்றப் பட்டும் இருக்கின்றன. மரண தண்டனை விதிப்பதனால் குற்றங்கள் அகல்வதில்லை.

இது அடித்து வளர்க்கப்படுகின்ற பிள்ளைகளின் உதாரணத்தைப் போன்றது. இப்படியான பிள்ளைகள் பெற்றோரின் கட்டுப்பாட்டில் இல்லாமல் போனதும் இரண்டில் ஒரு வழியில் தங்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றன. ஒன்றில் ஒருவித கட்டுப்பாடும் இல்லாது தறிகெட்டு அலைகின்றனர். அல்லது தங்களுக்கென்று சுயமாகத் தீர்மானம் எடுக்க முடியாத கோழைகளாக வாழ்க்கை முழுவதும் காலம் தள்ளுகின்றனர். அடக்கி இருக்கும் வரைக்கும் ஒன்றும் செய்யாத மக்கள் அந்தக் கட்டுப்பாடு அகற்றப்பட்ட வுடன் திசை திரும்புவதை எங்கள் கண்ணாலேயே பார்க்கின்றோம். அப்படியானால் நிரந்தரமாக மக்களைப் பயமுறுத்தி வைப்பதனால்தான் குற்றச் செயல்களை நாம் கட்டுப்படுத்தலாமா? இந்தத் தீர்வுதானா எங்களுக்கு வேண்டும்?

எங்கள் நடைமுறை வாழ்க்கையில் இதை நாம் கண்டிருந்தும், குற்றம் புரிபவர்களைத் தடுப்பதற்கோ அவர்களைத் திருத்தவோ ஒரு செயல்திட்டத்திலும் நாம் ஈடுபடாமல் இருக்கின்றோம். இவையெல்லா வற்றுக்கும் மேலாக, காசைக் கடவுளாகக் கும்பிடும் எங்கள் சமூக விழுமியத்தை மாற்ற முயற்சி செய்யாமல் அதன் பயனாக உருவாகிய குற்றவாளிக்கு மரண தண்டனை கொடுத்து உடனடித் தீர்வினைக் காண முயற்சிப்பது கவலைக்குரிய விஷயமாகும்.

மேலும், வெளிப்படைத்தன்மை இல்லாத உரிய நீதி நடைமுறைகளின்றி பொது மக்கள் கொல்லப்படுவது சமூகத்தில் ஜனநாயகத்தை ஒழிக்கும் செயலாகும். எந்தச் சுப்பனும் தன்னை எல்லாளன் படையெனவோ பண்டார வன்னியன் படையெனவோ நாமம் சூட்டி மக்களைப் பயமுறுத்திக் கொண்டு திரிவதற்கும், எழுந்தமானமான பழிவாங்கல் கொலைகள் புரிவதற் கும் இது இட்டுச் செல்லுகின்றது. இதன் விளைவு? மக்கள் மத்தியில் பய உணர்வு இன்னுமின்னும் விதைக்கப்படுகின்றது.

யுத்தப் பாதிப்பால் ஏற்படும் அடுத்த நிலைமை யுத்தப் பிரதேசங்களில் எமது ஆளணி பற்றிய பிரச்சினை யாகும். எந்தவொரு அபிவிருத்திக்கும் திறமையான ஆளணி தேவை என்பதை நாம் அறிவோம். இந்த ஆளணி, பண்புத்தரம் வாய்ந்த கல்வி முறையாலும், ஒவ்வொவரும் தமது கடமைகளை மதித்து பொது இலக்குகள் நோக்கிய கூட்டுறவினைப் பேணி நடப்பதாலும், சுயமாகச் சிந்தித்துச் செயலாற்றக்கூடிய சுதந்திரப் பண்புகளைக் கொண்டிருப்பதனாலுமே வளர்க்கப்படலாம். யுத்தங்கள் இவையத்தனையையும், மக்கள் கூட்டுறவு, நல்ல விழுமியங்கள் செறிந்த கல்வி முறைமை, மனிதர்களின் சுதந்திரப் பண்புகள் எல்லாவற்றையும், வேரோடு அரிக்கின்றன. கல்வித் தரம் வீழ்ச்சியடைகின்றது. அதற்கு மேலாக, காலனித்துவ ஆட்சிக்குட்பட்ட எங்கள் வரலாற்றின் காரணத்தினால் மேலை நாட்டு மோகம் கொண்ட எமது சமூகத்தில் படித்துப் பட்டம் பெற்றவர்கள் யாவரும் வெளிநாடு செல்லுகின்றனர். யுத்தச்சூழ்நிலை அதற்கான பெரும் உந்து சக்தியாக இருக்கின்றது. இதன் பயனாக எங்கள் சமூகத்தின் புலமைத் தரம் பெருமளவு வீழ்ச்சியடைந்து விட்டது.

பண்புத்தரமுள்ள வினைத்திறன் மிக்க மனிதர் களைத் தேடிக் கண்டு பிடிப்பதே இந்நாளில் குதிரைக் கொம்பாகி விட்டது. ஏனையவர்களும் மிகக் கவன மாக, கிழித்த கோட்டைத் தாண்டாமல், மேலிடம் சொன்னதை மட்டுமல்ல, அவர்கள் சொல்லக்கூடும் என்று நினைப்பதைக் கூட சிரமேல் தாங்கிச் செய்பவர்களாக இருக்கின்றனர். இவ்வாறு தரமில்லாத வர்கள் முக்கிய பதவிகளில் இருப்பதனால் அவர்களைச் சுற்றி எழுகின்ற சின்னச் சின்ன மனஸ்தாபங்களுக்கும் பொறாமைகளுக்கும் பாரதூரமான பழி தீர்க்கும் நடவடிக்கைகள் மூலம் நிவர்த்தி தேட முனைகின்ற பரிதாபம் நம்மைச் சூழுகின்றது. இதன் விளைவு தமது உண்மையான அபிப்பிராயங்களை கூறக்கூட இயலாத மௌனித்த சமூகமாகும். தாமே சிந்தித்து, தீர்மானித்து, தாம் நம்புவதைத் துணிந்து செயற்படுத்த இயலாத மக்களைக் கொண்டு நாம் ஒரு தேசத்தைக் கட்டியெழுப்ப முடியுமா?

உண்மையில், யுத்தத்தினால் ஏற்படும் உயிர்களின் அழிவுகள், சொத்துக்களின் சேதங்கள், ஆற்றொணாத் துயரங்கள் இவையெல்லாவற்றையும்விட, எங்கள் சந்ததியினர் தற்துணிவையும், தலைமைத்துவத்தினை யும், புலமையையும், நிபுணத்துவத்தினையும் இழந்து நிற்பதே மிகப் பயங்கரமான விஷயமாகும். இப் பொழுதிலிருந்து நாம் ஆரம்பித்தாலும் ஒரு மனித வளத்தினை உருவாக்குவதற்கு முழுதாக 25 வருடங்கள் பிடிக்கின்றனவே! அப்படியான மனித வளத்தை உரு வாக்கக்கூடிய உட்கட்டுமானங்களை நிர்மாணிக்கவே திரும்ப தரம் மிக்க மனித வளம் தேவையாகும். விஷவட்டமாகிய இது எவ்வளவு பாரதூரமான பிரச்சினை.

இப்படியாக, யுத்தத்தின் விளைவால் இராணுவ மயப்படுத்தப்பட்ட பண்பாட்டினை நாம் வரித்துக் கொள்கின்றோம், சமூகத்தில் முரண்பாடுகளையும் பிரச்சனைகளையும் தீர்த்துக் கொள்ளும் முறை வழிகளை மறந்து விடுகின்றோம், நல்ல ஆளணிகளைத் தொலைத்து விடுகின்றோம். இந்த இழப்புக்கள் அழிந்த கட்டிடங்களைப் புனரமைத்தல் போன்றதோ, அல்லது இழந்த அன்புக்குரியவர்களின் சோகங்களுடன் சுதாரித்துக் கொண்டு வாழ்வதோ போன்று சில வருடங்களில் கைகூடுபவையல்ல. பல சந்ததிகளுக்குத் தொடருபவையாகும். இந்தக் காரணங்களினால்தான்... **யுத்தமே வேண்டாம்** என்கின்றோம்.

யுத்தம் வேண்டாமா, இதென்ன..? "நாம் ஆயுதப் போராட்டத்தைக் கையேந்தியதனால்தான் இன்று சிங்கள அரசாங்கம் பேச்சுவார்த்தைகளுக்காவது இறங்கி வந்துள்ளது" என தமிழ் மக்கள் எல்லோரும் நியாய பூர்வமாகவே கூறுகின்றார்கள். அதுவும் உண்மையிலும் உண்மை. தனது சொந்தப் பிரஜைகளினுடைய கோரிக்கைகளையே செவிமடுக்க முடியாத அதிகார வலு அரசியலில் (Power politics) ஆழ்ந்த ஸ்ரீலங்கா அரசுடனும் சிங்கள மக்களுடனும் அதே அதிகார வலுவின் சின்னமாக அதன் வெளிப்பாடாக இருக்கும் ஆயுதத்துடன்தான் பேசவேண்டியதாயிற்று. ஆனால் தனிநாட்டுக் கோரிக்கையை வென்றுவிட்டோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதன் பின்னர் எமது பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விடுமா? இன்னும் இன்னும் வேறு பல முரண்பாடுகளைத் தீர்க்க நாம் கிளம்ப வேண்டுமே. முடிவடைகின்ற பிரச்சினை என்று ஏதாவது இந்த உலகத்தில் இருக்கின்றதா?

எங்கள் சமீப காலத்து வரலாற்றையே பாருங்களேன். போர்த்துக்கேயர் வந்துபோனார், ஒல்லாந்தர் வந்தனர். ஒல்லாந்தர் வந்து போனார், ஆங்கிலேயர் வந்தனர். ஆங்கிலேயர் வந்து போனார். அவர் போன சூட்டுடன் சிங்கள அரசாங்கத்துடன் போராட்டத்தை ஆரம்பித்தோம். சிங்கள அரசாங்கம் போன பிறகு வேறொரு பிரச்சினையுடன் போராடப்போகின்றோம். இன்னும் எத்தனையெத்தனையோ போராட்டங்கள் இடைவிடாமல் வரத்தான் போகின்றன. இவை முடிவில்லாதன. அதுதான் மனித வரலாற்றின் தன்மை. இன்னும் எத்தனை இரத்தக் களரிகளை நாம் பார்க்கப் போகின்றோம். இவையெல்லாவற்றுக்கும் தீர்வாக நாம் ஆயுதங்களைத்தான் தூக்கப் போகின்றோமா என்பது தான் நாம் எடுக்க வேண்டிய தீர்மானமாகும்.

முரண்பாடுகளும் மோதல்களும் மனித இயல்பு, அவை உலகம் உள்ளளவும் சாஸ்வதமானவை. தவிர்க்கப்பட முடியாதவை. ஆதலினால் எங்களுக்கு நன்மை பயக்கும் முறையில் அவற்றைக் கையாள நாம் கற்றுக் கொண்டேயாகவேண்டும். அதற்கு, நாங்கள் தற்போது கொண்டுள்ள விழுமியங்கள் பல மாற வேண்டும். மக்களும் மக்களும் கருத்துப் பரிமாறவும், மக்களும் அரசும் கலந்துரையாடவும் புதிய கட்டமைப்புக்களும் பொறிமுறைகளும் தேவை. இந்தத் தொடர்பாடல்களை ஏதுவாக்கும் நடுநிலையான தளமாக நீதித்துறை தேவை. அங்கெல்லாம் சமத்துவத்துடன் தொடர்பாடுதலுக்குரிய அதிகாரவலுவினை ஒவ்வொரு சமூகத்தினருக்கும் வழங்கும் அரசியல் கட்டமைப்புக்கள் தேவை. இதுவும் ஒருவகையில் நீண்ட காலப் போராட்டமாகும். ஆனால் ஆயுதம் தூக்காப் போராட்டமாகும்.

இது எங்களால் செய்ய முடியுமா என்று மலைக்கிறீர்களா?

குகையில் வாழ்ந்த காலம் தொட்டு இன்றுவரை இந்த மனிதகுலம் எவ்வளவு சாதித்திருக்கின்றது? இவ்வளவு செய்த எமக்கு எமது பிரச்சினைகளுக்கும் கூட்டாகச் சேர்ந்து தீர்வு காண நிச்சயம் முடியும். பிரச்சினையின் மூலங்கள் எவை? அவற்றைத் தக்கவைக்கும் காரணிகள் எவை? என்ன உபாயங்களினூடாக இவற்றை அகற்றலாம்? என்று சிந்தித்துச் செயற்பட்டால் எம்மால் முடியாத காரியம் ஒன்றுமே இல்லை. அர்த்தமற்ற அழிவுகளை நிறுத்தி ஒரு மகிழ்ச்சியானதும் சுபீட்சமானதுமான வாழ்வை எங்கள் சந்ததிகளுக்குக் கொடுக்க நாம் உண்மையாக விரும்பினோம் என்றால் இது எங்களுக்குத் தண்ணீர் பட்ட பாடாக அவ்வளவு இலகுவாக இருக்கும். அவ்வாறான ஆசை உந்தித் தள்ள அர்ப்பணிப்புடன் செயற்பட விரும்புபவர்கள் மேலே படியுங்கள்.



அத்தியாயம் 1


# முரண்பாடுகளின் தன்மையும் அதன் வெளிப்பாடுகளும்

## ஒற்றுமையா வேற்றுமையா வேண்டும்?

பொதுவாக எவரும் பேசும்போது ''எமக்குள் ஒற்றுமை இல்லை. அதுதான் சகல பிரச்சினைகளுக்கும் மூல காரணம்'' என்று கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். எல்லோரும் ஒற்றுமையாக ஒரு கருத்துடன் இருக்க வேண்டுமென்பதை விரும்பாதவர் எவரும் இல்லை. ஆனால், இந்த ஒற்றுமை என்னும் நிலை அவ்வளவு விரும்பத்தக்கவொன்றா என நாம் சற்று ஆழமாகப் பார்க்க வேண்டும்.

சிந்தித்துப் பாருங்கள். புத்த பகவான் தனது சமயமான இந்து மதத்தின் பல கொள்கைகளுடன் வேறுபட்டதனால்தான் உன்னத சித்தாந்தமாகிய பௌத்த மதம் தோன்றியது. அது மட்டுமல்ல, இந்து மதமும் பௌத்த மதத்தின் செல்வாக்கினால் பல நல்ல சீர்திருத்தங்களுக்கு உள்ளாகியது. இற்றைக்கு 200 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த தொழிலாளிகள் அவர்களின் வாழ்க்கைத்தரம் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் தமது முதலாளிகளுடன் வேறுபட்டதனால்தான் இன்று வேலைத்தலங்கள் பாதுகாப்பாக இருக்கவும், உழைப்புக்குரிய வேதனம் கொடுக்கப்படவுமான தொழிலாளர் உரிமைகள் சட்டங்களாக்கப் பட்டிருக்கின்றன. யாழ்ப்பாண மண்ணில் சிறுபான்மைத் தமிழர் கோயில்களிலிருந்தும் வேறு பொதுவிடங்களிலிருந்தும் தாம் விலக்கப்படுது தொடர்பாக ஏனையோருடன் வேறுபட்டதனால்தான் அத்தகைய அநாகரிக முறைமைகள் ஒழிந்து சமூக சீர்திருத்தங்கள் நம்மத்தியில் ஏற்பட்டன. கலீலியோ வும், நியூட்டனும், ஐன்ஸ்டைனும் வித்தியாசமாகச் சிந்தித்ததன் மூலம் தங்கள் தங்கள் காலங்களில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்துக்களை புரட்சி கரமாக மாற்றியமைத்து விஞ்ஞான வளர்ச்சியினை உறுதிப்படுத்தினர்.

கருத்து வேறுபாடுகள், பிரிவினைகள் ஆகியன ஏற்படுவதால்தான் சமய, சமூக, சட்ட, அரசியல், விஞ்ஞான சீர்திருத்தங்கள் ஏற்படுகின்றன. மனிதர்கள் ஒற்றுமையாக ஒரே மாதிரி சிந்தித்துக் கொண்டிருந்தார்களேயானால் அன்று தொடக்கம் இன்றுவரை உலகம் அப்படியே இருந்திருக்கும். அங்கு சமூக மாற்றம் ஏது, அபிவிருத்திதான் எது? கருத்து வேற்றுமைகள்தாம் புதிய கண்ணோட்டங்கள், புதிய சிந்தனைகள், புதிய யுக்திகள் என்பனவற்றிற்கு வழிகோலுகின்றன. பிரிவினைகள்தாம் புதிய சமூக வர்க்கங்கள் உருவாவதற்கும் புதிய அபிவிருத்தி முயற்சிகள் தோன்றுவதற்கும் காரணமாயிருக்கின்றன. ஆகவே,




அத்துடன், கருதது வேறுபாடுகள் இல்லாமல் மனிதர்கள் வாழத்தான் முடியுமா? மனிதர்கள் ஒவ்வொருவருமே தனித்துவமான பண்புகள் கொண்டவர்கள், ஒருவரைப் போல் இன்னொருவர் உலகில் இல்லவே இல்லை. அவர்கள் ஒவ்வொருவருக்கும் வித்தி

யாசமான எண்ணங்களும் சிந்தனைகளும் தோன்றுவது இயற்கையே. குடும்பப் பின்னணி, பால், வளர்ந்த முறை, கல்வித் தகைமை, மதம், இனம், மொழி, சாதி, தேசம் போன்ற பல்விதமான காரணிகள் மனிதர்கள் ஒவ்வொருவரினதும் அபிப்பிராயங்கள், விழுமியங்கள், நம்பிக்கைகள் என்பவற்றை உருவாக்கின்றன.

சுருக்கமாகக் கூறினால், கருத்து வேற்றுமைகள் அல்லது முரண்பாடுகள் உலகின் நியதியாகும். இக்காரணத்தினால் முரண்பாடுகளை நடுநிலையான தன்மை கொண்டவை எனக் கூறலாம். முரண்பாட்டிற்கான எமது எதிர்வினை அல்லது பதிற்குறியே முரண்பாட்டினை நேர்நிலையானதாகவோ அல்லது எதிர்மறையானதாகவோ ஆக்குகின்றது. முரண்பாடுகளை நாம் எவ்வாறு கருதிப் பாவிக்கின்றோமோ அவ்வாறே அவை எமக்கு நன்மை புரிவனவா இல்லை தீமை புரிவனவா என்பது அமைகின்றது. முரண்பாடுகளை வெறுத்தோமென்றால் அவை எமக்கு தீமை புரிவனவாக இருக்கும். அவற்றை எமது முன்னேற்றத்திற்கான உந்து சக்தி என்று வரவேற்றோம் என்றால் அவை எங்கள் அபிவிருத்திக்கு மிகுந்த நன்மையாகும். ஆகவே, **முரண்பாடுகளுக்கு நாம் எதிர்மறையான பதிற்குறியைக் கொடுக்கும் போது அங்கு முரண்நிலைகள் தோற்று விக்கப் படுகின்றன.**

முரண்பாடுகளுக்கு நாம் எதிர்மறையான பதிற்குறியைக் கொடுக்கும்போது அங்கு முரண்நிலைகள் தோற்று விக்கப்படுகின்றன.

## முரண்நிலைகளின் தோற்றுவாய்கள்

எம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். எமக்கு எங்களைப் போலவே கருதிப் பேசி வாழ்பவர்களுடன் இருப்பதே சௌகரியமாக இருக்கின்றது இல்லையா? எம்மிலும் வித்தியாசமான பாரம்பரிய, பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களுடன் நாம் பொதுவாக நெருங்கிப் பழகுவதில்லை. எமது கருத்துக்களுக்கு மாறான கருத்துக்களை மற்றவர்கள் கூறும்போது எமது முகம் கோணல் மாணலாகப் போகின்றது. எம் உள்ளத்துக்குள் எம்மையறியாமலேயே கோபமும் எழுகின்றது. இதற்கு உயிரியல் ரீதியாகவும் காரணங்களைக் கற்பிக்கலாம்.

தாம் இசைவாக்கம் அடைந்த சூழலும் வாழ்க்கை முறையும் மாறும்போது அல்லது அது சவாலுக்குள்ளாக்கப்படும்போது, ஒருவித பாதுகாப்பற்ற உணர்வு (Sense of insecurity) மனித மனங்களில் மேலோங்கி நிற்பதைக் காணலாம். காட்டு மிருகங்களுடனும், விஷ ஜந்துக்களுடனும், நர மாமிசம் உண்ணும் குடிகளுடனும் வழ்ந்த ஆதிகால மனிதர்கள் தங்களுக்கு பரிச்சயமில்லாத சூழலுக்குச் செல்லும் போது அவர்கள் மனதில் ஏற்பட்ட அதே பய உணர்வுகளின் எதிரொலிகள் இன்னும் எமது மனதில் இருக்கின்றன போலும். நாம் மாற்றங்களைக் கண்டால் அஞ்சுகின்றோம். அவை எமது இருப்பினையே உருத்தெரியாமல் தலைகீழாக்கி விடுமோ என்று பயப்படுகின்றோம். இதனால் முரண்பாடுகளை வெறுத்தொதுக்குகின்றோம். எல்லோரும் ஒரே மாதிரி ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று நடக்க முடியாததும் நன்மை பயக்காததுமான காரியத்துக்கு ஆசைப்படுகின்றோம். மனிதர்கள் பொதுவாகவே தாம் கொண்டுள்ள கருத்துக்கு மாறுபாடான கருத்துக்களைக் கேட்பதற்கு விருப்பமில்லாதவர்கள். அவர்கள் மாற்றங்களை விரும்பி ஏற்றுக்கொள்வதில்லை. அதை எப்போதும் எதிர்ப்பர்.

தமது நிலை கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது என்கின்ற ஒரே காரணத்தினால் அபிப்பிராயச் சவால்களை உடனேயே மழுங்க அடித்துப் புதைக்கத்தான் மனிதமனம் அவாவுகின்றது. இவ்வாறு, கருத்து வேற்றுமையொன்றாலே வன்முறையென்ற அர்த்தமோ என்று நாம் மயங்கும் அளவுக்கு வன்முறையானது வேற்றுமைகளுக்குப் பிரதியீடு செய்யப்பட்டிருக்கின்றது. (எதுவும்) தனக்குப் போட்டியாக வருமோ, தன்னை மிஞ்சி விடுமோ, தன்னை ஒழித்து விடுமோ என்கின்ற **பய உணர்வே முரண்நிலை தோன்றுவதன் மூல காரணங்களில் ஒன்றாகும்.**

ஒரு பொது இலக்கை வகுத்து அதை நோக்கி மனிதர்கள் உழைப்பது சமூகத்திலும் நிறுவனங்களிலும் சாதாரணமாக நாம் காணும் செயற்பாடாகும். அவ்வாறு இயங்கும்போது, அவர்கள் ஒரு பொது இலக்கைத் தமது பிரதான இலக்காகக் கொண்டிருப்பின் அங்கு ஒற்றுமை நிலவும். இதைவிட்டு, அங்கு இருக்க வேண்டிய பொது இலக்கைவிட தம் ஒவ்வொருவரினதும் சொந்த இலக்குகளைப் பிரதானமாகக் கருதினாரென்றால் முரண்பாடுகளே மலியும். எவ்வளவுதான் தமக்குள் வித்தியாசமான நடைமுறைகளையும் அனுகு


முறைகளையும் கொண்டிருந்தாலும்கூட, ஒரு பொது இலக்கைத் தமது பிரதான இலக்காகக் கொண்டுள்ள மனிதர்கள் ஒற்றுமையைப் பேண முடியும். ஆனால் அவ்வாறு மனிதர்கள் இயங்குவது மிகவும் அரிய செயலாகும். இதனால்தான் எங்கும் முரண்நிலைகள் தோன்றுகின்றன.

உதாரணமாக, ஒரு நிறுவனத்தில் பணி புரிகின்ற வர்களில் ஒருவருக்கேனும் அந்நிறுவனம் வகுத்த நோக்கங்களை எய்துவதைவிட அங்கு தன் பதவியைக் காப்பாற்றுவதே தனது பிரதான நோக்கமாகக் கொண்டிருப்பாரேயானால் அந்நிறுவனத்தில் ஒற்றுமை குலைகின்றது. இங்கு, பதவியைத் தக்க வைப்பது அவருடைய நோக்கங்களில் ஒன்றாக இருப்பது பாதகமில்லை. ஆனால், அதனை அவருடைய பிரதான நோக்கமாகக் கொண்டிருப்பதுதான் பொது இலக்குக்குத் தீங்கு விளைவிப்பதாகின்றது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் அரசியல் கட்சிகளில் ஒன்றுதானும் மக்களுக்கு சுபீட்சம் தரக்கூடியதொரு தீர்வை அடைவதிலும்விட தன் வாக்கு வங்கியைக் காப்பாற்றுவதுதான் தனது பிரதான இலக் காகக் கொண்டிருப்பின் அங்கு அவற்றுள் முரண்நிலை எழுகின்றது. அரசியல் கட்சிகளுக்குத் தமது வாக்கு களைக் காப்பாற்றுவது அவசியமான நோக்கந்தான். ஆனால் நாட்டில் நிலைபேறான சமாதானத்தை உருவாக்கும் பொது இலக்குடனான பேச்சுவார்த்தை களில் கலந்து கொள்ளும்போது அந்த சந்தர்ப்பத்தில் சமாதானம் என்ற பொது இலக்கைவிட வாக்குகள் என்கின்ற தனது சொந்த இலக்கில் அது குறியாக இருக்குமேயானால் அது சமாதானத்தை உருவாக்கும் வழிக்கு இட்டுச் செல்லாது.

பொது நோக்கங்களுடன் சமூகத்தில் இயங்கும் தனி மனிதர்களுக்கும் அமைப்புக்களுக்கும் எப்போதும் தமக்கென வெவ்வேறு தேவைகள் இருக்கின்றன. இத்தேவைகள் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதோடு ஒரு பொது இலக்கிற்கு அவர்களையெல்லாம் செல்ல முடியாதவாறு தடுத்துக் கொண்டேயிருக்கின்றன. **மனிதர்களின் அல்லது குழுக்களின் மத்தியில் காணப்படும் வெவ்வேறு தேவைகளே முரண்நிலைகள் உருவாவதற்கான அடுத்த மூல காரணியாகும்.**






முரண்பாடுகள் அல்லது அபிப்பிராய வேறுபாடுகள் மனிதர்களால் விரும்பப்படுவதில்லையெனினும் அவை எந்த நேரமும் அடிதடியில் முடியும் என்பதில்லை. ஆனால் இன்னொரு வகையான முரண்நிலைகள் பொது வாக எப்பொழுதுமே வன்முறைக்கு இட்டுச் செல்லும். அவைதான் அதிகாரவலுவின் அடிப்படையில் எழுந்த வேற்றுமைகள் அல்லது முரண்பாடுகள்.

### அதிகாரவலு

எமது சமூகத்தில் ஒவ்வொருவரும் ஒப்பீட்டு ரீதியாக ஏதொவொரு விதத்தில் இன்னொருவரைவிட தாழ்ந்த நிலையிலேயே இருக்கின்றனர் என்பதை நாம் அறிவோம். வயது, பால், இனம், சொத்துடைமை, பதவி, படிப்பு, சாதி, தொடர்புகள், வசிக்கும் நாட்டின் பொருளாதார நிலைமை, ஆயுதங்களின் உபயோகம் இவை போன்ற பல காரணிகள் ஒவ்வொரு மனிதரையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் அவர்களுக்குள் ஏற்றத் தாழ்வுள்ள உறவுமுறையை ஏற்படுத்த வைக்கின்றது. ஒரு சமய நிறுவனத்தில் வயதின் முதிர்ச்சி காரணமாக இன்னொருவரை விட உயர் நிலையில் இருக்கும் ஒருவர், ஒரு கேளிக்கை விருந்தில் தனது சொத்துக்கள் குறைவு என்கின்ற காரணத்தினால் அதே மனிதரைவிட தாழ்ந்த நிலையில் இருக்கலாம். இப்படியே ஏனைய காரணிகளும் இரு மனிதர்களுக் கிடையில் உறவுமுறைகளைத் தொடர்ந்து மாற்றிய வண்ணம் இருக்கின்றன. ஒரு அலுவலகத்தில் அல்லது பல்கலைக்கழகத்தில் தனது படிப்பு காரணமாக உயர்நிலை வகிக்கும் ஒருவர், தனது வீட்டில் தான் மனைவி என்கின்ற அடிப்படையில் தாழ்ந்த நிலையை அனுபவிக்க முடியும். இவ்வாறு மனிதர்களெல்லோரும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் தாம் உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களாகவோ, அற்றவர்களாகவோ காணப்பட முடியும், இரு மனிதர்களுக்கிடையில் காணப்படும்


ஏற்றத் தாழ்வான உறவுமுறை, அம்மனிதர்கள் மத்தியில் உயர்வாகவுள்ளவர் தனது சொந்த நோக்கத்தை அங்கு தாழ்வு நிலையில் இருப்பவர் மூலம் நிறைவேற்றும் இயல்பைக் கொடுக்கின்றது. இந்த இயல்பை அதிகார வலு (Power) என்போம்.

இந்த உலகமே இதன் மோகத்தில் ஆட்கொண்டுள்ளதோ என்று நம்பும் அளவுக்கு மனிதர்களுக்கு அதிகாரவலு என்பது மிக வேண்டப்படும் நிலையாகும். இதனால் தான் எங்கும் பொருளுக்கும் பதவிகளுக்கும் மனிதர்கள் தங்களுக்குள் அடிபடுகின்றதை நாம் காணலாம். ஏனெனில் பொருள், பதவி இவையிரண்டும் அதிகார வலுவினைக் கொண்டு தரும் மிக முக்கியமான காரணிகளாகும். ஆண், பெண், கறுப்பர் வெள்ளையர், இளையவர் முதியவர் என்ற பேதமின்றி சகலராலும் அதிகாரவலு வேண்டப்படுவதனால் இது இயற்கையாகவே மனிதர்களின் மரபணுக்களில் இருக்கும் இயல்பு என வாதம் செய்பவர்களும் இருக்கின்றனர்.

இரு மனிதர்களுக்கிடையில் காணப்படும் ஏற்றத் தாழ்வான உறவுமுறை, அம்மனிதர்கள் மத்தியில் உயர்வாகவுள்ளவர் தனது சொந்த நோக்கத்தை அங்கு தாழ்வு நிலையில் இருப்பவர் மூலம் நிறைவேற்றும் இயல்பைக் கொடுக்கின்றது. இந்த இயல்பை அதிகாரவலு (Power) என்போம்.

ஆயினும் அதிகாரவலு மனிதரின் சமூகமயமாக்கலின் ஒரு அம்சம் என நிறுவுவதற்கு பல ஆதாரங்கள் உண்டு. மனிதர்கள் சமூக விலங்குகள். அவர்கள் தனியாக வாழ முடியாது என்பதுடன், அவர்களின் கூட்டு வாழ்க்கையில் பிற மனிதர்களினது அங்கீகாரமும் ஆதரவும் அவசியமாகத் தேவைப்படுபவர்கள் என்பதும் விஞ்ஞான ரீதியாக கண்டறிந்த உண்மையாகும். மனிதர்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரவலு என்பது பிற மனிதர்களின் அங்கீகாரத்தையும் ஆதரவையும் தக்கவைத்துக் கொள்ளும் ஒரே வழியாகும். ஆகவேதான் மனிதர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஒரு சின்ன அலுவலகத்திலிருந்து பெரிய நாடு வரை எல்லா இடங்களிலும் அடிபடுகின்றனர்.

நாங்கள் எங்கள் நடத்தையையே மீளாய்வு செய்வோமே. நல்ல அறிவுள்ள மனிதர்கள், தங்கள் இதயம் நிறைந்த அன்பு கொண்ட மனிதர்கள், நேர்மையானவர்கள், அரசியல்வாதிகள், சினிமா நடிகர்கள் போன்றவர்கள் வந்திருக்கும் ஒரு விழாவிற்கு நாம் சென்றிருந்தால் எங்கள் கண்கள் யாரை மொய்த்துக் கொண்டிருக்கும்? அறிவு கொண்டவர்களையும் அன்பு கொண்டவர்களையும் அல்லவே. அரசியல்வாதிகளையும் சினிமா நடிகர்களையும் அல்லவா? புகழும் அதிகாரமும் கொண்டவர்களையல்லவா நாங்கள் மொய்த்துப் பல்லைக் காட்டி வழிந்து கொண்டிருப்போம். பதவி உடையவர்களுக்குத் தான் அழைத்துப் பொன்னாடை போர்த்து விடுகின்றோம். அத்தகையவர்களுக்குத் தான் நாம் அங்கீகாரம் வழங்குதலினால் அதிகார வலுவை மனிதர்கள் நாடுவதில் அதிசயம் ஏது? இதிலிருந்து மனிதர்கள் அதிகாரத்திற்குப் போட்டியிடுவது அவர்களின் தவறல்லவென்றும், அது சமூகத்திலுள்ள நாங்கள் எல்லோரும் இழைக்கின்ற தவறினால் தான் என்பது புரியும்.



அரசியல்வாதிகள் அதிகாரப் போட்டிகளில் ஈடுபடுகிறார்கள் என்று நாம் அடுத்த தடவை சுட்டிக் காட்டி குற்றம் சொல்லும்போது மூன்று விரல்கள் எங்களைக் குற்றவாளிகளாகச் சுட்டுவதை அவதானியுங்கள். இங்கு சமூகமாகிய நாம்தான் குற்றவாளிகள். அரசியல்

வாதிகளையும் தேசத்தலைவர்களையும், அவர்கள் எங்கள் எல்லோரையும் போல ஒரு கடமையைச் செய்ய வந்தவர்கள் என்று நாம் சர்வசாதாரணமாக நடத்தி வந்தோமென்றால், அவர்களுக்கு முன்னால் ஒன்றுக்கு இரண்டாக வளைந்து நிற்காமல் இருந்தோமென்றால், அவர்கள் ஏன் இன்று எங்கள் நாட்டில் நடப்பதுபோல இப்படித் தங்கள் உயிருக்கு ஆபத்தென்றாலும்கூட உயிரைக் கொடுத்து அரசியலில் இறங்க முயற்சிக்க வேண்டும்? இதிலிருந்து, அதிகாரவலு தொடர்பான எங்களது விழுமியங்கள் பாரிய முறையில் மாற்றமடைய வேண்டும் என்பது தெளிவாகின்றது. அரசியல்வாதிகளை நாம் வைது பயனில்லை.

**முரண்நிலைகள் அதிகாரவலு அசமத்துவங்கள் இருக்கும் இருசாராருக்கிடையில் ஏற்படுவதால் அவை வன்முறையாக வெடிக்கின்றன.**

அதிகாரவலு அசமத்துவங்கள் இருக்கும் இரு சாராருக்கிடையில் முரண்நிலைகள் தோன்றும்போது அவை வன்முறையாக வெடிக்கின்ற சாத்தியங்கள் மிக அதிகமாகும். இங்கு அதிகாரத்திலுள்ளவர் தனது நோக்கத்தை மற்றவர் மேல் திணிக்கும் ஆற்றல் உடையவர் என்பதனாலும், அப்படித் தான் செய்யாவிட்டால் அந்த சந்தர்ப்பத்தில் தனது அதிகார வலு குறையும் என்ற பயத்தை உணர்வதனாலும், எது விதத்திலும் தான் வேண்டுகின்ற தீர்வையே பெற முயற்சிப்பார். இங்கு வன்முறை அதற்கான ஒரு இலகுவான பயனுள்ள கருவியாகின்றது. இன்னொரு கோணத்தில் இருந்து நோக்கினால், அதிகாரத்தில் உட்காருபவர் அதனைத் தக்க வைப்பதற்காக உடனேயே தான் ஆயுதபாணியாவதைக் காணலாம். எங்கள் பண்டைய அரசர்களுக்கு இருபுறமும் ஆயுதந்தாங்கிய காவலாளிகள் இருந்தனர். இன்றைய 'சிற்றரசர்கள்' செக்யூரிட்டிகளுடன் நடமாடுகின்றனர். மக்களிடமிருந்து பறிக்கப்படும் அதிகாரவலு வன்முறையினூடுதான் தனிமனிதர்களினால் தங்களுக்கென பாதுகாக்கப்படுகின்றது பார்த்தீர்களா?

எங்களது சமூகப் பண்பாடும் இந்த மாதிரியான நடத்தைக்கு இசைவாகவே அமைந்துள்ளது. நாங்கள் எங்கள் குடும்பங்களில், பாடசாலைகளில், ''என்ட சொல்லைக் கேட்காட்டால் அடிப்பேன்'' என்றுதானே சிறு பிள்ளைகளையெல்லாம் பயமுறுத்திக் கொண்டு இருக்கின்றோம்? பிள்ளைகளுக்கும் எங்களுக்கும் இடையே நிலவுகின்ற அதிகாரவலு சமமின்மையால் அல்லவா பிள்ளைகளை அவ்வாறு நடத்தத் துணிகின்றோம்? வன்முறை என்பது எங்கள் அன்றாட நடத்தைகளில் பின்னிப் பிணைந்தவொன்றாக வந்துவிட்டது. இதனால் எந்த அதிகாரவலு சார்ந்த முரண்நிலைகளும் வன்முறையாக வெடிப்பது ஆச்சரியம் அல்லவே.

தனிமனிதர்கள் போலவே அரசுகளும், மத நிறுவகங்களும், சமூக வர்க்கங்களும் நடந்து கொள்கின்றன. அடுத்த இராச்சியம் புரெட்டஸ்தாந்து மதத்தைத் தழுவிக் கொண்டதனால் இங்கிருக்கும் கத்தோலிக்க ஆட்சியாளர்கள் அதன்மீது போர் தொடுத்தனர். உலகம் உருண்டையானது என்று விஞ்ஞானிகள் கத்தோலிக்கத் திருச்சபையின் கருத்துக்கு மாறான கருத்தினைக் கூறியதனால் திருச்சபை அவர்களை உயிரோடு எரித்தது. சல்மன் ருஷ்டி என்னும் பாகிஸ்தானைச் சேர்ந்த எழுத்தாளர் குர் ஆனை விமர்சித்து விட்டாரென்பதனால் இஸ்லாமியத் தலைவர்கள் அவர் மீது **ஃபாட்வா** (கொலைத் தண்டனை) பிறப்பித்தனர். தொழிலாளர்கள் உரிமை கேட்டுப் போராடினால் முதலாளிகள் அவர்கள்மீது பொலிஸ் படையைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். அதே போன்றே சுயாட்சி கோரி சிறுபான்மையினப் பிரஜைகள் போராடினால் அவர்களுடைய அரசு இராணுவத்தை அனுப்பி அவர்களை அழித்தொழிக்க முயல்கின்றது.

அதிகாரவலு சமச்சீரற்று இருக்கும் நிலைமைகளில் இரு சாரார் ஊடாடும்போது, அவர்களுக்கிடையில் ஒரு சமநிலையை ஏற்படுத்தும் தளங்கள் இருந்தால்தான் வன்முறையைத் தவிர்க்க முடியும். நீதித்துறையை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். சட்டத்துக்கு முன் யாவரும் சமம் என்கின்ற கொள்கையின் அடிப்படையிலேயே நீதித்துறை இயங்குகின்றது. சமூகத்தில் பலமாகவும் பலவீனமாகவும் இரண்டு நிலைகளில் இருப்பவர்கள் நீதி மன்றத்துக்குள் நுழைந்து விட்டாரெனில் அங்கு அவர்கள் சமமாகக் கருதப்பட்டு பலவீனமானவர்கள் நீதி பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கும் முகமாகவே இவ்வாறு இந்தக் கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நீதித்துறை முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ள உதவும் ஒரு பிரதான கருவியாகும். இதே போன்று சமூகத்தின் பல படி நிலைகளில் மனிதர்களுக்கு இடையே சமநிலையை ஏற்படுத்தும் தளங்களை ஏற்படுத்தினால் முரண்நிலைகள் வன்முறையாக வெடிப்பதைத் தவிர்த்துக் கொள்ளலாம். அவை என்ன முறைகள் என்பதை அடுத்து வரும் அத்தியாயத்தில் பார்ப்போம்.



பயம், தேவை என்கின்ற இரு அடிப்படை உணர்வுகளே முரண்நிலைகளுக்கு இட்டுச் செல்லுகின்றன எனலாம். இம்முரண்நிலைகள் சமச்சீரற்ற அதிகார வலுவுடைய இரு சாராருக் கிடையில் தோன்றும் போது, அவர்கள் ஒருவருக் கொருவர் எதிராக இயங்கிச் சமநிலை காண்பதற்கு தளம் அமைத்துக் கொடுக்கும் கட்டமைப்புக்கள் அங்கு இல்லாது போனால்...., அவை வன்முறையாக வெடிக்கின்றன.





அத்தியாயம் 2

# சமூகங்கள் அல்லது குழுக்களிடையே தோன்றும் முரண்நிலைகளின் வகைகள்

இப்பொழுது, இரு சமூகங்களுக்கிடையில் அல்லது குழுக்களுக்கிடையில் முரண்நிலைகள் பொதுவாக எதையெதையொட்டித் தோன்றுகின்றன என்று பார்ப்போம்.

- நிலம் (காணி, கனியுப்புக்கள், ரத்தினக் கற்கள், தங்கம் போன்றன) நீர் ஆகிய வளங்களைப் பகிர முயலும்போது......
- வியாபாரப் போட்டிகள் நிலவும் போது.......
- அரசியல் கட்டமைப்புக்களில் அர்த்த பூர்வமாகப் பங்கேற்கும் நோக்கம் நிராகரிக்கப்படும் போது.....
- ஒரு குழுவின் பாதுகாப்பு, அதன் தன்னடையாளம் (இன, மத, மொழி) அச்சுறுத்தப்படும் போது.....
- மனித உரிமைகள் மீறப்படும்பொழுது......
- இரு வேறு கருத்தியல்கள் (அரசியல், மத) தமது இருப்புக்காகப் போட்டியிடும் பொழுது......

இவையெல்லாவற்றையும் ஒட்டிய உண்மையான, அல்லது உண்மையென்று மக்கள் நினைக்கும், தேவைகளும் பயங்களும் முரண்நிலைகளாக உருவெடுக்கின்றன. ஆம், மனிதர்கள் தாம் கற்பனை செய்யும் தேவைகளினாலும் பயங்களினாலும் கூட ஒருவரோடொருவர் மோதுகின்றனர். அதென்ன, கற்பனையிலும் முரண்பாடுகள் தோன்றமுடியுமா என்று மலைக்கிறீர்களா? ஓ, தோன்ற முடியும். இதற்கான காரணங்களைப் பார்ப்போம்.

தேவைகள் நிராகரிக்கப்படுதல் அல்லது பயங்கள் தோன்றுதல் ஒரு குழுவிலுள்ள எல்லோருக்கும் ஒரே சீராக நடப்பதில்லை. ஒவ்வொரு காலகட்டத்திலும் நடப்புச் சக்திகளினால் ஏதுமொரு சமூக வர்க்கமே அனேகமாகப் பாதிக்கப்படுகின்றது. ஆனால் அந்த வர்க்கம் தனக்கிழைக்கப்படும் அநீதி என்றுணரும் விடயத்தை ஒரு பொது அடையாளம் கொண்ட தனது குழுவினருக்கு வரும் அச்சுறுத்தலாகப் பொதுமைப் படுத்தி உருவகித்துத்தான் பரந்துபட்ட மக்களைத் தனது சொந்த இலக்கை நோக்கி அணி திரட்டுகின்றது. இனம், மொழி, மதம் போன்ற பண்பாட்டுச் சின்னங்கள் மக்களின் உணர்வுகளுடன் ஒன்றறக் கலந்த அடையாளங்களாகையால் அவற்றின் கீழ் அவற்றின் பெயரால் அவர்கள் இலகுவாகத் திரளுகின்றனர், அதனால், என்ன காரணங்களினால் முரண்நிலைகள் ஆரம்பத்தில் எழுந்திருந்தாலும், கடைசியில் அவை இனத்தாலோ மதத்தாலோ மொழியாலோ வேறுபட்ட இரு குழுக்களுக்கிடையில் துவேஷமும் பிரிவினையும் ஏற்பட்டது போலவே தோற்றமளிக்கின்றன. இது எப்படி நிகழ்கின்றது என்பதை ஒரு உதாரணத்தின் மூலம் பார்ப்போம்.

19ம் நூற்றாண்டுகளின் இறுதியில் தென்னிலங்கையில் முஸ்லிம் வர்த்தகர்கள் சிங்கள சிறு முதலாளிகளுக்கு தொழில் ரீதியாகப் பெரும் போட்டியாக அமைந்தார்கள். இதனால் எங்கும் வியாபித்து கொண்டிருக்கும் முஸ்லிம் வர்த்தகர்களின் வியாபாரத்தை உடைக்கவேண்டும் என்று சிங்கள முதலாளிகள் நினைத்தார்கள். இப்போராட்டத்தை அவர்கள் முன்னெடுக்கும்போது, பல சந்ததிகளாக வியாபாரத்தில் தேர்ந்த குழுவினர்கள் தங்கள் வியாபாரத்திற்குப் போட்டியாக உருவாகியிருக்கின்றனர் என்ற உண்மையைக் கூறவில்லை. மாறாக, அன்னியரின் ஆட்சியின் எதிரொலியாக உருவாகிய பௌத்த மறுமலர்ச்சி என்ற குடையின்கீழ் தாவினார்கள். முஸ்லிம் மக்களை அன்னியர் என்றும் பௌத்த கலாசாரத்திற்கு அச்சுறுத்தலாக வந்தவர்கள் என்றும் கோஷங்களை எடுத்துவிட்டனர். இதனால் மக்கள் மட்டத்தில் எதிர்ப்புணர்ச்சிகள் ஏற்பட்டு முஸ்லிம் மக்களைத் தாக்கும் வன்முறைக்கு சிங்கள


மக்களைத் தூண்டிற்று. 1915ம் ஆண்டில் இது சிங்கள முஸ்லிம் இனக்கலவரங்களாக வெடித்தன. இக்கலவரங்கள் குறிப்பாக முஸ்லிம் மக்களுடைய வர்த்தக நிலையங்களையே அடித்துத் துவம்சம் பண்ணின. இவ்வாறு வர்த்தகர்களாகிய ஒரு சிறிய பகுதியினரின் தேவைகள் கடைசியாக பரந்த மக்களைப் பாதித்து அவர்களின் ஒட்டுமொத்தமான பிரச்சினை யாக உருவெடுத்தது.


இம்மாதிரியான கற்பனையிலான முரண்பாடு களுக்கு மனித நடத்தை ரீதியான காரணங்களைக் கூறும் சமூக ஆய்வாளர்களும் உள்ளனர். தம்மை ஏதொவொரு முறையில் அடையாளப்படுத்துவதற்கும், பின்னர் அந்த அடையாளங்களுக்கு உட்படாத பிறரை அன்னியர் என்று எதிரிகளாகக் கணிப்பதற்கும் மனிதர்களுடைய உளத் தேவைகளே காரணம் என்கின்றனர். மனிதர்களுக்கு எப்பொழுதும் "எதிரிகள்" தேவை என்று இந்தக் கோட்பாடு கூறுகின்றது. விளையாட்டுப் போட்டிகளிலும் கிரிக்கட் ஆட்டங்களிலும் இதை அவதானிக்கலாம். தங்களுடைய அணி என்று எதைக் கருதுகின்றார்களோ அதற்காக சண்டையிடவும் மனிதர்கள் தயாராக இருப்பார்கள். கிளப்புகளாகப் பிரிந்து தம்முள் நித்தமும் போட்டி மனப்பான்மையில் இருப்பார்கள். எதிரிக் கிளப்புகள் தம்மை அழிக்கத்தான் இருக்கின்றன என்று எல்லாக் கிளப்பினருமே மனதார நம்புவார்கள்.

அரசியலிலும் அவ்வாறே. எங்களுடைய மதம் அச்சுறுத்தப்படுகின்றது, அல்லது இனம் அழிகின்றது என்றவுடன் உணர்ச்சி பூர்வமாக அணி திரளாதோர் எவருமில்லை என்று கூறலாம். உள்நாட்டுப் பிரச்சினைகள் நடக்கும்போது மக்களின் கருத்துக் கணிப்பினை எடுத்துப் பாருங்கள். இது ஏதொவொரு நாடு அல்லது "வெளிச்சக்தி" தங்கள் நாட்டை உடைக்க அல்லது சுரண்ட செயற்படுத்தும் சதித்திட்டம் என்றே அனேகமாகப் பலரும் நம்புவதை நாம் காணலாம். சதி என்னும் பதம் அரசியலில் அடிக்கடி உபயோகிக்கப்படுகின்றது. கற்பனையிலோ அல்லது உண்மையிலோ இருக்கும் தங்கள் எதிரிகளை நோக்கி மக்கள் மனங்களிலிருக்கும் பயப்பீதிகளைப் படம் போட்டுக் காட்டும் கண்ணாடி சதி என்னும் இந்தச் சொல்லாகும். சதி என்ற சொல்லை அரசியல்வாதிகள் அடிக்கடி உபயோகிப்பார்கள். ஏனெனில் அது மக்களின் மனதில் இனந்தெரியாத பீதிகளை ஏற்படுத்துகின்றது. பயம் என்பது மக்கள் மத்தியில் காரணகாரியம் இல்லாத செயற்பாடுகளைச் செய்யவும், வன்முறையில் ஈடுபடவும் தூண்டுகின்ற ஒரு அருவருக்கத்தக்க உணர்வாகும். இதை வைத்துக் கொண்டு அவர்களை நன்றாகத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம்.

இனம் மொழி மதம் என்ற வேறுபாடுகளைக் கடந்து மானுடம் என்ற அடையாளத்தின் கீழ், தம்முள் எழும் முரண்பாடுகளை சிக்கல்களின்றி தீர்வுகளை நோக்கிச் செலுத்துவதற்கு, மனிதர்களின் கல்வித்தரம் உயர்ந்து அங்கு சமூக அரசியல் முதிர்ச்சி உடைய பண்பாடு பரவலாகத் தோன்ற வேண்டும். மனிதர்கள் மனதிலுள்ள பயங்கள் அகல வேண்டும் அதுவரை நாம் இந்த உலகை அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டு மெனில், முரண்நிலைகளைக் கையாளப் பழக வேண்டியது அவசியமாகும்.

வன்முறையான முரண்நிலைகளைத் தீர்ப்பதற்கு பல்வேறு கருவிகளும், பொறிமுறைகளும், முறைவழிகளும் உபயோகமாகலாம். இவை நடுத்தீர்ப்பினை நாடுவது முதல் இரு சாராருக்கும் ஏற்புடைய தீர்வுகளைப் பெற முயற்சி செய்யும் இணக்கப் பேச்சுக்கள் வரை பலவாறாகும். இம் முறைவழிகள் யாவும் எம்மை நிலைபேறான சமாதானத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும்.



## நிலைபேறான சமாதானம்


நிலைபேறான சமாதானம் நிலவும் நாட்டில் பின்வரும் இயல்புகள் காணப்படும்:




மனித உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்திலும் பொதுச் சட்டங்களிலும் நிலைநிறுத்தப் படும்.



சுதந்திரமானதும் நிபுணத்துவம் உள்ளதுமான நீதித்துறை செயற்படும். உயர் மன்ற நீதியரசர்கள் மிகவும் உயரிய நிலையில் வைத்து மதிக்கப் படுவார்கள்.



அரசியலமைப்புச் சட்டம் மொழிவாரியாகவும் இனவாரியாகவும் வாழும் மக்களின் அபிலாஷைகளுக்கிணங்க அவர்கள் தேவைகளையொட்டிய பிராந்திய அதிகாரப் பங்களிப்பைக் கொண்டிருக்கும். மத்திய அரசில் சகல இனக்குழுக்களும் சம அதிகாரம் பெற்றிருப்பர்.



ஆணோ பெண்ணோ, வறியவரோ செல்வந்தரோ, எவரும் வேட்பாளராக நின்று பங்கு கொள்ளும் முறையில் தேர்தல்கள் நீதியானதாகவும் நேர்மையானதாகவும் நடக்கும். கள்ள வாக்குகள் போடப்பட மாட்டாது.



அரச நிர்வாகம் அரசியல் தலையீடுகள் இன்றி இயங்கும். தனது நடவடிக்கைகளுக்கு மக்களுக்கு கணக்குக் காட்டுவதாக அது அமையும்.



அரசியல் தலையீடுகள் அபிவிருத்தித் திட்டங்களிலோ, வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதிலோ அல்லது வேலை வாய்ப்புக்கள் வழங்குவதிலோ அறவே இருக்காது.



திறமையின் அடிப்படையிலேயே மக்கள் சகல கல்வி தொழில் வாய்ப்புக்களையும் பெறுவர்.



காவல் துறை சுதந்திரமானதாக இயங்கும்.



இயற்கை வளங்களைக் காப்பதற்கான கட்டுப்பாட்டுச் சபை சுதந்திரமாகவும் அதிகார பூர்வமாகவும் இயங்கும்.




பல்லின சமூகத்தை மதிக்கும் சுதந்திரமான ஊடகத்துறை இயங்கும்.



காணிச் சீர்திருத்தச் சட்டங்கள், தொழிலாளர் உரிமைகளை மதிக்கும் சட்டங்கள், செல்வத்தை மீள்பங்கீடு செய்யக்கூடிய வரி விதிப்புக்கள் போன்ற நடைமுறைகள் பொருளாதார நீதியை நிலை நாட்டும் நோக்கத்துடன் கொண்டு வரப்படும்.

அப்பப்பா ! சமாதானம் கொண்டு வருவதற்கு இவ்வளவு எடுப்பா என்று மலைக்கிறீர்களா? திரும்பவும் சமாதான வாழ்வின் அம்சங்களைக் கவனமாகப் படித்துப் பாருங்கள். ஒரு நாட்டில் அல்லது சமூகத்தில் என்னென்ன விடயங்கள் மக்கள் மத்தியில் அதிருப்தியைத் தோற்றுவிக்கின்றனவோ, எவை அவர்களுக்கு அநீதி இழைக்கின்றனவோ, அவற்றை நீக்கி விட்டால் தான் சமாதானம் மலர முடியும் என்று அவை சொல்லாமல் சொல்லுகின்றன. இந்த அம்சங்கள் பூரணமாகப் பெறப்படாவிடில், அல்லது அவை பெறப்படும் முறைகள் ஸ்தாபிக்கப்படாவிடில், யுத்தம் நின்று சமாதானம் தோன்றியதுபோல் தெரிந்தாலும், ஏதோவொரு நாள் இந்த அதிருப்திகளெல்லாம் மீண்டும் எரிமலைக் குழம்பு போல பொங்கி வெடிக்கும். அது யுத்தமாக இருக்கலாம், இனக்கலவரங்களாக இருக்கலாம், மக்கள் கிளர்ச்சியாக இருக்கலாம், அல்லது அளவுக்கதிகமான குற்றச் செயல்களாக இருக்கலாம். இவையொன்றுமே நிலைபேறான சமாதானமாகாதல்லவா?

வறுமை, இன (மத, மொழி) ரீதியான ஒடுக்குமுறை, குறை விருத்தி, தனது பிரஜைகள் மீதே பயங்கர வாதத்தைக் கட்டவிழ்க்கும் அரசு, போன்ற அநீதிகளை ஒழிக்கும் நோக்கத்துடன் சமூக அரசியல் கட்டமைப்புக்களும் பொறிமுறைகளும் நீதியான முறையில் உருமாற்றப்படவேண்டும். அதுவே நிலைபேறான சமாதானத்தைத் தரும்.இதை இன்னொரு வகையில் கூறுவதானால், எங்கும் நீதி நிலைநாட்டப்பட்டால் தான் உண்மையில் சமாதானத்துடன் மக்கள் வாழ முடியும்.



**நிலைபேறான சமாதானத்தை ஏற்படுத்த தேவையான நடவடிக்கைகள் :**

- ***யுத்த நிறுத்தத்தை மேற்கொள்ளல்***

மீளிணக்கம்

அழிவுகளை ஈடு செய்தல்

பூகோள எல்லைக் கோடுகளை உறுதியாக முடிவு செய்தல்

புனர் நிர்மாணம்

பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

- ***ஜனநாயகக் கட்டமைப்புக்களை நிறுவி மனித உரிமைகளைப் பாதுகாத்தல்***

உரிமைகளின் சாசனம்

வெவ்வேறு (உள்ளூர், மாகாண, மத்திய) நிலைகளில் அரசாங்கத்தை அமைத்து அவை இயங்கத் தேவையான நிறுவகங்களைக் கட்டுதல்

புதிய அரசியலமைப்பு சட்டம்

- ***பொருளாதார மீளமைப்பினையும் அபிவிருத்தியையும் மேற்கொள்ளல்***

வெளிநாட்டுதவி

உள்ளூர் முதலீடுகளை இந்த நோக்கத்துடன் திருப்பல்

வளங்களை உபாய ரீதியாக ஒவ்வொரு துறையிலும் விநியோகித்தல்

மக்கள் தங்கள் அன்றாட உரையாடலில் “சமாதானம் வருமா?” என்று கேட்பது வழக்கம். இது ஏதோ ஒரு பயணத்தில் சமாதானம் ஒரு இறங்குதுறை அல்லது ஒரு நிலையம் என்பது போலவே கருதுகின்றது. அப்படித்தான் சாதாரணமாக எல்லோரும் நினைக்கின்றார்கள். அரசியல்வாதிகள் எல்லாவற்றையும் சுமுகமாக முடித்தால் விடியும்போது சமாதானம் வந்துவிடும் என்று உண்மையாக நம்புகின்றார்கள். ஆனால் நிலைபேறான சமாதானத்துக்குத் தேவையான நிபந்தனைகளைப் பார்க்கும்போது அது ஒரு நீண்ட முறைவழியாகும் என்பது புரியும். இந்த முறைவழியில் சகல சமூக அரசியல் நிறுவகங்களின் மாற்றங்களும் இணையவேண்டும். எமது அரசியல் கட்சிகள் தாமும் ஜனநாயகமயமாக்கப்படவேண்டும்.


ஆயுள் முழுக்க ஒரே தலைவரையும் அவர் குடும்பத்தவரையும் தலைமையாகக் கொண்ட நிலப்பிரபுத்துவ அடிப்படையிலமைந்த அரசியல் கட்சியொன்று, தனக்குள்ளேயே ஜனநாயகம் அற்ற அரசியல் கட்சியொன்று, நாட்டில் ஜனநாயகத்தைக் கொண்டு வர முடியுமா? ஒருக்காலும் முடியாது. இந்த சந்தர்ப்பத்தில் இந்த அரசியல் கட்சி தன்னை முழுமையாக மாற்றிக் கொண்டுதான் நிலைபேறான சமாதானம் கொண்டு வரும் ஜனநாயகக் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கான தலைமைத்துவத்தினைக் கொடுக்கலாம். இவ்வாறே எல்லாமும். இதை யார் செய்விப்பது? இந்தக் கேள்வியின் அர்த்தம் என்னவென்றால், புத்திஜீவிகள், அரச நிர்வாகிகள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், பாமர மக்கள் என எல்லாருமே இதைச் செய்விப்பதில் தங்கள் பங்கைக் கட்டாயம் செலுத்த வேண்டும் என்பதாகும். இது நிச்சயமாக அரசியல் வாதிகள் மட்டும் செய்கின்ற தொழில் அல்ல.


சமாதானத்தினூடாக என்ன இலக்குகளை அடைகின்றோமென்பது உண்மையில் அதன் முறைவழியிலேயே தங்கியுள்ளது (The process defines the end). அதாவது எப்படிச் செய்கின்றோம் என்பதுதான் என்ன செய்து முடிக்கின்றோம் என்பதைத் தீர்மானிக்கின்றது. எப்படியாவது செய்வோம், போக வேண்டிய இடத்துக்குப் போனால் சரி என்று நாம் இயங்க முடியாது. சமாதான முறைவழியின் ஒவ்வொரு படியிலும் நாம் எடுத்து வைக்கும் கற்கள்தான் பின்பு மலரும் ஒரு புதிய சமுதாயத்தின் கட்டிடமாக வளருகின்றது. ஆகவே ஒவ்வொரு கல்லும் அழகானதும், உறுதியானதும் ஒழுங்காக அடுக்கப்பட்டதுமாக இருப்பது அவசியம். அது மட்டுமன்றி, இத்தகைய

முறைவழியின்போது அதன் நிகழ்வுகளினால் பல புதிய சமூகச் சக்திகளும் அவற்றின் தலைமைத்துவங்களும் தோன்றுகின்றன. புதிய நடைமுறைப் பண்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. இவைதான் தீர்வு வந்தபிறகும் எங்கள் சமூகத்தில் அல்லது நாட்டில் இருக்கப்போகும் தலைமைத்துவங்களும் நடைமுறைகளும் என்பதை நாம் மறக்கக் கூடாது. ஆகவே நல்ல தலைமைத்து வங்களையும் நல்ல நடைமுறைகளையும் நாம் போகும் எமது வழிவழியே நாம் உருவாக்குவதும் அவசியமாகும்.

நிலைபேறான சமாதானத்தினை உருவாக்கு வதற்கு நீதி நிலைநாட்டப்படவேண்டும் என்று பார்த்தோம். நீதி நிலைநாட்டப்பட வேண்டு மென்றால், புதிய விழுமியங்களைக் கொண்டு, சகல மக்களினதும் சம பங்களிப்பை வலியுறுத்தும் பல முறைவழிகளில் புதிய நடைமுறைப் பண்பாடுகளுடன் இயங்க வேண்டும் என்பதையெல்லாம் விவரமாகப் பார்த்தோம். ஆனால், சகல மக்களும் ஒற்றுமையாக ஒற்றையாட்சியின் கீழ் இருக்கவேண்டும் என்று எங்கும் கூறப்படவில்லை. முரண்நிலையில் ஆழ்ந்திருக்கும் ஒரு மக்கள் எடுக்கும் தீர்வு ஒற்றையாட்சியாக இருக்கலாம் அல்லது தனியாட்சியாகக்கூட இருக்கலாம். எதுவாக இருந்தாலும் நிலைபேறான சமாதானம் பெறப் படலாம், அங்கு நீதி நிலைநாட்டப்பட்டால். ஒரு நாட்டின் எல்லைக் கோடுகள் மாறுதலடைவது ஒரு பெரிய விஷயமேயில்லை. எல்லைக்கோடுகள் மாறி மாறி வரையப் பட்டதை உலக வரலாறு எடுத்துக் காட்டிய வண்ணம் இருக்கின்றது. அப்படியிருந்தும் கூட, மேற்கு நாடுகள் முரண்நிலைகளில் அமிழ்ந்திருக்கும் வறிய நாடுகளுக்கு ஒருங்கிணைந்த ஆட்சியையே சிறந்த தீர்வாக அனேகமாக முன்வைக்கின்றன. தற்போதைய பின்புலத்தில் இந் நாடுகளின் மக்கள் நீதியுடன் வாழ வழி இருக்கின்றதா என்று பார்க்கப்பட முன்னரேயே "ஈழம் சந்திரமண்டலத்தில்தான் நிறைவேறும்..." என்று மனம்போன போக்கில் வார்த்தைகளை வெளி விடுகின்றன. இந்த வகையான அறிக்கைகளும், ஆட்சியிலுள்ளவர்களை அனுசரித்துப் போகும் அவற்றின் போக்கும், நீதி நிலைநாட்டப்படுவதைவிட தங்கள் உள்நோக்கங்கள் நிறைவேற்றப்படுவதற்காகத் தான் இந்த நாடுகள் எங்கள் முரண்பாடுகளைத் தீர்க்க வந்திருக்கின்றன என்பதையே காட்டுகின்றன.

நாம் ஒன்றும் செய்யாது இருந்துகொண்டு "நோர்வே நாடு வந்து எங்களுக்கு சமாதானம் தரும்... இந்தியா சமாதானம் தரும்..." என்ற வண்ணம் எங்கள் வருங்காலத்துக்கு பிற நாடுகளில் தங்கியிருந்தால் அவற்றுடைய உள்நோக்கங்களை நிறைவேற்றுவதில் துணைபோவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. அது மட்டுமன்றி, யுத்தத்தினைத் தூண்டி விடும் அவற்றின் பல செயற்பாடுகளைத் தட்டிக் கேட்கவும் முடியாமல் இருக்கின்றோம். அரசுகளுக்கு ஆயுதங்களை விற்பனை செய்தல், தாராளமயமாக்கலை பொருளா தார உதவிக்கான ஒரு நிபந்தனையாகத் திணித்தல் போன்றவற்றை அவை தொடர்ந்து செய்து கொண்டு தானிருக்கின்றன. மேற்கு நாடுகள் ஈடுபடும் இந் நடவடிக்கைகள்தாம் சமூகத்தில் நீதியைக் குலைய வைத்து முரண்நிலைகளைத் தோற்றுவிக்கின்றன. எங்கள் நாட்டில் 1977ம் ஆண்டு தாராள பொருளாதாரக் கொள்கை அறிமுகமாகியதன் பின்னர்தான் பெரிய அளவிலான வன்முறைகள் ஆரம்பித்ததும் அவற்றை அடக்குவதற்கான உரிமை மீறல் சட்டங்களான பயங்கரவாத தடைச்சட்டம் அறிமுகப்படுத்தப் பட்டதும் நிகழ்ந்தன. எமது நாட்டின் தொழிற் சங்கங்கள் சின்னாபின்னப்படுத்தப்பட்டதும் இந்தக் காலகட்டத்தில்தான். எனவே முரண்நிலைகளின் தோற்றுவாய்களை நாம் விளங்கிக் கொள்வது மட்டு மன்றி அவற்றை உருமாற்றுவதற்கான நடவடிக்கை களில் ஈடுபடும் துணிவையும் பெற்றுக் கொள்ளுவது அவசியமானது.





### சர்வாதிகாரமா?



### ஜனநாயகமா?



முரண்நிலைகளின் உருமாற்றத்திற்கு அவசியமான கருவிகளைப் பற்றிக் கூறும் போது அவை ஜனநாயகத்துக்கான முறைமைகளாக இருப்பதை நீங்கள் கவனித்திருக்கலாம். முன்பக்கங்களிலிருந்தே இந்நூல் அடிக்கடி ஜனநாயக அமைப்புமுறையை வலியுறுத்து வதையும் நீங்கள் கண்டிருக்கலாம். ஜனநாயகம் ஏன் முக்கியமானது என்பதை நாம் சற்று விரிவாகப் பார்ப்போம்.

இன்று வட - கிழக்கில் ஜனநாயகத்தைப் பற்றியோ மனித உரிமைகள் பற்றியோ பேசும்போது "இது மேற்கு நாடுகளின் கோட்பாடுகள், எங்களுக்கு இப்போது பொருந்தாது'' என்ற ரீதியில் பலர் தர்க்கிப்பதைக் காணலாம். ஒரு நாட்டில் வாழக்கூடிய சகல குழுக்களும் தீர்மானம் எடுத்தலில் பங்கு கொள்ளக் கூடிய கட்டமைப்புக்களை உருவாக்குதல்தான் ஜனநாயக முறைமை என்று நாம் வரைவிலக்கணம் கொடுப்போமாயின், மேற்கு நாடுகளின் ஜனநாயகம் கிழக்கு நாடுகளின் ஜனநாயகம் என்று வேறுபாடான ஜனநாயகங்கள் இல்லை என்பதைக் காணலாம். எங்கும் எல்லாம் மனித குலத்துக்குரிய ஒரே ஜனநாயகம்தான் காணப்படுகின்றது. ஒவ்வொரு நாடும், அது அமெரிக்காவாக இருந்தால் என்ன ஆபிரிக்காவின் சியாரா லியோனாக இருந்தால் என்ன, பூரண ஜனநாயகத்தை அடையும் பாதையின் ஏதோவொரு படிநிலையில் நின்று இன்னும் போராடிக் கொண்டிருக்கின்றது. எந்த நாடுமே இன்னும் அதை அடையவில்லை என்றே கூறவேண்டும். பூரண ஜனநாயகம் என்பது உண்மையின் தத்துவம்; அது ஒரு முடிவிலியாகும்.

''இந்த ஜனநாயகம் ஒண்டுக்கும் உதாவது. எல்லாரையும் உள்ளுக்கு விட்டா ஒராளையொராள் வெட்டிக் கொண்டுதான் இருப்பாங்களேயொழிய உருப்படியா ஒண்டும் செய்ய விட மாட்டாங்கள். தாங்களும் செய்ய மாட்டாங்கள். நல்ல அபிவிருத்தி வேணுமெண்டால் எங்களுக்குத் தேவை சர்வாதிகாரம்தான். நல்ல கட்டுப்பாட்டோட எல்லாரையும் வச்சிருக்க வேணும்... சிங்கப்பூரைப் பாருங்கோ''

''யுத்தத்தாலயும், வருஷக்கணக்கான சிங்கள அரசாங்கத்தின்ட புறக்கணிப்பாலயும் தமிழ் மக்களின்ட பிரதேசங்கள் அழிஞ்சு போயிருக்கின்றன. இதை அபிவிருத்தி செய்யிறதென்டால் மேற்கு நாடுகள் சொல்லுகிற மாதிரி ஜனநாயகம் காக்க முடியாது. இப்ப கொஞ்ச வருஷத்துக்கு விடுதலைப் புலிகளின்ட முழுக் கட்டுப்பாட்டுக்குக் கீழ நாங்கள் இருந்தால்தான் யாரும் குழப்ப முடியாதபடி அபிவிருத்திப் பாதையில கெதில போகலாம்...''

மேற்கூறியது போன்ற பல கருத்துக்களை நாம் இன்று பரவலாகக் கேட்கலாம். இவற்றில் உண்மை இல்லாமல் இல்லை. ஒரே முறைவழியில் எல்லோரையும் ஈடுபடுத்துவதில் பல தொந்தரவுகள் உண்டு. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சொந்த நோக்கங்களுடன் வந்து பொது நோக்கங்களைக் குழி தோண்டிப் புதைக்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஆகவே, பொதுநலன் கருதும் ஒருவரின் அல்லது ஒரு கட்சியின் தலைமையில் செயற்பாடுகள் துரிதமாக நடக்கும்தான்.

அப்படியான பொதுநலன் கருதுகின்ற தலைவர் ஒருவர் இருக்கின்றார் என வைத்துக் கொள்வோம். அவர், தான் எந்த இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும், எந்த வர்க்கத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் அக்குழுக்களுக்குரிய பற்றுக்களையெல்லாம் உதறி எறிந்து விட்டு சகல இனங்களுக்காகவும், சகல வர்க்கங்களின் நன்மைக்காகவும் சமமாகச் செயற்படுகின்றார் என்றும் வைத்துக் கொள்வோமே. அது எவ்வளவு சாத்தியமில்லாத நிலைமையாக இருந்தாலும் நாம் சும்மா அதைக் கற்பனை பண்ணிப் பார்ப்போம். அவ்வாறு இயங்கும் தலைவர் ஒருவருடன் நாட்டு மக்கள் மிக சந்தோஷமாக இருக்கின்றனர். எந்த முடிவுகளை எடுக்கவும் அவருக்குத் தனிப்பட்ட முறையில் பூரண அதிகாரத்தை வழங்கியிருக்கின்றனர்.

ஆனால் அந்தோ, அவர் ஒரு சாதாரண மனிதராக இருப்பதனால் அவர் வாழ்நாள் மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு அறுபது வருடங்கள் தான் நீடிக்கும். ஒரு நாட்டின் வரலாறோ பல்லாயிரக்கணக்கான வருடங்கள் அல்லவா? அதுவரைக்கும் அத்தலைவரினால் உயிர்வாழ முடியாதல்லவா? ஆகவே நூறு வருடங்கள் வாழ்ந்தபின்னர் அவர் இறந்து போனால் அவர் இடத்தைப் பிடிக்க வரும் புதிய தலைவர் அவரைப் போலவே நீதியாக இருப்பார் என்று என்ன நிச்சயம்? அடுத்த தலைவர் சரியான கொடுங்கோலனாக வந்து வாய்த்து விட்டால் முன்பு அந்த நல்ல தலைவர் செய்த நல்ல காரியங்களெல்லாம் இந்தக் கொடுங்கோலனால் ஒரிரு வருடங்களிலேயே முடிவுக்குக் கொண்டு வரப்படுமே. கடைசியில் ஒரு பயனும் மிஞ்சாது.

அந்த நல்ல தலைவரை மீண்டும் எடுத்துக் கொள்வோம். மனிதர்கள் ஒரே மாதிரி எப்பொழுதுமே இருப்பதில்லை என்பது எங்களுக்குத் தெரியும். நாம் எங்கள் உறவினர் மத்தியில் நண்பர்கள் மத்தியில் அடிக்கடி அனுபவப் பட்டிருக்கின்றோம். "முந்தி நல்லாத்தான் இருந்தான்... இப்ப பாத்தா சரியான எரிச்சலா இருக்குது." என்று பல சந்தர்ப்பங்களில் நாம் கூறவேண்டி இருந்திருக்கின்றது. மாற்றத்திற்கு உள்ளாகாத மனிதர்களே இந்த உலகில் இல்லை. இதே போல் முதலில் நல்ல தலைவராக வந்தவர் நாளடைவில் கூடாத தலைவராக மாறினால்....? எங்கள் நாட்டின் கதி அதோகதிதான்.

தனிமனிதர்களைப் போல்தான் நிறுவனங்களும் இயக்கங்களும். அவையும் தொடர்ந்து மாற்றங்களுக்குள்ளாகியவண்ணம் இருக்கின்றன. அவை சாஸ்வத மானவையுமல்ல. அவற்றின் வரலாறு எழுச்சியும் வீழ்ச்சியும் கொண்டது. நாங்கள் இதற்கு உதாரணமாக எந்தக் கட்சியையுமோ நிறுவகத்தையுமோ எடுத்துக் கொள்ளலாம். ஆண்டாண்டு காலங்களாக இருக்கக் கூடிய மத நிறுவகங்கள் கூட ஒவ்வொரு நூற்றாண்டிலும் எத்தனை சீர்திருத்தங்களினால் மாறுதலடைகின்றன. பல நாடுகளில் அவை தோன்றி மறைகின்றன. இந்தியாவில் பௌத்த மதம், இன்று மேற்கு நாடுகளில் கிறிஸ்தவ மதம் இதற்கெல்லாம் உதாரணங்களாகும்.

அடுத்ததாக, தனி மனிதர்களும் தனி நிறுவனங்களும் சகலரையும் பாகுபாடன்றி பிரதிநிதித்துவப் படுத்தக் கூடியவையல்ல. உதாரணமாக ஒரே தலைமைத்துவம் தொழிலாளர்களுக்கு நன்மை புரிந்து கொண்டு முதலாளிகளையும் காப்பாற்ற முடியாது. இந்த இரண்டு வர்க்கங்களும் எதிரும் புதிருமான நலன்களைக் கொண்டவை. ஆனால் ஒரு சமூகத்தின் பொருளாதார இயக்கத்திற்கு இரண்டும் மிக அவசியமானவை. தொழிலாளர் நலன்களைத் தொழிற் சங்கங்களும், முதலாளிகள் நலன்களை வர்த்தக மன்றங்களும் பாதுகாக்கச் செய்வதனால் அங்கு இருசாராரும் நட்டப்படாமல் வாழுகின்ற சமநிலையைப் பேணலாம். சமூகமும் அபிவிருத்தி அடையும். இது போலவேதான் அரசியல் கட்சிகளும் வெவ்வேறு வர்க்கங்களினதும் சமூகக் குழுக்களினதும் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றன.

அதைப்போல, ஒரு தலைவருக்கு, தன்னுடையதும் தம்மைச் சுற்றியுள்ளவர்களினதும் நலன்களை முன்னுரிமைப்படுத்துவதைத் தவிர்க்க இயலாது. அதே போன்று ஒரு இயக்கம் அதிகாரத்தில் இருந்தால் தனது அங்கத்தவர்களின் தேவையைத்தான் முன்னுரிமைப் படுத்தும். அது இயற்கை நியதியாகும். இப்படியான ஆட்சியில் இந்த அதிகார வட்டத்திற்கு வெளியே வாழும் மக்களின் நிலை என்ன? தலைவரினது உள்வட்டத்திற்குள் இல்லாதவர்களும், அதிகாரம் வகிக்கும் இயக்கத்தின் ஆதரவாளர்களும் அங்கத்தவர்களும் அல்லாதவர்களும் கெட்டழிந்து போகவேண்டியவர்களா?

ஜனநாயகத்தின் தேவைக்கு இன்னொரு நல்ல உதாரணமாக 2004ம் ஆண்டு விடுதலைப் புலிகள் மத்தியில் அவர்களின் முன்னாள் தளபதி கருணா ஏற்படுத்திய பிளவினைக் காட்டலாம். கருணா இலங்கையின் கிழக்கின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தின் இராணுவத் தளபதியாக இருந்தவர். இக்காரணத்தினால் அதன் அரசியல் தலைமைத்துவத்தினையும் எடுத்துக் கொண்டார். விடுதலைப்

புலிகள் அம்மாவட்டங்களின் அரச நிர்வாகத்தினைத் தம் கைக்குள் வைத்துக் கொண்டனர். அரசு சாரா நிறுவனங்களைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டனர். பல்கலைக்கழகத்தினுள் தீர்மானங்கள் மேற்கொள்ளும் அளவுக்கு வளர்ந்தனர். அப்பிரதேசத்தின் பாராளுமன்றப் பிரதிநியாக வரவேண்டிய அரசியல்வாதிகள் யார் என்பதயும் தீர்மானித்தனர்.

எல்லாம் சரி, கருணா ''நல்லவராக'' இருக்கும் வரையில்தான். அவர் தமிழ் தேசியப் போராட்டத்திற்கு எதிராகத் திடீரெனத் திரும்பியபோது இயக்கத்திலிருந்து விலக்கப்பட்டார். அந்தோ, மட்டு அம்பாறை மாவட்டங்களில் எங்கு திரும்பினாலும் எந்த நிறுவனத்தை எடுத்தாலும் அவருடைய ஆட்கள்தான். அவர் கவிழ்ந்தவுடன் அவருடன் எல்லாம் சரிந்தன. அரச நிர்வாக சேவையில், பல்கலைக்கழகங்களில், ஊடகங்களில் பணிபுரிந்த பலர் சுடப்படும் அளவுக்கும் கொலை செய்யப்படும் அளவுக்கும் முரண்பாடுகள் வலுத்தன. எல்லாம் செயலிழந்து போயின.

இதுதான் சர்வாதிகாரத்தின் பிரதிகூலமாகும். இந்த அமைப்பில் மாற்று அதிகார மையங்கள் வளர்க்கப் படாமல் இருக்கின்றன. அப்படி வளர்ந்தாலும் அவை அழிக்கப்படுகின்றன. இதனால் அந்த ஒரு மையம் கவிழ்ந்தால் சகலதும் கவிழ்ந்து ஒரு நாட்டின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. இந்த உருவகங்களிலிருந்து, தனிமனிதர்களையோ அல்லது தனி நிறுவனங்களையோ நம்பி நாம் ஒரு தேசத்தை நிர்வகிக்க முடியாது என்பது விளங்கும்.




**தனிமனிதர்கள் அல்லது தனி நிறுவனங்கள் நடத்தும் நிர்வாகம்....**

*நீடித்து நிலைக்க முடியாது*

***சகல மக்கள் குழுக்களினதும் அல்லது வர்க்கத்தினரதும் நலன்களை ஒருசேர பிரதிநிதித்துவப்படுத்த இயலாது***

***மாற்றத்திற்கு உட்படாமல் இருக்க முடியாது. மாற்று அதிகார மையங்களை ஊக்குவிக்காததனால், தனது சரிவோடு சமூகத்திலுள்ள சகல நிறுவனங்களையும் தன்னோடு இழுத்துக் கொண்டு விழும்.***

### *அப்படியானால் என்ன செய்யலாம்?*



தேச நிர்வாகத்திற்குரிய அரசு மற்றும் அரசு சாரா நிறுவகங்களை நாம் நிர்மாணிக்க வேண்டும். அதன் கொள்கை அடிப்படைகளைத் தீர்மானிக்கும் அரசியல் நிறுவகங்கள், அதாவது கட்சிகள், பலப்பலவும் வேண்டும். எங்கும் எதற்கும் மாற்று வேண்டும். இதில் ஒவ்வொரு நிறுவகமும் கட்சியும் வித்தியாசமான மக்கள் குழுக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இருக்கும். இதனால் சகல மக்களுக்கும் நீதி கிடைக்கும். இந்த நிறுவகங்கள் ஒன்றுமே தாம் தனியே பலம் பெறாத வண்ணம் ஒன்றையொன்று அதிகாரவலுவில் சமப்படுத்தும் வண்ணம் அமைக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் சமூகத்தில் என்றுமே ஏற்றத் தாழ்வற்ற சமநிலையான தளங்கள் பேணப்படலாம். ஒன்று அழிந்தால் இன்னொன்று அந்த இடத்தை நிரப்பும். ஒருவர் போனால் அந்த இடத்துக்கு இன்னொருவர் வருவார். யாருமே தங்கள் வரையறைக்கு மேலே செல்ல முடியாதவாறு ஏனைய நிறுவகங்களின் அதிகார மையங்கள் அவரைக் கட்டிப் போட்டுவிடும். இதுதான் ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.

ஜனநாயக முறைகளில் பிரதிகூலங்கள் எத்தனையோ உண்டு. அது மிகவும் மந்தமான போக்காகும். ஒரு வேலையைச் செய்வதற்கு அல்லது ஒரு தீர்மானம் எடுப்பதற்கு பலகாலம் எடுக்கும். ஒவ்வொரு நிறுவகத்திலும் ஒவ்வொருவர் தமது வேலையைச் செய்யாது இருக்கலாம். எல்லோருடைய தேவைகளையும் கவனிக்கப் போய் சிலநேரம் மேலதிக செலவுகளை தாங்க வேண்டி நேரிடலாம். பலர் இணைந்தால் ஒவ்வொருவரும் தத்தமது சுயநலன்களுக்காக இயங்கி செய்யவேண்டிய வேலையைக் குட்டிச்சுவராக்கலாம். இப்பிரதிகூலங்கள் எவ்வளவாக இருந்தாலும், எந்தக் கோணத்தில் வைத்துப் பார்த்தாலும் எமக்கு இருக்கின்ற வழிகளில் ஜனநாயக முறையே மக்கள் எல்லாருக்கும் உகந்த முறையாகும். அம்முறையை நாம் மேலும் மேலும் மெருகூட்டித் திருத்தலாம். இன்னும் பூரணமாக்கலாம். ஆனால் எறிந்துவிட முடியாது.

இதே விடயத்தை இன்னொரு கோணத்தில் பார்ப்போம். சிங்கப்பூரை எல்லோரும் பொதுவாக ஜனநாயகம் இன்றி விருத்தியடைந்த நாட்டுக்கு முன்னுதாரணமாகக் கொள்கின்றார்கள். ஆகவே அதையே உதாரணமாக எடுப்போம். சிங்கப்பூர் ஒரு சிறிய நகர அரசு. அதை ஒரு வீட்டை நிர்வகிப்பது போலவே நிர்வகிக்கலாம். அது எங்களைப் போன்ற நாடுகளுக்கு ஒரு பொருத்தமான உதாரணமாக இருக்காது என்றாலும் அதை நாம் எடுக்கலாம். சிங்கப்பூரில் லீகுவான் யூ ஒரு ஏகக் கட்சி ஆட்சியை அமைத்து குறை விருத்தி நாடாக இருந்த அதனை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றினார். அவருடைய கட்சியின் தலைமையின் கீழ்தான் எல்லாம் நிகழ்ந்தது என்ன, நிகழவேண்டியிருந்தது. எதிர்க்கட்சி சிறிய அளவில் இயங்கியதாயினும் அதற்குப் பல முட்டுக் கட்டைகள். எதிர்க்கட்சித்தலைவர் சிறையில் போடப் பட்டார். ஏதாயினுமொரு தேர்தல் மாவட்டம் எதிர்க்கட்சிக்கு பெரும்பான்மையாக வாக்களித்து விட்டதாயின் அடுத்த தேர்தல்கள் வரும்வரை அரசாங்கம் அந்த இடத்துக்கு ஒரு அபிவிருத்தித் திட்டத் தினையும் ஒதுக்க பகிரங்கமாக மறுத்தது!

சரி, இது பரவாயில்லையென்று இருந்தாலும், சிங்கப்பூர் அரசின் சர்வாதிகாரம் மனிதர்களின் வீட்டுக் குள்ளும் வந்து அவர்கள் படுக்கையறையையும் எட்டிப் பார்க்கத் தொடங்கிற்று. அதற்கெல்லாம் பல உதாரணங்கள் இருப்பினும் ஒரு உதாரணத்தை இங்கு எடுப்போம். சில வருடங்களுக்கு முன்னர் அது படித்தவர்கள் மட்டும் கூடிய எண்ணிக்கை உள்ள பிள்ளைகள் பெறுவதை ஊக்குவிக்க ஒரு சட்டம் கொண்டு வந்தது! பெற்றார் இருவரும் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாக இருந்தால் அவர்கள் பெறும் ஒவ்வொரு கூடுதலான பிள்ளைக்கும் மேலதிக உதவிகள் வழங்கப்பட்டன. ஆனால் தொழிலாளர் குடும்பங்களில் ஒவ்வொரு மேலதிக பிள்ளைகளுக்கும் உதவிகள் குறைக்கப்பட்டன. இதன்மூலம் சிங்கப்பூரை "புத்திக் கூர்மை" உடைய நாடாக ஆக்க முயன்றனராம். இந்த அநியாயச்சட்டத்திற்கு சவால் விடுக்க அங்கு ஒரு கட்சியுமே இருக்கவில்லை.

சர்வாதிகாரம் இது வரைக்கும்தான் போகலாம் என்ற வரையறை இல்லாதது. அது மக்களின் படுக்கையறை வரைகூடத் தொடரும். இதே வழியில் இப்பொழுது அந்த அரசு அங்குள்ள சீன மக்களின் சனத்தொகையைக் அதிகரிப்பதற்குப் பிரயத்தனங்கள் எடுப்பதாகக் கேள்விப்படுகின்றோம். ஒரு ஜனநாயக மற்ற ஆட்சியில். என்ன நல்ல தலைமைத்துவம் இருந்தா லும் இவ்வகையான பாகுபாடுகளைத் தவிர்க்க முடி யாது. ஏனெனில், யாராக இருந்தாலும் அவர் உணர்ச்சி களும் ஆசாபாசங்களும் உள்ள சாதாரண மனிதர்களே என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

## ஜனநாயகத்தை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள்

ஜனநாயகம் தேவை என்பதை உணர்ந்து கொண்டோமாயினும் அதனை எப்படி அடைவது என்பது பற்றி பலர் மத்தியிலும் பல்வேறு சர்ச்சைகள் இருக்கின்றன. "இப்பொழுது ஒரு சமாதானத் தீர்வு காணப் பாத்துக்கொண்டிருக்கிறம்... தீர்வுதான் முக்கியம்.. இப்ப ஜனநாயகத்தைப் பற்றிக் கதைக்க முடியாது.. புலிகள் ஆட்சியைக் கைப்பற்றினப் பிறகு ஜனநாயகத்தைப் பற்றிக் கதைக்கலாம்..." என்று பலர் கூறக் கேட்டிருக்கின்றோம். அக்கூற்றையும் விரிவாகப் பார்ப்போம்.

ஜனநாயகம் செயற்படுத்தப்பட அதற்கேயுரிய பண்பாடும் பயிற்சியும் உள்ள சமூகமும், அதை வழி நடத்துதற்குரிய பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவமும் தேவை. இதைப் பற்றி முன்னைய பகுதியிலும் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றது என்றாலும் அது முக்கியமான தொரு விடயம் என்பதனால் இங்கும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

**?** **ஜனநாயக முறைமைகளை மதிக்காத மக்கள் பங்கேற்காத முறைவழிகள் ஜனநாயகமான மக்கள், பங்கேற்கும் கட்டமைப்புக்களுக்கு இட்டுச் செல்ல முடியுமா?**

**?** **மனித உரிமைகளை மதிக்காத நடைமுறைகள், மனித உரிமைகளை நிலைநிறுத்தும் அரசி யலமைப்புச் சட்டத்தை வகுக்க இடம் கொடுக்குமா?**

**?** **பல்லின சமூகத்தை மதிக்காத மனப்பாங்கு உள்ளவர்கள் சகல இனங்களும் சமத்துவமாக வாழக்கூடிய அரசியல் கட்டமைப்புக்களை உருவாக்குவார்களா?**

**?** **ஒன்றையும் விமர்சிக்காது ஊமையாய் இருந்த மக்கள் உடனடியாகவே அரசியல்வாதிகளை, நீதித் துறையினை, ஊடகங்களைத் தினந்தினம் கண்காணிப்பதன் மூலம் இந்த ஜனநாயகக் கட்டமைப்புக்களையெல்லாம் பாதுகாப் பார்களா?**


**? இந்த முறைவழிகளுக்கெல்லாம் தலைமை தாங்கக் கூடிய ஒரு தலைமைத்துவம் ஒருவித முன்னனுபவங்களுமில்லாது திடீரென்று ஒரு இரவில் குதித்துவிட முடியுமா?**

மக்கள் தங்களுக்கு என்னவிதமான எதிர்காலம் தேவை என்று கருதுகின்றனரோ அந்த விழுமியங்களை இன்றிலிருந்தே கைக்கொண்டு ஒழுகுவதனால்தான் நாம் குறித்த எதிர்காலத்தைக் காணலாம். சமூகத்தின் சகல படிநிலைகளிலும் மக்கள் பங்கேற்கும் கட்டமைப்புக்களை இன்றிலிருந்து வலியுறுத்திச் செயற்படுத்தவே ஓரிரண்டு தலைமுறைகளாவது எடுக்கும். **அதிரடித் தீர்வுகள் எங்கேயும் எதற்கும் கிடையாது என்பதை மறவாதீர்கள்.**

பல்லாண்டு காலங்களாக யுத்தத்தினால் அச்சுறுத்தப்பட்டு தனது தலைமைத்துவங்களை இழந்த எங்கள் சமூகம் இவ்வகையான சமாதான முறைவழியில் பங்கு கொள்ள வேண்டும் என்றால் அது ஆரம்பத்தில் மிகவும் கடினமான விடயமாகும். தமிழ் பேசும் மக்களை இன்று எதிர்நோக்கும் மிகப்பெரிய சவால் இதுதான். இப்பொழுது எமது நாட்டில் நிகழும் சமாதான நடவடிக்கைகளின் நேரடியான முறைவழிகளில் மக்கள் பங்குகொள்வதன் மூலம் இச்சவாலை அவர்கள் எதிர்கொள்ளலாம். அந்த அனுபவம் ஒன்றேதான் அவர்களுக்கு வழிகாட்டியாகத் திகழும்.

ஜனநாயகம் செயற்படுத்தப்பட அதற்கேயுரிய பண்பாடும் பயிற்சியும் உள்ள சமூகமும், அதை வழி நடத்துதற்குரிய பொறுப்பு வாய்ந்த தலைமைத்துவமும் தேவை.

ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொரு குழுவினதும், இனத்தினதும், வர்க்கத்தினதும் நலன்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அரசியல் தலைமைத்துவங்கள் தேவை. இவை கட்சிகளாகவும் நிறுவனங்களாகவும் இருக்க முடியும். இந்த அமைப்புக்கள் எவையுமே தனித்துவமான அதிகாரம் பெறாவண்ணம் வெவ்வேறு சமூக, அரசியல் கட்டமைப்புக்களினால் ஒன்றுக்கொன்று சமப்படுத்தப்பட வேண்டும். இதுதான் ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடாகும்.



அபிவிருத்தி, விடுதலை, முரண்நிலைகளின் உருமாற்றம் யாவையுமே ஒரே முறைவழியைச் சார்ந்த அம்சங்களாகும். புத்தாக்கமான மனிதவாழ்க்கையின் அடிநாதம் இது.

அத்தியாயம் 4

# சமாதான முறைவழிகளில் மக்கள் பங்கேற்கும் தன்மைகள்



சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நாம் உள்ளூரில் இயங்கலாம். அல்லது எமது பிரதேசத்தில் இயங்கலாம். தேசிய ரீதியில் இயங்கலாம். அல்லது சர்வதேச ரீதியாகவும் இயங்கலாம். இனக்கலவரங்கள், இன முறுகல்கள் முதலியன பிரச்சினைகளாக உள்ள பிரதேசங்களில், உள்ளூரிலும் பிரதேச ரீதியாகவும் சமாதானத்தை முன்னெடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமாகும். சமூகங்களுக்கிடையே இருக்கும் பாரம்பரிய உறவுமுறைகள், மற்றும் கொடுக்கல் வாங்கல் உறவுகள் இச்சமாதான நடவடிக்கையை ஊக்கப்படுத்த அனுகூலமானவை.

அரசியல், மற்றும் சமூகக் கட்டமைப்புக்களில் மாற்றம் கோரும் நடவடிக்கைகள் யாவும் தேசிய ரீதியாக முன்னெடுப்பதாலேயே முழுப்பயனும் தரக்கூடியன. ஆயினும் எந்தத் தேசிய அளவிலான நடவடிக்கைகளும் உள்ளூர் வட்டாரங்களிலுள்ள மக்களினால் புரிந்து கொள்ளப்பட்ட அவர்கள் ஆதரிக்கும் நடவடிக்கைளாகவும் இருக்க வேண்டும். உள்ளூர் மக்களின் ஆதரவுடன்தானே தேசிய அளவிலான இயக்கங்கள் வளர்ந்து பெறுகின்றன? அப்படிப் பார்த்தால் கட்டமைப்பு மாற்றங்கள் தொடர்பான சகலவிதமான நடவடிக்கைகளும் உள்ளூர் மட்டங்களிலும் முன்னெடுக்கப்படவேண்டியவை என்பது புலனாகும்.

சமாதானத்தை உருவாக்குவதற்கு சிவில் சமூகம் பின்வரும் முறைகளில் செயற்படலாம்:

நிதி வழங்கும் நாடுகளின் உதவியோடு உதவித் திட்டங் களைச் செயற்படுத்தி யுத்தத்தி னால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்ப உதவுதல்.

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தைக் கோரி அதன் மூலமாகப் பேச்சுக்களை இலகுபடுத்துவது

பரந்துபட்ட மக்கள் பங்களிப்பினை உறுதிசெய்தல்.

ஊடகங்களை சீர்திருத்தல்

மதத் தலைவர்கள் கொண்ட குழுக்களும் சமூக நிறுவனங்களும் இன முறுகல்களைத் தணிக்கும் ஒற்றுமை நடவடிக்கைகளை மக்கள் மட்டங்களில் மேற்கொள்ளல்.

மூன்றாந்தரப்பினராக இயங்கும் ஒரு நாடு அல்லது ஒரு குழு நாடுகள் மூலமாகப் போரிடும் இருதரப் பினருக்குமிடையில் பேச்சுக்களை இலகுபடுத்துவது


போரிடும் இரு சாராருக்கும் நெருங்கிய அவ்ரின் இரண்டாம்படி அதிகாரிகளுடன் இரகசியமாகப் பேச்சுக்களைத் தொடர்ந்து ஒரு நிலைக்குக் கொண்டு வர உதவி செய்தல். இந்த நிலையிலிருந்து உயர்மட்டப் பேச்சுக்கள் ஆரம்பிக்க வசதியாக இருக்கும்.

சகல தரப்பு அரச நிர்வாக உத்தியோகத்தர் களும் தடைகளின்றித் திட்டங்களைச் செயற்படுத்துமுகமாகவும், சிபாரிசு செய்யப்படும் அதிகாரப் பகிர்வினைச் செயற்படுத்து முகமாகவும் அவர்கள் மெய்நிலையுணர் வுறியச் செய்தல்.

சமூக இயக்கங்கள் பிராந்தியங்களில் இயங்கும் ஆயுதக்குழுவினர்களுடன் பேச்சுக்களை மேற்கொண்டு உள்ளூர் மட்டங்களில் கலகங்கள் மூளாமலும் ஒற்றுமை பேணப்படவும் ஒப்பந்தங்களை மேற்கொள்ளல். இனக்கலவரங்கள் மூளும்பொழுது அவற்றைப் பற்றிய முன்னெச்சரிக்கைகளைப் பெற்று அவை மூளாமல் காக்கும் பொறிமுறைகளை நிறுவுதல்.

# சமாதான முறைவழியில் மக்கள் பங்களிப்பை உறுதி செய்தல்.

நிலைபேறான சமாதானம் தோன்றுவதற்கு பேச்சுக்களில் ஈடுபடும் தரப்பினர்களின் நலன்கள் மட்டுமல்ல, அங்கு மக்களின் நலன்களும் பேணப்பட வேண்டும் இது மக்களின் பங்களிப்பின்றி நிகழாது. மக்கள் பங்களிப்பு பின்வரும் செயற்பாடுகளில் வெளிப்படும்.




உயர்மட்டப் பேச்சுக்கள் சில்லறை நியாயங்களுக்காக உடைந்து விடாதபடி அதில் ஈடுபடும் இருசாராருக்கும் அழுத்தம் கொடுத்துக் கொண்டிருத்தல்.

மக்கள் தாம் சுதந்திரமாகப் பேசவும் தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் தேவையான அரசியல் தளங்களை தொடர்ந்து விரிவாக்கிக் கொண்டிருத்தல்.

ஒரு நீதியான எதிர்காலத்தில் தமது சமூகம் கைக்கொள்ள வேண்டிய விழுமியங்களைப் பற்றி பரந்த மட்டங்களில் திரும்பத் திரும்பக் கலந்துரையாடி அவற்றை எல்லோரும் உள்வாங்கக்கூடியதாக ஆக்கல். மக்கள் மதிக்கும் விழுமியங்கள்தான் கடைசியில் அவர்களின் அரசியலிலும் உள்ளடக்கம் பெறுகின்றது.

சீர்திருத்தப்பட்ட அரசியலமைப்புச் சட்டமும் தேர்தல் முறைமைகளும் எவ்வாறு இருக்கக்கூடும் என உள்ளூர் மட்டங்களிலும் பிரதேச மட்டங்களிலும் தமது எதிர்பார்ப்புகளையும் தேவை களையும் வெளியிட்டுக் கலந்துரை யாடல்களை நடத்தல். இக்கலந்துரை யாடல்களின் முடிவுகளை மேலிடத்துக் குத் தெரிவித்தல்.



வதந்திகளினாலும் அரசி யல் நிலைமைகளி னாலும் இனமோதல்கள் ஏற்படுவதைத் தவிர்க் கும் எச்சரிக்கையிடும் சமூகக் குழுக்களை உருவாக்கல்.

முரண்படும் குழுக்களுக்குள் இருக்கக்கூடிய அதிதீவிரவாதிகளையும் கலகக்காரர்களையும் விசேடமாகப் பிரதேச மட்ட பேச்சுக்களுக்குள் உள்வாங்கி அவர்களின் பயங்களையும் சந்தேகங்களையும் தெளிவித்தல். சமாதானத்தி னைக் கட்டியெழுப்பும் முக்கிய பொறுப்புக்களை அவர்களிடம் ஒப்படைப்பதன் மூலம் சமாதானத்துக்கான அவர்களின் அர்ப்பணிப் பினைப் பெறுதல்.

ஊடகவியலாளர்களுடன் தொடர்ந்த தொடர்பைப் பேணி, அவர்கள் சமூகப் பொறுப்பு வாய்ந்த முறையில் விடயங்களைத் தெரியப்படுத்துவதை ஊக்கப்படுத்தல். சமாதானத்தைப் பற்றியது எதுவென்றாலும் அச்சொட்டான தகவல்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்கின்ற கேள்வியினை (Demand) உருவாக்குதல்.

இந்நடவடிக்கைகளை நாம் பொதுவாக சமாதானத்துக்கான எடுத்துக்கூறல் நடவடிக்கைகள் என்போம். எடுத்துக்கூறல் என்றால் ஒரு விடயத்தைச் செய்வதற்கு சாதகமாக தீர்மானம் எடுப்போரினதும் அவர்களின் ஆதரவுத் தளத்திலுள்ளோரினதும் கருத்துக்களை மாற்றுதலாகும்.

## எடுத்துக்கூறல்

நிலைபேறான சமாதானம் தோன்றுவதற்கு எவ்வாறு சகல மட்டங்களிலும் இயங்கும் நிறுவகங்களும் மக்கள் குழுமங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று நாம் முன்பு கண்டோம். இவ்வாறு பரந்து பட்ட மக்கள் குழுக்களும் பொருத்தமான படிநிலையில் பங்கேற்பதற்கு தேவையான கட்டமைப்பு மாற்றங்களுக்குத் தீர்மானம் எடுப்போரின் அக்கறையைக் கூட்ட வேண்டியதாயிருக்கின்றது. அவ்வாறு மக்கள் குழுக்களின் பங்களிப்புத் திரட்டப்படவும், தீர்மானம் எடுப்போரின் அக்கறையைக் கூட்டுவதற்கும் எடுத்துக்கூறல் நடவடிக்கை இன்றியமையாததாகும். எடுத்துக்கூறலின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு:

☞ இலக்குகளை வகுத்துக் கொள்ளல். அதாவது, எந்த மாற்றங்களை எமது நோக்கங்களாகக் கொள்கின்றோம் என்பதைத் தெளிவாக வரையறுத்தல்.

☞ அதன் அடிப்படையில் இலக்குக் குழுக்களை இனம் காணல். வரையறுக்கப்பட்ட இந்த மாற்றங்களைக் கொண்டுவரக்கூடியவர்கள், அவர்களுக்கு அதைச் செய்வதற்கான அழுத்தங்களைத் தரக்கூடியவர்கள் இவ்விரண்டு குழுவினருமே இந்த நடவடிக்கையின் இலக்குக் குழுக்களாகும். அவர்கள் யார் எந்த சமூக வர்க்கத்தினர் என்பது இனம் காணப்பட வேண்டும்.

☞ நேச அணிகளைத் திரட்டல். மேற்கூறிய இலக்குக்குழுக்களுடன் வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பணி செய்வதற்கு எமக்குத் துணையாக இருக்கக் கூடிய நிறுவகங்களும் இயக்கங்களுமே நேச அணிகளாகும்

☞ எடுத்துக் கூறல் செய்வதற்குத் தேவையான உருத்தினை (legitimacy) மக்கள் மத்தியிலிருந்து பெறல்

☞ இலக்குக் குழுக்களுடன் தொடர்பாடலுக்கான உபாயங்களை வகுத்துக் கொள்ளல். தீர்மானிக்கப்பட்ட இலக்குக்குழுக்கள் நகரத்தைச் சார்ந்தவையா கிராமத்தைச் சார்ந்தவையா, கல்வியறிவு உள்ளவரா இல்லாதவரா என்பது போன்ற காரணிகள் சொல்ல வரும் விடயத்தை எந்த உருவில் சொல்ல வேண்டும் என்பதை நிர்ணயிக்கின்றன.

☞ வெகுசன ஊடகங்களுடன் தொடர் வேலைத்திட்டத்தினை வகுத்துச் கொள்ளல். ஒரே நேரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களைச் சென்றடையும் சக்தி வெகுசன ஊடகங்களுக்கே உள்ளது. மக்கள் இயக்கங்களைத் தோற்றுவிக்கவும் அழிக்கவும் இவற்றால் முடியும் என்கின்ற அளவுக்கு இவை சமூகத்தின் வாழ்வில் இன்றியமையாத அம்சமாகக் கலந்து விட்டன. கோரப்படும் மாற்றங்களைப் பற்றி விளங்கிக் கொள்ளவும், அவற்றைத் தாம் ஏற்றுக்கொள்ளவும், பின் அவற்றைத் தமது ஊடகங்களினூடு பரப்பவும் ஒரு தொடர் வேலைத்திட்டத்தினை இவற்றுடன் வைத்துக் கொள்ளல் அவசியமாகின்றது.

மக்கள் சமாதான முறைவழிகளில் பங்கேற்கும் முறைகள் இடத்துக்கிடம் மாறுபடும். இது முரண் பாடுகள் வளர்ந்த வரலாற்றையும் அவை வன்முறையாக வெடித்த முறைகளையும் அடியொற்றியிருக்கும். இவற்றின் அடிப்படையில் ஒவ்வொருவரும் தமது உபாயங்களை வடிவமைத்துக் கொள்ளலாம். ஆனால் இவையெல்லாம் செய்வதற்கு கூட்டணிகளை அமைப் பது அவசியமாகும்.

> ஒரு கூற்றின் உள்ளடக்கம் எவ்வளவு முக்கியமான அரசியல் வெளிப்பாடோ, அதேயளவு முக்கியத்துவம் கொண்டது அக்கூற்றை எடுத்துக் கூறும் விதமும் முறையுமாகும்.

### கூட்டணிகளை அமைக்கும் முறைகள் எவை?

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு படிநிலைகளி லும் மக்கள் அமைப்புக்கள் இடையீடு செய்ய வேண்டு மென்றால் அது கூட்டணிகளை அமைப்பதனால் மட்டுமே இயலும் காரியமாகும். அரசு சாரா நிறுவனங் கள், கிராமிய மக்கள் அமைப்புக்கள், மனித உரிமை களைப் பேணும் அமைப்புக்கள், சட்டத்தரணிகள் சங்கங்கள், மனிதாபிமான ரீதியில் இயங்கும் அமைப்புக் கள், முன்னெச்சரிக்கை சமிக்ஞைகள் விடுக்கும் சமாதானக் குழுக்கள், சமாதான அமைப்புக்கள் இவை யெல்லாம் இத்தகையதொரு கூட்டணியில் அங்கத்து வம் வகிக்கக்கூடிய அமைப்புக்களாகும்.

எவ்வாறு ஒரு பிடி மண் நீராலும் காற்றாலும் அரித்துக் கொண்டு போகாதவாறு ஒரு மரத்தின் வேர்க்குவியல்கள் காக்கின்றனவோ அவ்வாறே மக்கள் கூட்டணிகள் ஒரு சமூகத்தின் வெவ்வேறு தளங்களிலு முள்ள உறவுமுறைகளை நிலைநிறுத்தி மீண்டும் வன்முறை வெடிக்காத வண்ணம் காப்பாற்றுகின்றது. இக்கூட்டணிகள் திறன் அடிப்படையில் இருக்கலாம். - உ.ம் : சட்டத்தரணிகள் சங்கங்கள், மனித உரிமைகள் அமைப்புக்கள். அல்லது பிரதேச அடிப்படையில் இருக்கலாம். - உ.ம்: மக்கள் அமைப்புக்கள். அல்லது தொழில் அடிப்படையில் இருக்கலாம். - உ.ம்: விவசாய அமைப்புக்கள், மீனவர் அமைப்புக்கள், ஆசிரியர் தொழிற்சங்கங்கள், ஊடகவியலாளர் சங்கங்கள் இத்தியாதி. இக்கூட்டணிகளிலுள்ள அமைப்புக்கள் ஒவ்வொன்றும் தமக்குப் பரிச்சயமான படிநிலையில் நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம். கூட்டணிகளை நன்கு உபயோகிப்பதற்கு ஒவ்வொரு அமைப்பினதும் பலங்கள் பலவீனங்களைத் தெரிந்திருப்பது நன்று.

**கூட்டணிகளை அமைக்கும்போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்:**

- கூட்டணியின் நோக்கங்கள் எளிமையாகவும் அதில் அங்கத்துவம் வகிக்கும் எவருக்கும் தெளிவாகப் புரியக்கூடியதாகவும் வகுக்கப்படல் வேண்டும்.
- கூட்டணியின் அங்கத்தவர்கள் தமக்குள் ஒத்துக் கொள்ளும் அதிகுறைந்த பட்ச கோட்பாடுகளைத் (கொள்கைகளை) தீர்மானித்துக் கொள்ளல் வேண்டும்.
- கூட்டணிக்குத் தலைமை தாங்க சகல அங்கத்தவர்களையும் பிரதிநித்துவப்படுத்தும் கூட்டுத் தலைமைத்துவத்தை நிலை நிறுத்த வேண்டும்.
- ஒரு கூட்டணி தன்னுள் முரண்பாடு தீர்க்கும் பொறிமுறைகளை வைத்திருத்தல் வேண்டும்.

உருத்து என்பதை எடுத்துக் கூறலில் ஒரு முக்கியமான காரணியாக சாதாரணமாக ஒருவரும் கருதுவதில்லை. இதனால் இதனைச் சிறிது விளக்க வேண்டிய தேவை இங்கிருக்கின்றது. சமூகப் பணி செய்கையில் எதைச் சொல்கின்றார்கள் என்பதைவிட அதனை யார் சொல்கின்றார்கள் என்பதே முக்கியமாகும். எந்த நல்ல விஷய மென்றாலும் அதைச் சொல்லக்கூடிய அருகதை முதலில் நமக்கு இருக்க வேண்டும்.

உதாரணமாக, மகாத்மா காந்தி இந்திய சுதந்திரத்துகாகப் போராடும்போது அவருக்கு வெளிநாட்டு நிறுவனங்கள் நிதி வழங்கினால்தான் உப்புச் சத்தியாக்கிரகம் ஏற்பாடு செய்யலாம் என்று இருந்திருந்தால் அவருக்குப் பின்னால் அந்தளவு கோடானுகோடி மக்கள் வந்திருக்க மாட்டார்கள். தான் நம்பிக்கை வைத்த விடயத்தைத் தனது சொந்த வாழ்விலேயே கைக்கொண்டு அதற்கான தியாகத்தையும் பங்களிப்பையும் அவர் தரத் தயாரானபோது மக்கள் அவர் பின்னால் தொடர்ந்தன. இதைத்தான் உருத்து என்று கூறப்படுகின்றது. எமது நாட்டில் இயங்கும் சமாதான நிறுவனங் களுக்கு இந்த உருத்துத்தான் பிரச்சினையாக இருக்கின்றது. சமாதானம் வேண்டும் என்று நல்ல செய்தியைத் தான் அவை சொன்னாலும், வெளிநாட்டு நிதிகளின் உதவியுடனேயே இவை இயங்குகின்றன என்பது அவை சொல்லும் விஷயத்தின் நேர்மையை மக்கள் கண் முன்னால் கேள்விக்குள்ளாக்கின்றது. இதனால் அவற்றின் நடவடிக்கைகள் திரும்பத் திரும்ப பிசு பிசுத்துப் போகின்றன. போக்குவரத்து, உணவு போன்ற வசதிகள் ஒழுங்கு செய்யாவிட்டால் சனத்திரளை சமாதானக் கூட்டங்களுக்கு அழைக்க முடியாத நிலைமை உருவாகியிருக்கின்றது.

அத்தியாயம் 5

# பெண்களும் சமாதானமும்



## சமாதான முறைவழிகளில் பெண்கள் பங்குகொள்ள வேண்டியதைப் பற்றி கருத வேண்டிய தேவை என்ன?

நாம் பொதுவாக சமாதானம் என்னும்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நிகழும் பேச்சவார்த்தைகளைத்தான் எண்ணுகின்றோம். பேச்சு வார்த்தைகள் மிக முக்கியமானவையெனினும் அவை சமாதான உருவாக்கத்தின் ஒரு அம்சம் மட்டு மேயாகும். நிலைபேறான சமாதானம் முரண்நிலைகள் வெளிப்படும் நிலைகள் கொண்டுள்ள கட்டமைப்பின் உருமாற்றத்தினால்தான் அடையப்படமுடியும் என நாம் இதுவரை பார்த்தோம். நிலைபேறான சமா தானத்தை உருவாக்குவதற்கு சகல மக்களுடைய பங்களிப்பும் தேவை எனும்போது தான் அங்கு பெண்களின் பங்களிப்புப் பற்றிய விடயமே எழுகின்றது.

அத்தியாயம் 4 இல், மக்கள் செயற்படுத்த வேண் டிய நடவடிக்கைகளைக் குறித்திருந்தோம். அவற்றை மீண்டுமொருமுறை மீட்டிப் பாருங்கள்.


அந்நடவடிக்கைகளெல்லாம் குடும்பத் தளத் தில்லாது சமூக தளத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளாக இருப்பதை நீங்கள் அவதானிக்கக் கூடும். நீதியை நிலைநிறுத்தும் விழுமியங்கள் சமூகத்தில் ஊடுருவச் செய்வதாக இருந்தால் என்ன, அரசியல் சீர்திருத்தங்களைக் கொணருவதாக இருந்தால் என்ன, சகல தரப்பினர் மத்தியிலும் இருக்கும் கலகக்காரர்களை வழிக்குக் கொண்டுவருவதாக இருந்தால் என்ன, எல்லாமே வீட்டுக்கு வெளியே செய்யப்படவேண்டிய செயற்பாடுகளாகும்.

ஆனால் எமது சமூகத்திலோ இன்னும் பெண்கள் முழுதாக வீட்டிலிருந்து வெளியே வர அனுமதிக்கப் படவில்லை. குறிப்பாக, பொருளாதார காரணங்களுக் காகவேயன்றி வேறெந்தக் காரணங்களுக்காகவும் வெளியில் உலவும் பெண்களை நமது சமூகம் இழிந்த கண்கொண்டுதான் இன்னும் நோக்குகின்றது. இழிந்த கண்கொண்டு நோக்காத இடத்தில்கூட, அவர்கள் பொதுப்பணிகளில் ஈடுபடத் தேவையான குறைந்த பட்ச ஆதரவை நல்கும் இடங்கள் மிகக் குறைவாகவே இருக்கின்றன. வீட்டுப் பராமரிப்பு, குழந்தை வளர்ப்பு போன்ற கடமைகளின் முழுப்பொறுப்பினையும் எடுக்கவேண்டிய நிலைகளில் பெண்கள் இருப்பதனால் அவர்கள் சமூகப் பணிகளில் ஈடுபடுவது மிகக் குறைவாகவே உள்ளது.


இதன் விளைவாக, பொதுப்பணிகளில் ஈடுபடத் தேவையான அனுபவங்கள் சாதாரணப் பெண்களுக் குப் போதாதிருக்கின்றது. எங்காவது வெளியில் போய் ஒரு சிறிய கருமமாற்றவும் அவர்கள் யாராவது ஒரு ஆண் துணையை எதிர்பார்த்திருக்கிறார்கள். பல சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு இயலுமான பொறுப் புக்களை எடுக்கவும் கூச்சப்படுகின்றார்கள். சமூகத் தலைமைத்துவம் என்பது எட்டாக் கனியாகவே அவர்களுக்கு இருக்கின்றது. இதனாலேயே சமாதான உருவாக்கத்தில் அவர்கள் முழுமையாகப் பங்களிக்க இயலாமல் இருப்பதைப் பார்க்கின்றோம்.

சமூகத்தின் ஓரங்கமும் அரைப்பங்குமாகிய பெண்களின் பங்களிப்பின்றி முரண்நிலைகளை நாம் உருமாற்ற இயலுமா, நிலைபேறான சமாதானத்தை நாம் உருவாக்கிவிடத்தான் முடியுமா? இல்லை என்பது வெள்ளிடைமலையாகத் தெரிகின்றது. ஆகவே நாம் உண்மையான சமாதானத்தை உருவாக்க வேண்டு மென்றால், பெண்கள் அம்முறைவழிகளில் தாமும் பங்குகொள்ள வைக்கும் உபாயங்களையும் கண்டு பிடிக்க வேண்டியதாயிருக்கின்றது.

இந்தப் பங்கேற்பு சமூக மட்டத்தில் மட்டுமல்ல அரசியல் மட்டங்களிலும் தொடரவேண்டியதாகும். சமூக மட்டங்களில் கொண்டுவரப்படும் அபிப்பிராயங் களும் கருத்துக்களும் அரசியல் மட்டங்களிலேயே தீர்மானங்களாகச் செயற்படுத்தப்படுகின்றன. ஆகவே அரசியல் மட்டங்களிலும், அதாவது பேச்சுவார்த்தை மேடைகளிலும், அரசியலமைப்பின் உருவாக்கத் தளங்களிலும் பெண்களின் பங்கேற்பு இன்றியமை யாததாக இருக்கின்றதை காண்கின்றோம்



## சமாதான விரும்பிகளாகப் பெண்கள்



ஒரு குடும்பத்தில் பிள்ளைகளுக்கிடையே ஏற்படும் சண்டை சச்சர வினைத் தீர்த்து குடும்பங் களுக்குள் சமாதானம் காப்பவராகப் பெண்கள் என்றென்றும் தொழிற்பட்டிருக்கின்றனர். இதில் வெறுமனே அமைதி காப்பது மட்டும் என்றில்லாமல் அமைதி காப்பதற்குத் தேவையான அடிப்படையான நீதியைத் தாய்மார்கள் கடைப்பிடிப்பதை நாம் காணலாம். ஒரு தாய் தனது பிள்ளைகளில் பலவீனமான பிள்ளையின் நலனையே விசேடமாகக் காப்பவளாக இருப்பதை நாம் காணலாம். அடிக்கடி நோய்வாய்ப் படும் பிள்ளை அல்லது அங்கவீனமான பிள்ளையென அந்தப் பிள்ளையின் தேவைகளையே மேலதிகக் கவனம் எடுத்துப் பார்ப்பாள்.


ஒரு தாய் தனது பிள்ளைகள் மீது இவ்வகையாக எடுக்கும் கரிசனம் போலவே ஒரு அரசும் தனது பிரஜைகள் மீது எடுக்கவேண்டும். வறியவர்களாகவும். சிறுபான்மையினராகவும், ஒதுக்கப்பட்டோராகவும் இருக்கும் சமூகத்தினரையே கூடிய கரிசனத்துடன் பார்க்க வேண்டும். எங்கள் நாட்டில் எமது அரசாங்கம் அவ்வாறு செய்திருந்தால் இங்கு சமாதானம் குலைந்தி ருக்காது. இனியாவது அவ்வாறு செய்வதனால்தான் குலைந்த சமாதானத்தையும் மீண்டும் நிலைநிறுத்தவும் முடியும். ஒரு நாட்டில் சமாதானத்தை உருவாக்கும் நீதி எவ்வாறிருக்கவேண்டும் என்பதை, தமது அனுபவத்தி னால் உணர்ந்த தாய்மார்களன்றி யார் இன்னும் சிறப்பாக நிர்ணயிக்கக்கூடும்? இம்மாதிரியான அனுபவங்களை வைத்துக் கொண்டுள்ள பெண்கள் சமாதான முறைவழிகளில் பங்குகொள்வதனால் அவ்வழிகள் ஒரு புதிய பரிமாணத்தை எட்டுகின்றன என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

நீதியான தீர்வுகள் ஒருபுறமிருக்க, பொதுவாகவே ஆண்களிலும்விட பெண்கள் இணக்கம் காண்பதில் கூடிய வல்லமை உடையவர்கள் என்பதை இன்று பல சமூக ஆய்வுகள் நிறுவியிருக்கின்றன. ஆய்வுக்கூட நிலைமைகளில் ஒரு கற்பனா யுத்தச்சூழ்நிலையைச் சமாளிக்க பெண்களும் ஆண்களும் விடப்பட்டபோது, பெண்கள் ஆண்களை விட யுத்தச் செலவுகளைக் குறைப் பதிலும், அழிவை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் அக்கறை செலுத்தினார்கள் என்பது காணப்பட்டுள்ளது. ஆண்கள் மத்தியிலே தன்மானப் பிரச்சினைகள் அதிகம் காணப்பட்டு அது எந்தத் தீர்வு முயற்சிக்கும் குந்தகமாக இருந்தது அவதானிக்கப்பட்டது. அவர்கள் எல்லா விடயங்களிலும்விட தங்கள் மரியாதைக்கு களங்கம் வாராமல் காப்பதிலேயே மிகுந்த குறியாக இருந்தது அவதானிக்கப்பட்டது. பின்னடைவுகள், முகத்திலடித் தாற்போன்ற விடயங்கள் எல்லாம் ஆண்களுக்குப் போன்று பெண்களுக்கு பெரும் பொருட்டான விஷயங்களாக இருக்கவில்லை. ஆபிரிக்க இனக் குழுக்கள் மத்தியில் அமைதிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்போது அம்மேசையில் பெண்களை ஆண்கள் உட்கார விடமாட்டார்களாம். பெண்கள் கூட "விட்டுக் கொடுத்து" விடுவார்கள் என்ற அச்சம்தான் அதற்குக் காரணமாம்.


இணக்கம் காணும் இயல்பு இருப்பது மட்டுமன்றி, பெண்கள் தாம் இரண்டாந்தர அந்தஸ்துடன் வாழ்ந்து பல முட்டுக்கட்டைகளை எதிர்கொள்ளப் பழகியதா லும் புத்தாக்க முறைகளில் பிரச்சினைகளைத் தீர்க்கும் ஆற்றல் பெற்றிருக்கிறார்கள். இதை விளக்குவதற்கு காதல் வழக்கங்களை எடுத்துக் கொள்ளலாம். ஒரு சமூகம் ஆண்களும் பெண்களும் பழகுவதற்கு எவ்வளவு தான் கட்டுப்பாடுகளை விதித்திருந்தாலும் அங்கும் காதல் மலர்கின்றது, காதலர்கள் இரகசியமாகச் சந்தித்தும் கொள்ளுகின்றனர், கடிதங்கள் பரிமாறிக் கொள்ளுகின்றனர், இல்லையா? இவ்வளவு கட்டுப் பாடுகள் மத்தியில் எப்படி காதல் செய்யும் வாய்ப்புக் களைப் பெற்றுக் கொண்டார்கள் என்று உன்னிப்பாக நோக்கினோம் என்றால் அங்கு அனேகமாகப் பெண்களின் கைவரிசையே தெரியவரும். தோழிகள் மூலமாகவோ, குடும்ப விழாக்களின் முகப்பின் பின்னாலேயோ பெண்கள் தங்கள் காதலர்களுடன் கூடுவதை சாதித்துவிடுகின்றனர்.



அதே போலவே பெண் கள் வெளியில் திரிவதற்குக் கடுமையான கட்டுப்பாடுகளை சமூகம் விதிக்கின்ற வேளை களிலும் பெண்கள் அதனைப் பலவிதங்களில் வெல்ல முயற்சிக்கின்றனர். பெண் களை மறைவில் வைத்திருக் கும் சமூகங்களில், பொது வாக வைத்தியரைப் பார்க் கச் செல்லும் பெண்களின் எண்ணிக்கையும், சமய வகுப்புக்களில் கலந்து கொள்ளச் செல்லுகின்ற



பெண்களின் எண்ணிக்கையும் அதிகரித்திருப்பதை நாம் காணலாம். இவ்வகையில் சமூகம் அங்கீகாரம் தரக்கூடிய நடவடிக்கைகளுக்குரிய வாய்ப்புக்களை தாமே உருவாக்கி அதனூடாக அவர்கள் சிறிதேனும் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடிகின்றது. இந்த சமூகங்களிலெல்லாம் இக்கட்டுப்பாடுகள் எப்பொழுதும் பெண்களுக்கே அதிகமாக விதிக்கப்படுகின்றன என்பது நோக்கற்பாலது. அப்படியிருந்தும் அவர்கள் தான் அவற்றை வெல்ல முயற்சி எடுப்பது ஒடுக்குமுறைக் கட்டமைப்புக்களின் மற்றுமொரு பக்கத்தையே எமக்குக் காட்டி நிற்கின்றது.



எப்படியெனில், ஒடுக்கப்பட்டவர்கள் தமது ஒடுக்குமுறையின் காரணத்தினாலேயே அச்சூழ்நிலைகளைச் சமாளிக்கும் மேலதிகத் திறமைகளையும் தமது வாழ்க்கையின் போக்கில் கற்றுக் கொள்கின்றனர். இயற்கையிலும் இதை நாம் பார்க்கலாம். பல ஆபத்துக்கள் தடைகள் மத்தியில் வாழ்கின்ற விலங்குகள் தான் கூடியளவு சமயோசித புத்தியையும், தமது இருத்தலை நிச்சயப்படுத்துவதற்கான திறமையையும் கொண்டிருக்கின்றன. அந்த ரீதியில், வெளியில் இருந்து நோக்கினால் தீர்க்க முடியாத பிரச்சினைகள் போலத் தோன்றும் பிரச்சினைகளையும் தீர்க்கும் மிக விசேடமான திறமைகள் பெண்களுக்குள்ளே இருப்பதைக் காணலாம். அதிலும், பெண்களின் வாழ்க்கைகளின் பிரத்தியோக அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்படுவதனால் புதிய யுக்திகளும் யோசனைகளும் கையாளக்கூடிய வாய்ப்புக்கள் பெருகுகின்றன. புத்தாக்கமான தீர்வுகள் பெறப்படக்கூடியனவாகின்றன.

இது மட்டுமா? பெண்கள் 'முன் ஆசனங்களைக் கோராத' இயல்பினைக் கொண்டவர்கள். பிரதான நீரோட்டத்தில் உள்ள அதிகாரம் மிக்க பதவிகளுக்கு ஆண்கள் அடிபடுவது வழக்கமாகையினால் பெண்கள் எப்பொழுதுமே பின் இருக்கைகளில் அமர்ந்து பழக்கப்பட்டவர்களாக இருக்கின்றனர். பெண்களை ஆண்கள் தங்கள் அதிகாரத்திற்கு வரும் அச்சுறுத்தலாக நோக்காததிற்கும் இது ஒரு காரணமாகும். இதனால் பெண்கள் பங்குபெறும் பேச்சுவார்த்தைகளில் அவர்கள் வார்த்தைகளுக்குச் செவிசாய்க்க அங்கிருக்கும் ஆண்கள் தயாராக இருக்கின்றனர். இந்த இயல்பு இணக்கப் பேச்சுக்களுக்கு ஒரு அனுகூலமாகும்.

பல நாடுகளில் முரண்நிலைகளைத் தீர்க்கும் முறைவழிகளில் பங்குபெற்ற அனுபவமுள்ள நிபுணர்கள், பெண்கள் பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ளும் போது அவர்கள் வெளிக்காட்டும் சில பிரத்தியேகமான

குணாம்சங்களைப் பற்றிச் சிலாகித்துக் கூறியிருக்கின்றனர். பொதுவாகப் பெண்கள் ஆண்களைவிடக் குறைவாகவே ஆணவங்களை வெளிக்காட்டுபவர்களாக இருக்கின்றனராம். அத்துடன் அவர்கள் வெகு இலகுவாக கட்சிகளுக்கிடையிலே கூட்டணிகளை கட்டியமைக்க வல்லமை உடையவர்களாம். மிகவும் கூர்மையாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் அதே நேரத்தில் சகலரையும் அனுசரித்துப் போகும் பண்பினையும் உடையவர்களாகவும் இருப்பதனால் இவர்கள் பேச்சுவார்த்தைகளில் பங்கெடுப்பதனால் நிரம்ப நன்மைகள் உண்டு என்று கூறுகின்றனர். இந்த இயல்புகள் பெண்களுக்கு இயற்கையாகவே அளிக்கப்பட்ட குணங்கள் என்பதைவிட, அவர்களின் சமூகமயமாக்கலின் (வளர்ப்பு) விளைவினால் ஏற்பட்ட குணங்கள் என்று கூறலாம். கீழ்ப்படிந்து ஒழுகுபவர்களாகவும், அதிகாரம் மிக்க பதவிகளுக்காகப் போட்டியிட்டு அல்லது அவ்வகையான பதவிகளில் அமர்ந்து பழக்க மில்லாதவர்களாகவும் இருப்பதனாலேயே பெண்கள் பெரும்பாலும் இத்தகைய குணங்களை வெளிக்காட்டுகின்றனர் என்று கொள்ளலாம்.

> பெண்கள் ........
>
> நீதியைப் பற்றிய பிரக்ஞை உடையவர்கள்
>
> இணக்கம் காணும் இயல்பு உடையவர்கள்
>
> புத்தாக்கமான தீர்வைக் கண்டு பிடிப்பதில் வல்லவர்கள்
>
> அதிகாரப் போட்டிகளில் சாதாரணமாக ஈடுபடாதவர்கள்
>
> சுயகௌரவம், ஆணவம் போன்ற உணர்வுகளுக்கு முன்னுரிமை கொடுக்காதவர்கள்.

பெண்கள் சமாதான முறைவழியில் பங்குகொள்ளும் விடயத்தை மனித உரிமைகள் என்னும் கண்ணோட்டத்தினூடும் பார்க்கலாம். சமாதானம் குலைந்தால் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் பெண்களே. அப்படியானால் அவர்களைப் பாதிக்கும் ஒரு விடயத்தைப் பற்றி அவர்களே தீர்மானிக்க நாம் ஒரு தளமும் அதற்குரிய இடமும் வழங்கவில்லையானால் அது ஒரு பாரிய மனித உரிமை மீறலாகத்தான் கொள்ளலாம். தாம் நிலைபேறான சமாதானத்தை அனுபவிக்க என்னவிதமான தீர்வுகள் வேண்டும் என்று கூறவும் செயற்படவும் இந்த நாட்டின் சமமான பிரஜைகளான பெண்களுக்கு முழு உரிமைகளும் உண்டு. இல்லாவிடில் சகலரும் அர்த்த பூர்வமாகப் பங்கேற்கும் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் என்று நாம் விவரிப்பது மெய்யாகாது. நாம் உருவாக்குவது ஆண்கள் மட்டும் பங்கேற்கும் கட்டமைப்புக்களாகத்தான் இருக்க முடியும்.

## சமாதான நடவடிக்கைகளில் பெண்கள் பங்குபற்றிய உலக அனுபவங்கள்

### ஒப்பந்தங்கள் ஏற்படுத்த உதவுதல்

சூடான் பல தசாப்த காலங்களாக உள்நாட்டு யுத்தங்களால் சின்னாபின்னமாகிய நாடாகும். இங்கு டின்கா, நுவர் என்னும் இரு பழங்குடிகளிடையே நிலவிய வன்முறைகளை ஒழித்தனர் பெண்கள். அங்குள்ள தேசிய கிறிஸ்தவ அமைப்பில் ஒன்று திரண்ட இவர்கள் இரு பிரிவினருக்கும் இடையில் தூது சென்று 1999ம் ஆண்டு பெப்ரவரிமாதம் இருவருக்குமிடையில் ஒரு மாநாட்டினை ஏற்பாடு செய்தனர். இம்மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட ஏற்பாடானது, இரு சாராரையும் முண்டிக் கொண்டிருந்த விடயங்களான மேய்ச்சல் நிலம், தண்ணீர், மீன்பிடி உரிமைகள் ஆகியவற்றில் இருவரும் சமமாகப் பங்கு கொள்ளும் பொறி முறைகளை உருவாக்கிற்று. யுத்தக் கைதிகளைத் திருப்பியனுப்பி, இரு குடி மக்களுக்குமான நடமாட்டச் சுதந்திரத்தையும் தந்து, அவர்கள் மத்தியில் சமாதானம் காத்தது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக்குமிடையேயான இணக்கப் பேச்சுக்களில், இஸ்ரேலிய பலஸ்தீனப் பெண்களின் ஒன்றியம் முன்வைத்த அடிப்படைக் கொள்கைகளே ஒஸ்லோ சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படைகளாயின. பின்னர் அமெரிக்காவின் காம்ப் டேவிட் தளத்தில் தொடர்ந்த பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டபோது அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன், “காம்ப் டேவிட்டில் பெண்கள் அமர்ந்திருந்தால் ஒரு சமாதான ஒப்பந்தம் எங்களுக்குக் கிடைத்திருக்கும்” என்று கூறினார்.

### மக்கள் உணர்ச்சிகளைக் கிளறிவிடாமல் அமைதி காணுதல்

கொஸோவோவில் யுத்தத்தின்போது அங்கு இயங்கிக் கொண்டிருந்த தனியார் வானொலியின் இயக்குனர் தனக்குக் கீழே பணி புரிந்த ஆண் அறிவிப்பாளர்களெல்லாம் மிக உணர்ச்சி வசப்பட்டு

இனத்துவேஷம் நிறைந்த கருத்துக்களை வெளி விடுவதனால் மக்கள் மத்தியில் முஸ்லிம்களுக்கெதிரான இனக்கலவரங்கள் ஏற்படுவதை கவனித்தார். பெண் அறிவிப்பாளர்களோ அவ்வாறான சண்டைத் தொனி யில் பேசவில்லை. உடனடியாக அந்த வானொலியில் பெண் அறிவிப்பாளர்களுக்கான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு வேலைக்கு அமர்த்தப்பட்டனர்.

### ஆயுதப்படையினர் நடவடிக்கை மீது செல்வாக்குச் செலுத்துதல்

வன்முறைகளில் காணாமல் போனோரைத் தேடுவதற்காக பெண்கள் இராணுவத்தினருடன் சேர்ந்து பணி புரிந்திருக்கின்றனர். உதாரணமாக, கொலம் பியாவில் 1999ம் ஆண்டு ஒரு தேவாலயத்தில் கூடியிருந்த மக்களில் 150 பேர் கடத்தப்பட்டுக் காணாமற்போன விடயத்தில் பெண்களே உறுதியுடன் முன்னின்று வேலை செய்தனர். அவர்கள் விடாப்பிடியுடன் நின்ற தன்மையினால் கடைசியில் கொலம்பிய இராணுவம் வேறு வழியின்றி தங்கள் இராணுவ தளத்திலேயே இப் பெண்கள் ஒரு தகவல் உபாய நிலையத்தினை நிறுவ உதவினர். இதில் நிலைகொண்டு காணாமற்போ னோரின் விவரங்களை அப்பெண்கள் சேகரித்தனராம். வட அயர்லாந்து போன்ற பிரச்சினைகள் உள்ள நாடுகளில் பெண்கள் ஆயுதப்படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையிலான தொடர்பாளர்களாக பங்கு வகித்து முறுகல் நிலையைப் பல சந்தர்ப்பங்களில் தவிர்த்திருக்கின்றனர்.

### சர்வதேச நிறுவனங்களுடன் இயங்கி மனிதாபிமான உதவிகளை ஸ்திரப்படுத்துதல்

கொஸோவோ, சூடான் போன்ற நாடுகளில் யுத்தச் சூழ்நிலைகளின்போது வழங்கப்பட்ட நிவாரண உதவி தேவைப்பட்டவர்களைச் சென்றடைவதற்கான உதவி களை பெண்கள் வழங்கினர். ஆர்மேனியா, அஜெர் பெய்ஜான் போன்ற நாடுகளில் யுத்தக் கைதிகளை விடுதலை செய்ய பெண்கள் முன்னின்று உழைத்து வெற்றியும் கண்டனர்.

### அரசியல் களத்தில் குதித்தல்

சமாதான நடவடிக்கை என்பது ஒரு அரசியல் நடவடிக்கையே என்பதை முன்னால் பார்த்திருப்பீர்கள். சமாதானத்தை உருவாக்க வேண்டுமென்றால் அரசியல் அதிகாரமும் தேவைப்படுகின்றது. சமாதானத்தை உருவாக்கும் போக்கில் அதற்காகவே அரசியல் பதவிகளிலும் பெண்கள் அமர்ந்திருக்கின்றனர்.

வட அயர்லாந்தில் 1996ல் இணக்கப் பேச்சுக்கள் நிகழப்போகும்போது, இப்பேச்சுவார்த்தைகளில், வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் முதல் பத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களே அழைக்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது. அப்படி அழைக்கப்பட்டிருந்தால் தனி ஆண்கள் குழுவொன்றே பேச்சுக்களில் கலந்து கொண்டிருக்கும். அதே சமயம், வட அயர்லாந்தின் பெண்கள் கூட்டமைப்பு 1977ம் ஆண்டே தங்கள் சேவைக்கான சமாதான நோபல் பரிசைப் பெற்றிருந்தனர். இந்தத் தகைமைகூட இப்பெண்களை பேச்சுவார்த்தைகளுக்கு அழைப்பதற் கான தேவையை அங்குள்ள அரசியல் உயர் மட்டங்களுக்குக் கொடுக்கவில்லை. தேர்தல்களுக்கான காலமோ இன்னும் ஆறு வாரங்களே இருந்தன.

மொனிகா வில்லியம்ஸ், மே பிளட் என்கின்ற இரண்டு தலைவிகளும் வட அயர்லாந்து பெண்கள் கூட்டமைப்பு என்கின்ற புதிய அரசியல் கட்சியினைப் பதிவு செய்து அதற்கு 10,000 அங்கத்துவக் கையொப் பங்களை குறித்த ஆறு வாரங்களுக்குள் பெற்றனர். தேர்தல்களுக்கு முகம் கொடுத்து அமோக வாக்கு களைப் பெற்று அந்நாட்டின் முதல் 10 அரசியல் கட்சிகளில் ஒன்றாகத் தங்களை நிலைநாட்டிக் கொண்டனர். இணக்கப் பேச்சு மேடையிலும் ஒரேயொரு பெண் பிரதிநிதித்துவமாக அமர்ந்தனர். அங்கு பெறப்பட்ட இறுதி ஒப்பந்தத்தில் இவர்கள் பங்களிப்போ காத்திரமானதாக இருந்தது. வட அயர்லாந்தின் பெரிய வெள்ளி ஒப்பந்தம் மக்களின் வாக்குக் கணிப்பிற்காகப் போடப்பட்டபோது அதற்குக் கிடைத்த ஆதரவு பெரிதும் பெண்கள் கூட்டமைப்பின் இடையறாத பிரச்சாரத்தினால்தான் கிடைத்தது என பிரித்தானிய அரசின் செயலாளர் மோ மோலம் கூறியிருந்தார்.

1970களில் ஆர்ஜென்டீனாவில் இராணுவத்தின ரால் காணாமற்போன பிள்ளைகளின் தாய்மார் அதற் கெதிரான இயக்கத்தினை ஸ்தாபித்திருந்தனர். இவர் களில் பலர் இன்று அரசியல் பதவிகளில் அமர்ந்திருக் கின்றனர். இதேபோல் ருஷ்ய இராணுவத்தில் இராணுவ வீரர்கள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப் படுவதை ஆட்சேபித்து எழுந்த இராணுவத்தினரின் தாய்மாரின் இயக்கம் 300 கிளைகளுடன் அரசியல்

அந்தஸ்து பெற்ற பாரிய நிறுவனமாக வளர்ந்துள்ளது. இன்று செச்னியாவில் இராணுவ ஆக்கிரமிப்பிற்கு எதிராகக் குரல் எழுப்பும் முக்கிய சக்திகளில் ஒன்றாக இந்த அமைப்பு திகழுகின்றது.

## பெண்கள் இன்னும் போகவேண்டிய தூரம்

பெண்கள் அரசியல் தளத்திலும் சிவில் சமூகத் தளத்திலும் சமாதான விரும்பிகளாகவும் அதனைக் கட்டியெழுப்புபவர்களாகவும் இருந்த பல உதாரணங்களைப் பார்த்தோம். இதனை உலகம் கண்டிருந்தும்கூட பெண்கள் இன்னும் முக்கிய விடயங்களிலிருந்து ஒதுக்கப்படும் நடைமுறையையே நாம் எங்கும் காணக் கூடியதாக இருக்கின்றது. பெண்கள் சட்டவாக்கத்தில் பங்குபெறுபவர்களாகவும் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாகவும், படிப்படியாக அதிகரித்தாலும்கூட, சமாதான உடன்படிக்கைகளை உருவாக்கும் ஜனாதிபதிகள், பிரதம மந்திரிகள், தளபதிகள் ஆகியோர் அதிகமாக ஆண்களாகவே இருப்பதைக் காணலாம். உள்நாட்டு யுத்தங்கள் நிகழும் நாடுகளில் இயங்கும் ஆயுதம் தாங்கிய இயக்கத்தினரையும் குழுவினரையும் நோக்கினால் கூட அங்கும் ஆண்களே அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முக்கிய பதவிகளில் இருப்பதைக் காண்லாம். ஆண் போராளிகளுக்கே பாதுகாவலர்களும் உத்தியோகபூர்வ பந்தாக்களும் கூடியளவு கொடுக்கப்படுகின்றன. அவர்களே வெகுஜன தொடர்பூடகங்களில் அடிக்கடி தோற்றம் கொடுப்பவர்களாக இருக்கின்றனர். சமாதானத்தைப் பற்றி தினமும் அவர்களிடம்தான் அபிப்பிராயங்களும் கேட்கப்படுகின்றன.

'போரிடுவது ஆண்களின் கடமை' என்கின்ற கருத்து இன்னும் சமூகத்தில் மேவி நிற்பதால் சமாதானத்தை உருவாக்குவதும் ஆண்களின் வேலையாகக் கருதப்படுகின்றது. ஆனால் சமாதானத்தை உருவாக்குவது என்பது போரினை நிறுத்துவது என்று தவறாகக் கருதப்படும் கோளாறினால்தான் இந்த அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கின்றது. போரினை நிறுத்துவது சமாதானத்தை முன்னேற்றுவதன் ஒரு சிறிய அம்சமே. ஆகவே சமாதானத்தை முன்னெடுக்கவும் முன்னேற்றவும் நாம் விரும்பினால் பெண்களையல்லவா அதிக பட்சம் அதில் ஈடுபடுத்த வேண்டும்? அவ்வாறு ஈடுபடுத்தப்படாததற்கு பெண்கள் உண்மையிலேயே சமாதான விரும்பிகளாக இருப்பதுதான் காரணமோ என்றுகூட எண்ணத் தோன்றுகிறது.

பெண்கள் சமாதான உருவாக்கத்தில் பங்கு வகிப்பதற்கு பல மட்டங்களில் அவர்களுக்கு சாதகமான விதிகளைக் கொண்டுவரவேண்டும். இணக்கப் பேச்சுக்களில் ஈடுபடுபவர்களில் குறைந்தது மூன்றிலொரு பங்கு பெண்களாக இருக்க வேண்டும் என்பதை மத்தியஸ்தம் வகிப்பவர்கள் வலியுறுத்தவேண்டும். இணக்கப் பேச்சுக்களுக்கான அடிப்படைக் கொள்கைகளை வரையும்போது அவை பெண்கள் அமைப்புக்களினாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதையும் நிச்சயப்படுத்த வேண்டும். எதிர்தரப்பினர் மத்தியிலான உயர்மட்ட விஜயங்களின்போது உள்ளூரில் அவர்களுடன் தொடர்பாடும் குழுவினரில் குறைந்தது மூன்றிலொரு பங்காவது பெண்களாக இருக்க வேண்டும் (தொடர்பாளர்களின் மனைவிகளாக அல்லாது இயங்கும் அங்கத்தவர்களாக இருக்க வேண்டும்.) இந்த எளிய கொ்ள்கைகளை கடைப்பிடிப்பதால் பெண்களையும் சமாதான உருவாக்கம் என்கின்ற அரசியல் மையத்தினுள்ளே விடலாம்.

பெண்கள் ..........

சூடான், இஸ்ரேல் – பலஸ்தீனம் போன்ற நாடுகளில் சமாதான ஒப்பந்தங்கள் ஏற்படுத்த உதவியிருக்கின்றனர்.

யுத்தத்தில் காணாமற் போனோரைத் தேடுவதற்காக முன்னின்று உழைத்திருக்கின்றனர்.

யுத்தக் கைதிகளை விடுதலை செய்யப் போராடியிருக்கின்றனர்.

அகதிகளுக்காக வழங்கப்படும் நிவாரண உதவியினை உரியவர்களிடம் சேர்ப்பிப்பதற்குத் தத்மை ஒழுங்கமைத்து இயங்கியிருக்கின்றனர்.

ஆயுதப்படையினருக்கும் பொது மக்களுக்கும் இடையே தொடர்பாளர்களாக இயங்கி முறுகல் நிலைகள் தவிர்த்திருக்கினறனர்.

அரசியல் களத்தில் குதித்து, இணக்கப் பேச்சுக்கள் மேடையில் தாமும் ஒரு அரசியற் சக்தியாகப் பங்கு கொண்டிருக்கின்றனர்.

அத்தியாயம் 6

# மாதிரிப் பயிற்சி பாடவிதானங்களும் திட்டச் செயற்பாடுகளும்

### *பயிற்சியா திட்டமா முதலில் வந்தது?*

சமாதானத்தை உருவாக்குதலில், அதற்காக மக்கள் இயங்குவதை ஏதுவாக்கும் சமூக அரசியல் கட்டமைப்புக்கள் பெரும் பங்கு வகிக்கின்றனவென்பதை நாம் இதுவரை நோக்கினோம். ஆனால் கட்டமைப்புக்களோ அதற்குரிய பண்பாடுகள் மக்கள் மத்தியில் இருப்பதனால்தான் தாம் உருவாகின்றன, உருவாக்கப்பட்ட பின்னரும் கைக்கொள்ளப்பட்டு நடைமுறைப் படுத்தப்படுகின்றன. உண்மைதான், கட்டமைப்புக்கள் இருந்தால் மட்டும் போதாது, அவை செயற்படுவதற்கு அதற்குரிய பண்பாடும் மக்கள் மத்தியில் உருவாக்கப்பட வேண்டும். இல்லாவிடில், அது 1948 முதல் இன்று 2004ம் ஆண்டு வரை செயற்படுத்தப்பட்ட எங்கள் மூன்று அரசியலமைப்புச் சட்டங்களையும் போலத்தான் இருக்கும். வரித்துக் கொள்ளப்பட்ட ஒரு உயரிய கொள்கையும் நடைமுறையிலிருக்காது.

எனவே, சமாதானத்தை உருவாக்குவதை ஆதரிக்கக்கூடிய நடவடிக்கைகள் மக்கள் சமூகங்களின் பண்பாடுகளை மாற்றுவதாக, அதாவது அவர்கள் மத்தியில் சமாதானத்துக்குரிய பண்பாட்டை (The culture of peace) கொண்டுவருவதாகத்தான் பிரதானமாக இருக்கலாம். சமாதானப் பண்பாட்டை கொண்டு வருவதற்காக அரசுசாரா நிறுவனங்களின் திட்டங்களில், பயிற்சிகள் செயற்படுத்தப்படுவதைக் காணலாம். ஆனால் சமாதானத்துக்குரிய பண்பாடு உருவாக்கப் படுதல் ஒவ்வொரு தனிநபரினதும் கருத்தியல்கள், மற்றும் அவர் இயங்கும் சூழ்நிலைகளின் யதார்த்தங்கள் என்பவற்றிலேயே தங்கி நிற்கின்றது. இவை வெறுமனே பயிற்சிகளின் மூலமாக மாற்றப்பட இயலாத செயற் படாகும். பயிற்சிகள் மூலம் தெரியாத விடயங்களை அறிந்து கொள்ளலாம் ஆயினும் அதன்மூலம் கருத்தியல் களை மாற்றுவது மிகக் கடினமாகும். அதிலும்விட கடினம், ஒருவர் இயங்கும் சூழ்நிலைகளை மாற்று வதாகும்.

அவ்வாறாயின் இதற்கு மாற்று வழியே இல்லையா என நீங்கள் கேட்கலாம். மாற்று வழிகள் உண்டு. வாழ்க்கையின் போக்கை நாம் புரிந்து கொண்டு விட்டால். பொதுவாக வாழ்க்கை வட்டம் என்ற பதம் வாழ்க்கையைக் குறித்துப் பிரயோகிக்கப்படுவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். பிறப்பு, வாழ்க்கை, இறப்பு பின் பிறப்பு என சகல சீவராசிகளினதும் வாழ்க்கை தொடர்ந்து செல்வதனால் இது வாழ்க்கை வட்டம் எனக் குறிப்பிடப்படுகின்றது. எங்கள் அன்றாட வாழ்க்கை மட்டுமல்ல, இந்தப் பிரபஞ்சமே **வட்ட வடிவு** (cyclical) என்கின்ற அடிப்படை விதியின் கீழ் தான் இயங்கிக் கொண்டிருக்கின்றது. எமது கோள்கள், அவை வகுக்கும் பாதைகள், அவற்றில் இயங்கும் விசைகள் ஒன்றுமே நேர்கோட்டில் இல்லை. முன்பு ஒளி நேர்கோட்டில் செல்லும் என நம்பினார்கள். இப் பொழுது அதுவும் கூட வளைந்து இந்தப் பிரபஞ்சத்தை சுற்றிவரக்கூடிய பாதையை வகுக்கின்றது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள். இவ்வாறு பிரபஞ்சத்தில் எல்லாமே ஒரே தத்துவத்தில்தான் இயங்குகின்றன.

இதே அடிப்படைத் தத்துவங்களின் கீழ்தான் எங்கள் வாழ்க்கையும் சுழல்கின்றது. எந்த நிலைமையும் உயர்வதும் தாழ்வதும் மீண்டும் உயர்வதுமாக இருக்கின்றது. எமது பிரச்சினைக்கான காரணிகளே அப்பிரச்சனையின் விளைவுகளாகவும் மாறும் பிரச்சினை வட்டங்களை நாம் எங்கும் எதிலும் காண லாம். அதே அடிப்படையில் நாம் பார்த்தால் சூழ்நிலை கள் மனிதர்கள் மீது செல்வாக்குச் செலுத்துவதைப் போன்றே மனிதர்களுடைய நடவடிக்கைகளும் சூழ்நிலைகளை உருவாக்குகின்றன என்பதைக் கண்டு கொள்ளலாம். இவ்வாறு சூழ்நிலைகளும் மனிதர்களும் ஒரு வட்டத் தொழிற்பாட்டிலேயே ஒன்றுக்கொன்று தொடர்பு கொள்ளுகின்றன. சூழ்நிலைகள் மனிதர் களை உருவாக்க அம்மனிதர்கள் பின்னர் திரும்பத் தங்கள் சூழ்நிலைகளை உருமாற்றுகின்றனர்.

சமூக நிறுவனங்களில் பணிபுரியும் அனேகர், சமூக மாற்றம் தேவை என்பதை ஒப்புக் கொண்டாலும் அது

மிகவும் மெல்ல மெல்லத்தான் ஏற்படக்கூடியது என்று சொல்லிக் கொண்டிருப்பதை நாம் காணலாம். எமது பிரபஞ்சத்தின் வட்டச் சித்தாந்தத்தை அவர்கள் விளங்கிக் கொண்டார்களேயானால் அந்த மாற்றங்க ளெல்லாம் தங்கள் ஒவ்வொருவரினதும் கையில்தான் இருக்கின்றது என்பதை உணர்ந்துகொள்வார்கள்.

எம் ஒவ்வொருவரினதும் நடவடிக்கைகள் நாமிருக்கும் சூழலை மாற்றச் செய்கின்றன. அந்த மாற்றங்கள் சிறியதாக இருக்கலாம், பெரியதாக இருக்கலாம், ஆனால் மாற்றங்கள் மாற்றங்கள்தானே. சமூக மாற்றத்தை உருவாக்குவதற்கு உதாரணமாக சிற்றெறும்புகளின் நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம். மிகச் சின்ன உயிரினங்கள், அவை என்ன செய்துவிட முடியும்? ஆனால் எறும்பூரக் கல்லும் தேயும் என்பார்கள். அவை கல்லைத் தேய்ப்பது மட்டுமில்ல. மண்ணாலான பிரம்மாண்டமான புற்றுக்களைக் கட்டுகின்றன. அதில் நாம் அளவிட முடியாத உணவைத் தேக்குகின்றன. அவற்றின் நடவடிக்கைகள் சூழலில் ஏற்படுத்தும் மாற்றங்களினால் அவற்றைச் சுற்றிவர இருக்கும் உயிரினங்களின் வாழ்க்கை வட்டங்களும் மாறுதலடை கின்றன. சிற்றெறும்புகளைப் போலத்தான் நாமும். எமது சின்னச் சின்ன நடவடிக்கைகளினால் பாரிய உலக மாற்றத்திற்கு நாம் வழி வகுக்கின்றோம்.

அண்டவெளியில் கோள் ஒன்று ஒரு விதியில் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். அந்த குறிப்பிட்ட விதியின் சூத்திரத்தின் வழியில் அதன் பாதை இருக்கும். அதை மாற்ற முடியாது. ஆனால் நாம் அக்கோளை நோக்கி ஒரு கணத்தில் ஒரு காத்திரமான விசையைப் பிரயோகித் தோமென்றால் அந்தத் தாக்கத்தில் அதன் பாதை மாறுமன்றோ? பாதை மாறியதால் அது வேறு விசைகளின் தாக்கத்துக்கு உள்ளாகி பின்பு தனது பயணத்தினை இன்னொரு சூத்திரத்திற்கமைய மாற்றியமைத்துக் கொள்ளுகின்றது. அது தனது பாதையை மாற்றியதால் வேறு விசைகள் அதன் பயனாக வெளிப்பட்டு பூமியிலுள்ள எங்களை ஏதொவொரு வழியில் பாதிக்கும். நாம் அந்த ஒரு கணத்தில் அக்கோள் மீது பிரயோகித்த விசை அதன் (வாழ்க்கை) வட்டத்தினை மாற்றியது. அது மாறியதால் எங்கள் வாழ்க்கை வட்டமும் மாறுதலடைந்தது.

பிரச்சினை வட்டங்களும் அவ்வாறே. நாம் எந்தக் கணத்தில் எந்த விசையைப் பிரயோகிப்பதால் அந்த வட்டத்தை மாற்றியமைக்கலாம் என்பதைக் கணித்துக் கொண்டோமாயின், சீரமைக்கப்பட்ட வேறு விதிகளுடன் தன்னுடைய வாழ்க்கை வட்டத்தை தொடரும் சமூகங்களை உருவாக்கலாம். அந்தச் சமூகங்கள் திரும்ப எங்களை, தனிநபர்களை, வடிவமைக்கின்றன.

**நாம் கோளின் பாதையை மாற்ற விசையைப் பிரயோகித்த கணத்தையும் அதன் தன்மையையும், சமூகத்திற்குள் சமூகப் பணியாளர்களான எங்களது திட்டத்தின் நுழைவாயில் நடவடிக்கைகளுக்கு உதாரணமாகக் காட்டலாம். எந்த நேரத்தில் எந்த இடத்தில் என்ன விசையை நாம் பிரயோகிக்கலாம்? இதுவே திட்ட அமைப்பாளர்களுடைய கேள்விகளாக எந்த நேரமும் இருக்கும்.**

ஆயினும், திட்ட அமைப்பாளர்கள் தாங்கள் பிரயோகிக்க வேண்டிய விசையைப்பற்றிய கேள்வி களை எழுப்புமுன், முக்கியமாக எழுப்ப வேண்டிய ஒரு முதன்மைக் கேள்வியும் உண்டு. தம்மைச் சுற்றி மாற்றத்தைக் கோரும் அவர்கள் எவ்வளவு தூரம் தாங்கள் அம்மாற்றங்களைத் தமதென வரித்துக் கொண்டிருக்கின்றனர் என்பதே அக்கேள்வியாகும். எத்தகைய தீர்வு வட்டத்தின் முதல் படியிலும், மாற்றத்தைக் கோரும் நாங்கள் மாறவேண்டிய வர்களாக இருக்கின்றோம்.

எனவே, மாற்றங்கள் மிக மெதுவாகத்தான் வரும் என்று கூறிக்கொண்டிருக்கும் திட்டச் செயற் பாட்டாளர்கள் உண்மையில் தாங்கள்தான் மாறு வதற்குச் சோம்பற்படுகிறார்கள் என்பதை நாம் சட்டென்று கண்டு பிடித்து விடலாம்.

இதனால்தான், சமூகப்பணியினூடாக முரண் நிலைகளை உருமாற்றக் கிளம்பும் நாங்கள் முதலில் அந்த உருமாற்ற நிலையை அடைய வேண்டியது அவசியமாகும். இந்த மாற்றம், நடவடிக்கை என்னும் அனுபவத்திற் கூடாகவே பிரதானமாக ஏற்படுகின்றது.

எனவே, எமது வாழ்க்கையின் அனுபவங்களை, அல்லது எமது சமூகப் பணியின் அனுபவங்களை அசைபோட வைப்பதன் மூலம்தான் ஒரு பயிற்சி நாம் கற்பதற்கு உதவலாம்.

ஆகவே சமாதான உருவாக்கம் என்னும் நடைமுறையில், முதலில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு விட்டுத்தான் பின்பு தேவையான பயிற்சிகளில் பயனுறுதி உள்ள முறையில் கலந்து கொள்ள முடியும் என்பதை நாம் வலியுறுத்துகின்றோம். இதன் அடிப்படையில், முதனிலையான அந்த நடவடிக்கைகள் சிலவற்றை பாகம் 1 இல் தருகின்றோம்.

பாகம் 1

# சமாதானத் திட்டங்கள்

## திட்டம் 1 : சிவில் சமூகத்தின் உருவாக்கம்

**அறிமுகம் :**

சமாதானத்தை உருவாக்குவதில் பங்கு கொள்வதற்கு சமூகப்பொறுப்பு கொண்ட பிரஜைகள் இருக்க வேண்டும். அநீதிகளை ஒழித்து நீதியை நிலைநாட்டும் உத்வேகம் கொண்ட தலைமைத்துவம் வேண்டும். அதாவது, எமக்கு முற்போக்கான சிவில் சமூகம் வேண்டும். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரையில் சிவில் சமூகம் எங்கள் மத்தியில் இன்னும் உருவாகவில்லை. சிவில் சமூகம் உருவாகாத வரையில், உதிரியாக இயங்கும் மக்கள் குழுக்களுக்கு வெறுமனே சமாதானப் பட்டறைகள் நிகழ்த்துவது வீண் வேலையாகும். அதுவும் சம்பளத்துக்கு வேலையில் இருக்கும் அரசுசாரா நிறுவனங்களின் பணியாளர்களுக்கு செய்வது அதைவிட வீணான பிரயத்தனமாகும்.



தங்களைச் சுற்றி நடக்கும் விடயங்களின் நன்மை தீமைகளை ஆராய்ந்து தீமை களைந்து நன்மை வாழப் பிரயத்தனப்படுகின்ற மக்கள் குழுக்கள்தான் சமாதானம் உருவாக்குவதில் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்கள். மற்றவர்கள் எல்லோரும் நிதி நிறுவனங்களிலிருந்து நிதிகள் கிடைக்கும் வரைக்கும்தான் ஏதோசெய்து முடித்தோம் என்பதற்காக சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாக இருப்பார்கள். எனவே, சமாதானத்தில் பங்களிக்கக்கூடிய சிவில் சமூகத்தை நாம் முதலில் உருவாக்கவேண்டும். இதில் குறிப்பாக பெண்களை ஈடுபடுத்துதற்கு விசேட திட்டங்களைச் செயற்படுத்த வேண்டும்.

**நோக்கம் :** சிவில் சமூகம் உருவாகி இயங்குதல்

**காலம் :** 3 வருடங்கள்


**இலக்குக்குழு:** பாடசாலை ஆசிரியர்களும் உயர் வகுப்பு மாணவர்களும். பல்கலைக்கழக ஆசிரியரும் மணவர்களும், பெண்கள் குழுக்கள், அரச (தனியார்) உத்தியோகத்தர்கள்

**நடவடிக்கை:** சமூக அரசியல் விடயங்களில் விழிப்புணர்வும் இயக்கமும் பெற்றுக் கொள்ளும் முகமாக, துறை சார்ந்த மக்கள் மத்தியில் வாசிப்புக் குழுக்களை உருவாக்குதல்.

**செய்முறை:** இலக்குக் குழுவில் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு துறையிலும் உள்ள மக்களுடன் தொடர்புகளை மேற்கொள்ளுதல். அவர்களில் சற்றே ஊக்கமும், நடவடிக்கைகளை முன்னின்று நடத்தும் தலைமைத்துவமும் உள்ளவர்களை இனம் காணுதல் வேண்டும். இவர்கள்தான் உருவாக்கப்படப்போகும் வாசிப்புக் குழுக்களின் இலகுபடுத்துனராகும்.


இலகுபடுத்துனராக இனம் கண்டவர்களை 30 பேர்கள் கொண்ட குழுக்களாகச் சந்திக்க வேண்டும். இந்தச் சந்திப்புக்கள் ஒவ்வொன்றும் நான்கு மணித்தியாலயங்களுக்கு திட்டமிடப்படலாம். இச்சந்திப்பின் நோக்கம் சிறந்த முறையில் இயங்கும் இலகுபடுத்துனர்களின் இயல்புகள் எப்படி இருக்கும் என்பதை விளக்குவதாக இருக்கும்.

ஒரு இலகுபடுத்துனர், தன்னுடன் பணி புரிபவர்கள், அல்லது அயலவர்கள் என்ற ஏதோவொரு அடிப்படையில் தனது வாசிப்புக்குழுவை உருவாக்க முடியும். ஒரு வாசிப்புக்குழு 5 இலிருந்து 15 வரையான எண்ணிக்கையுள்ள நபர்களை உள்ளடக்கலாம். இது கிரமமாக ஒவ்வொரு வாரமும் அல்லது ஒவ்வொரு இரண்டு வாரங்களும் ஒரு குறித்த நாள் சந்தித்துக் கொள்ளும். ஆரம்பத்தில் வாசிப்பதற்கு ஏதேனும் விரும்பிய தலைப்பை இவர்கள் குழுவாகத் தேர்ந்தேடுக்கலாம். இத்தலைப்புக்குரிய கட்டுரைகளை பத்திரிகைகளிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். நாளாக, புத்தகங்கள் கையேடுகள் ஆகியவற்றிற்குத் தாவலாம்



முதல் வாரச் சந்திப்பில் குழு தான் எடுக்க விரும்பும் விடயத்தினைத் தெரிவு செய்யும். வாசிக்க எடுக்கப்படும் விடயங்கள் அக்குழுவுக்குப் பொதுவாகத் தெரிந்த, அவர்களெல்லோரும் அக்கறைப்படும் விடயங்களாக இருக்க வேண்டும். அவர்கள் நலன்களைப் பாதிக்கும் விடயங்களாகவும் இருக்கவேண்டும். விடயங்களுக் கான சில உதாரணங்களைக் கீழே தருகின்றோம் :

- பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் அதிகாரங்களும் கல்வித் திணைக்களத்துடன் அவற்றின் உறவும்
- பாடசாலைகளில் போதிக்கப்படும் சமயப் பாடங்கள் ஒரு நவீன பிரஜையை உருவாக்குவதற்கு உதவி செய்யுமா?
- பகல் கொள்ளை அடிக்கும் தனியார் வைத்தியசாலைகளைக் கணக்குக் காட்ட வைக்க நுகர்வோர் சங்கங்கள் எவ்வாறு இயங்கலாம்?
- ஆலய பரிபாலன சபைகளுக்குள் வெளிப்படைத் தன்மையையும் கணக்குக் காட்டும் தன்மையையும் கொண்டு வருவது எப்படி?




- கசாப்புக் கடைகள் சூழல் சுத்தத்தைப் பேண வைப்பது எப்படி?
- எம்மைச் சுற்றியுள்ள நீர்நிலைகள் மாசுபடுவதைத் தடுக்கும் விதம்
- பட்டினங்களிலும் நகரங்களிலும் கழிவுகளை உகந்த முறையில் அகற்றப்படும் விதம்?
- ஊர்ச்சந்தைகளை எவ்வாறு சுத்தம் பேண வைக்கலாம்?

- வாங்கும் மளிகைப் பொருட்களின் தரத்தைப் பேண நுகர்வோர் சங்கங்கள் அமைப்பது எப்படி?
- ஊரிலுள்ள வாகன சாரதிகள் சூழல் மாசுபடாவண்ணம் தங்கள் வாகன தரத்தைப் பேணுதற்கும் வீதி ஒழுங்குப்படி வாகனத்தைச் செலுத்தவும் வைக்க காவல் துறை இயங்குவதற்கு என்ன செய்யலாம்?
- தனியார் மேலதிக கல்வி நிலையங்கள் நன்மையா தீமையா செய்கின்றன?
- உள்ளூராட்சி மன்றங்களின் அங்கீகாரம் இல்லாமல் வீடுகள் கட்டுவதனால் ஏற்படும் விளைவுகள்
- நீலத் திரைப்படங்களினால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகள்
- தொலைக்காட்சித் தொடர்கள் பிரபலம் பெற்றதினால் குடும்பங்களுக்குள்ளும் சமூகத்திற்குள்ளும் ஏற்படும் மாற்றங்கள்
- நிராயுதபாணியாக இருக்கும் பொது மக்களை இயக்கங்கள் கொலை செய்வது அனுமதிக்கப் படலாமா?
- தரமான கலை இலக்கியப் படைப்புக்களை ஊக்குவிப்பது எப்படி?
- பரத நாட்டியத்தை நவீன எழு பொருள்களைக் கையாளும் கருவியாக மாற்ற முடியுமா?
- கர்நாடக சங்கீதத்தை பரவலாகக் கைக்கொள்ளப்படும் கலையாக மாற்றுவது எப்படி?
- டீவி சீரியல்களின் ஆதிக்கத்தை எவ்வாறு குறைக்கலாம்?
- ஈழத்து நாடகத்துறை வளர்ச்சிக்கு என்ன செய்யலாம்?

இங்கு உதாரணமாக தரப்பட்ட விடயங்களை நோக்கினால் கலந்துரையாடப்படும் விடயங்கள் எத்தகையவனவாகவும் இருக்கலாம் என்பதைக் காணலாம். நேரடியாக சமாதானத்தைப் பற்றியதாகத் தான் அவை இருக்க வேண்டும் என்ற அவசியமே கிடையாது. ஒரு குழுவினர் தங்களுக்கு முக்கியமாகத் தென்படும் ஒரு விடயத்தை எடுத்தலே இங்கு செய்யப்படவேண்டியதாகும். அவ்விடயங்கள் அவர்கள் வாழும் ஊர்களில் பிரச்சினையாகக் காணப்படுபவையாக இருத்தல் வேண்டும். இலகுபடுத்துனர், விடயங்கள் தேர்ந்தெடுப்பதற்கு குழுவினருக்கு உதவி செய்வார். பின்பு தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள் பற்றிய தகவல்களையும் அவற்றைப் பற்றிய வாசிப்புக்களை எங்கேயிருந்து எடுக்கலாம் என்ற ஆலோசனையையும் கூறுவார். தகுந்த நிறுவனங்களுடன் அவர் தொடர்புகளை மேற்கொண்டாராயின் வாசிப்புக்கான நூல்கள் பத்திரிகைகளையும் அவர் தருவிக்க முடியும். சர்வதேச இணைய வலையமைப்புக்களில் எந்த விடயத்தைப் பற்றியும் தகவல் எடுக்க முடியும் என்று நினைவில் கொள்ளுங்கள். குழு அங்கத்தவர்களும் வாசிப்பு நூல்களைத் தெரிவு செய்வதில் இலகுபடுத்துனர்களுக்கு தாம் உதவலாம்.

இரண்டாம் வாரம் குழுவினர் சந்திக்கும்போது ஒவ்வொருவரும் எடுக்கப்பட்ட விடயத்தின்கீழ் வாசித்துக் கொண்டு வருவர். அதைப் பற்றிய தகவல்களையும் அபிப்பிராயங்களையும் தமக்குள் பகிர்ந்து கொள்ள ஊக்குவிக்கப்படுவர். இக்கலந்துரையாடலின் முடிவில் அவர்கள் தங்களுக்குள் வாசிப்பு நூல்களைக் கைமாற்றிக் கொள்ளலாம். அடுத்த வாரம் தாங்கள் எடுத்துச் சென்ற கட்டுரையையோ அல்லது நூல்களையோ பற்றிய அபிப்பிராயங்களைச் சொல்ல குழுவினர்கள் ஆயத்தமாக வருவர். இலகுபடுத்துனர் ஒவ்வொருவருடைய கருத்துக்களையும் விடாமல் குறித்துக் கொள்பவராக இருப்பர்.

இவ்வாறு ஒரு விடயத்தைப் பற்றி கிடைக்கக்கூடிய கட்டுரைகள், நூல்கள் எல்லாவற்றையும் வாசித்த பின்னர், அடுத்த வாரம், இலகுபடுத்துனர் பங்குபற்றுனர்கள் ஒவ்வொருவரும் தெரிவித்த கருத்துக்களைத் தொகுத்து அவர்களுக்கு வழங்குவார். இத்தொகுப்பைக் கொண்டு, ஒரு குழுவாக தங்கள் பொதுக் கருத்து என்ன என்பதைக் குழுவினர் தீர்மானிப்பர். இதற்கடுத்த வாரம் தாம் எடுத்துக்கொண்ட விடயத்தினையொட்டி தாங்கள் விரும்பும் தீர்வினை எவ்வாறு செயற்படுத்துவது என்று குழுவினர் ஆராய ஊக்குவிக்கப்படுவார்கள். தங்கள் செயற்பாட்டினைத் திட்டமிட்டவுடன் நடவடிக்கையில் இறங்குவார்கள். அல்லது தங்கள் கருத்துக்களை அது தொடர்பான நிறுவனத்துக்கோ அல்லது பகிரங்கப்படுத்தும் நோக்கில் ஊடகங்களுக்கோ எழுதி அனுப்பலாம்.

வாசிப்புக்குழுக்களை சுவாரசியமாக்குவதற்கு அதனை ஒவ்வொருவர் வீடுகளிலும் மாறி மாறி ஏற்பாடு செய்வது நல்லது. கலந்துரையாடல்கள் நிகழும்பொழுது கொறிப்பதற்கு சிறு தீனி வைப்பது சோர்வைத் தடுக்கும். கொறிப்புத் தீனி ஏற்பாடு செய்வதை ஒவ்வொரு சந்திப்பிலும் ஒருவர் பொறுப்பெடுத்துக் கொண்டாரானால் ஒருவரும் நட்டப்படத் தேவையில்லை.

*மீளாய்வு :*

சுட்டிகள்

1. வாசிப்புக் குழுக்களின் அங்கத்தவர் எண்ணிக்கை
2. தொடர்ந்து ஒருவர் அங்கத்தவராக இருக்கும் காலம்
3. சந்திப்புக்களின் கிரமம்
4. வாசித்த புத்தகங்கள் / கட்டுரைகள்
5. கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட விடயங்கள்
6. தமது முடிவுகளை வெளியோருடன் பகிர்ந்து கொள்வதற்கு எடுக்கும் ஊக்கம்
7. இவற்றின் பயனாக எடுத்த நடவடிக்கைகள்

மேற்குறிப்பிட்ட சுட்டிகளில் 1-4 வரையிலான வற்றையும், 7 ஐயும் நிச்சயப்படுத்துவதற்கு ஒவ்வொரு வாசிப்புக்குழுவின் இலகுபடுத்துனரும் தாம் ஒரு அங்கத்தவர் பதிவேட்டினைப் பேண உதவவேண்டும். இப்பதிவேட்டில் அங்கத்தவர்கள் சந்திப்புக்களுக்கு வருகை தந்த விபரங்களும், அவர்கள் ஏதாவது விடயங்களில் நடவடிக்கை எடுத்த விபரங்களும் கீழ்வரும் முறைகளில் பதியப்பட்டிருக்கும்.

மேற்படி விபரங்களை ஒரே - கொப்பியிலேயே முன் பக்கமும் பின்பக்கமுமாகப் பதியலாம். ஒவ்வொரு பதிவுக்கும் கொப்பியின் இரு முகப்புப் பக்கங்கள் உபயோகிக்கப்படல் நன்று.

சுட்டிகள் 5,6 முதலானவற்றை நிச்சயப்படுத்த இலகுபடுத்துனரின் கிரமமான அறிக்கைகள் உதவும். இவ்வறிக்கைகள் எடுக்கப்பட்ட ஒவ்வொரு விடயரீதியாகவும் தயாரிக்கப்படல் வேண்டும்.

## அங்கத்தவர்கள் சந்திப்புக்களுக்கான பதிவுகள்:

| திகதி | பெயர் | வாசித்துவிட்டு கொண்டுவரும் நூல்கள் / கட்டுரைகளின் விபரங்கள் | கையொப்பம் |
|---|---|---|---|
| | | | |

## அங்கத்தவர்கள் நடவடிக்கைகளுக்கான பதிவுகள் :

| திகதி | பிரச்சினை | தரிசித்த இடம் / அழைத்துப் பேசிய நபர்கள் / கடிதம் அனுப்பப்பட்ட இடம் | நோக்கம் | கையொப்பம்/ பெயர் |
|---|---|---|---|---|
| | | | | |

ஒருவரை, ஈடுபாடற்ற அசமந்த நிலையிலிருந்து , தானே நடவடிக்கைகளை முன்னெடுக்க இயக்க நிலைக்கு மாற்றுவது தான் அபிவிருத்திப் பாதையில் உள்ள சவால் எனப் பலரும் கருதுகின்றனர்.

## திட்டம் 2 : சமாதானத்தை உருவாக்குவதற்காகப் பொதுத் தளங்களில் பங்குபற்றக்கூடிய ஆற்றல் மிகுந்த பெண்கள்

**அறிமுகம் :**

மேலே தரப்பட்டிருக்கும் திட்டம் 1 இல் பெண்கள் பங்குபற்றியிருப்பார்கள் என்ற அடிப்படையில் திட்டம் 2 அவர்களுக்கான அடுத்த கட்ட நகர்வைச் சிபாரிசு செய்கின்றது விரும்பின் இதை ஆண்கள் பெண்கள் கலந்த குழுவினருக்கும் செய்யலாம். பெண்கள் இதுவரைகாலமும் எதிர்நோக்கி வந்த பிரச்சினை களினதும் பின்னடைவுகளிதும் காரணங்களினால் சமாதானத் திட்டங்கள் செயற்படுத்தப்படும்போது அவர்கள் விசேடமாகக் கவனிக்கப்படவேண்டியவர் கள் என்பதையே நாம் வலியுறுத்துகின்றோம்.



**நோக்கம் :** முரண்நிலைகளை உருமாற்றும் செயற்பாடுகளில் அவற்றின் சகல மட்டங்களிலும் பங்கேற்கும் ஆற்றலுள்ள பெண்கள்.

**காலம் :** 2 வருடங்கள்

**இலக்குக் குழு :** அரச சேவைகளில் பணிபுரியும் பெண்கள், பல்கலைக்கழக ஆசிரியர்களும் மாணவர் களும், பாடசாலை ஆசிரியர்கள், வர்த்தகத் துறைகளில் ஈடுபடும் பெண்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் தலைவிகள்

**நடவடிக்கை :** முரண்நிலைகளை உருமாற்றுவதன் அடிப்படைகளைத் தெளிவுபடுத்துவதன்மூலம் பெண் கள் பொதுத் தளங்களில் பங்குபெற வைத்தல்.

**செய்முறை :**

- அரசியல் சமூக முரண்பாடுகளின் தோற்றம், வளர்ச்சி பற்றிய கருத்துக்களையும் முரண்நிலை களை உருமாற்றுவதன் அடிப்படைகளைப் பற்றியு மான எளிய மொழிநடையில் எழுதப்பட்ட வெளியீடுகளைக் கொணரல். அவற்றைப் பரவ லாக இலக்குக் குழுக்களில் அமைந்த பெண் களுக்கு விநியோகம் செய்தல்.
- வாசிப்புக்குழுக்களை உருவாக்கல். இக்குழுக்க ளில் இனப்பிரச்சனைக்கான என்னென்ன தீர்வுகள் பெறப்படலாம் என்று விவாதிக்க ஊக்குவித்தல்.
- பெண்கள் பொதுத்தளங்களில் பங்குகொள்வதற்கு சமூகத்தடைகள் இருப்பதன் காரணமாக, பால்நிலை அடிப்படையிலான சமூக வேறு பாடுகளை உணர்ந்து கொள்ளக்கூடிய பயிற்சி நெறிகளை அது தேவையென உணரும் பெண் களுக்கு நடத்துதல்
- சமாதானத்தைக் கட்டியெழுப்புவதைப் பற்றிய கருத்தரங்குகளையும் மாநாடுகளையும் பெண் களுக்கு நடத்துதல். இவற்றிற்கு அரசியல் மட்டங் களில் இம்முறைவழிகளில் ஈடுபட்டுள்ள அரசியல் தலைவர்களையும், சமாதான செயலக உத்தி யோகத்தர்களையும் வளவாளர்களாக அழைத்தல்.
- சமாதானத்தை உருவாக்கும் முறைவழிகளைப் பற்றிய தமது கருத்துக்களை வெகுஜன ஊடகங் களில் தெரிவிப்பதற்கும் பகிரங்கக் கூட்டங்களில் பேசுவதற்கும் பெண்கள் ஊக்குவிக்கப்படுதல். இவர்களை பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் கலந்துரையாடல்களுக்கும் செவ்வி காணவைப்பதற்கும் முன்னிறுத்தல். இதனூடாக அவர்களுக்கென ஒரு பிரபல படிமத்தை (Public profile) தோற்றுவித்தல்.
- பெண்கள் தாங்கள் விரும்பிய அரசியல் கட்சிகளில் இணைவதையும், உள்ளூராட்சி மன்றம் மற்றும் பாராளுமன்றத்திற்கு செல்வதற்காக தேர்தல்களில் போட்டியிடுவதையும் ஊக்குவித்து அவற்றை ஏதுவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடல்.

## மீளாய்வு :

| சுட்டிகள் | நிச்சயப்படுத்தும் வழிமுறைகள் |
|---|---|
| வாசிப்புக்குழுக்களில் அங்கத்தவர்கள் எண்ணிக்கைகள் | வாசிப்புக்குழுக்களின் பதிவேடுகள் |
| தொடர்பூடகங்களில் பெண்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் முன்னிற்கும் அளவும், அவர்கள் பத்திரிகைகளுக்கு எழுதிப்போடும் அரசியல் குறித்த கட்டுரைகளும் | பத்திரிகைக் கட்டுரைகள், வானொலி தொலைக் காட்சி நிகழ்வுகளின் ஆவணப்படுத்தலும் பதிவுகளும் |
| பிரதேச பொது அமைப்புக்களில் பெண்கள் தலை மைத்துவப் பதவிகளில் அமரும் அளவு | பெண்கள் தம்மைப் பற்றி கிரமமாக எழுதி அனுப்பும் கடிதங்களும் விபரங்களும் |
| பெண்களுக்கான தேர்தல் நிதியத்தின் வளர்ச்சியும் அதனை அவர்கள் தேர்தல் தேவைகளுக்காக உப யோகித்த அளவும் | நிதிய அறிக்கை |
| அரசியல் தலைவர்களுடன் பெண்கள் குழுக்கள் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்திய அளவு | ஊடக அறிக்கைகள், செய்திகள் |
| உள்ளூர் சமாதானக்குழுக்களில் பெண்கள் அங்கத் துவம் வகிக்கும் எண்ணிக்கையும் பொறுப்புக்களும். இவற்றின் அதிகரிப்பின் வீதங்கள். | சமாதானக் குழுக்களின் கூட்ட அறிக்கைகள், ஊடக அறிக்கைகள், உள்ளூராட்சி மன்றங்களின் அறிக்கை கள். |
| அரசியல் மட்டத்திலும், நிர்வாக மட்டத்திலும், இராணுவ மட்டத்திலும், நடைபெறும் பேச்சுக் களிலும் கண்காணிப்பு நடவடிக்கைகளிலும் பெண்கள் ஈடுபடும் எண்ணிக்கையும் அளவும். | உத்தியோகபூர்வ அறிக்கைகள், ஊடக அறிக்கைகள். |

எப்பொழுதும் முன்னோடிகளினால்தான் சமூக மாற்றங்கள் ஏற்படுகின்றன. பாடசாலைக்குப் போவதிலிருந்து சைக்கிளில் ஏறி ஓடிய முதல் பெண்மணி வரை நீங்கள் இதைக் கண்டிருக்கிறீர்கள். ஏன், எமது பெண்கள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்டு முன்னோடிகளாகச் செயல்பட்டுச் செய்த சாதனைகள் தான் எத்தனை? குடும்பத்தவரும் சமூகத்தினரும் அனுமதிக்க வேண்டும் என்று காத்திருக்காமல் பெண்கள் நீங்கள் முன்னோடிகளாக மாறுங்கள்.



பாகம் 2

## சமாதானப் பயிற்சிகள்

**பயிற்சியானது ................**



குழுவேலைகள், விவாதங்கள், சிந்தனைக் கிளறல்கள், கூறப்படும் கருத்துகளை பதிவு செய்வதன்மூலம் சொல்பவர்களை வலுவுணரச் செய்தல், போன்ற நடவடிக்கைகள் மூலம் பயிலுனர்களின் பங்குபற்றும் தரத்தினை ஊக்குவிப்பது.

மெய்நிலையுணர்வறிதல், எடுக்கப்பட்ட பிரச்சினையைப் பற்றிய விளக்கங்களைப் பெறுதல், அப்பிரச்சினையைத் தீர்க்கும் திறன்களைப் பெறுதல் என மூன்று அம்சங்களையும் தேவையான விகிதாசாரத்தில் தனது ஒவ்வொரு நிகழ்விலும் கொண்டிருப்பது

பயிலுனர்களினதும் பயிற்சியாளர்களினதும் பொது அனுபவங்களைப் பகுப்பாய்விற்கு வைப்பது

கற்பதைத் தமது யதார்த்த நிலைமைகளுடன் தொடர்பு படுத்த பயிலுனர்களுக்கு வழி காட்டுவது.




ஆடல், பாடல், நடித்தல் போன்ற புத்தாக்கமான கலை / விளையாட்டு வெளிப்பாடுகளைப் பயன்படுத்துவது.

மொத்தத்தில், பயிலுனர் தாம் இதுநாள்வரை கொண்ட விழுமியங்கள் பலவற்றை மாற்ற வேண்டிய தேவை உள்ள தன்மையினால், அவர்களுக்கு கருத்தியல் ரீதியான சவால்களை விட்டுக் கொண்டிருப்பது



**ஒரு சமாதானப் பட்டறை / பயிற்சியின் அடிப்படை நோக்கங்கள்:**




- ஒரு நாணயத்துக்கு இரண்டு முகங்கள் உண்டு என்பதுபோல ஒரே பிரச்சினைக்கு அவரவருடைய நலன்களின் கோணத்திலிருந்து பார்க்கும்பொழுது ஒன்றுக்கு மேற்பட்ட கண்ணோட்டங்கள் இருக்கலாம் என்பதைக் கற்றுக் கொள்ளல். அதாவது, ஒரு பிரச்சினையைப் பற்றி நாம் நியாயமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றோம் என்று எவ்வளவுதான் நினைத்துக் கொண்டாலும், இன்னொருவருக்கு எமது நிலைப்பாடு அநியாயமாகத் தோன்ற முடியும் என்பதை அனுபவங்களைப் பகிருவதன் மூலம் உணர வைத்தல்.

- அனுபவங்களைப் பகிர்ந்து ஒருவருடைய கண்ணோட்டத்தை இன்னொருவர் விளங்கிக் கொள்வதற்கு சிறந்த தொடர்பாடல் திறன்கள் தேவை என்று அறிதல். இந்தத் தொடர்பாடல் திறன்களில் மற்றவர் கருத்தை அமைதியாக அவசரப்படாமல் செவிமடுத்தலே மிக முக்கியமான திறமையாகின்றது என்று உணர்தல்.

- தொலைவில் அசுர முகங்களாகத் தெரியும் மனிதர்கள் அருகில் சென்று பழகியவுடன் அவர்களும் எங்களைப் போலவே பலம் பலவீனங்கள் பொருந்திய சாதாரண மனிதர்களே என்ற விளக்கம் தோன்றிவிடும் என உணர்தல்.

மேற்கூறிய அடிப்படைகளில் தயாரிக்கப்பட்ட பயிற்சிப் பாடவிதானங்கள் அடுத்து தரப்படுகின்றன. இவை மொழிப் பாவனை கருதி தமிழ் முஸ்லிம் இனங்கள் பங்குபற்றும் பயிற்சிகளாகவே அனேகமாக உருவாக்கப்பட்டிருக்கின்றன.



# பயிற்சி 1




## முரண்நிலைகளை உருமாற்றுதலின் திறன்களைப் பெற்றுக் கொள்ளுதல்

**நோக்கம்** : சமூக மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் பொருத்தமான முறைகளில் சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்து தலைமை தாங்குவதற்கான திறன்கள் உள்ள சிவில் சமூகத்தினர்

**பங்குபற்றுபவர்கள்:** சிவில் சமூகத்தினராக தமது நடவடிக்கைகளின் மூலம் இனம் காட்டிக்கொண்டவர்கள். பொதுத் தளங்களில் பங்குபற்றும் பெண்கள். தங்கள் ஊர்களில் சிறு சமாதான செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களாக இருப்பது சாலச் சிறந்தது. உதாரணமாக, உள்ளூரில் கலவரங்கள் வரப்போவதை முன்கூட்டியே அறிந்து எச்சரிக்கை செய்யும் அமைப்புக்களிலோ அல்லது இரு இனங்கள் மத்தியிலான தொடர்பாடல்களை ஊக்குவிக்கும் சமாதானக் குழுக்களிலோ அங்கத்துவம் வகித்த அனுபவம் வேண்டும். இவர்களில் பெண்கள் அரைவாசி வீதத்தினாராகவாவது இருத்தல் வேண்டும். தமிழ், முஸ்லிம் இனங்கள் கலந்த குழுவினராகவும் இருத்தல் வேண்டும்.

**காலம்** : 9 நாட்கள் கொண்ட ஒரே பயிற்சியாகவோ அல்லது மூன்று பயிற்சித் தொடர்களாகவோ செய்யலாம்.

# பயிற்சித் தொடர் 1



## முரண்நிலைகளின் விளக்கம்

**உள்ளடக்கம்** : முரண்பாடு என்றால் நாம் விளங்கிக்கொள்வது என்ன என்பதைத் தெளிதல்.


முரண்பாடுகளைப் பகுப்பாய்வு செய்யும் திறன்களைப் பெறுதல்.

**காலம்** : $3\,{}^{1}/_{2}$ நாட்கள்

**தேவையான கருவியுபகரணங்கள் :**

'சம்சாரம் அது மின்சாரம்' திரைப்பட நாடா. தொலைக்காட்சி, விடியோ. OHP கற்கை சம்பவம். ஜனநாயகத்தின் அளவீடுகள் குறிக்கும் தாள்கள், அட்டையில் ஒட்டிய படங்கள், டமை தாள்கள், வெண் பலகை, வண்ணப் பேனாக்கள். குறிப்புக்கள் எழுத அச்சடிக்கும் தாள்கள்.

> பயிற்சிகளில் பங்குபற்றியதன் பயனாக சமூக மாற்றத்தில் ஈடுபட்டவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடியவர்களாகத்தான் இருப்பார்கள். சமூக மாற்றத்தில் அக்கறை கொண்டு நடவடிக்கைகளில் இறங்கியவர்களே பயிற்சிகளினால் பயன்பெற்று தாம் செய்வதை இன்னும் திறம்படச் செய்திருக்கின்றனர்.



9.00 - 11.30 அறிமுகம்

**உள்ளடக்கம்**

பயிற்சியின் நோக்கங்களை அறிமுகம் செய்தல். பயிற்சி நடக்கும்போது பயிலுனர்கள் எல்லோரும் கைக்கொள்ள வேண்டிய விதிகளை நிரல்படுத்துதல்.

பயிலுனர்கள் தம்மை அறிமுகம் செய்து கொள்ளல். நாம் ஒருவருடன் சேர்ந்து கூட்டாக சமாதானத்தை உருவாக்கும் பணி செய்யப் போகின்றோமென்றால் அவரைப் பற்றி நாங்கள் அறியவேண்டிய விடயங்கள் என்ன?

**செய்முறை**

Flip Chart ல் விளக்குதல்.
பயிலுனர்கள் ஒவ்வொன்றாகக்கூறக் கூற அது Flip Chart ல் எழுதப்பட்டு இறுதியில் மண்டபத்தில் ஒரு பக்கத்தில் தொங்கவிடப்படவேண்டும்.

பயிலுனர்கள் தமக்குப் பக்கத்திலுள்ளவர்களுடன் கலந்துரையாடி, கேட்க வேண்டிய கேள்விகள் என்ன என்பதை எழுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.
பின்பு இரண்டாக வெட்டிய 25 படங்களை ஒவ்வொருவரும் எடுக்கச் செய்தல். அவர்கள் தங்கள் படத்தை பூரணமாக்கும் மறுபாதியை வைத்திருப்பவரைத் தனக்கு சோடியாகத் தேர்ந்தெடுப்பார்.ஒவ்வொருவரும் தான் தயார் செய்து வைத்த கேள்விகளைத் தனது துணையிடம் கேட்டு அவரைப் பற்றிய விவரங்களைப் பூர்த்தியாக்குவார். அப்படியே மற்றவரும் செய்வார். பின் பொதுவில் ஒவ்வொருவரும் மற்றவரைப்பற்றி அறிமுகம் செய்வார்கள்.

11.30 - 11.45 தேநீர்

11.45 - 12.00 இணக்கக்குழுவினைத் தேர்ந்தெடுத்தல்.

ஒவ்வொரு நாளும் நடந்தவற்றை மறுநாள் காலை மீட்டிப் பார்க்க உதவுவதற்காக இருவர் இருவராக நால்வர் தேர்ந்தெடுக்கப்படுவர்.

மேலும், பதில் கிடைக்காத கேள்விகள், இன்னும் கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்கள் என்பன எழுதித் தூக்குவதற்கு ஒரு தாள் அறையின் மூலையில் தொங்கவிடப்பட வேண்டும்.

முரண்பாடுகளைப் பற்றியும் யுத்தத்தினைப் பற்றியும் கலந்துரையாடும்போது பலவிதமான குறைகள் பங்கேற்பவர்கள் மனதில் தோன்றக்கூடும். ஆனால் அதை வெளியே சொல்லக் கூடிய சூழல் இருப்பதில்லை. இதற்காக நால்வர் கொண்ட இணக்கக்குழு ஒன்றினை பயிலுனர்கள் மத்தியிலேயே தேர்தெடுக்கவேண்டும். இக்குழு அமர்வுகள் முடிந்த பின்னர் பங்குபற்றியவர்களைத் தனியே சந்தித்து அவர்கள் உள்ளடக்கிடக்கைகளை அறியும். அவற்றை அவர்களுடன் தெளிவாக்கிக்கொண்டு, எடுக்கப்பட்ட பிரச்சினைகளையும் இயலுமானால் அதிலிருந்து பெறப்பட்ட முடிவுகளையும் தாளில் எழுதி மற்றவர்களின் பார்வைக்கு விடும். இதிலுள்ள விடயங்கள் பயிற்சியின்போது எடுக்கப்பட வேண்டும்.

12.00 - 1.00 என்னுடைய வாழ்க்கைப் பயணம்.[1]

பயிலுர்கள் தங்கள் மனத்தை ஒருவருக்கொருவர் திறந்து காட்டும் செயற்பாடு

1 Hope, Anne. Timmel, Sally. Trainning for Transformation : A handbook for Community Workers. Book 2. pg 20.

பயிலுனரை ஐந்து பேர்கள் உள்ள குழுக்களாகப் பிரிக்க வேண்டும். ஒவ்வொரு குழுவிலும் உள்ள ஒவ்வொருவரும் ஒரு கடதாசித் தாளில் தங்கள் வாழ்க்கையில் தாம் அனுபவித்த ஏற்ற இறக்கங்களை ஒரு வரைபாகப் பொருத்தமான அடையாளங்களுடன் வரைய வேண்டும். எப்பொழுது தங்களுக்கு ஏற்றம் மிகுந்த வாழ்வாக இருந்தது, எந்தக் காலத்தில் தாங்கள் கஷ்டப்பட்டார்கள் என்று இப்படியாக விவரிக்கலாம். முடிவில் தங்கள் வாழ்க்கை அனுபவங்களை அக்குழுவிலுள்ளவர்கள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வார்கள். (பொதுவில் கொண்டுவர மாட்டார்கள்).

*1.00 - 2.00* மதிய உணவு

## அமர்வு 2

*2.00 - 4.30* முரண்நிலைகளை விளங்கிக் கொள்ளல். இவை தேவைகள், பயங்கள் என்ற இருகாரணங்களுக்காக ஏற்படுகின்றன என்பதை நிறுவல்.

திரைப்படம் - "சம்சாரம் அது மின்சாரம்"

*4.30 - 4.45* தேநீர்

*4.45 - 7.00* திரைப்படம் பற்றிய கலந்துரையாடல்

| உள்ளடக்கம் | செய்முறை |
|---|---|
| ஒவ்வொரு முரண்நிலைகளும் ஒன்றில் தேவையின் நிமித்தமோ அல்லது பயத்தின் நிமித்தமோ ஏற்படுவதை அறிதல். | கலந்துரையாடல். பின்வரும் கேள்விகளுடன் கலந்துரையாடலைத் தொடங்கவும்.<br>- யார் யாருடன் இங்கு முரண்பட்டுக் கொண்டிருந்தனர்?<br>- அவர்கள் உணர்வுகளை விவரிக்க. |
| நிரல்களை | பயிலுனர் அபிப்பிராயங்களை ஒன்றில் தேவைகளாகவோ அல்லது பயங்களாகவோ நிரல்படுத்தல். இதற்கு வெண்பலகையில் தேவை, பயம் என்று இரு வரைந்து ஒவ்வொரு கதாபாத்திரத்தின் பெயருக்கும் எதிரே அவருடைய தேவையையும் பயத்தையும் குறித்தல். |
| மனிதர்கள் தங்களுக்குள் முரண்படுவது மிகவும் சகஜம் என்பதைக் காட்டல். முரண்பாடுகள் நடுநிலையானவை. அவற்றை நாம் கையாளும் முறையிலேயே நேர், மறை என்னும் இயல்புகளைப் பெறுகின்றது. முரண்பாடுகள் அழிவை நோக்கிய முரண்பாடுகள் என்றும் ஆக்கபூர்வமான முரண்பாடுகள் என்றும் இருவகை இருப்பதைத் தெளிதல். முரண்பாடுகள் இல்லாவிடில் உலகில் மாற்றங்களோ அபிவிருத்தியோ நிகழ முடியாது என்பதைக் காட்டல். அவை மனிதர்களைப் பற்றியும் எமது சமூகத்தைப் பற்றியும் நாம் இன்னும் கற்றுக் கொள்ள உதவுகின்றன. | கலந்துரையாடலைப் பின்வரும் கேள்விகளுடன் தொடர்தல்.<br>- இந்தக் குடும்பம் பிளவுபடாமல் இருப்பதற்கு என்ன செய்திருக்கலாம்? யார் அதைச் செய்யக்கூடும்?<br>- அப்படிச் செய்திருந்தால் என்ன விளைவுகள் தோன்றியிருக்கக்கூடும்?<br>- தகப்பனோ அல்லது மகனோ பிறருடைய பிரதேசத்தில் அத்து மீறி நுழைந்திருந்தால் விளைவு என்னாயிருக்கும்?<br>- உங்கள் குடும்பங்களில் இப்படியான முரண்பாடுகள் இடம்பெற்றிருக்கின்றனவா? சுருக்கமாக விவரிக்கக் கோரல்.<br>- அவற்றின் முடிவுகள் எப்படி இருந்தன? |

| | |
|---|---|
| முரண்பாடுகளை எதிர்கொள்ளலில் மனிதர்கள் கைக் கொள்ளும் முறைகள் எவை என்பதை அறிதல்:<br>- தவிர்த்தல், விட்டு ஓடுதல்<br>- முழுதாக விட்டுக்கொடுத்தல்<br>- போட்டியிடுதல், வன்முறையைப் பிரயோகித்தல்<br>- அரைவாசிக்கு விட்டுக் கொடுத்தல்<br>- எல்லோருக்கும் ஏற்ற உடன்பாட்டிற்கு வருதல். | OHP யில் விளக்கம் அளித்தல். |

## நாள் 2

*9.00 - 9.30* முன்னைய நாள் நிகழ்வுகளை மீட்டல்.

## அமர்வு 1

*9.30 - 1.00* முரண்பாடுகளைப் பகுப்பாய்தல்.

அறிமுகம் : முரண்பாடுகள் மிகவும் குழப்பம் நிறைந்தவை. இவற்றிற்கான காரணங்களே திரும்ப விளைவுகளாகவும் வரும். முரண்பாடுகளின் காரணிகளையும் அவற்றின் தன்மைகளையும் அறிந்து கொள்ளுதல் முக்கியமாகும்.

| உள்ளடக்கம் | செய்முறை |
|---|---|
| நமது பிரதேசங்களில் நிகழும் வித்தியாசமான முரண்பாடுகளை வரைபடமாகக் காட்டுதல்.<br>யார் இதில் ஈடுபடுகின்றனர்? யாருக்கு இந்த முரண்பாடுகள் தொடர்வதால் நன்மைகள் இருக்கின்றன? யாருடைய நலன்கள் இம்முரண்பாடுகளினால் பாதுகாக்கப்படுகின்றன? முரண்பாடுகளில் ஈடுபடும் சக்திகளின் தேவைகள் என்ன பயங்கள் என்ன? | குழு வேலை. இப்பொழுது இனங்கள் ரீதியாகக் குழுக்கள் பிரிக்கப்பட்டு விடப்படும்.<br>உ.ம் இரண்டு முஸ்லிம், இரண்டு தமிழ் குழுக்கள். இவை வண்ணக்கட்டிகள் கொண்டு கபிலத் தாள்களில் வரைய விடப்படுவர். தமது பிரதேசங்களில் முரண்பாட்டில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு குழுவினதும் தேவைகளையும் பயங்களையும் அதில் வரைவர். 30 நிமிடங்களின் பின்பு அவர்கள் வரைந்தவற்றை பொதுவில் அளிக்கை செய்வர். |
| காலத்துக்குக் காலம் தேவைகளும் பயங்களும் மாற்றமடைந்திருப்பதையும் அதற்கேற்றவாறு வன்முறையின் இயல்பும் மாறி வந்திருப்பதையும் அறிதல். | மேலே செய்வதை வித்தியாசமான காலங்களுக்குச் செய்யலாம். வரைபடங்கள் மாற்றமடைந்திருப்பதை ஒப்பு நோக்கலாம்.<br>கலந்துரையாடல். |
| முரண்நிலைகளில் சிக்குண்டிருப்பவர்களுடைய நிலைப்பாடுகளை விளங்கிக் கொள்ளல். அது நலன்களை அடிப்படையாகக் கொண்டது என்று அறிதல் | கலந்துரையாடல் |
| முரண்நிலையின் வளர்ச்சி -<br>உருவாக்கம், ஏற்றம், நின்று பிடித்தல், தணிதல், ....<br>மாறுதல் என்பதை இரு முரண்பாட்டு வரை படங்களினூடும் தெளிந்து கொள்ளல். | குழு வேலை. அதே குழுக்கள் திரும்பச் சென்று பிரதேசத்தில் நிகழும் வன்முறைகள் வளர்ந்த பாதையை வரைபுகளாகக் காட்ட வேண்டும். ஒவ்வொரு நிலையிலும் என்ன நடந்தது என்று குறிப்பிட வேண்டும். |

ஒரு பிரதேசத்தில் நிகழும் வன்முறையின் மூலகாரணங்களை அறிதல். அவற்றைத் தூண்டிய காரணிகளை அறிதல். தற்சமயம் என்ன நிலையில் அது இருப்பதாக தீர்மானித்தல். அது எதிர்காலத்தில் எப்படி மாறலாம். என்பதை விவாதித்தல்.
ஒவ்வொரு இனமும் எவ்வளவு வித்தியாசமாக ஒரே விடயத்தைப் பார்க்கின்றனர் என்பதை உணர்தல்.

அதனைத் திரும்பக் கொண்டு வந்து பொதுவில் போட்டு ஒவ்வொரு குழுவினது பார்வையையும் ஆராய வேண்டும். பொதுவான அபிப்பிராயங்களைக் கோர்த்து ஒரு பொதுவான முரண்பாட்டு வரைபடத்தைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும்.
சிந்தனைக்கிளறல்.

(பொருத்தமான இடங்களில் தேநீர் இடைவேளையை வைத்துக்கொள்ள வேண்டும்.)

*1.00 - 2.00* மதிய உணவு

*2.00 - 3.00* விளையாட்டு - குண்டுகளும் கேடயங்களும்

பயிலுனர்களையெல்லாம் அறையில் நடக்க விடுதல். ஒவ்வொருவரும் ஒருவரை (வேறொருவரும் அறியாத வகையில்) தேர்ந்தெடுத்தல். இவரை **அ** என்று குறிப்பிடலாம். இனி திரும்ப எல்லோரையும் அறையில் நடக்க விடுதல். ஒவ்வொருவரும் இன்னொருவரை (வேறொருவரும் அறியா வண்ணம்) தேர்ந்தெடுக்க விடுதல். இவரை **ஆ** என்று அழைக்கலாம். இனி எல்லோருக்கும் அவர்கள் ஒவ்வொருவரும் தேர்ந்தெடுத்த **'அ'** மனிதரைக் குண்டு என்றும் தேர்ந்தெடுத்த **'ஆ'** மனிதரைக் கேடயம் என்றும் உருவகிக்கச் செய்தல். எல்லோரும் அறையில் நடந்து கொண்டிருக்க ஒவ்வொருவரும் தங்கள் குண்டுகளிலிருந்து தங்களைப் பாதுகாக்க வேண்டும். இதற்காக தங்கள் கேடயங்களை தங்களுக்கும் குண்டுகளுக்கும் இடையே எந்தநேரமும் வைத்திருக்கப் பார்க்க வேண்டும். விளையாட்டு முடிவில் பயத்தைப் பற்றியும் பாதுகாப்பைப் பற்றியும் தாம் உணர்வதைக் கலந்துரையாட வேண்டும்.

*3.00 - 7.00* முரண்பாடுகளைப் பகுப்பாய்தல் தொடர்ச்சி.......

### உள்ளடக்கம்

முரண்பாட்டில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொரு சக்திகளினதும் தேவைகள் பயங்கள் என்ன என்பதை அறிதல். அது ஒரு கால எல்லைக்குள் எவ்வாறு உருமாறியிருக்கலாம் என்பதையும் காணல்.

### செய்முறை

குழுவேலை. முஸ்லிம் தமிழ் பயிலுனர்கள் கலந்த நான்கு குழுக்களை அமைத்து அவர்களுக்கு ஒரு கதை கொடுக்கப்படும். அதில் வரும் பிரச்சினையின் வளர்ச்சியை அவர்கள் வண்ணக்கட்டிகள் கொண்டு வரைந்து பொதுநிலையில் சமர்ப்பிக்கவேண்டும். அக்கதையில் ஆரம்பித்த முரண்பாடு எவ்வாறு வளர்ந்து என்னென்ன புதுச்சிக்கல்களைச் சந்தித்திருக்கலாம் என்கின்ற உப கதைகளையெல்லாம் அவர்கள் கற்பனையில் உருவாக்க ஊக்குவிக்கப்படுவர்.
இந்த முடிவுகளை பிற்பாடு பயன்படுத்துவதற்காக எழுதி மண்டபத்தில் ஒரு பக்கத்தில் தொங்க விட வேண்டும்.

## நாள் 3

*9.00 - 9.30* முன்னைய நாள் நிகழ்வுகளை மீட்டல்

### *அமர்வு 3*

*9.30 - 1.00* முரண்பாடுகளின் பகுப்பாய்வு தொடர்ச்சி

(இடையில் பொருத்தமான இடத்தில் தேநீர் இடைவேளையை வைக்கலாம்)

**உள்ளடக்கம்**

பயிலுனரின் பிரதேசத்தில் நிகழும் முரண்பாடுகளுக்கு என்ன விதத்தில் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று பார்த்தல்.

முரண்பாடுகள் தோன்றிய காரணிகளையும் அவற்றை நிவர்த்தி செய்யும் வழிகளையும் பார்த்தல்.

**செய்முறை**

பயிலுனர் தமிழ் முஸ்லிம் என பிரிக்கப்பட்ட முன்னைய குழுக்களாக பிரிந்து பிரதேச முரண்பாட்டு வரைபடத்தை எடுத்து ஆராய்தல்.
இதில் எங்கு எப்பொழுது உள்ளிட்டால் தீர்வுகள் பெறலாம்?
தரப்பட்ட பிரச்சனை இப்பொழுது எந்த நிலைமையில் உள்ளது?
தீர்வு பெறப்படக்கூடிய நிலைமையில் உள்ளதா?
இந்த நிலைமையில் என்ன செய்யலாம்?
தீர்வு பெறப்படக்கூடிய நிலைமையில் இல்லா விட்டால் என்ன செய்வது? என்ற கேள்விகளை எழுப்பல்.

*11.15 - 11.30* தேநீர்

**உள்ளடக்கம்**

தரப்பட்ட முரண்பாட்டுக் கதையில் ஒவ்வொரு நிலையிலும் என்ன செய்திருக்கலாம் என்று தீர்வுகளை வினவுதல்.

**செய்முறை**

குழுவேலை.
இரு நாடுகளுக்கிடையேயான முரண்பாட்டுக் கதையை மீண்டும் எடுத்தல். அந்த அமர்வில் உபயோகிக்கப்பட்ட அதே நான்கு குழுக்கள் திரும்பக் கூடவேண்டும். தரப்பட்ட கதையில் அமைந்த முரண்பாட்டு வரைபடத்தையும் உபயோகித்தல். தரப்பட்ட பிரச்சினையில், வன்முறையை நிறுத்த எங்கு நாம் உள்ளிடலாம்? என்ற கேள்விகளை எழுப்பல். முரண்பாடுகள் தோன்றிய காரணிகளையும் அவற்றை நிவர்த்தி செய்யும் தீர்வு நடவடிக்கைகளையும் நிரல் படுத்தல்.

*1.00 - 2.30* மதிய உணவு

## அமர்வு 2

*2.30 - 5.00* சமாதானத்திற்கான தடைகளையும் வாய்ப்புக்களையும் அறிதல்.

| உள்ளடக்கம் | செய்முறை |
|---|---|
| எடுக்கப்பட்டுள்ள பிரதேசத்திலுள்ள அதிகார வரை படத்தை வரைந்து அங்குள்ள ஜனநாயத்தின் அளவீட்டைக் காணுதல்.<br>இரு பக்கங்களிலுமுள்ள வாய்ப்புக்களையும் தடைகளையும் அறிதல்.<br><br>குழுக்களின் அதிகாரங்களையும் எடை போடுதல் [2] | குழு வேலை. முன்னைய அமர்வின் கலப்புக் குழுக்கள் இங்கும் தொடரவேண்டும். ஒவ்வொரு குழுவும் தமது சமூகத்திலுள்ள அதிகார வரைபடத்தினை வரைய வேண்டும்.<br>அதன்பின் ஒவ்வொருவருக்கும் அவர் சமூகத்திலுள்ள ஜனநாயகத்தின் அளவீட்டினைக் கணிக்கும் அம்சங்கள் கொண்ட நிரல் கொடுக்கப்படும். அதனை 1-5 என்ற அளவீட்டின் அடிப்படையில் நிரப்பி பின் தான் எழுதியதை பலகையில் உள்ள டூமை தாளில் நிரப்ப வேண்டும். |

*5.00* தேநீருடன் அமர்வு நிறைவு பெறும்

## நாள் 4

*9.00 - 9.30* மீட்டல்.

## அமர்வு 1

*9.30 - 11.00* பயிலுனர்கள் தங்கள் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள முரண்நிலைகளை சித்தரித்த வரைபடங்களை எடுக்க. சமாதானத்திற்கான தடைகளையும் வாய்ப்புக்களையும் வைத்துக்கொண்டு தீர்வுகளுக்கு என்ன நடவடிக்கைகள் செய்யலாம் என்று பார்த்தல். சிந்தனைக் கிளறலும் கலந்துரையாடலும்.

*11.00 - 11.15* தேநீர்

*11.15 - 12.30* மீளாய்வு

ஒவ்வொருவரும் "நான் வரும்போது என்னென்ன அபிப்பிராயங்கள் கருத்துக்களுடன் வந்தேன். போகும்போது எப்படிச் செல்லுகின்றேன்" என்று தங்களுக்குத் தரப்பட்ட டூமை தாள்களில் இரு நிரல்களாகப் பிரித்து எழுதல். எழுத வேண்டிய தலைப்புக்கள் : முரண்பாடுகள். ஒற்றுமை, தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள், அரசியல் தலைவல்கள், வரலாறு, அபிவிருத்தி, இனம் என்ற உணர்வு, முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் காரணிகள், வேறு ஏதாவது விரும்பிய விடயங்கள்.


ஒவ்வொருவரும் இணக்கக்குழுவின் வகிபங்கினைப் பற்றிக் கூறக்கேட்கப்படுவர். இணக்கக்குழு தனது அனுபவங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ளும்.

---


2 இந்த நிரல்கள் எவையெவையென்று கைநூல் 1 இல் செயல்வாதத்துக்கான பயிற்சிப் பாடவிதானத்தில் தரப்பட்டிருக்கின்றது இவற்றைப் பயிற்சி உள்ளடக்கத்துக்கு ஏற்றவகையில் மாற்றி உபயோகிக்கலாம்.

| முரண்பாடு | |
|---|---|
| நான் வரும் போது கொண்ட அபிப்பிராயம் | நான் போகும் போது கொண்ட அபிப்பிராயம் |
| | |

| வரலாறு | |
|---|---|
| நான் வரும் போது இதைப்பற்றிக் கொண்ட அபிப்பிராயம் | நான் போகும் போது இதைப்பற்றிக் கொண்ட அபிப்பிராயம் |
| | |



# பயிற்சியில் உபயோகிக்கப்படும் கருவிகள்.



## 1. கதை - முரண்பாடுகளைப் பகுப்பாய்தல்[3]

இரு நாடுகள் தமக்கு இடைப்பட்ட நிலத்தைச் சொந்தம் கொண்டாடி சண்டை பிடிக்க ஆரம்பித்தன. மத்தியஸ்தம் வகிக்க வந்தவர்கள் அந்த நிலத்தை அரைவாசியாகப் பிரித்து ஒவ்வொன்றிற்கும் கொடுக்க எத்தனித்தனர். ஆனால் இரு நாடுகளும் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அந்த நிலம் தங்களுடையது என்று வலியுறுத்தி வரலாற்றையும் சான்றாகக் காட்டின. எப்படிப் பிரித்தும் வழியில்லை. அவையிரண்டும் யுத்தத்துக்கு ஆயத்தம் செய்தன. கடைசியாக மத்தியஸ்தம் வகித்தவர்களில் ஒருவர் ஒரு நாட்டிடம் ஏன் இந்த நிலம் அவ்வளவு முக்கியமாக இருக்கின்து என்று கேட்டார். அந்த நாட்டின் பிரதிநிதி "இந்த நிலம் எங்கள் நாட்டைச் சார்ந்ததாகத்தான் என்றும் இருந்திருக்கின்றது. ஆகவே அது எங்கள் இனத்தின் அடையாளச் சின்னங்களில் ஒன்றாகும்" என்று பதில் கூறினார்.


இதே கேள்வியை மற்ற நாட்டிடம் கேட்டபோது அதன் பிரதிநிதி "நாங்கள் ஒரு சிறிய நாடு. எங்கள் அயல் நாட்டிலும் எமக்கு நம்பிக்கை இல்லை. அது எங்கள் மீது திடீரென்று படையெடுத்துவிடும் என்கின்ற பயம் எங்களுக்கு உண்டு. ஆகவே எங்கள் பாதுகாப்புக்காக நடுவில் இந்த நிலம் இருப்பது அவசியம்" என்றார். இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது போகவே இரு நாடுகளுக்கும் இடையே பயங்கரப் போர் ஒன்று மூண்டது.


## 2. எம்மைச் சுற்றியுள்ள ஜனநாயகத்தின் அளவீடு


| ஜனநாயகத்தின் அம்சங்கள் | அளவீடு |
|---|---|
| பகிரங்க மேடைகளில் அரசியல் விவாதங்களில் பிரஜைகள் கலந்து கொள்கின்றார்கள் | |
| எதிர்க்கட்சிகளுக்கு இயங்க அனுமதி வழங்கப்படுகின்றது | |
| தேர்தல்கள் சுதந்திரமாக நடத்தப்படுகின்றன | |
| அரச நிர்வாகம் அரசியல்வாதிகளால் கட்டுப்படுத்தப்படுவதில்லை | |
| நீதித் துறை சுதந்திரமானது | |
| தங்கள் கிராமங்களில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் பகிரங்கமாக விமர்சனம் செய்கின்றனர் | |
| அதிகாரத்திலுள்ளோருக்கு எதிரான அஹிம்சை இயக்கம் அனுமதிக்கப்படுகின்றது. | |
| மக்கள் நிறுவனமாக சுதந்திரமாக இயங்கலாம் | |
| எழுத்து சுதந்திரம் உண்டு. | |
| அரசியலதிகாரம் அடிமட்ட மக்கள் அமைப்புக்கள் வரையும் பகிரப்பட்டுள்ளது. | |

3 Abarbanel, Joyce. Manual on Conflict Management

### 3. முரண்பாட்டு வரைப்படங்களுக்கு உதாரணங்கள்[4]




4 Resource Pack for Conflict Transformation, International Alert - Nov 1996

## 4. நிறுவனங்களின் அல்லது குழுக்களின் அதிகாரங்கள்

| நிறுவகங்கள் | அளவீடு |
|---|---|
| திருச்சபைகள் | |
| கூட்டுறவுச் சங்கங்கள் | |
| தொழிற்சங்கங்கள் | |
| தொண்டர் நிறுவனங்கள் | |
| மனித உரிமைக்குழுக்கள் | |
| அரசியல் கட்சிகள் | |
| வலதுசாரி இயக்கங்கள் | |
| மக்கள் நிறுவனங்கள் | |
| ஆயுதந்தாங்கிய இயக்கங்கள் | |
| வர்த்தக சம்மேளனங்கள் | |
| சர்வதேச நிறுவனங்கள் | |
| நுகர்வோர் அமைப்புக்கள் | |
| பள்ளிவாசல் குழுக்கள் | |
| ... ... ... ... ... | |
| ... ... ... ... ... | |

## 5. முரண்பாடுகளை எதிர்கொள்ளலில் மனிதர்கள் கையாளும் முறைகள்

### தவிர்த்தல் *'சண்டையா என்ன சண்டை?'*

(விட்டுவிட்டு ஓடுவது, முரண்பாடு இருக்கின்றது என்பதையே நிராகரிப்பது காலப்போக்கில் ஏதும் சரிவரும் என்று நம்பிக் கொண்டு இருப்பது)

நேரம் இல்லாத நிலையில், சிறிய பிரச்சினையென்றால், அதுவும் தீர்மானம் எடுப்பது முக்கியமில்லையென்றால், இது பொருத்தமான தீர்வாகும். ஆனால் இது மனதில் வடு ஏற்படுத்தியிருக்கின்றதெனில் அல்லது குறிப்பிட்ட விடயம் ஒருவர் அக்கறைப்படும் விடயமெனில், பொருத்தமில்லாதது.

### ஒத்துப்போதல் *'உங்களுக்கு என்ன சரியோ அது எனக்கும் சரிதான்'*

ஒருவர் தான் தவறாக நடந்து கொண்டுவிட்டார் என்று உணரும்பொழுதும், எடுக்கப்பட்ட விடயம் அவருக்கு முக்கியத்துவம் இல்லாத நிலையிலும் இது பொருத்தமான தீர்வாகும்.

மற்றவர்களிடம் நல்லபெயரை எடுக்க மட்டும் உபயோகிக்கப்பட்டால் பொருத்தமில்லாத தீர்வாகும்.

### போட்டி *'என்னுடைய வழியில்லையென்றால் ஒரு வழியும் கிடையாது'*

மற்றவர்களின் ஒத்துழைப்பு தேவையான இடத்திலும் அவர்களுடைய மரியாதைக்குப் பங்கம் வரும் இடத்திலும் பொருத்தமில்லாத தீர்வு

**விட்டுக் கொடுப்பு** ***'நீ அதை எடு நான் இதை எடுக்கின்றேன்.'***

ஸதம்பித நிலையில் நிற்பதைவிட ஏதாவது தீர்வினை அடைவது நல்லது என்ற நிலையிலும், மற்றவர்களுடைய ஒத்துழைப்பைப் பெறவேண்டும் ஆனால் அதற்கான நேரமோ வளங்களோ இல்லை என்ற நிலையிலும் பொருத்தமான தீர்வாகும். ஆனால் பெறப்பட்ட தீர்வோடு நிம்மதியாக வாழ முடியாத பட்சத்தில் பொருத்தமில்லாத தீர்வாகும்.

**ஒத்தியங்கல்** ***'எப்படி நாம் சேர்ந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்கலாம்?'***


(தகவல் சேகரித்தல், மாற்று வழிகளை யோசனை செய்தல், கலந்துரையாடுதல், கருத்து வேற்றுமைகளை ஆழ ஆராய்தல்)

உள்ளடங்கும் விடயங்கள் முக்கியமாக இருக்கும்போது, மற்றவரின் ஒத்துழைப்பு தேவையாக இருக்கும்போது, இதில் இருக்கும் பிரச்சினைகளை தீர்க்கலாம் என்ற சாத்தியக்கூறு இருக்கும்போது, பொருத்தமானது.

ஆனால் நேரம் இல்லாதபோதும், விடயங்கள் முக்கியமில்லாதபோதும், பொருத்தமில்லாத தீர்வாகும்.

---

## பயிற்சித்தொடர் 2



### *சமாதானத்தை உருவாக்கல்*

**உள்ளடக்கம்** : முரண்நிலைகளின் உருமாற்றத்திற்கான கருவிகளை அறிந்து கொள்ளல். உள்ளூரில், பிரதேச ரீதியில், தேசிய ரீதியில், சர்வதேச ரீதியில் சமாதான முறைவழியின் படிநிலைகளை அறிதல்.

**காலம்** : *3 1/2 நாட்கள்*

**தேவைப்படும் கருவியுபகரணங்கள் :**

வெண்பலகை, வண்ணப் பேனாக்கள், ஊமை தாள்கள், OHP கருவி, வண்ணக் கட்டிகள், வரைதல் தாள்கள், பிறிஸ்டல் அட்டைகள், கத்திரிக்கோல்கள், பசை, 3 நாடுகளின் கற்கைச் சம்பவங்கள்.

**நாள் 1**

*9.00 - 10.15 அறிமுகம்*

முரண்நிலைகளின் விளக்கம் பயிற்சித் தொடர் 1ன் அறிமுகத்தை நோக்குக. அதைப் போலவே பயிற்சிக் கூடத்தின் விதிகளையும் இணக்கக்குழுவினையும் தேர்ந்தெடுத்துக் கொள்க.

பயிலுனர்கள் ஒவ்வொருவரும் சமாதானத்தைக் கட்டியெழுப்புபவர்களாகத் தம்மை உருவகித்து தமது நம்பிக்கைகள், அச்சங்கள், எதிர்பார்ப்புக்கள் ஆகியவற்றை பிறருடன் பகிர்ந்து கொள்ளல்.

### *அமர்வு 1*

*10.15 - 1.30 முரண்நிலைகளின் உருமாற்றத்திற்கான கருவிகள்*

| உள்ளடக்கம் | செய்முறை |
|---|---|
| எங்களுடைய விழுமியங்களும் நம்பிக்கைகளும் நாம் ஒரு விடயத்தை எப்படிப் பார்க்கின்றோம் என்பதில் செல்வாக்குச் செலுத்துவதை உணர்தல். ஆகவே நாம் மற்றவர்கள் என்ன கோணத்திலிருந்து தங்கள் கருத்துக்களைச் சொல்கின்றார்கள் என்பதை அறிவது அவசியம் என்றுணர்தல். இதற்கு உதவுவதுதான் கலந்துரையாடல்களும் பேச்சுவார்த்தைகளும். | ஒரு நபரின் என்னென்ன இயல்புகள் அவர் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களுக்கு உயிர்கொடுக்கின்றது என்பதை வெண்பலகையில் நிரல்படுத்தல்... உ.ம் : வர்க்கம், கல்வி, பால், இனம், சாதி, மதம், குடும்ப நிலைமை இத்தியாதி. |
| உள்ளூர், பிரதேச மட்டத்தில், தேசிய மட்டத்தில், சர்வதேச மட்டத்தில் முரண்நிலைகளை உருமாற்ற எடுக்கக்கூடிய நடவடிக்கைகள். உரையாடல், பேச்சுவார்த்தை, அனுசரணை, மத்தியஸ்தம் போன்றவற்றின் பயன்களை அறிதல். தீர்வு பூரணமானதும், ஏற்புடையதும், வற்புறுத்தப்படாததும், விட்டுக்கொடுப்பு இல்லாததும், புத்தாக்கம் நிறைந்ததுமாக இருக்கவேண்டும் என்பதைக் கண்டு கொள்ளல். | OHP யில் முரண்பாடுகளின் நிலைமாற்றத்திற்கான கருவிகள் முதலில் விளக்கப்படும்.<br><br>பின்பு செய்முறை. வகிபங்கு நடிப்பு<br><br>முஸ்லிம் தமிழ் கலந்த முன்னைய நாள் குழுக்களை மீண்டும் அமைக்க. அவர்கள் முன்னைய பயிற்சித் தொடரில் எடுத்த உதாரணங்களில் (கற்பனைக் கதையையோ அல்லது உண்மைக் கதையையோ) ஒரு சம்பவத்தை எடுத்து அதில் வரும் பிரச்சினையைத் தீர்க்க எவ்வாறு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது என்று ஆராய்தல். பார்வையாளர்கள் திருத்தங்கள் சிபாரிசு செய்து அதை நடித்துக் காட்ட வேண்டும். |

1.30 - 2.30 மதிய உணவு

2.30 - 3.00 விளையாட்டு

எல்லோரும் 7 - 8 பேர்கள் சேர்ந்த குழுக்களாகப் பிரிக்கப்படுதல். ஒவ்வொரு குழுவும் வட்டமாக நிற்றல் வேண்டும். ஒவ்வொரு வட்டத்திலும் ஒவ்வொருவரும் தங்களது வலது கையைக் கொண்டு இன்னொருவரின் வலது கையைப் பிடித்தும் தமது இடது கையைக் கொண்டு வேறொருவரின் இடது கையையும் பிடிக்க வேண்டும். தோன்றும் சிக்கலை அவிழ்ந்து ஒரு சீரான வட்டமாகத் தம்மை அமைத்துக் கொள்ள வேண்டும்.

3. 00 - 5.00 முரண்நிலைகளை உருமாற்றுதல் தொடர்ச்சி ......

## நாள் 2

9.00 - 9.30 மீட்டல்

## அமர்வு 1

9.30 - 1.30 கற்கைச் சம்பவம் - சமுகங்கள் அல்லது பிரஜைகள் தங்களுக்குள் அமைதியையும் சமாதானத்தையும் கொண்டு வர முயற்சித்த முறைகளின் உதாரணங்கள். ஏதாவது இரு நாடுகளை எடுத்துக் கொள்ளலாம். தென் ஆபிரிக்கா, வட - அயர்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகியன தரப்படும்.

| உள்ளடக்கம் | செய்முறை |
| --- | --- |
| முரண்நிலைகளில் அமிழ்ந்திய வேறு நாடுகளில் சமாதான உருவாக்கத்தில் மக்களின் பங்களிப்பைத் திரட்டிய அனுபவங்களைக் கற்று எமது நாட்டில் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்று எல்லோரும் சிந்தித்தல். | குழு வேலை. எல்லோரும் கலந்த குழுக்கள் நான்கு. இரு குழுக்கள் ஒரு நாட்டையும் மற்ற இரு குழுக்களும் இன்னொரு நாட்டின் கதையையும் எடுக்கும். அவற்றின் பிரச்சினைகளில் ஈடுபட்ட சக்திகள், தடைகள், வாய்ப்புக்கள் ஆகியவற்றை ஆராய்ந்து அங்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளைக் கலந்துரையாடுதல். |

1.30. - 2.30 மதிய உணவு

## அமர்வு 2

2.30 - 6.00 சமாதானத்தைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளைத் திட்டமிடல்.

| உள்ளடக்கம் | செய்முறை |
| --- | --- |
| முஸ்லிம் தமிழ் என இருசாராரும் எதிர்கால வேலைத்திட்டத்தினைத் தயாரித்தல் | குழுவேலை. முதல் அமர்விலிருந்த குழுக்களே இங்கும் தொடரவேண்டும். ஒரு தாளில் யாருடன், என்ன, எப்படி, எப்போது, எதைக்கொண்டு என்று அட்டவணைப்படுத்தி தங்கள் நடவடிக்கைகளை சமர்ப்பித்தல். தடைகளும் வாய்ப்புக்களும் வேறாகக் குறிக்கப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கைகளும் எழுதப்பட வேண்டும். |

9.00 - 9.30 மீட்டல்

9.30 - 11.00 செய்முறைகள் எழுதப்பட்ட திட்டங்களைச் செயற்படுத்திப் பார்த்தல். உதாரணமாக சுவரொட்டிகள் வரைவதென்றால் அதன் ஒரு உதாரணத்தை வரைந்து காட்டுதல், ஊடகவியலாளர் மாநாடு எனில் அதைத் தயாரித்துக்காட்டடல்

11.00 - 11.15 தேநீர்

11.15 - 12.15 விளையாட்டு - கூட்டணி அமைத்தல். விளையாட்டைப் பற்றிய கலந்துரையாடல்

12.15 - 2.00 மீளாய்வும் பயிற்சி முடிவும்.


ஒவ்வொருவரும் பயிற்சி மண்டபத்துக்கு வெளியே சென்று ஏதாவது பொருத்தமான பொருட்களைச் சேகரித்து வந்து தாம் கற்பனையில் பார்க்கும் தமது சமூகத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று அந்தப் பொருட்களினால் உருவகிக்க வேண்டும். ஏனையோர் கேள்விகள் கேட்டுத் தெளிந்து கொள்ளலாம்.

இங்கு கற்றுக் கொண்டது இன்னும் கற்றுக்கொள்ள வேண்டியது என்று நிரல்படுத்திய டீமை தாள்கள் ஆங்காங்கு தொங்கவிடப்பட்டிருக்கும். ஒவ்வொருவரும் அதில் தங்களது அபிப்பிராயங்களையும் சிபாரிசுகளையும் எழுதுதல்.

இணக்கக்குழு தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளல்.

பயிற்சி முடிவு

# பயிற்சியில் உபயோகிக்கும் கருவிகள்



## 1. கூட்டணி அமைத்தல் விளையாட்டு

20 வருடங்களாக இலங்கையில் நிகழும் யுத்தத்தினை ஒரு முடிவுக்குக் கொண்டு வருவதற்கு நீங்களெல் லோரும் ஒன்றாகச் செல்கிறீர்கள்.

- யுத்தத்தை அதி உக்கிரமாக நடத்திச் செல்லும் அரசை முதல் கவிழ்க்க வேண்டும். இதற்காக சிங்களத் தீவிரவாதிகளுடன் கூட்டுச் சேர வேண்டும். கூட்டுச் சேருபவர்கள் ஒரு பக்கமும் என்ன நிர்ப்பந்தத்திலும் கூட்டுச் சேரக்கூடா தென்பவர் மற்றப் பக்கத்திலும் பிரியவும்.

- சமாதானத்துக்காக மக்களை அணிதிரட்டப் போகும்போது அதற்கான நிதி வளங்களை ஒரு நாட்டின் தூதகரம் உங்களுக்குத் தர முன் வந்துள்ளது. ஆனால் அந்த நாடு ஏற்கனவே ஒரு அரேபிய நாட்டில் எண்ணெய் வளத்துக்கான போட்டிக்காக யுத்தத்தை முன்னெடுத்ததென்று உங்களுக்குத் தெரியும். நிதியை அந்நாட்டிட மிருந்து வாங்குபவர்கள் ஒருபுறமும் வாங்க விரும்பாதவர்கள் மறுபுறமும்.

- சமாதான யாத்திரை ஒன்று ஏற்பாடு செய்கிறீர்கள். போருக்கு ஆதரவான தீவிரவாதிகள் வந்து அதனை அடித்துக் கலைக்கப் போகின்றார்கள் என்று முன்கூட்டியே உங்களுக்குத் தெரிய வருகின்றது. ஆகவே அவர்கள் வந்து உங்களை அடிக்க முதல் நீங்கள் அவர்களைத் துவம்சம் செய்ய வேண்டும் என்று ஆயுதங்களுடன் தயாராக நிற்க சிலர் சிபாரிசு செய்கின்றனர். இவ்வாறு வன்முறை உபயோகிக் கத் தயாராக உள்ளவர்கள் ஒருபுறமும் ஏனை யோர் மறுபுறமும்.

- பேச்சுவார்த்தைகளினூடாகப் பெறப்படப் போகும் தீர்வு ஒரு ஜனநாயக அமைப்பைக் கொண்டிருக்க வேண்டுமென்றால் அங்கு சகல தமிழ் இயக்கங்களும் அரசியலில் சுதந்திரமாகப் பங்குபற்றும் கட்டமைப்பு பெறப்படவேண்டும். ஆயின் அக்கட்டமைப்பு உருவாகினால் உங்கள் பிள்ளையின் கொலைக்குக் காரணமான ஒரு இயக்கமும் பங்கு கொள்ளக்கூடிய அரசியல் கட்டமைப்பு உருவாகும். அதை ஆதரிப்பவர்கள் ஒருபுறமும் ஆதரிக்காதவர்கள் மறுபுறமும்.

- சமாதானப் பேச்சுவார்த்தைகளில் உங்கள் பிரதி நிதியாக கலந்து கொள்ளும் ஒரு அமைப்பு உங்கள் பிரதேசங்களில் வாழும் முஸ்லிம் மக்களின் உரிமை களையோ அல்லது ஏனைய சமூகத்தினரின் உரிமைகளையோ முன்னெடுக்காததைக் காண் கின்றீர்கள். இதற்கு ஒரே வழி சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மாற்று அபிப்பிராயம் உள்ள மக்கள் அணிகளும் பங்குபற்ற வேண்டும் என்று சிலர் கருதுகின்றனர். மாற்றுக் கருத்துள்ள அணிகள் பங்கு பெறுவதனால் பேச்சுவார்த்தை மேடையில் எங்கள் பிரதிநிதிகளின் வலு இழக்கப்படும் என்று ஏனையோர் வாதிடுகின்றனர். மாற்று அணிகளும் பங்கு பற்ற வேண்டும் என்று கருதுபவர்கள் ஒரு புறமும் ஒரே பிரதிநிதி இருக்க வேண்டும் என்று கருதுபவர்கள் மறுபுறமும்.

- உங்கள் அணியில் ஒரு பகுதியினர் அவ்வணியின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றி உங்களை வெளியேற்றி விடுகின்றார்கள். பின்னொரு சமயம் ஒரு முக்கிய பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அவர்களுக்கு பிரதம மந்திரியுடன் ஒரு சந்திப்பு ஒழுங்கு செய்ய வேண்டியிருக்கின்றது. இப் பிரச்சினை தீர்ந்தால் சமாதானம் கிடைத்துவிடும். பிரதம மந்திரியுடன் சந்திப்பு ஒழுங்கு செய்ய உங்களால்தான் முடியும். சந்திப்பு ஒழுங்கு செய்ப வர்கள் ஒரு புறமும் செய்ய விரும்பாதவர்கள் மறுபுறமும்.

## 2. ஒவ்வொரு நாடுகளினதும் முரண்நிலை உரு மாற்றிய அனுபவங்களின் கற்கை சம்பவங்கள்

### தென் ஆபிரிக்கா

இனவாதமும் இனபேதத்தின் அடிப்படையிலான அரச கட்டமைப்புக்களும் நிறைந்த தென்னாபிரிக்காவை நீதியும் மனித உரிமைகளை நாடி நிற்கும் கொள்கைகளும் அடங்கிய அரசியலமைப்புச் சட்டத்தினைக் கொள்ளவும், ஒரு ஜனநாயக அரசைத் தாபிக்கவும், அதன் மக்கள் சமூகத்தின் ஒவ்வொரு படிநிலையிலும் நின்றுழைத்தார்கள். அதைப் பற்றிய கதைதான் இது.

தென் ஆபிரிக்காவில் 350 வருடங்களுக்கு முன்னர் ஒல்லாந்தரும் பின்னர் ஆங்கிலேயரும் அங்கிருந்த கறுப்பினத்தவரை காலனித்துவ ஆட்சிக்குள்ளாக்கினர். முதலில் ஆபிரிக்க மக்களினதும் இந்தியரினதும் அடிமை உழைப்பினால் தங்கள் செல்வங்களை ஈட்டிக் கொண்டவர்கள் படிப்படியாக வெள்ளையரின் மேன்மையின் அடிப்படையிலான ஒரு அரசை நியமித்தனர். இந்த அரசு கறுப்பர்களையும் இந்தியர்களையும் இடம் பெயர்ந்து புறம்பாக பிரிந்து வாழ்க்கை நடத்தக் கட்டளையிட்டதுமின்றி வெள்ளையரையே நாட்டின் காணிகளின் ஏகபோக உரிமையாளர்களாகவும் ஆக்கியது. அந்நாட்டின் கனிப்பொருள் வளங்களும், தங்கம், வைரக் கற்கள் போன்ற வளங்களும் வெள்ளையர்களுக்குச் சொந்தமாயின.

1910ம் ஆண்டில் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் உருவாக்கப்பட்டு வெள்ளையர் ஆட்சிக்கெதிரான மக்கள் போராட்டங்கள் மெல்ல ஆரம்பிக்கப்பட்டன. இது, மகாத்மா காந்தியின் அஹிம்ஸாவழிப் போராட்டத்தின் அடிகோலி 1950களில் மக்கள் போராட்டங்களை நாடெங்கும் அவிழ்த்துவிட்டது. 1955ம் ஆண்டு ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் ஆயிரக்கணக்கான பிரதிநிதிகள் பங்குபற்றிய மக்கள் காங்கிரஸைக் கூட்டி ஒரு சுதந்திரப் பட்டயத்தை உருவாக்கினர். இப் பட்டயம் ஆ.தே.கா எதிர்த்து நின்ற கொள்கைகளைப் பற்றி மட்டுமல்லாது அது எந்தக்கொள்கைகளைக் குறித்துப் போராடுகின்றது என்பதைப் பற்றியும் இருந்தது. இப்பட்டயம் ஒரு சுதந்திரமானதும் ஜனநாயகபூர்வமானதுமான அரசைத் தாபிப்பதில் மக்கள் பங்களிப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை நாட்டுக்கே எடுத்துணர்த்திற்று.

இந்த மாநாட்டுக்கு ஆ.தே.கா ஆயத்தப்படுத்தியதே ஒரு தனி வரலாறாகும். மக்களைப் பங்கேற்க வைப்ப தானால் அவர்கள் வாழும் இடங்களுக்கே சென்று அவர்களை அணுக வேண்டும் என்று உணர்ந்ததனால் காங்கிரஸ் தொண்டர்கள் மக்களை வீட்டுக்கு வீடு சென்று சந்தித்தார்கள். "உங்கள் நாட்டிலும் உங்கள் சமூகத்திலும் உங்கள் குடும்பத்திலும் முழு சுபீட்சத்துடன் நீங்கள் வாழ தென் ஆபிரிக்கா நாட்டில் என்னென்ன நிலைமைகள் மாறவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்" என்று ஒவ்வொருவரையும் கேட்டு அவர்களின் பதில்களைப் பதிவு செய்து கொண்டார்கள். அப்பதில்களைக் கோரிக்கைகளாக உடனடியாகப் போடாமல் மக்களின் வித்தியாசமான கண்ணோட்டங்களாக முதலில் பதிவு செய்து கொண்டனர். இந்த அணுகுமுறையின் அனுபவங்களே பின்னால் 1980 களில் புதிய தென் ஆபிரிக்கா உருவாகுவதற்கு மக்கள் பங்களிப்புச் செய்ய வைத்த சாதனைகளாக மாறியது என்றால் மிகையாகாது

அம்மாநாட்டின் பின்னர் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தென்னாபிரிக்காவில் தடை செய்யப்பட்டது. அதன் தொண்டர்கள் மறைமுகமாகவும் வெளி நாடுகளிலிருந்தும் இயங்க ஆரம்பித்தார்கள். 60களில் வன்முறைகள் பெருக ஆரம்பித்தன. இதனால் நாட்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது மட்டுமன்றி சர்வசே சமூகமும் தென்னாபிரிக்க நாட்டினை வர்த்தக உறவுகளிலிருந்தும் விளையாட்டு மற்றும் கலாசார உறவுகளிலிருந்தும் ஒதுக்கும் நிலை உருவாகிற்று. இதனால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட அரசு இந்நிலை தொடர முடியாதென்ற உண்மை தெரிந்தவுடன் பேச்சுவார்த்தைகளில் இறங்கிற்று. அதே சமயம், ஆயுத நடவடிக்கைகளை எவ்வகையில் வலுப்படுத்தினாலும் கூட அரசாங்கத்தை முழுமையாக வெல்ல முடியாது என்கின்ற முடிவுக்கு வந்த காங்கிரஸூம் பேச்சு வார்த்தைகளுக்கு தயாரானது.

1989ம் ஆண்டு ஆ.தே.கா, ஜனநாயக எதிர்காலத்திற்கான ஒரு வெகுசன மாநாடு ஒன்றைக் கூட்டியது. இதில் பேச்சுக்களை அணுகும் பொது வழிமுறை ஒன்று வகுக்கப்பட்டது. அவற்றைத் தொடர்வதற்கு ஏதுவான புதிய நிறுவன யாப்பினை இந்த மாநாடு தெரிவு செய்த யாப்புக் குழு வரைந்தது. இந்த யாப்பு, காங்கிரஸ் தென்னாபிரிக்க அரசுடன் பேச்சுக்களைத் தொடருவதற்குத் தேவையான அதிகாரங்களை வரைந்து அந்த

அதிகாரங்கள் வழங்கக்கூடிய கட்டமைப்புக்களையும் உருவாக்கியது.

1991ம் ஆண்டு ஜுன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை ஆ.தே. காங்கிரஸ், அரசாங்கம் உட்பட அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மற்றும் திருச்சபைகள் மத்தியில் பேச்சுக்கள் நடந்தேறின. இவை, தேசிய மட்டத்திலும், பிராந்திய உள்ளூர் மட்டங்களிலும் சமாதான உருவாக்கத்திற்கான என்னென்ன கட்டமைப்புக்கள் இடப்பட வேண்டும் என்பதைத் தீர்மானித்தன. இப்பேச்சுக்களின் பயனாக உருவாக்கப்பட்ட இறுதி ஒப்பந்தத்தை 27 அரச, அரசுசாரா அமைப்புக்கள் கைச்சாத்திட்டு அங்கீகரித்தன.

இம் முறைவழியில் பங்குபற்றிய சகல அமைப்புக்களும் கிட்டத்தட்ட 400 இணக்கப்பேச்சு முகவர்களைத் தெரிவு செய்தன. இவர்கள் வெவ்வேறு விடயங்களைக் கையாளும் செயற்குழுக்களில் இயங்கினர். 1991 டிசம்பர் தொடங்கி 1992 மே வரை இக்குழுக்கள், தமது நாடு ஒரு புதிய அரசியலமைப்பிற்குச் செல்லும் இடைக்காலத்தில் என்ன விதிகளுடன் இயங்கலாம் என்பதைப் பற்றிய பேச்சுக்களில் இறங்கின. 1992ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஒரு இடைக்கால அரசாங்கத்தைப் பற்றியும் அதற்கான இடைக்கால அரசியலமைப்புச் சட்டத்தைப் பற்றியுமான பேச்சுக்களில் இறங்கும் முறைவழியினைத் தீர்மானித்து காங்கிரஸும் அரசாங்கமும் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

1992 முதல் 1993 வரை கிட்டத்தட்ட 26 அமைப்புக்கள் ஒரு இடைக்கால அரசியலமைப்புச் சட்டத்தினை வரையும் பேச்சுக்களில் ஈடுபட்டன. இந்த முறைவழிகளுக்கான நிர்வாகத்தை வர்த்தக அமைப்புக்கள் பொறுப்பேற்றன. இந்த இடைக்கால அரசியலமைப்புச் சட்டத்தின் பயனாக, 1994 ஏப்ரல் மாதம் முதல் முறையாக தென்னாபிரிக்காவில் இன அடிப்படையில்லாத சுதந்திரமான தேர்தல்கள் நடத்தப்பட்டன. இதில் புதிய இடைக்கால பாராளுமன்றத்தினதும் சட்டவாக்க அவையினதும் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

இடைக்கால சட்டவாக்க அவையினது ஏற்பாட்டினால் 1994 தொடக்கம் 1996 வரை நாடு முழுவதும் ஒரு பாரிய மக்கள் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. உள்ளூர் மட்டங்களில் மக்கள் குழுக்கள் ஒன்றுகூடி தங்கள் நாட்டின் புதிய அரசியலமைப்புச் சட்டம் என்னென்ன அம்சங்களுடன் இருக்கவேண்டும் என்பதைப் பற்றிய சிபாரிசுகளை வரைந்தார்கள். இச்சிபாரிசுகள் ஒன்று சேர்க்கப்பட்டு சுமார் 7 அமைப்புக்களின் 490 அங்கத்தவர்கள் இருந்த சபையினால் பேச்சுக்களுக்கு உட்படுத்தப்பட்டன. இப்பேச்சுக்களின் முடிவில் புதிய அரசியலமைப்புச் சட்டத்தின் வரைவு மே மாதம் பூரணப்படுத்தப்பட்டு அது மேலும் மாற்றங்களுக்கு உள்ளாகி ஒக்டோபர் 11 1996ம் ஆண்டு சகல அமைப்புக்களினாலும் அங்கீகரிக்கப்பட்டது.

1996ம் ஆண்டு டிசம்பர் 10ந் திகதி புதிய அரசியலமைப்பு சட்டமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. அது 1997ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ந் திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

தென்னாபிரிக்காவின் பேச்சுக்களின் வடிவத்தைத் தீர்மனிப்பதில் ஆ.தே.கா பெரும் பங்கு வகித்தது. காங்கிரஸ் அங்கத்தினர் பிற ஆபிரிக்க நாடுகளில் மூன்றாந்தரப்பினராக மத்தியஸ்தம் செய்ய வந்த அன்னியத் தலையீடுகளை அவதானித்து வந்தனர். இதன் அனர்த்தங்களைத் தெரிந்து கொண்டு தங்கள் நாட்டில் மத்தியஸ்தம் வழங்க சர்வதேச சமூகம் வரத் தேவையில்லாதவாறு பேச்சுக்களைக் கொண்டு செல்லவேண்டும் என்று உறுதி பூண்டனர். இதனால், தங்கள் மத்தியில் இருந்த முதிர்ந்த அரசியல்வாதிகள், சட்ட வல்லுனர்கள் போன்றோரைக் கொண்டு சகல கட்சிகளும் அமைப்புக்களும் பங்கு கொள்ளக்கூடிய கொள்கை அடிப்படையிலான சமாதான முறைவழியினை எவ்வாறு உருவாக்கலாம் என ஆராய்ந்து வெற்றி கண்டனர். முதலில் தென்னாபிரிக்க அரசாங்கத்துடன் இரகசிய பேச்சுக்களில் ஆரம்பித்த இம்முறைவழி பின் 1991ம் ஆண்டிற்குப் பின்னர் படிப்படியாக பொதுத் தளத்திற்கு வந்தது. இவ்வளவு ஆழமான அணுகுமுறையும் அதன் பிரயோகமுமே இத்தகைய பிரமிப்பான மக்கள் பங்களிப்பிற்கு இட்டுச் சென்றிருக்கின்றது.



## வட அயர்லாந்து

**வ**ட அயர்லாந்தில் பல நூற்றாண்டுகளாகவே வன்முறைகளும் யுத்தங்களும் தொடர்ந்து வந்திருக்கின்றன. ஒரு கத்தோலிக்க நாடான அயர்லாந்தில், அம்மக்களை இடம் பெயர வைத்துவிட்டு இங்கிலாந்திலிருந்தும் ஸ்கொட்லாந்திலிருந்தும் புரொட்டஸ்தாந்திய மக்கள் குடியேறிய நாட்களிலிருந்து இப்பிரச்சினைகள் ஆரம்பமாயின. அதன்பின் புரொட்டஸ்

தாந்திய ஆங்கிலேயரின் செல்வாக்கிற்குக் கீழேயே இம்மக்கள் வாழவேண்டியதாயிற்று. 1921ம் ஆண்டு அயர்லாந்தின் சில பிராந்தியங்களுக்கு வரையறுக்கப்பட்ட தன்னாட்சி வழங்கப்பட்டாலும்கூட புரொட்டஸ்தாந்திய மக்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்குக் கீழேயே தாம் தொடர்ந்து இருந்தனர். கத்தோலிக்கருக்கும் புரொட்டஸ்தாந்திய மதத்தினருக்கும் தீராப் பகைமை ஏற்பட்டது. இந்தப் பிரிவினை பொருளாதார ரீதியான பிளவுகளையும் ஏற்படுத்தின. உதாரணமாக புரொட்டஸ்தாந்திய மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் அபிவிருத்தி அடைந்தவையாகவும் கத்தோலிக்க மக்கள் வாழ்ந்த பிரதேசங்கள் குறைவிருத்தி காணப்பட்டவையாகவும் இருந்தன.

பல நூற்றாண்டு காலமாக நிலவி வந்த வன்முறைகளினால் பயன் ஏதும் இல்லையெனக் கண்டு 1990களில் பிரிட்டிஷ் அரசாங்கமும் ஐரிஷ் அரசாங்கமும் பேச்சுக்களில் இறங்கின. இவற்றில் பங்குபற்றுபவர்கள் ஒரு பொதுத் தேர்தல்களில் தெரிவு செய்யப்படவேண்டும் எனவும் இராணுவ இயக்கங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றவேண்டும் என்றும் தீர்மானமாகியது. அயர்லாந்தில் வசிக்கும் ஒவ்வொரு சமூகங்களிலிருந்தும் பிரதிநிதித்துவம் பேச்சுக்களில் பெறப்படவேண்டும் என்று கருதி அரசாங்கம் புதிய தேர்தல் நடைமுறைகளை அமுலுக்கு கொண்டு வந்தது. இதன்படி 18 தேர்தல் தொகுதிகள் ஒவ்வொன்றும் 5 பிரதிநிதிகளைத் தேர்தெடுக்கும். இவர்களுடன் நாடளாவிய ரீதியில் வெற்றி பெற்ற முதல் பத்து அரசியல் கட்சிகளும் தலா இரு பிரதிநிதிகளை தெரிவு செய்து அனுப்பும். இவ்வகையில் 110 பிரதிநிதிகள் உத்தியோக பூர்வ பேச்சுக்களில் பங்கு கொண்டார்கள். இந்த ஏற்பாடு பிரதானம் அல்லாத சிறிய கட்சிகளின் பங்களிப்பை ஊக்குவித்ததாயினும், சமூகத்தில் ஒதுக்கப்படக்கூடிய ஏனைய குழுக்களின் பங்களிப்பை உறுதி செய்யவில்லை.

இதனால் அங்குள்ள பெண்கள் சிலர் பெண்களின் குரல்களும் உத்தியோகபூர்வ சமாதானப் பேச்சுக்களில் ஒலிக்கவேண்டும் என்கின்ற நோக்கத்தோடு இயங்க ஆரம்பித்தனர். அவர்கள் கதைதான் இது.

பல வருடங்களாக சமூக மட்டத்தில் தலைமைத்துவம் வகித்த சில பெண்கள், மனித உரிமைகள், சௌஜன்யம் உருவாக்கும் நடவடிக்கைகள் போன்ற சமாதான உருவாக்கச் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்திருந்தனர். இவர்கள் ஆசிரியர்களாகவும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும், அரசுசாரா நிறுவனங்களின் தலைவிகளாகவும், தொழில் பார்ப்பவர்களாகவும் பணி புரிந்தவர்கள். தங்கள் சமூகப் பணியின் காரணமாக எல்லோரும் ஒன்றிணைந்து வட அயர்லாந்தின் பெண்கள் கூட்டமைப்பு என்னும் அமைப்பைத் தாபித்தனர். 1977 ஆண்டில் தமது பணிகளுக்கான சமாதான நோபல் பரிசையும் தட்டிக் கொண்டனர். தாம் அரசுசாரா நிறுவனங்களின் மட்டங்களில் இருப்பதனால் தம்மை காத்திரமான சக்தியாக ஒருவரும் கருத்தில் கொள்ளாததை நாளடைவில் அவதானித்தனர். சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பெண்கள் பங்குபற்றவேண்டும் என்கின்ற தங்கள் கோரிக்கை, கோஷங்கள் மட்டத்தில் மட்டுமே இருப்பதையும் கவனித்தனர். இதனால், தாம் அரசியல் மட்டங்களிலும் இயங்கவேண்டும் என்று இப்பெண்கள் தீர்மானித்தனர்.

முதலில் பெண்களை வேட்பாளர்களாகவும் பிரதிநிதிகளாகவும் உட்படுத்த வேண்டும் என்கின்ற கோரிக்கையுடன் சகல அரசியல் கட்சிகளையும் சந்தித்து எடுத்துக் கூறினர். ஆனால் அதை ஒருவரும் சட்டை செய்யவில்லை. இவர்கள் சமாதான முன்னெடுப்பில் பல சாதனைகளை ஈட்டியிருந்தும் அவர்களைக் கணக்கிலெடுக்காது அதிகூடிய வாக்குகள் பெறும் முதல் பத்து அரசியல் கட்சிகள்தாம் இணக்கப்பேச்சுக்கள் மேசையில் அமரலாம் என அரசாங்கம் தீர்மானித்தது. அரசாங்கம் பேச்சுக்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடைமுறைகளை அறிவித்தபோது பெண்கள் கூட்டமைப்பு தாமும் ஒரு அரசியல் கட்சியாக மாறத் தீர்மானித்தனர். சுமார் 150 பெண் பிரதிநிதிகள் அடங்கிய கருத்தரங்குகளை கிரமமாகக் கூட்டி தமது அரசியல் கட்சியின் அடிப்படைக் கொள்கைச் சித்ததாந்தங்களை வகுத்தனர். சமத்துவம், மனித உரிமைகள் மதிக்கப்படுதல், சகல குழுக்களும் உட்படுத்தப்படுதல் என்பனவே இக்கட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளாயின.

பெண்கள் கூட்டமைப்பு தாம் நாடு முழுவதும் சுமார் 10,000 வாக்குகளைப் பெற்றால் தமக்கு மேலதிகமான இரு பிரதிநிதிகள் தரப்படலாம் என்று கணித்து இந்த அளவு வாக்குகளைப் பெற வியூகங்களை வகுத்தனர். ஆனால் தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொள்ளவோ இவர்களிடம் நிதிகள் இருக்கவில்லை. உள்ளூர் கல்லூரிகள் முதல் அச்சகம் நடத்துபவர்கள் ஈறாக பல மட்டங்களில் ஆதரவாளர்கள் இலவசமாக வழங்கிய உதவிகளினால் தேர்தல் பிரச்சாரங்களும் வெற்றிகரமாக முடிவுற்றன. ஆறு வார காலத்தில் தேசிய அளவில் 1 வீத வாக்குகளைப் பெற்று பெண்கள்

கூட்டமைப்பு தனக்கென இரு பிரதிநிதிகளைப் பேச்சுவார்த்தை மேடையில் ஈட்டிக்கொண்டது.

சமாதானப் பேச்சுக்களில் பெண்கள் கூட்டமைப்பு ஒன்றே தங்கள் பிரதிநிதித்துவத்தில் கத்தோலிக்க (தேசியவாதிகள்) தரப்பினரையும் புரொட்டஸ்தாந்திய (யூனியன்வாதிகள்) தரப்பினரையும் கொண்டிருந்தனர். இப்பிரதிநிதிகள் கூட்டமைப்பின் பகிரங்கக் கூட்டங் களில் தெரிவு செய்யப்பட்டவர்களாவார்கள். இவர் களுக்கு ஆலோசனை வழங்கும் பத்துப் பெண்கள் அடங்கிய குழுவினர், அதே போலவே பகிரங்கமாகத் தெரிவு செய்யப்பட்டவர்களும் இரு தரப்பினரையும் சமமாகப் பிரதிநிதித்துவம் செய்தவர்களாயும் இருந்தார் கள். ஆரம்பத்தில் பேச்சுக்களின் முறைவழி பற்றிய கலந்துரையாடல்களில் பங்குபற்றிய இவர்கள் நாளடைவில் வன்முறைகளினால் பாதிக்கப்பட்டவர் களைப் பற்றியும் மீளிணக்கத்தைப் பற்றியும் பல காத்திரமான அறிக்கைகளையும் நிலைப்பாடுகளையும் வெளியிட்டு பேச்சுக்களில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கினார்கள். இந்த ஒவ்வொரு நிலைப்பாடும் கருத்தும் இவர்களது மாதாந்த பொதுக்கூட்டங்களில் விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்ட கருத்துக்களாக இருந்தன.

இவ்வாறு ஒரு வருடம் இயங்கியபின் பெண்கள் கூட்டமைப்பு தன்னை ஒரு முழுமையான அரசியல் கட்சியாக வடிவமைத்துக்கொண்டது. அதற்கான யாப்பொன்றினைத் தயாரித்து தமக்கென ஒரு செயற்குழுவையும் வருடாந்த ரீதியில் தெரிவு செய்து கொண்டனர்.

1998ம் ஆண்டு பெல்ஃபாஸ்ட் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இது மக்களின் கருத்துக் கணிப்பில் அங்கீகாரம் பெற்ற பின்னரேயே சட்ட மாக்கப்படலாம் என்ற காரணத்தினால் பிற அரசியல் கட்சிகளுடன் பெண்கள் கூட்டமைப்பும் மக்கள் மத்தியில் இந்த ஒப்பந்தத்துக்கு ஆதரவான பிரச்சாரங்களை ஆரம்பித்தது. பிற கட்சிகள் செய்யாத வகையில் சிவில் சமூகத் தலைவர்களை அணுகி அவர்கள் மத்தியில் மிக நெருக்கமாகப் பிரச்சாரம் செய்த ஒரே அமைப்பு பெண்கள் கூட்டமைப்பு என்றே சொல்ல வேண்டும். சகல ஊர்களிலும் இந்த ஒப்பந்தத்தைப் பற்றிய விவாத மேடைகளை இவர்கள் ஏற்பாடு செய்வதை குறிப்பிட்டுச் சொல்லலாம். இதன் பயனாக வட அயர்லாந்தில் மக்கள் சபை உருவாக்கப்பட்டு அது சகல குழுக்கள் மத்தியிலும் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் பெண்கள் கூட்டமைப்பு பங்களித்ததனால் வந்த நன்மைகளோ பலப்பல. முதலாவதாக, பாதிப்புற்றோருக்கான நிவர்த்தி நடவடிக்கைகளைப் பற்றிப் பேசியவர்கள் இவர்கள்தான். இந்த நடவடிக்கைகளுக்கான திட்டம் இருந்திருக்காவிட்டால் பெல்ஃபாஸ்ட் ஒப்பந்தம் மக்களால் அதே அளவில் அங்கீகரிக்கப்பட்டிருக்காது என அரசியல் அவதானிகள் கூறுகின்றனர். அந்த அங்கீகாரம் இருந்திருக்காவிடில் இந்த சமாதான ஒப்பந்தம் நிறைவேறாமல் போயிருக்கும்.

அடுத்து, பெண்கள் கூட்டமைப்பு வட அயர்லாந்து மக்கள் சபையில் ஒரு சிவில் சமூகத்துக்கான தளம் உருவாக்கப்படவேண்டும் என சிபாரிசு செய்து பரந்துபட்ட மக்கள் பங்களிப்பை உறுதி செய்தது. பல சமயங்களில் ஒப்பந்தம் ஆபத்தான கட்டங்களை அடைந்தபோது சிவில் சமூகத்தினரின் ஆதரவைத் திரட்டுவதன் மூலம் அது உடையாமல் பாதுகாத்தனர். எல்லாவற்றுக்கும் மேலாக அரசியலில் பெண்கள் பங்குகொள்வது அவசியம் என்பதை சகலரும் கவனிக்கும் அளவுக்கு ஒரு தேவையாக தேசிய அளவில் முன்வைத்தனர். இதன் பயனாக, வட அயர்லாந்து மக்கள் சபை தனது அரசாங்கத்துக்கான அமைச்சர்களை நியமித்தபோது பத்து பேர்களில் இருவர் பெண்களாக இருக்கக் காணப்பட்டனர்.

அது மட்டுமன்றி பெண்கள் கூட்டமைப்பினர், அரசியல் ஏதோ கைதேர்ந்த அரசியல்வாதிகள் மட்டும்தான் ஈடுபடக்கூடிய விஷயம் என்ற படிமத்தை தகர்தெறிந்தனர். சாதாரண மக்களும் ஈடுபடக்கூடிய ஈடுபடவேண்டிய நடவடிக்கைதான் அரசியல் என்பதை தெளிவாக உணர்த்தினர். வட அயர்லாந்தின் அரசியல் கலாசாரத்தை மாற்றியதில் அதன் பெண்கள் கூட்டமைப்பிற்கு பெரும் பங்கு உண்டு.



## பிலிப்பைன்ஸ்

பிலிப்பைன்ஸ் நாடு 90 வீதம் கிறிஸ்தவர்கள் வாழும் நாடு. பல தசாப்தங்களாக கிளர்ச்சிகளையும் வன்செயல்களையும் கண்டு வந்தது. இப்பிரச்சினைகள் கம்யூனிஸப் புரட்சிவாதிகளாலும், தனிநாடு கோரும் முஸ்லிம் அமைப்புக்களாலும், மக்கள் பிலிப்பைன்ஸின் இராணுவ ஆட்சிக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்ததன் பயனாகவும் நிகழ்ந்தன. 1992ம் ஆண்டு புதிதாகத்

தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ராமொஸ் சமாதான முன்னெடுப்புக்களை ஆரம்பித்தார். நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை உறுதிப்படுத்துவதே அவர் நோக்கமாக இருந்தது.

1992 செப்டம்பர் மாதம் பரந்துபட்ட அமைப்புக் களின் பங்களிப்புடன் சகல இயக்கங்களுடனும் பேச்சுக்களை நடத்துவதை ஏதுவாக்கும் தேசிய ஒருமைப்பாட்டு ஆணைக்குழு ஒன்றை அவர் நிறுவினார். இவ்வாணைக் குழுவின் பணிநோக்கு 'நீதியானதும் முழுமையானதுமான நிலைபேறான சமாதானத்தைத் தோற்றுவித்தல்' என்பதாக இருந்தது. இதற்கு ஆறு இலட்சம் டொலர்களையும் வழங்கினார். பல்கலைக்கழகத்தைச் சார்ந்த ஒரு பேராசிரியர் இக்குழுவின் தவிசாளராகவும், ஒரு ஆயர், தேசிய கிறிஸ்தவ சபையின் தலைவர், நீதி மற்றும் பாதுகாப்பு அமைச்சுக்களின் செயலாளர்கள் போன்றோர் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களாகவும் நியமிக்கப் பட்டனர். இவர்களைத் தவிர இடதுசாரிகளோடு இணக்கம் கொண்டவர்கள் இருவரும் இளைப்பாறிய இராணுவ உத்தியோகத்தர்களாக இருவரும் கூட நியமிக்கட பட்டனர்.

தேசிய ஒருமைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு நிபுணத்துவ ஆலோசனைகள் வழங்க ஒரு குழுவும் பொதுவான ஆலோசனை சபையும் கூட நியமிக்கப் பட்டது. பொதுவான ஆலோசனை சபையில் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் தூதுவர்கள், முன்னாள் கம்யூனிஸத் தலைவர்கள், முஸ்லிம் மதத் தலைவர்கள், முன்னாள் செனட்டர்கள் எனப் பல தரப்பினரிடமிருந்தும் பிரதிநிதித்துவம் பெறப்பட்டது.

தேசிய ஒருமைப்பாட்டு ஆணைக்குழுவானது பின் வரும் கேள்விகளுடன் சமூகத்தின் பல தரப்பினரையும் அணுகியது:

1. குறிப்பிட்ட ஆயுதப் போராட்டம் ஆரம்பிப்பதற் கான காரணங்கள் எவை என்று அவர் நினைக்கின்றார்

2. அரசாங்கமும் இயக்கங்களும் இந்தத் தொடரும் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர என்ன செய்ய வேண்டும் என நினைக்கின்றார்

3. சமாதான முறைவழியில் கையாளவேண்டிய முக்கிய விடயங்கள் எவை என்று அவர் நினைக்கின்றார்

4. சமாதானத்தை முன்னெடுக்க அவருடைய குழு என்ன செய்யலாம் என்று நினைக்கின்றார்.

இத்தனை கேள்விகளுடனும் சமூகத்தினரை அணுகி அவர்களின் ஆலோசனையைக் கேட்பதற்குத் தேவையான நடைமுறைகளைத் தொகுத்து அதனை ஒரு கைநூலாக ஆணைக்குழு வெளியிட்டது. இதன் செயலகம் இந்நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கு உதவியாக அச்செயலகத்துக்கே ஒரு ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டது. இந்த ஆலோசனைக்குழுவின் அங்கத்தவர்கள் அந்நாட்டின் கத்தோலிக்க புரொட்டஸ் தாந்திய ஆயர்களையும், உள்ளூராட்சி மன்றத் திணைக்களத்தினரையும், உள்ளூராட்சிக்கான தேசிய இணைப்பாளர் சபையினரையும் உள்ளடக்கியதாக இருந்தது. ஒவ்வொரு பிராந்தியத்துக்கும் ஆலோசனைக் கூட்டங்களை ஏற்பாடு செய்யும் குழு ஒன்று நியமிக்கப்பட்டது. இந்தப் பிராந்தியக் குழு ஒவ்வொன்றிலும் கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ திருச்சபைகளினால் சிபாரிசு செய்யப்பட்ட இரு அங்கத்தவர்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப் பட்டார்கள். இவர்கள் ஆணைக்குழுவின் பேச்சுக்களும், செவிமடுத்தல் அரங்குகளும் நடைபெறும் முறைகளைக் கண்காணித்து வந்தனர். பிராந்தியக்குழுவின் கூட்ட ஏற்பாட்டாளர்கள் மக்கள் அமைப்புக்களிலிருந்தும், அரசுசாரா அமைப்புக்களிலிருந்தும், மத நிறுவனங்களி லிருந்தும் பிரதிநிதிகள் பங்கு கொள்வதை உறுதிப் படுத்தினார்கள்.

அதன்படி இந்த ஆணைக்குழு முக்கிய இயக்கத் தலைவர்களையெல்லாம் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தியது. அவர்கள் அரசாங்கத்துடன் முன்னர் செய்து கொண்ட சிறிய ஒப்பந்தங்கள் எல்லாவற்றையும் பரிசீலித்தது. அவர்களுக்கு பாதுகாப்பாக பிரயாணம் செய்யும் அனுமதிப் பத்திரங்களை வழங்கி, அடுத்தாக என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதை அரசாங்கத்துக்கு பரிந்துரை செய்தது. ஊர் ஊராகச் சென்று மக்கள் குழுக்களைச் சந்தித்தது. பெண்கள் குழுக்கள், சிவில் சமூகக் குழுக்கள், கூட்டுறவு அமைப்புக்கள், ஆய்வாளர்கள், ஆசிரியர்கள், விவசாயி கள், மீனவர்கள், பழங்குடி மக்கள், நகர்ப்புற ஏழைகள், கலைஞர்கள், தொழிற்சங்கங்கள், ஊடகவியலாளர்கள், வர்த்தகத் துறையினர், மத குருமார்கள், சமூக நிறுவனங்கள், அரசியல் நிறுவனங்கள் போன்ற பல அமைப்புக்களையும் சந்தித்தது. ஒவ்வொரு சந்திப்பும், அறிக்கைகளின் அளிக்கைகளும் பின் குழுப் பட்டறை களுமாக ஏற்பாடு செய்யப்பட்டது. இவ்வாறாக 71

மாகாணச் சந்திப்புக்களும். 14 பிராந்திய கூட்டங்களும் நடைபெற்றன. இதில் ஒரு மாகாணமோ அல்லது ஒரு பிரதேசமோ விட்டுவைக்கப்படவில்லை. இதன் முடிவில் சமாதானம் உருவாக்கப்படுவதற்கான முக்கிய விடயங்கள் எனப் பின்வரும் விடயங்களை ஆணைக் குழு இனம் கண்டது.

- தேர்தல் சீர்திருத்தங்கள்
- மனித உரிமைகள்
- தனியார் இராணுவப் படைகளைக் கலைப்பது
- நீதி பரிபாலனத்தை உருவாக்குவது
- சமூக பொருளாதார சீர்திருத்தங்களைக் கொண்டு வருவது
- சூழல் பாதுகாப்பு
- ஆயுத நடவடிக்கைகளினால் பாதிப்புக்குள்ளா னவர்களுக்கு உதவி செய்வது
- சுயாட்சியும் கலாசாரப் பாதுகாப்பும்
- தேசத்தை ஒற்றுமைப்படுத்தும் பொருளாதார அம்சங்கள்
- பொது மன்னிப்பு

இவையெல்லாவற்றையும் தொகுத்து 1993 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 'சமாதானத்திற்கான ஆறு பாதைகள்' என்று தலைப்பிடப்பட்ட ஒரு அறிக்கையை சமர்ப்பித்தது. இது பிலிப்பைன்ஸ் நாட்டின் சமாதானப் பாதைக்கு வழிகாட்டும் செந்நெறியாக விளங்குகின்றது என்றால் மிகையாகாது. சமாதானத்திற்கு ஆறு பாதைகள் உள்ளன. இவையெல்லாம் ஒரே நேரத்தில் சமாந்திரமாக பயணம் செய்யப்படவேண்டியவை என ஆணைக்குழு அரசாங்கத்திற்கு வலியுறுத்தியது.

☞ **முதல் பாதை** - ஆயுதப் போராட்டங்களினதும் சமூகக் கிளர்ச்சிகளினதும் அடிப்படைக் காரணிகளைக் களையும் சமூக பொருளாதார அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல்.

☞ **இரண்டாம் பாதை** - தேசிய மட்டங்களிலும் உள்ளூர் மட்டங்களிலும் தொடர்ந்து மக்களின் அபிப்பிராயங்களை உள்வாங்குவதன் மூலம் சகலரையும் வலுவுணரச் செய்து ஒத்திசையப் பண்ணும் முறைவழியைத் தாபித்தல்.

☞ **மூன்றாம் பாதை** - ஆயுதக்குழுக்களுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துதல்

☞ **நான்காம் பாதை** - மீளிணக்கத்தினையும், ஆயுதந் தாங்கிய இயக்கத்தினரை சமூகத்துடன் மீள இணைத்துக் கொள்ளும் திட்டத்தினையும், யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் புனர்வாழ் வினை மேற்கொள்ளும் திட்டத்தினையும், செயற் படுத்தல்.

☞ **ஐந்தாம் பாதை** - மக்களைப் பாதுகாத்தலும் முரண்பாடுகளை முகாமைத்துவப்படுத்தலும்

☞ **ஆறாம் பாதை** - சமாதானத்துக்குத் தேவையான நேர்நிலையான சூழலைப் பேணுதல்.

தேசிய ஒருமைப்பாட்டு ஆணைக்குழுவின் அறிக்கையானது சமூக சீர்திருத்தங்களுக்காக ஆயுதந் தூக்கிய இயக்கங்களின் போராட்டங்களை நியாயப் படுத்திய அறிக்கை என்று கூறலாம். ஜனாதிபதி ராமொஸ் இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டு அதனைத் தனது சமாதானத் திட்டத்தின் அத்திவாரமாக உபயோகித்தார். தேசிய ஒருமைப்பாட்டு ஆணைக் குழுவின் நடைமுறைகளினால் நாடு முழுவதும் நம்பிக்கை உருவாக்கப்பட்டிருந்தது. அதன் பலத்தில் 1995ம் ஆண்டு அரசாங்கம் இராணுவக் கிளர்ச்சி யாளர்களுடன் ஒப்பந்தம் வரைந்தது. 1996ம் ஆண்டு ஒரு கிளர்ச்சிவாதக் கட்சியுடனும் 1997ம் ஆண்டு முஸ்லிம் பிரிவினைவாதிகளுடனும் ஒப்பந்தம் வரைந்தது. இன்னொரு எதிரணியாகிய தேசிய ஜனநாயக முன்னணியுடன் பேச்சுக்கள் ஆரம்பித்தன, ஆனால் 1998ல் ஜனாதிபதி ராமொஸின் பதவிக்காலம் முடி வுற்றதால் ஒப்பந்தம் எதுவும் கைச்சாத்திடப் படவில்லை.


ஆயினும் தேசிய ஒருமைப்பாட்டு ஆணைக் குழுவின் நடவடிக்கைகள் எல்லாமே வெற்றிகரமாக இருக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். சில இடது சாரிக்குழுக்கள் இதன் கூட்டங்களைப் பகிஷ்கரித்தன. தேசிய ஜனநாயக முன்னணி தொடர்ந்து ஆணைக்குழு பற்றிய தமது அவநம்பிக்கையினைத் தெரிவித்த வண்ணமே இருந்தது. குழு எடுத்துக் கூறிய பொது மன்னிப்பும், போராளிகளை சமூகத்துக்குள் உள்வாங்கும் திட்டமும், நியாய பூர்வமான ஆயுதப் போராட்டத்தினை வேரறுக்க சிபாரிசு செய்யப்பட்ட விடயமாகத்தான் அது நோக்கிற்று. சுயாட்சிக்குப் போராடிய முஸ்லிம் தலைவர்கள் ஜனாதிபதி ராமொஸ் இன்னும் சுய நிர்ணய உரிமையை ஆதரிக்கவில்லை

என்று அதிருப்தி தெரிவித்தன. அத்துடன் உள்ளூராட்சி மன்றங்கள் போதுமான முறையில் பங்களிக்கப்பட விடவில்லை என்பதால் தீர்வுகளின் செயற்பாட்டில் இவை தமது பங்களிப்பை நல்காது போய் விடுமோ என்ற அச்சம் தோன்றலாயிற்று.

வேறு சிலர் ஆணைக்குழுவின் படிநிலையாக அமைக்கப்பட்ட குழு முறைகளை ஒரு சலிப்புத் தரும் முறையாகப் பார்த்தனர். அடுக்கடுக்காக ஒவ்வொரு நிலைகளிலும் ஒரே மாதிரி குழுக்கள் அமைக்கப்பட்டு அவை கிட்டத்தட்ட ஒரே விடயத்தைக் கலந்துரையாடியது போல் தோன்றியது. முன்பு தொடக்கம் ஒவ்வொரு முறையும் திரும்பத் திரும்பச் சொல்லப்பட்ட பிரச்சினைகளே ஆணைக்குழுவின் கூட்டங்களிலும் பேசப்பட்டதாகக் குற்றஞ் சாட்டினர் பலர். பல கலந்துரையாடல்கள் சமாதானத்திற்குத் தொடர்பில்லாத குடும்பப் பிரச்சினைகள், நீலப் படங்கள் போன்ற விடயங்களிலும் போய் சிக்குண்டது காணப்பட்டது. மேலும், ஜனாதிபதி ராமொஸ் பதவி இழந்த பின்னர் வந்த புதிய ஜனாதிபதிகள் ஜோசப் எஸ்டராடா மற்றும் குளொரியா அரோயோ போன்றோரின் நிர்வாகங்கள் ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு செவிசாய்க்காது போயின. அரசுக்குள் இருந்த இராணுவ நலன்களும் வர்த்தக நலன்களும் அதேபோல் ஆணைக்குழுவின் சிபாரிசுகளை புறந்தள்ளின.

எது எப்படியிருப்பின், ஆணைக்குழுவின் நடவடிக்கை சமாதானத்தைப் பற்றிய மெய்நிலையுணர்வினை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியதென்பதே உண்மையாகும். ஆட்சியமைப்பில் மக்களை ஆலோசனை கேட்பதை ஒரு வழக்கமாக ஆணைக்குழு ஆக்கிவிட்டது. தவிரவும் அது தேசிய அளவிலான வலையமைப்புக்களையும் முடுக்கி விட்டது. இவ்வலையமைப்புக்கள் இன்றும் தொடர்ந்து அரசாங்கங்களுடன் வெவ்வேறு மட்டங்களில் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டு இருக்கின்றன.

---



## பயிற்சித் தொடர் 3

### தொடர்பாடல் திறன்களைப் பெற்றுக் கொள்ளல்

**நோக்கம்** : தமது நிறுவனத்திலும் சமூகத்திலும் முரண்பாடுகளை ஆக்கபூர்வமான முறையில் எதிர்கொள்ளத் தெரிந்த சமாதான ஆர்வலர்கள்

**இலக்குக்குழு** : முன்னைய பயிற்சித் தொடர்களுக்கு சமுகம் தந்தவர்கள்

**உள்ளடக்கம்** : ஆர்வமாகச் செவி மடுத்தல், தெளிவாகப் பேசுதல், ஆக்கபூர்வமாக எதிர்கொள்ளல், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அணுகுமுறையை ஊக்குவித்தல் போன்ற திறன்களை பயின்றும் செய்தும் பார்த்தல்.

**தேவையான கருவியுபகரணங்கள் :**

OHP வெண்பலகை, டீமை தாள்கள், வண்ணப் பேனாக்கள், நான்கு பிரச்சினைக் கதைகள்.

**காலம்** : 2 நாட்கள்

## நாள் 1

### அமர்வு 1

மாலை 6.00 - 8.30 மணி வரை

**அறிமுகம்**

ஒவ்வொருவரும் தங்கள் வாழ்க்கை மரத்தை ஒரு தாளில் வரையவேண்டும். இதன் வேர்கள் தான் எங்கிருந்து வந்தவர் என்பதையும் தான் இன்று தானாக உருவாகியதில் செல்வாக்குச் செலுத்திய கருத்துக்கள் /விடயங்கள் / நிறுவனங்கள் எவை என்பதையும் குறிக்கும்.

இதன் தண்டு இன்றைய காலகட்டத்தில் அவரது வாழ்க்கையின் கட்டமைப்பை - அவரது உத்தியோகம், குடும்பம், அவர் அங்கத்தவராக இருக்கும் நிறுவனங்கள், இயக்கங்கள் என்பதையும் குறிக்கும்.

இதன் இலைகள் அவர் சாதனைகளைக் குறிக்கும். பழங்கள் அவர் சாதனைகளின் விளைவுகளைக் குறிக்கும். உ.ம்: பாலர் பாடசாலையை ஒழுங்கமைத்தது சாதனை, அதாவது இலை. அதனால் கிராமத்தில் கல்வியைப் பற்றிய அக்கறை முன்னேறி பாடசாலைகளின் இடைவிலகல் பிரச்சினை குறைந்தது விளைவாகும், அதாவது அதன் பழங்களாகும்.

மரத்தின் தளிர்களும் மொட்டுக்களும் அவரது எதிர்கால நம்பிக்கைகளைக் குறிப்பதாகும்.

இதன் முடிவில் ஒவ்வொருவரும் முழுக்குழுவுக்கும் தங்களைப் பற்றி விளக்குதல்.

## நாள் 2

காலை 9.00 - 10.00 மணி

**உள்ளடக்கம்**

உணர்வுபூர்வமாக செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், ஆக்கபூர்வமாக எதிர்கொள்ளல், மீள உருவகித்தல், தீர்வு காணும் அணுகுமுறையை ஊக்குவித்தல், மாற்று வழிகளை முன்வைத்தல் போன்றவற்றை விளக்கல்.

**செய்முறை**

OHP யில் காட்டி விளங்கப்படுத்தல்.

கலந்துரையாடல்

### அமர்வு 2

10.00 - 11.15 உணர்வு பூர்வமாகச் செவிமடுத்தல்.

**உள்ளடக்கம்**

மற்றவர்கள் எதிர்க்கருத்தைக் கூறும்போது அவர்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருப்பது கடினம் என்று உணர்தல்.

**செய்முறை**

பயிலுனர் இருவர் இருவராகப் பிரிதல். அவர்கள் தங்களுக்குள் கலந்துரையாடி ஒருவர் மற்றவருக்குப் பிடிக்காத அல்லது ஒத்துப்போகாத விடயத்தைப் பற்றி விபரிக்கவேண்டும். கேட்டுக் கொண்டிருப்பவர் அவர் கூறியதை அவர் திருப்தியுறும் அளவுக்கு சுருக்கமாகத் திரும்பக் கூறிவிட்டுத்தான் தன்னுடைய பதிலைக் கொடுப்பார்.

இலகுபடுத்துனர் பின்னர், எதிர்க்கருத்தைச் செவிமடுத்தலில் பிரச்சினைகள் என்னென்ன தோன்றின என்று கேட்டு கலந்துரையாடி அவற்றை நிரல்படுத்துவார். பின் இன்னும் திறமையாகத் தொடர்பாட என்ன யுக்திகளைக் கையாளவேண்டும் என்று கேட்டு அதையும் எழுதுவார்.

*11.15 - 11.30* தேநீர்

## அமர்வு 3

*11.30 - 1.00* மீள உருவகித்தலும் ஆக்கபூர்வமாக எதிர்கொள்ளலும்

### உள்ளடக்கம்

ஒரே விடயத்தை எப்படி மீள உருவகிக்கலாம் என்றும் ஆக்கபூர்வமான முறையில் எப்படிச் சொல்லலாம் என்பதனையும் செய்து காட்டுதல்

தீர்வுகளைப் பெறுவதற்கு உதவியாக எப்படி ஒரு கலந்துரையாடலை வழிநடத்தலாம் என்று கற்றுக் கொள்ளல்

### செய்முறை

ஒரு விடயத்தை சொன்ன முறையினாலே சண்டைகள் வந்த உதாரணங்களை நோக்கல். பங்குபற்றுனர் தங்கள் அனுபவங்களைச் சொல்ல அவற்றை எல்லோரும் ஆராய்ந்து கலந்துரையாடுதல்.

அவர்கள் ஆராய்வதற்கு உதவியாக சில வசனங்கள் கொடுக்கலாம். அவர்கள் அந்த வசனங்களை எவ்வாறு ஆக்கபூர்வமாகச் சொல்லலாம் என்பதைச் செய்து காட்டுவார்கள். சிந்தனைக் கிளறல்.

OHP யில் காட்டி விளக்குதல்

*1.00 - 2.00* மதிய உணவு

## அமர்வு 4

*2.00 - 6.00* தீர்வு காணும் அணுகுமுறைகளை ஊக்குவித்தல்

### உள்ளடக்கம்

வித்தியாசமான பின்னணிகளில் தோன்றும் முரண்பாடுகளுக்கு தகுந்த தொடர்பாடல் முறைகளினாலேயே எவ்வாறு தீர்வு காணலாம் என்று செய்து பார்த்தல்.

### செய்முறை

பயிலுனர்கள் நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு குழுவுக்கும் நான்கு கதைகள் கொடுக்கப்படும். அந்தக் கதைகளில் வரும் இரு பகுதியினருக்கிடையில் இணக்கத்தினைக் கொண்டு வரும் தொடர்பாடல் யுக்திகள் என்னவாக இருக்கலாம் என்பதை ஒவ்வொரு குழுவும் செய்து காட்டவும் ஏனையோர் அதைப் பற்றிய விமர்சனங்களையும் மாற்று வழிகளையும் கூறுவர்.


## நாள் 3

காலை 9.00 - 12.00 மணி

மீளாய்வு

பயிலுனர்கள் முரண்நிலை தீர்ப்பதற்கான தொடர்பாடல் திறன்களைத் தாம் கற்றுக் கொண்டிருந்தபோது தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட ஏதும் முரண்பாடுகளைப் பற்றி ஞாபகங்கள் ஏற்பட்டிருக்கும். ஒவ்வொருவரும் அப்படியான ஒரு சம்பவத்தைக் கூறி அன்று எப்படி அதைக் கையாண்டார் என்பதையும், இன்று அதே சம்பவத்தை எப்படிக் கையாளுவார் என்பதையும் தெரிவிக்க வேண்டும்.

## பயிற்சிக்கு உபயோகிக்கப்படும் கருவிகள்



### 1. தொடர்பாடலைப் பற்றிய அளிக்கை :

**உணர்வுபூர்வமாக செவிமடுத்தல் என்பது,**


- செவிமடுத்தலுக்காகக் கேட்பதேயொழிய பதில் சொல்வதற்காகக் கேட்பதல்ல
- சொற்களுக்குப் பின்னாலுள்ள அர்த்தங் களை விளங்கிக் கொள்ளுவது
- வசனங்களுக்குப் பின்னாலுள்ள உணர்வு களைப் புரிந்து கொள்ளுவது
- சொல்லுபவருடைய கருத்து விளங்கி விட்டது என்று அவருக்கு அறியத் தருவது

**தெளிவாகப் பேசுதல் என்பது,**

- நிலைமையைத் தான் எவ்வாறு விளங்கிக் கொண்டிருக்கின்றார் என்று மற்றவருக்குத் தெரிவிப்பது
- மற்றவரைச் சாட்டுவதை விட்டு தன்னுடைய உணர்வுகளையும் கூறுவது
- கோரிக்கைகள் விடுப்பதை விட்டு தன்னு டைய விருப்பங்களைத் தெரிவிப்பது

**தீர்வு காணும் அணுகுமுறையை ஊக்குவித்தல் என்பது,**

- மற்றவர்களுக்கும் எம்மைப் போலவே பயங்களும் தேவைகளும் உண்டு என்பதை உணர்வது
- மற்றவர்களிடையேயும் மாற்று அபிப்பிராயமுள்ளவர்கள் இருக்கலாம் என்பதை நினைவில் கொண்டு அவ்வாறான அபிப்பிராயங்களைக் கொண்டவர்கள் யார் யாரென்று ஆராய்தல். அவர்களை வெவ்வேறாக அணுகுதல்.



**ஆக்கபூர்வமாக எதிர்கொள்ளல் என்பது,**

- சொல்லப்பட்ட கருத்தையும் சொல்லிய வரையும் வேறுவேறாகப் பிரித்துப் பார்ப்பது
- ஆமோதிக்கக்கூடிய விடயங்களை ஆமோதித்தும் நிராகரிக்க வேண்டிய விடயங்களை நிராகரித்தும் ஒரு நிலைப்பாடு எடுப்பது
- அதே போல், தனது கருத்தில் மற்றவர் உறுதியாக நிற்பாரேயெனில் அதனையும் நடுநிலைமையோடு ஏற்றுக் கொள்வது.

**கருத்துக்களை மீள உருவகித்தல் என்பது**

- தகவல்களையும் உணர்வுகளையும் ஒரு வசனத்தில் ஒருங்குசேர்ப்பது
- உணர்வுகளுக்கும் தகவல்களுக்கும் இடையிலான வேறுபாட்டை கேட்பவர்களுக்கு உணர்த்தும் நோக்கம் கொண்டது.
- நிலைப்பாட்டைவிட பயங்கள், தேவைகள் போன்றவற்றின் அடிப்படையிலான நலன்களை விளக்குவது
- கடந்த காலத்தில் நிகழ்ந்தவற்றைப் பற்றித் தொடராது, எதிர்காலத்தில் தவிர்க்க வேண்டிய நிலைமைகளைப் பற்றிப் பேசுவது
- பாதிக்கப்பட்டவர்கள் என்று நினைத்துக் கொண்டிருப்பவர்களை, அவர்கள் தங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடிய தெரிவாளர்கள் என நம்ப வைப்பது.

**தீர்வுகளை நோக்கிப் போவதற்கு கலந்துரையாடும்பொழுது அதனை நெறிப்படுத்த உதவும் கேள்விகள்**

- உமது குறிப்பிட்ட தேவை என்ன? ஏன் இது உங்களுக்கு முக்கியமானது? நேரடியாக நீர் அந்த குறிப்பிட்ட தேவையைக் கேட்க முடியுமா?
- மற்றவருக்கு என்ன தேவையாக இருக்கின்றது என்று உமக்குத் தெரியுமா? ஏன் அது அவருக்கு இவ்வளவு முக்கியமாக இருக்கின்றது என்று நீர் நினைக்கிறீர் ? நீர் அதில் மனஸ்தாபப் பட்டாலும் அவர் ஏன் அதை வேண்டுகிறார் என்று உமக்குத் தெரியுமா?
- அவருடைய உணர்வுகள் எப்படி இருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியுமா?
- இந்தப் பிரச்சினையைத் தீர்க்காவிட்டால் உமக்கு ஏதாவது நட்டம் உண்டா? தீர்ப்பதினால் ஏற்படும் இலாபங்கள் என்ன, குறிப்பிட்டுச் சொல்லுக.
- இந்த முரண்பாடு உருவானதற்கு உமது பங்கும் ஏதாவது இருக்கின்றதா? உம்முடைய பொறுப்புக்களாலோ அல்லது நடத்தையினாலோ இது தூண்டப்பட்டிருக்கின்றதா?
- இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அவர் குறிப்பாக என்ன செய்யவேண்டும் என்று நினைக்கின்றீர்? நீர் இப்பிரச்சினையைத் தீர்க்க குறிப்பாக என்ன செய்ய முடியுமென்று நினைக்கிறீர்?
- உங்களிருவருக்கும் சாதகமான ஏதாவது தீர்வுகளுக்கான கருத்துக்கள் உம்மிடம் இருக்கின்றனவா?
- விட்டுக் கொடுப்பு செய்தால் உதவுமா? அப்படி உதவுமாயின் எதை விட்டுக் கொடுக்க நீர் தயாராக இருக்கின்றீர்?

## தீர்வுகளைப் பெறுவதற்கான கலந்துரையாடல்களில் நிகழும் சிந்தனைக் கிளறல்களை நெறிப்படுத்தும் விதம்

**(வெண்பலகை, டமை தாள்கள் உபயோகித்தல் நன்று)**

1. பிரச்சினையைப் பற்றிய பொதுவாக அங்கீகரிக்கப் பட்ட வரைவிலக்கணம் ஒன்றைப் பெறுதல்.
   - எளிமையானதாக, இலகுவில் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும்
   - யார் மீதும் பழி போடாததாக, முரண்படும் தரப்பினரது நலன்களைக் குறித்ததாக இருக்க வேண்டும்.
   - எல்லோரும் ஒத்திசைதல் வேண்டும்
2. மாற்று வழிகளைச் சிபாரிசு செய்யும் முறைகளையும் விதிகளையும் நிர்ணயித்தல்
   - புத்தாக்கமாக இருக்கவேண்டும்
   - சிந்தனையில் எழும் எந்தக் கருத்தையும் கூறக்கூடியதாக இருத்தல் வேண்டும்
   - எல்லாக் கருத்துக்களும், அவை எவ்வளவு சாத்தியமில்லாததாக இருந்தாலும், எழுதப் பட வேண்டும். ஏனெனில் ஒருவருடைய ஏறுமாறான கருத்தும் இன்னொருவருக்கு நல்ல கருத்துக்களைத் தோற்ற வைக்கலாம். எழுதப்பட்ட கருத்துக் கள் எல்லோருக்கும் தெரியும் வண்ணம் இருக்கவேண்டும்.
   - இந்த இடத்தில் மீளாய்வோ விமர்சனமோ அனுமதிக்கப்பட மாட்டாது
   - எத்தனை மாற்றுக் கருத்துக்கள் யோசிக்க முடியுமோ அத்தனையையும் பகிர்ந்து கொள்ளவேண்டும்.
3. மாற்றுத் தீர்வுகள்
   - சகல தரப்பினருக்கும் ஏற்றுக் கொள்ள முடி யாத தீர்வுகள் எவை?
   - சாத்தியமே இல்லாத தீர்வுகள் எவை?
   - சகல தரப்பினருக்கும் ஏற்றுக் கொள்ள இயலும் தீர்வுகள் ஏதேனும் இருக்கின்றனவா?
   - ஏற்றுக் கொள்ளப்படும் தீர்வுகள் பிரச்சினை யின் எந்த அளவைத் தீர்க்கும் என்று எல்லோரும் கருதுகின்றனர்? இதனுடன் என்னென்ன விடயங்களைச் சேர்ந்துக் கொண்டால் எல்லோரும் நன்மை பெற லாம்?
4. தீர்வு நடைமுறைப்படுத்தப்பட என்னென்ன வேண்டும்?
   - காலம்?
   - நிதி வளங்கள்?
   - ஆளணி?
   - இடம்?
   - ஆதரவு?
   - இன்ன மாதிரி தற்செயலாக நடந்தால் என்ன மாற்று வழிகள் உண்டு?
5. ஒப்பந்தம் வரைதல்
   - ஒத்துக்கொண்ட விடயங்களைத் தொகுக்க வேண்டும்
   - யார் எதற்கு பொறுப்பு என்று தெளிவாகக் குறிப்பிடவேண்டும்.
   - அடுத்த படிநிலைகள் என்ன என்பதைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

---

*Adapted from UNHCR training in Basic Mediation Skills and Process, March 2004


**2. மீள உருவகித்துச் சொல்வதற்கான வசனங்கள் சில**

(இவற்றைப் பயிற்சியாளர்களும் பயிலுனர்களும் கூட விரும்பிய முறையில் உருவாக்கலாம். கூடியளவு உண்மையான உதாரணங்களை எடுத்தல் மிகப் பயன்தரும்)

- "நீர் நான் நல்லா இருக்கிறது பொறுக்காமத்தானே அப்பிடிப் போய் அண்ணாட்டச் சொன்னீர்கள்? அவர் இப்ப எண்ட வீட்ட வர்றதுமில்லை. மனிசன் வீட்டில செய்து கொண்டிருந்த வேலையெல்லாம் அப்பிடி அப்பிடியே நிண்டு போச்சு.."
- "நீர் சரியான சுயநலவாதியப்பா. இந்த விசயத்தை அண்டைக்கே செய்திருக்கலாந்தானே. இது காணாதெண்டு பிறகு போய் கோள்மூட்டியும் விட்டுட்டீர் என்ன? பாரும் இப்ப எனக்கு வந்த வினையை......"
- "என்னை மதிச்சு ஒரு வார்த்தை பேசினாளா? என்ன துணிவில அவள் அப்பிடிப் போய் செய்ய லாம்? நாலு காசு தானும் சம்பாதிச்சுட்டாள் எண்டிற அகங்காரம்தானே....."
- "அவன் நான் சொல்லுவதைக் கேட்கிறானில்லை. இதனால் எனக்கு சரியான கோபம் வருகின்றது.."
- "அவனுக்கு என்னைப் பற்றியோ என்னுடைய குடும்பத்தைப் பற்றியோ கவலையில்லை. இடம் பெயர்ந்த பிறகு நான் எல்லாத்தையும் தொலைத்து காசும் இல்லாமல் இருக்கின்றேன். என்னுடைய மனைவியும் என்னை மதிக்கிறாள் இல்லை. ஆக கொஞ்சம் கோழிகளை வளர்த்து முட்டையை வித்தா காசு எடுக்கலாம். ஆனா இதுவும் எண்ட பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பி படிக்க வைக்கப் போதாது. ஏன் எண்ட மகன் அவனிண்ட கடைக்கு முன்னால இருந்து முட்டை விற்க விட மாட்டான் என்று எனக்கு விளங்கவே இல்லை..."



எவ்வளவு ஏறுமாறான கருத்தாயினும் அதனை உணர்வு பூர்வமாக செவிமடுக்க வேண்டும். விழல் கருத்துக்கூட நல்ல புதிய யுக்திகளுக்கும் கருத்துக்களுக்கும் வழி வகுக்க முடியும்.



### 3. முரண்பாடுகளைப் பற்றிய கதைகள்

☆ மட்டக்களப்புப் பிரதேசத்தில் தமிழ் அங்கத்தவர் களைக் கொண்ட ஒரு மக்கள் நிறுவனத்தின் உதவியினால் முஸ்லிம் அங்கத்தவர்களைக் கொண்ட மக்கள் நிறுவனம் ஒன்று உருவாயிற்று. இரு நிறுவனங்களும் இணைந்து பல வேலைத் திட்டங்களைச் செயற்படுத்திக் கொண்டு வந்தன. அவையிரண்டிற்குமான நிதிகள் நிதிக்கொடை நிறுவனத்தினால் தமிழ் நிறுவனத்திற்குக் கொடுக்கப்பட்டு பின் அது இரண்டுக்குமிடையில் பகிரப்பட்டது.

2002ம் ஆண்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா அரசுக்குமிடையில் கைச் சாத்திடப்பட்டது. அதன்பின் சமாதானக் கூட்டங்களும் சமாதானப் பட்டறைகளும் தென்பகுதியை நிலை கொண்ட அமைப்புக்களினால் அம்மாவட்டத்தில் ஏராளமாக நடத்தப்படலாயின. இவ்வகையான ஒரு பட்டறையில் மேற்கூறிய இரு நிறுவனங்களும் கலந்து கொண்டன. அப்பட்டறையின் நோக்கம் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் மக்கள் பங்களிப்பு எவ்வாறாக இருக்க வேண்டும் என்பதைக் குறித்திருந்தது.

ஆனால் பயிற்சி நடைபெற்றபோது இரு நிறுவனங்களினதும் அங்கத்தவர்கள், பணியாளர் களுக்கிடையே மனஸ்தாபங்கள் எழலாயின. தமிழர்கள் புரிந்துணர்வு உடன்படிக்கையை வரவேற்றனர், அதிலிருந்து விடுதலைப் புலிகள் தலைமை தாங்கும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பு தோன்றவேண்டும் என்றனர். அதிலிருந்து நிரந்தரமான சமாதானம் மலர வேண்டும் என்று விரும்பினர்.

முஸ்லிம்களோ புரிந்துணர்வு உடன்படிக்கைக்குப் பின்தான் தங்களுக்கு அச்சமான வாழ்வு தோன்றியிருப்பதாக அபிப்பிராயப்பட்டனர். விடுதலைப்புலிகள் வெளிவெளியாக முஸ்லிம் பிரதேசங்களுக்குள்ளும் நடமாடத் தொடங்கியதால் அங்கு முஸ்லிம் மக்களைக் கடத்திக் கொண்டு போய் மிரட்டிப் பணம் வாங்குவதும், விறகு வெட்டக் காட்டுக்குப் போகும் விவசாயிகளுடைய வண்டில் மாடுகளைப் பறிப்பதும் பணம் வாங்குவதும் எனப் பலவாறாக தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வந்திருப்பதாகக் கூறினார்கள். இதுதான் சமாதானம் என்றால் எங்களுக்கு சமாதானம் வேண்டாம் என்றனர். புலிகளுக்கு முழு அதிகாரங்களும் கொடுத்து விட்டால் எங்கள் கதி என்ன என்று கேட்டனர்.

முஸ்லிம்களின் கருத்துக்களைக் கேட்டதும் தமிழர் மத்தியில் சலசலப்பு உண்டாகியது. நீங்கள் சமாதானத்து க்கு எதிரா? எனவும், புலிகளுக்கு முழு நிர்வாக அதிகாரமும் கொடுக்கப்பட்டால் பிறகு இந்தப் பிரச்சினையெல்லாம் தீர்ந்துவிடும் என்றும் கூறினர். பெரும் வாக்குவாதம் மூண்டது. இந்த முரண்பாடு பட்டறையில் தீர்க்கப்படவில்லை.

பின்பு முஸ்லிம் அமைப்போ தாம் தனியே இயங்கப் போவதாக தங்கள் நிதிக்கொடை நிறு வனத்துக்கு அறிவித்தார்கள். இரண்டு நிறுவனங் களுக்கு இடையிலும் சமாதானம் உண்டாக்க முயற்சி எடுக்கப்பட்டது. "அன்று பட்டறையில் நாங்கள் சொல்ல வந்ததை சொல்ல விடவே இல்லை" என்று முஸ்லிம்கள் குறைப்பட்டனர். "நாங்கள் கதைக்கக் கதைக்க எங்களுக்கும் மேலே கதைக்கிறதும் எங்களை இருக்கச் சொல்றதுமாகத்தான் இருந்தது" என்றார்கள். அப்படியிருந்தும் அவர்கள் தமிழ் நிறுவனத்துடன் சமரசம் செய்யும் நோக்கில் "நீங்கள் வேற புலிகள் வேற எண்டு எங்களுக்குத் தெரியும்...." என்று ஆரம்பித்தார் கள். ஆனால் தமிழ் அங்கத்தவர்களோ "சீ சீ, நாங்களும் புலிகளும் ஒன்று..." என்று பதில் கொடுத்தார்கள். இந்தக் கட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கு தாம் எடுத்த நிலைப்பாடு சரியெனத் தோன்றியது. தாம் தனியாக இயங்க வேண்டும் என்கின்ற கோரிக்கையை இன்னும் ஆணித்தரமாக முன்வைத்தார்கள்.

☆ ஆண் ஒருவர் ஒரு பெண்கள் சேமிப்புச் சங்கத்திற்கு உத்தியோகபூர்வமற்ற முறையில் தலைமை வகித்து வந்தார். அப்பெண்களெல்லோரும் புதிதாகவே நிறுவனம் அமைப்பதில் ஈடுபட்டிருந்தார் கள் அவர்களுக்கு அனுபவம் இன்மை யால் சகல உத்தியேகபூர்வ விடயங்களுக் கெல்லாம் அந்த ஆண் தலைவரையே நம்பியி ருந்தனர். உதாரணமாக, பிற நிறுவனங்களுக்கும் நிதிக்கொடை நிறுவனங்களும் கூட கடிதங்கள் எழுதுவதெனில் அந்தப் பெண்களின் பெயரால் ஆண் தலைவரே கடிதங்களை எழுதுவார். பெண் கள் இடப்பட்ட கோட்டில் தங்கள் கையொப்பத்தை இட்டு விட்டுப் போவார்கள். சில சமயங்களில் கடிதத்தில் என்ன இருக்கின்றது என்பதே அவர்களுக்குத் தெரியாமல் இருந்தது.

சேமிப்புச் சங்க அங்கத்தவர்களில் ஒரு சில பெண் களைச் சேர்த்து ஒரு பெண்கள் நிறுவனத்தையும் அந்தத் தலைவர் உருவாக்கியிருந்தார். சேமிப்பு கடன் விடயங்களை சங்கம் பார்த்துக் கொண்டிருக்க பெண் களுக்கு, குறிப்பாக விதவைகளுக்குத் தேவையான திட்டங்களை இந்தப் பெண்கள் நிறுவனம் செயற் படுத்தவேண்டும் என்பதே தலைவரின் குறிக்கோளாக இருந்தது. அதன்படி அந்தப் பெண்கள் நிறுவனமும் பெண்கள் சுய ஆளுமையை வளர்க்கும் திட்டங்களில் இறங்கியது.

இந்தத் திட்டங்களின் பயனாக பெண்கள் மத்தியில் தாங்களே விடயங்களைச் செய்து முடிக்க வேண்டும் என்கின்ற உற்சாகம் பொங்கியது. அடுத்து வந்த சர்வதேசப் பெண்கள் தினத்தை விமரிசையாக ஏற்பாடு செய்ய முடிவு செய்தனர். அதற்கான நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் சுயமாக ஏற்பாடு செய்தனர். நிகழ்வுக்கு முதல் நாள் ஒலிபெருக்கியுடன் ஒரு முச்சக்கர வண்டி பிடித்து ஊரெல்லாம் சென்று இதைப் பற்றி பறைசாற்றினர். அவர்களுடைய வண்டி அறிவித்துக் கொண்டு போவதைப் பார்த்த தலைவர் உடனடியாக தனது சேமிப்புச் சங்கத்தின் அங்கத்துவத் தலைவிகளைக் கூப்பிட்டழைத்தார். "நாளைக்கு ஒருவரும் இந்த நிகழ்ச்சிக்குப் போகக் கூடாது. போகின்றவர்களுக்கு கடனுதவி கிடைக்காது.." என்று கூறிவிட்டார். பெண்கள் அமைப்பின் பிரதான ஆதரவாளர்கள் சேமிப்புச் சங்கத்திலிருந்த பெண்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். இந்தச் செய்தி பரவியதால்தான் அடுத்த நாள் நிகழ்வுக்கு பெண்கள் வரவில்லை என பெண்கள் அமைப்பினர் குறைப்பட்டுக் கொண்டனர்.

இதன்பின் தலைவருக்கும் பெண்கள் அமைப்பின ருக்கும் இடையே உறவு கசக்க ஆரம்பித்தது.

☆ ஒரு பிரபலமான சமாதான அமைப்பின் திட்டப் பணிப்பாளராக ஒருவர் பணியாற்றி வந்தார். இவர் தொண்டர் அடிப்படையிலேயே இந்தப் பதவியை வகித்திருந்தார். இதைவிட அவர் வட - கிழக்குப் பிரதேசங்களில் பல மாவட்டங்களில் மக்கள் நிறுவனங்களுடன் கிராமங்கள்தோறும் பணி யாற்றி வந்திருந்தார்.

இந்தச் சமாதான அமைப்பில் தீர்மானங்கள் எடுப்பதற்கான ஒரு ஆட்சிக்குழு இருந்தது. இக்குழுவில் கொழும்பை நிலைகொண்ட பல நிறுவனங்களிலு மிருந்து அவற்றில் உயர் பதவிகள் வகித்த பலர் அங்கத்துவம் வகித்தனர்.

ஒருமுறை ஒரு பெரிய நிதி நிறுவனம் பெரிய அளவிலான சமாதானத் திட்டத்திற்கு உதவி தருவதாக விளம்பரப்படுத்தியிருந்தது. அந்த விளம்பரத்தைப் பார்த்து திட்டப் பணிப்பாளர் அதற்கு விண்ணப்பம் போடவேண்டும் எனவும், அதற்கு வட- கிழக்கில் தான் செயற்படுத்தி வந்த ஒரு திட்டத்தையே விஸ்தரித்து முழு இலங்கைக்கும் செய்கின்ற திட்டமாகப் போடலாம் எனவும் திட்டமாட்டார். அதன்படி திட்ட முன்மொழிவு எழுதப்பட்டது. ஆயினும் நேரம் போதாமையால் திட்ட முன்மொழிவை முழுக்க வாசிக்க ஆட்சிக்குழுவுக்குப் போதிய கால அவகாசம் கொடுக்கமுடியவில்லை. திட்டம் அனுப்பப்பட்ட பின்னர்தான் அவர்களின் கையில் திட்டமுன்மொழிவு முழுதாகக் கிடைத்தது.

மூன்று மாதங்கள் சென்றன. இத்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்றும் அதற்கு பெருமளவு நிதிகளை ஒதுக்கப்படும் என்றும் சமாதான நிறுவனத்துக் குத் தெரிவிக்கப்பட்டது. உடனே அமைப்புக்குள் சில எதிர்ப்பலைகள் எழுந்தன. இந்தத் திட்டத்தை தாங்கள் சரியாகப் படிக்க முடியவில்லையென்றும், அதில் திட்டப் பணிப்பாளரின் நிறுவனம் வட- கிழக்குப் பிரதேசத்தில் திட்டச் செயற்பாட்டாளராகவும் அதனால் இத்திட்டத்தின் பயனாளியாகவும் வருவது தவறென்றும் சுட்டிக் காட்டினர். திட்ட முன்மொழிவில் அந்த நிறுவனத்தை அகற்றி விட்டு, அல்லது அதனுடன் சேர்ந்து வேறு நிறுவனங்களும் அமைப்பின் பங்காளி நிறுவனங்களாக நியமிக்கப்படவேண்டும் என்று பிரேரித்தனர்.

இதனால் முரண்பாடுகள் வெடிக்கலாயின. திட்டப் பணிப்பாளர் பிரேரணைக்கு ஒத்துக்கொள்ளவில்லை. அதற்குப் பின்வரும் காரணங்களைக் காட்டினார்:

- ஏற்கனவே நான் வட- கிழக்குப் பிரதேசத்தில் செய்து வரும் திட்டத்தினைத்தான் உங்கள் நிறுவனம் நாடு முழுவதும் செய்வதற்காக இந்தத் திட்டமுன்மொழிவில் எழுதியுள்ளேன். எனவே இது எனது யுக்தியும் திட்டமுமாகும். அதுவும் வட-கிழக்கைப் பொறுத்த வரையில் திட்டம் எனது எனதே

- ஒரு நிறுவனம் ஏதேனும் திட்டத்தினைச் செயற் படுத்துவதற்கு அத்திட்டம் அந்நிறுவனத்தின் நோக்கங்களில் ஒன்றாக இருக்கவேண்டும், அடுத்து அதைச் செய்த முன்னனுபவம் வேண்டும். இந்த இரண்டும் வட - கிழக்கில் உள்ள எந்த

அமைப்புக்கும் இல்லை. இந்த ஆட்சிக்குழுவில் எனக்கு மட்டும்தான் அந்தப் பிரதேசத்தில் பணிசெய்த அனுபவம் உண்டு. ஆகவே எனது இந்த அபிப்பிராயத்தை நீங்கள் கணக்கில் எடுத்தேயாக வேண்டும்.

ஒரு திட்டம் செயற்படுத்தப்பட அதற்கான அத்திவார நடவடிக்கைகள் இடப்பட வேண்டும். வட. கிழக்கைப் பொறுத்தவரை அந்த அத்தி வாரத்தை இட்டது எங்கள் திட்டம்தான்.

இந்த வாக்குவாதத்தில் கடைசிவரை வேறு நிறுவனங்களை வட- கிழக்கில் பங்காளி நிறுவனங் களாக்க திட்டப் பணிப்பாளர் ஒத்துக் கொள்ள வேயில்லை. தான் சுய நலன்களை முன்வைத்து இந்தத் திட்ட முன்மொழிவு எழுதிப் பணம் எடுக்கப் பார்த்ததாக ஆட்சிக்குழு தன்னை சந்தேகிப்பதால், தான் இராஜிநாமா செய்வதாகச் சொல்லி உடனடியாக அமைப்பிலிருந்து வெளியேறினார். அவர் வேறொரு அரசுசாரா நிறுவனத்தை தாபித்தார். இப்படியே உடைத்து உடைத்து ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் நிறுவனத்தை அமைத்தால் இது எங்கு போய் முடியப்போகின்றதோ என்று அங்கலாய்த்தனர் சிலர்.

☆ வட-கிழக்குப் பிரதேசங்களில் அங்குள்ள மாவட்ட அரசுசாரா நிறுவனங்களின் இணையங் களானவை விடுதலைப் புலிகள் அமைப்பிற்கு அமைவாக இயங்குவது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும். ஒரு மாவட்டத்தில் அதன் இணையத் தின் தலைவராகப் புதிதாக ஒருவர் தேர்ந் தெடுக்கப்பட்டார். உடனேயே அந்த மாவட்டத்தில் பல வருட காலங்களாக கணிசமான அளவு பெரிய மக்கள் நிறுவனங்களுடன் பணி செய்த ஒருவருடன் பொருத ஆரம்பித்தார்.


பின்னவர், அவர் பெயரை ஆ என்று வைத்துக் கொள்ளுவோம், இணைந்து பணியாற்றிய நிறுவனங் களை அத்தலைவர் உதவித் திட்டங்களிலிருந்து ஒதுக்க ஆரம்பித்தார். நிதிக்கொடை நிறுவனங்கள் மாவட்டத் தரிசிப்பிற்கு வந்து இணையத்திடம் ஆலோசனை கேட்டால், இந்த குறிப்பிட்ட நிறுவனங்கள் எல்லாம் இப்பொழுது இயங்குவதில்லை என்று கூறித் தட்டிக் கழித்தார். இவற்றுள் ஒரு நிறுவனத்துக்கு இணைய அங்கத்துவத்தைக் கூடக் கொடுக்க மறுத்தார். இதெல்லாம் போதாதென்று அவற்றையெல்லாம் அடிக்கடி அழைத்து ஆ எப்படி கடந்த 20 ஆண்டுகளாக இந்த மாவட்டத்தின் வளங்களை உறிஞ்சித் தான் பெருத்திருக்கின்றார் என்று விஸ்தாரமாக விளக்க ஆரம்பித்தார். ஆ ஏமாற்றி நிதி சேர்ப்பவர் என்றெல்லாம் பழி சுமத்தினார். இதனால் அவரை இந்த மாவட்டத்தை விட்டுத் துரத்தும் வரைக்கும் தான் ஓயமாட்டார் எனச் சூளுரைத்தார்.

இதனுடன் சேர்த்து அம்மாவட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் சிலரும் இந்த நிறுவனங்களுக்கு பணம் கேட்டுத் தொல்லை கொடுக்க ஆரம்பிக்க நெருக்குதல்கள் தீவிரமாயிற்று.

இதனால் ஆ வுக்கும் தலைவருக்கும் இடையில், அவர்கள் ஒருவரையொருவர் முன்பு அறிந்திராத போதிலும், முறுகல் நிலை ஏற்பட்டது. கொழும்பில் ஒருமுறை ஒரு கருத்தரங்கில் தலைவரைச் சந்தித்த ஆ அவர் கூறிய விடயங்களை எடுத்து சவால் விட்டார். அதற்கு தலைவரோ "விடுதலைப் புலிகள்தான் உங்களை வேரறுக்கும்படி என்னைப் பணித்தார்கள் அதன்படி செய்தேன்" என்றார். ஆ கோபமும் வெறுப்புமடைந்து அம்மாவட்டத்தில் தனது திட்டப் பணிகளை முடித்துக்கொண்டு வெளியேற ஆயத்தமானார்.



# பயிற்சி 2



## இனப்பிரச்சினையை விளங்கிக் கொள்ளல்

**நோக்கம்** : இனப்பிரச்சினை பற்றிய விளக்கம் கொண்ட சமூகம்

**உள்ளடக்கம்** : இலங்கையின் நவீன கால வரலாற்றைக் கலந்துரையாடுதல். வரலாறு வெவ்வேறு இனங்களினால் வேறு வேறாக நோக்கப்படுவதை உணர்தல். அரசியல் ரீதியான முரண்நிலைகள் நீதி நிராகரிக்கப்படுவதனாலேயே அனேகமாக ஏற்படுகின்றன என்று உணர்தல்.

**இலக்குக்குழு** : கிராம மட்ட அமைப்புக்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் 30-40 எண்ணிக்கையானவர்கள். இவர்களில் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனத்தவர்கள் சம அளவில் கலந்து காணப்படவேண்டும். யுத்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களும் இருப்பதனால் கலந்துரையாடல்கள் விசேட சிறப்பு பெறும். இவர்கள் அனேகமாக ஒருவரையொருவர் அறியாதவர்களாகத்தான் இருப்பர்.

**காலம்** : 1 நாள்

**தேவையான கருவியுபகரணங்கள் :**

அட்டைகளில் ஒட்டிய 50-60 படங்கள் (படங்களைப் பத்திரிகையிலிருந்து கத்தரித்து வைத்துக் கொள்ளலாம்.) வெண்பலகை, பேனாக்கள், டீமை தாள்கள். ஒரே நேர மொழிபெயர்ப்புக்கான ஏற்பாடுகள்.

காலை 9.00 - 11.00 அறிமுகம்

மண்டபத்தின் நடுவில் நிலத்தில் எல்லாப் படங்களையும் பரப்பி வைக்க. பயிலுனர் ஒவ்வொருவரும் அவற்றை ஆராய்ந்து சமாதானம் ஏன் தேவை என்று தான் நினைக்கின்ற காரணத்தினை அடையாளபூர்வமாக சித்தரிக்கின்ற ஒரு படத்தைத் தெரிவு செய்து அது எப்படி தன்னுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்றது என்பதை எல்லோருக்கும் விளக்க வேண்டும்.

11.00 - 11.15 தேநீர்

11.15 - 1.30 வரலாற்று வரைபைக் கீறுதல்

### உள்ளடக்கம்

இலங்கையின் கடந்த 50 ஆண்டுகளாக நடந்த முக்கிய சம்பவங்களை நினைவு கூருதல். முரண்நிலையின் வளர்ச்சியை விளங்குதல். ஒவ்வொரு இனங்களும் தமக்கெனவோர் வித்தியாசமான வரலாற்றைக் கொண்டிருப்பதை ளிளங்கிக் கொள்ளுதல்.

### செய்முறை

பங்குபற்றுனர்கள் தங்கள் தங்கள் இனங்கள் கொண்ட மூன்று குழுக்களாகப் பிரிக்கப்படுவர். ஒவ்வொரு குழுவும் இலங்கையின் வரலாற்றில் கடந்த ஐம்பது வருடங்களில் முக்கிய நிகழ்ச்சி நடந்த வருடங்களைக் குறிப்பிட்டு அம்முக்கிய நிகழ்ச்சிகள் என்ன என்பதை விளக்க வேண்டும்.

பின் மூன்று குழுக்களும் பொதுவில் தங்களது நேர வரைபை சமர்ப்பிக்கும். அவற்றின் கருத்துக்கள் கலந்துரையாடப்படும்.

1.30 - 2.30 மதிய உணவு

2.30 - 3.30 நிலைப்பாடுகளைத் தெரிவித்தல் - அப்பியாசம்

மண்டபத்தின் நடுவே ஒரு கோடு வரையப்பட்டு ஒரு பக்கம் ஆம் என்றும் மற்றப் பக்கம் இல்லை என்றும் எழுதப்படும். பயிலுனனர்கள் எல்லோரும் அறையின் பின்பக்கத்தில் நின்று கொண்டிருப்பர். அவர்களுக்கு ஒவ்வொரு வசனம் கூறப்படும். அவர்கள் அதனை ஒத்துக்கொண்டார்களெனில் ஆம் என்ற பக்கமும் ஒத்துக்கொள்ளவில்லையெனில் இல்லையென்ற பக்கமும் போய் நிற்கவேண்டும். முழுக்க ஒத்துக்கொண்டார்களெனில் ஆம் என்பதன் ஒரு அந்தத்திலும் சிறிதுதான் ஒத்துக்கொள்வார்களெனில் ஆம் என்ற பக்கத்தின் நடுவிலும், இவ்வாறு ஒவ்வொரு படிநிலையில் அவர்கள் நிற்கலாம். இல்லை என்ற பக்கத்துக்கும் அப்படியே. ஆனால் இதெல்லாம் யோசிக்காமல் உடனடியாகச் செய்ய வேண்டிய அப்பியாசமாகும். ஒவ்வொரு முறையும் பயிலுனர்கள் போய் நின்றபின்பு ஏன் அவர்கள் அந்த நிலைப்பாடு எடுத்தார்கள் என்பது அவர்களிடம் கேட்கப்படும். அவர்களின் அபிப்பிராயம் ஒருபோதும் விமர்சிக்கப்படமாட்டாது. அப்பியாசத்தைச் சுவாரசியமாக்குவதற்கு இடையிடையே நகைச்சுவையாகவும் வசனங்களைக் கூறலாம்.

கலப்புக்குழுவெனில் வசனங்களை இரு மொழிகளிலும் OHP யில் எழுதிக் காட்டலாம். மொழியெர்ப்பு தேவையில்லாமல் இருக்கும்.

3.30 - 5.00 சமாதானம் உருவாக்கப்படுவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்


| உள்ளடக்கம் | செய்முறை |
|---|---|
| நிவர்த்தி நடவடிக்கைகள் நிவாரணம், பொது மன்னிப்பு, அரசியலமைப்புச் சீர்திருத்தம் போன்றவற்றை விளங்கல். | வகிபங்கு நடித்தல். பயிலுனர்கள் சகல இனங்களும் கலந்த நான்கு குழுக்களாகப் பிரிககப்படுவர். ஒவ்வொரு குழுவும், இனப்பிரச்சினையை ஒழிக்க எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றி தாம் ஜனாதிபதிக்கு ஒரு ஆலோசனை கூறுவதாகத் தம்மைப் பாவித்துக்கொண்டு அந்த ஆலோசனையை ஒரு உரை வடிவில் எழுதவேண்டும். பின் பொதுவில் அளிக்கை செய்யவேண்டும். குழுக்களின் கருத்துக்கள் கலந்துரையாடப்படும். |

5.00 மீளாய்வு

சுவரில் பல டீமை தாள்கள் தொங்கவிடப்பட்டு இருக்கும். அதில் நடுவில் கோடு கிழித்து ஒரு புறம் நான் வரும்போது கொண்டிருந்த அபிப்பிராயம், என்றும், மறுபுறத்தில் நான் போகும்போது கொண்டுபோகும் அபிப்பிராயம், என்றும், எழுதியிருக்கும். இதில் ஒவ்வொருவரும் குறைந்தது ஒரு கருத்தாவது கூற வேண்டும். அவர்கள் அபிப்பிராயம் தெரிவிப்பதற்கென சில தலைப்புக்கள் வழிகாட்டியாக கொடுக்கப்படும். உதாரணமாக, இனப்பிரச்சினை, சமாதானம், பயங்கரவாதம், பாகுபாடு, வரலாறு, அரசியல் போன்றனவாகும்.

பயிற்சி முடிவு

# பயிற்சியில் உபயோகிக்கப்படும் கருவிகள்



## *நிலைப்பாடு எடுக்கத் தேவையான வசனங்கள்*

- விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள்
- இலங்கை ஒரு பௌத்த சிங்கள அரசு
- சமஷ்டி ஆட்சி கொடுத்தால் அது தனிநாட்டுக்கு இட்டுச் செல்லும்
- முஸ்லிம்கள் தொப்பி திருப்பிகள்
- தமிழர்கள் எல்லோரும் கறுப்பு நிறம்
- தனிநாடு கொடுத்தால் பிரபாகரன் பிறகு தென்பகுதியையும் பிடித்து விடுவார்
- சமாதானம் பேசுபவர்கள் எல்லாம் நாட்டைப் பிரிக்க முயற்சி செய்பவர்கள்.

---

# பயிற்சி மீளாய்வு

## *கேள்விக் கொத்து*

(பயிற்சி முடிந்து இரண்டு மாதங்களில் பயிற்சியில் பங்குபற்றியவர்களுக்கு அனுப்ப வேண்டிய கேள்விகள்)

பெயர் ..................................................................................

அங்கத்துவம் பெற்றிருக்கும் அமைப்பு / குழு ........................................அது இயங்கும் பிரதேசம் ..........................

அதன் கடந்த கால நடவடிக்கைகள் ..........................................................................................................

பயிற்சியில் கற்றுக் கொண்ட புதிய விடயங்கள் ..........................................................................................

தொடர்ந்த நடவடிக்கைக்கு உதவும் என்று நீர் நினைக்கின்ற விடயங்களும் அதற்குத் தேவையான நடவடிக்கைகளும்

..........................................................................................................................................................

பயிற்சிக்குப் போய் வந்த பின்னர் நீர் எடுத்த நடவடிக்கைகளை விபரிக்க ..................................................

..........................................................................................................................................................

உமது நடவடிக்கைகளுக்காகப் புதிதாகத் தொடர்பு கொண்ட அமைப்புக்களும் அவை இயங்கும் பிரதேசங்களும்

..........................................................................................................................................................

..........................................................................................................................................................


எதிர்நோக்கிய பிரச்சினைகள்..................................................................................................................

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான உதவிகள் ............................................................................

..........................................................................................................................................................

அத்தியாயம் 7

# வெகுசன ஊடகங்களை சமாதான உருவாக்கத்தின் பணியில் பயன்படுத்தும் முறைகள்



ஒரே நேரத்தில் பலகோடி மக்களைச் சென்றடையும் சக்தி வாய்ந்த கருவிகளே தொடர் பூடகங்களாகும். இவை கவர்ச்சி மிகுந்த பொழுது போக்கு நிகழ்ச்சிகளாலும், எல்லாரும் ஆவலாக நாடும் செய்தி பரப்பு நிகழ்ச்சிகளாலும், தகவல் பரிமாற்றத் திற்கு உதவும் வெவ்வேறு விவரண நிகழ்ச்சிகளாலும் மக்கள் யாவரையும் தம் வசம் கட்டிப் போட்டி ருக்கின்றன என்றுதான் சொல்ல வேண்டும். இன்றைய நவீன உலகில் வெகுசன தொடர்பூடகங்கள் மக்களின் நடத்தை, கருத்து மற்றும் கருத்தியல் உருவாக்கத்தில் பாரிய பங்கு வகிக்கின்றன. முரண்நிலைகளின் உருமாற்றமும் சமாதானத்தின் உருவாக்கமும், மக்களின் நடத்தையிலும் அவர்கள் கருத்தியலிலும் முழுமையான மாற்றத்தைக் கோரும் முறைவழி என்பதனால் தொடர்பூடகங்களை இப்பணியில் இணைத்துக் கொள்ளல் மிகவும் முக்கியமாகின்றது. இதன் காரண மாக ஊடகங்களுடன் எவ்வாறு வேலை செய்யலாம் என்பதனை இந்தப் பகுதி நோக்குகின்றது.

## பொதுவாகவே நடைமுறையில் ஊடகங்களாவன .....




ஆனால் ஒரு ஜனநாயக நடைமுறை உள்ள சமூகத்தில் ஊடகங்கள் பின்வரும் இயல்புகளுடன் இருக்க முடியும்[4] :

- தம்மைச் சுற்றிவர என்ன நடக்கின்றது என்ற தகவல்களை மக்கள் அறியச் செய்வது
- இந்தத் தகவல்களின் குறிப்பிடத்தக்க அம்சங் களும் அர்த்தங்களும் என்ன என்கின்ற பகுப்பாய்வினைக் கொடுப்பது
- மக்களைப் பாதிக்கின்ற விடயங்களைப் பற்றி சுதந்திரமாக விவாதிப்பதற்கான பொது அரங்கொன்றை உருவாக்குவது
- தீர்மானங்களை மேற்கொள்ளும் அரசு, அரசியல் மற்றும் தனியார் நிறுவகங்களைக் கண் காணிப்பது
- தமக்கென்ற அரசியல் நிலைப்பாடுகளை வகுத்து அவற்றை ஆதரித்து எடுத்துக் கூறுவது.

இதிலிருந்து, தொடர்பூடகங்கள் முரண்நிலை களின் உருமாற்றத்திற்காகப் பல நடவடிக்கைகள் எடுக்க முடியும் என்பதனைக் காணலாம். முதலாவதாக, அவை சரியான தகவல்களைப் பொதுமக்களுக்குக் கொடுப் பதன் மூலம் உண்மை நிலையை விளக்கி அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் சந்தேகங்களை நிவர்த்தி செய்யலாம். இது அனேகமாக பதட்ட நிலைகள் தோற்றுவிக்கப்படும் சந்தர்ப்பங்களுக்குப் பொருந்தும்.

[4] McNair, B An Introduction to Political Communication, Routledge 1999

மேலும், முரண்நிலைகளை உருமாற்ற ஏற்படக்கூடிய தீர்வுகளைப் பற்றிய அச்சங்கள் மக்கள் மனதில் இருந்தால் அவற்றைத் தீர்க்க வழி செய்யலாம். உதாரணமாக, சமஷ்டி அரசு கொடுக்கப்பட்டால் தமிழ் மக்கள் தனிநாடு தாபித்துக் கொள்வர் என்கின்ற பயம் சிங்கள மக்கள் மனதில் இருந்தால் அதனைத் தீர்க்க சமஷ்டி அரசின் தன்மை பற்றியும் ஜனநாயகம் பற்றியும் விளக்கங்களை அளிக்கலாம். அல்லது தனிநாடு தாபிப்பதனால் சமாதானம் நிலவாது என்கின்ற பொதுவான அபிப்பிராயத்திற்கு சவால் விட்டு தனிநாடு கோரிக்கையின் நியாயபூர்வ தன்மையையும் அது சாதாரணமாக நோக்கப்படக்கூடிய முறையையும் விளங்கப்படுத்தலாம்.

அது மட்டுமன்றி, ஏனைய இனங்களைப் பற்றிய தவறான படிமங்களும் காழ்ப்புணர்ச்சிகளும் இருக்கும் இடத்தில் பல்லின சமூகத்தின் நன்மைகளைப் பற்றிய விளக்கங்களைக் கொடுக்கலாம்.

இரண்டாவதாக, தொடர்பூடகங்கள் அரசியல் தலைவர்களின் நடத்தைகளைக் கண்காணித்து அவர்களை நாட்டு மக்களுக்குக் கணக்குக் காட்டும்படி செய்யலாம். இது அனேகமாக எதிர்க்கட்சியிலிருக்கும் போது ஒன்றைக் கூறி ஆளும் கட்சியாக ஆனவுடன் வேறொன்றைப் பொறுப்பின்றிக் கூற விழையும் தன்மைக்குப் பொருந்தும். இன்னொரு உதாரணமாக உயர் நீதிமன்றத்தின் நீதியரசரை அரசியல் தலைவர்கள் தமது கைப்பொம்மையாக வைத்திருப்பதைக் காட்டலாம். இந்த மாதிரியான போக்குகளை உறுதியாகக் கண்டித்து என்ன நிலைப்பாடுகள் எடுக்க வேண்டும் என்பதில் மக்களுக்கு வழிகாட்டியாக ஊடகங்கள் திகழ முடியும். அத்துடன், அரசியல் தலைவர்கள் எங்கும் எப்பொழுதும் மனித உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்தில் நடக்கின்றார்களா என்பதையும் கண்காணிக்கலாம்.

மூன்றாவதாக, முரண்படும் தரப்பினரின் எதிர்க் கருத்துக்களைப் பிரசுரித்து அவற்றை இருசாராரும் படித்து அறிந்துகொள்ளும் ஒரு தொடர்பாடல் கால்வாயினை தொடர்பூடகங்கள் ஏற்படுத்தலாம். இதனை அரசியல் உயர் மட்டங்களுக்காகவும் சமூகங்களின் வெவ்வேறு மட்டங்களுக்காகவும் மேற்கொள்ளலாம். உதாரணமாக, இடைக்கால நிர்வாக அதிகார சபையை விடுதலைப் புலிகள் ஏன் கோருகின்றனர் என்கின்ற அவர் தரப்பு விளக்கங்களையும் அரசாங்கம் ஏன் அதனை அங்கீகரிக்க இயலாமல் இருக்கின்றது என்கின்ற அதன் தரப்பு விளக்கங்களையும் விரிவாகப் பிரசுரிப்பதன் மூலம் இருசாராரும் மற்றவருடைய கிலேசங்களைப் புரிந்து கொள்ளும் வண்ணம் செயற்படலாம். அல்லது, சிங்கள மக்கள் தாயகக் கோட்பாட்டை வெறுப்பது ஏன் என்றும் தமிழ் மக்கள் தாயகக் கோட்பாட்டை முன்வைப்பது ஏன் என்றும் சமூகமட்டங்களில் கருத்துப் பரிமாற்றம் செய்ய உதவலாம்.

மேற்கூறிய பல முறைகளில் தொடர்பூடகங்கள் இயங்கலாம் என்பதை உணர்ந்து கொண்டு அவற்றை உபயோகிக்கப் பயிலவேண்டும். இதில் தகவல் பரிமாற்றமே ஊடகங்களின் பிரதான கடமையெனினும், அதற்கூடாக எல்லோருக்கும் எல்லாத் தகவல்களையும் கொடுத்தல் ஒரு பிரயோசனமுமற்ற செயலாகும். சகல தகவல்களையும் கிரகித்து விளங்கும் நிலையில் சாதாரண மனிதர்கள் இல்லை. முரண்நிலைகளின் உருமாற்றத்தில் எங்களுக்கு வேண்டிய தகவல்கள் யாதெனில், மக்களை தங்களையும் தம்மைச் சுற்றியுள்ள சமூகத்தினையும் மாற்ற வைக்க அவர்களை ஊக்குவிக்கும் தகவல்களாகும். நாம் கொடுக்கும் விடயம் அதைப் பெறுபவர் இதயத்தைச் சுண்டியிழுக்க வேண்டும். அதற்குரிய தகவல்களே அவரைச் சென்றடைய வேண்டும்.

இதற்கு உதாரணமாக யுத்த நிறுத்தத்தை வேண்டும் பிரச்சாரம் ஒன்றினை நாம் எடுத்துக் கொள்ளலாம். யுத்தத்தினால் எமது நாட்டுக்கு ஏற்படும் நட்டங்கள் பலப்பலவாகும். சொத்துக்கள் நாசமடைகின்றன. உயிர்ச்சேதம் ஏற்படுகின்றது. நாடு அரிய முதலீடுகளை இழக்கின்றது. வேலை வாய்ப்புக்கள் குறைகின்றன. கல்வி, சுகாதாரம் போன்ற மக்களின் வாழ்நிலைத் தரங்களை உண்மையிலேயே உயர்த்தும் துறைகளில் அரசாங்கம் வளங்களைக் குறைக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றதனால் இச்சேவைகளின் தரம் குறைகின்றது. யுத்தத்தின் விளைவால் ஏற்படும் இப்பாதிப்புக்களைப் பற்றி எல்லோருக்கும் ஒருசேர அக்கறை இருக்க முடியாது. ஒரு சாதாரண குடிமகன் நாடு முதலீடு இழப்பதைப் பற்றி அக்கறைப்படமாட்டார். ஆனால் கல்விக்கும் சுகாதாரத்திற்கும் அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீடு குறைந்தால் அதைப் பற்றிக் கவலைப்படுவார். அதே நேரம் ஒரு பெரிய வர்த்தகருக்கு கல்வி மற்றும் சுகாதார சேவைகள் சீர்குலைவதில் அவ்வளவாக அக்கறை இருக்காது. ஆனால் முதலீடு குறைவதைப் பற்றியும் சந்தை சுருங்குவதைப் பற்றியும் அதீத கவலை அவருக்கு இருக்கும்.

இதனால், யுத்தத்தினால் ஏற்படும் பொருளாதார வீழ்ச்சி பற்றிய செய்தியை வர்த்தகத் துறைக்கும் அரசாங்கத்தினருக்குமே நாம் வழங்குவது பயனளிக்கும். அதே போல் யுத்தத்தினால் தமது பிள்ளைகளின் படிப்பு எவ்வாறு பாழாகுகின்றதென்பது பாமர மக்கள் அக்கறைப்படும் செய்தியாகும். இவ்வாறு அவரவருக்கு ஏற்ற செய்திகளை அவரவருக்கு ஏற்ற ஊடகங்களில் அவரவருக்கு ஏற்ற முறைகளில் வழங்க வேண்டும். படித்தவர்களுக்கு எழுத்து வடிவங்களில் நாம் எமது செய்தியைக் கொடுத்தாலும், பாமரருக்கு கண்ணுக்கும் செவிக்கும் விருந்தளிக்கும் வகையிலேயே எமது செய்திகள் போகவேண்டும்.

## தொடர்பூடகங்களுடன் பணியைத் தொடங்குமுன் நாம் கேட்கவேண்டிய கேள்விகள்......



? இந்த குறிப்பிட்ட முரண்நிலை தொடர்பாக என்ன நிலைப்பாட்டை நாம் முன் வைக்க விரும்புகின்றோம்? நாம் விரும்பும் தீர்வு என்ன?

? இத்தீர்வினை யார் செயற்படுத்தக்கூடிய அதிகாரம் உள்ளவர்கள்? அத்தகையவர்கள் யாருக்கு கணக்குக் காட்ட வேண்டியவராக இருக்கின்றனர். அல்லது யாருடைய ஆதரவில் தங்கி நிற்கின்றனர்? இனிவருங் காலங்களில் இப்பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய நிலைமையில் வருபவர்கள் யாராக இருக்கலாம்?

? தீர்வினை செயற்படுத்தும் அதிகாரம் உள்ளவர்களுக்கும் அவர்களின் ஆதரவுத் தளங்களுக்கும் நாம் என்னென்ன தகவல்கள் மற்றும் கருத்துக்களைக் கொடுக்க விரும்புகின்றோம்?

? இத்தகவல்களை எந்த ஊடகங்கள் மூலம் பயனுறுதி உள்ள முறையில் வழங்கலாம்? எந்த உருவில் - நாடகங்கள், தொலைக்காட்சித் திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள், கலந்துரையாடல்கள், விவரண நிகழ்ச்சிகள், கதையல்ல நிஜம் போன்ற கதையரங்குகள் (Talk shows), அரட்டை அரங்கம், இசை நிகழ்ச்சிகள்,

### வெகுசன ஊடகங்களுடன் வேலை செய்யப் போகும்போது கவனிக்க வேண்டியவை :

- ஊடகவியலாளர்களும் முரண்நிலைகள் மலிந்த எங்கள் அதே சமூகங்களில்தான் பிறந்து வளர்ந்தவர்கள். எனவே அவர்களுக்கும் எமது சமூகத்திற்குள் இருக்கக்கூடிய அதே எதிர்மாறான உணர்வுகள் இருப்பது இயற்கையாகும். இதனால் சமாதானத்தை உருவாக்கக்கூடிய வகையில் பொறுப்புடன் பணி செய்யும் ஊடகவியலாளரை நாம் உருவாக்கினால்தான் அவர்கள் தாமும் அப்பணியைத் தொடரலாம். அதை விடுத்து ஊடகங்கள் பக்கச் சார்பாக எழுதுகின்றன என்று ஊடகவியலாளர்களை நோவது பயனற்றதாகும்.

- வெவ்வேறு ஊடகங்கள் வெவ்வேறு மக்கள் குழுவினரை இலகுவாகச் சென்றடையும் தன்மையுள்ளன. உதாரணமாக, பத்திரிகைக் கட்டுரைகள் அனேகமாகப் படித்த வர்க்கத்தினரைச் சென்றடையும் அதே சமயம் வானொலி நிகழ்ச்சிகள் பாமரரையும் சென்றடையும் தன்மை கொண்டவையாகும். தொலைகாட்சி இந்த இரு குழுவினரையும் ஓரளவுக்கு இணைத்து கூட்டிச் செல்லக் கூடியது. ஆகவே கொடுக்கப்படும் கருத்தைப் பொறுத்தும் அது எந்த மக்கள் குழுமங்களைச் சென்றடைய வேண்டும் என்று நாம் நோக்கம் கொள்கின்றோமோ அதைப் பொறுத்தும், அதற்குப் பொருத்தமான ஊடகங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

- அரசு ஊடகங்கள் குறிப்பாக எங்களது நாட்டில், அரசாங்கத்தின் ஊதுகுழலாகவே தொழிற்படுகின்றன. அரசு கட்டுப்பாட்டில்லாத தனியார் ஊடகங்களோ தமது வர்த்தக நோக்கங்களிலேயே குறியாக இருப்பார். ஆகவே இத்தன்மைகளை விளங்கி இக்காரணிகளைச் சமாளித்து, அதற்கூடாக சமாதானத்தின் கருத்துக்களையும் பரப்பக்கூடிய அம்சங்களைப் புகுத்தும் புத்தாக்கமான முறையில் நாம் செயற்படப் பழகவேண்டும்.

செய்திகள், ஊடக அறிக்கைகள் - போன்ற எந்த வடிவில் கொடுக்கலாம்?

? எங்கள் கருத்துக்களுக்கு எதிர்க்கருத்துக்கள் உள்ளவர்களை ஊடகங்கள் மூலம் எவ்வாறு நடுநிலைப்படுத்தலாம்?

? எமது கருத்துக்களுக்கு ஊடகங்களில் எவ்வாறு தொடர்ந்த பகிரங்கம் (Coverage) கொடுக்கச் செய்யலாம்? அதற்கு யாராவது ஒரு பிரபலத்தை (Popular Personality) உபயோகிக்க வாய்ப்பு கிடைக்குமா? உதாரணமாக ஒரு சினிமா நடிகரையோ அல்லது ஒரு விளையாட்டு வீரரையோ எமது கருத்துக்களை மக்கள் மத்தியில் சொல்ல வைக்க எம்மால் முடியுமா?

மேற்கூறிய கேள்விகளுக்குப் பதிலளித்து விட்டோமெனில் ஊடகங்களுடனான எமது வேலையை இனி இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம். முதலாவது ஊடகவியலாளர்களுடன் செய்யும் வேலை. அடுத்தது, ஊடகங்களில் வெளியிடப்படவேண்டிய விடயங்களையும் அவற்றின் வடிவங்களையும் தீர்மானிக்கும் வேலையாகும்.

### 1. ஊடகவியலாளர்களுடன் செய்யப்படும் வேலை




வர்த்தக நோக்கில் பக்கச் சார்புடன் செயற்படும் ஊடகங்களை சமாதான சகவாழ்வினை ஆதரிக்கும் ஊடகங்களாக மாற்றவேண்டுமாயின், அங்குள்ள ஊடகவியலாளர்களுடனும் அவர்கள் பணிபுரியும் முகாமைத்துவத்துடனும் இணைந்து இயங்க வேண்டியுள்ளது. இக்குழுவினருடன் பின்வரும் முறைகளில் வேலை செய்யலாம்:

- முரண்நிலைகள் பற்றிய விளக்கங்களை அளிப்பதும், அவை தொடர்பான செய்திகளை எவ்வாறு பொது மக்களுக்கு அளிக்கவேண்டும் என்பதை விளக்குவதுமான பட்டறைகள் நடத்துதல்
- தீர்வுகளைப் பற்றியும் ஜனநாயக நடைமுறைகளைப் பற்றியுமான கருத்தரங்குகள் நடத்துதல்
- ஊடகவியலாளர்களை யுத்தப் பிரதேசங்களுக்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும் பார்வையிடக் கொண்டு செல்லல்
- இரு சாரார் மத்தியிலும் இருக்கக்கூடிய ஊடக உரிமையாளர்கள் மத்தியில் சந்திப்புக்களும் கருத்தரங்குகளும் ஒழுங்கு செய்தல்
- இரு சாரார் மத்தியிலும் இருக்கும் ஊடகவியலாளர்கள் இணைந்து ஒரு நிகழ்ச்சியை அல்லது செய்தி அம்சத்தினைத் தயாரித்தல். (இது இருவரினதும் வேறுபட்ட பார்வைகளை எல்லோருக்கும் உணர்த்தும் வல்லமை படைத்தது.)

ஊடகவியலாளர்களுடன் சிறந்த உறவினைப் பேணுவது மிக முக்கியமாகும். கிரமமாக அவர்களை சந்தித்த வண்ணம் இருக்கவேண்டும். சமாதானம் குறித்த செய்திகளை முன்னுரிமைப்படுத்தி வெளியிடுவதற்கு இத்தகைய நேரடித் தொடர்புகள் உதவும். அடிக்கடி உள்ளூர் ஊடகவியலாளர்களையெல்லாம் அழைத்து ஒரு தேநீர் விருந்துபசாரத்தினை அளிக்கலாம். இதன்போது உங்களது சமகால வேலைத்திட்டங்களையும் அவர்களுக்கு விளக்குதல் பெரும் நன்மை பயக்கும். இப்படிச் செய்வதனால் குறிப்பிட்ட வேலைத்திட்டங்கள் பற்றிய செய்திகளை அவர்கள் தங்கள் ஊடகங்களில் முன்னுரிமைப்படுத்திப் போடுவதற்கு முயற்சி செய்யலாம்.

### 2. ஊடகங்களில் வெளியிடப்படவேண்டிய விடயங்களையும் அதன் வடிவங்களையும் தீர்மானித்தல்



#### அ. ஊடக அறிக்கைகள்

ஒரு அரசியல் நிலைமையைப் பற்றிய பகுப்பாய்வினை, அல்லது கண்டனங்கள் மற்றும் பாராட்டுதல் களைத் தெரிவிப்பதற்கு ஊடக அறிக்கைகள் உதவும். ஊடக அறிக்கைகளின் நோக்கம் ஒரு விடயத்தைப் பற்றிய எமது நிலைப்பாட்டினை ஏனையோருக்குத் தெரிவிப்பதும், அந்த நிலைப்

பாட்டுக்கு ஆதரவாக மக்கள் அபிப்பிராயத்தினை உருவாக்குவதும் திரட்டுவதுமாகும்.

ஊடக அறிக்கைகள் வெளியிடுவதை முக்கிய நிகழ்வுகளுக்காக வைத்தல் நன்று. இல்லாவிடில் அடிக்கடி வெளிவரும் அறிக்கைகளினால் பொது மக்கள் மனதில் சலிப்பு ஏற்படலாம். இவை ரத்தினச் சுருக்கமாக, மூன்று பந்திகளுக்கு மேற் படாதவாறு இருக்கவேண்டும். நீண்ட கட்டுரைகளை வாசிப்பதற்கு அனேகர் விரும்பு வதில்லை. அத்துடன், சிறிய அறிக்கைகள் எனில் அவற்றை ஊடகங்கள் இலகுவாக வெளியிடும்.

ஒரு ஊடக அறிக்கையின் முதல் பந்தியில் விவாதத்துக்கு எடுக்கப்படும் நிலைமையைப் பற்றி எழுதப்படவேண்டும். இரண்டாவதில் அதைப் பற்றிய எமது பகுப்பாய்வினையும் மூன்றாவதில் அந்நிலைமையைப் பற்றிய எமது நிலைப் பாடுகளையும் (ஆதரவு, எதிர்ப்பு, கவலை அல்லது அக்கறை) தெரிவித்தல் வேண்டும். இதைத் தவிர தேவையென்றால் அக்காலகட்டத்தில் மக்கள் சமூகங்களாலோ அல்லது அரசியல் தலைவர் களாலோ எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை களையும் வரையறுக்கலாம். அறிக்கை முழுவதும் கூறிய விடயங்களின் ஒரு தொகுப்பை இறுதியில் ஒரு புதிய பந்தியில் அறிக்கையின் முடிவாகக் கொடுத்தல், சொல்ல வரும் விடயத்தை வாசிப்பவர் மனதில் அவற்றை இன்னும் ஆழமாகப் பதிக்க உதவும்.




## ஊடக அறிக்கையின் மாதிரி ஒன்று

**தமிழ் தேசியத்தைத் துண்டாடி எமது போராட்டத்தை வலுவிழக்கச் செய்யாதீர்கள்!**

விடுதலைப் புலிகள் அமைப்பினருக்குள் தற்போது ஏற்பட்டிருக்கும் பிளவின் விளைவால் கிழக்கிலும் தென்பகுதியிலும் நிகழும் சகோதரப் படுகொலைகளைக் கண்டு தமிழ் தேசிய சபை மிகுந்த கவலை கொண்டுள்ளது. இதுவரை நாற்பதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களும் போராளி களும் இறந்திருக்கின்றனர். புத்தி ஜீவிகளும் ஊடக வியலாளர்களும் துப்பாக்கி ரவைகளுக்கு இல்க்காகியிருக்கின்றனர். யார் செய்கின்றனர், எதற்காகச் செய்கின்றனர் என்பது சற்றும் தெளிவில்லாத இக்கொலை களினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்கள் மத்தியில் பதற்றமும் பீதியும் தூவி விடப்பட்டிருக்கின்றன. தாங்கள் சந்திப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களோ என்ற அச்சத்தில் ஒரு அபிப்பிராயமோ கருத்தோ கூற இயலாத நிலையில் அவர்கள் இருக்கின்றனர். யுத்தத்தினால் ஏற்கனவே சகல விதங்களிலும் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் இவ்வாறு மேலும் அச்சுறுத்தப்படுவது விழுந்தவனை மாடேறி மிதிக்கும் கதையாகும்.

எமது காலனித்துவ வரலாற்றின் தொடர்ச்சியாக, பெரும்பான்மை சிங்கள இனத்தவரின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு எமது நாட்டில் அரசு அமைக்கப்பட்டதன் விளைவாகவே தமிழ் மக்கள் தங்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தனர். வட - கிழக்குப் பிரதேசத்தின் தமிழ் தாயகக் கோட்பாடே இப்போராட்டத்தின் அடிநாதமாக விளங்கியது. தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு, அவர்களின் அபிவிருத்திக்குத் தேவையான வளங்கள், அவர்கள் கலாசாரம் மொழி இவற்றின் பேணுதல் இவையனைத்தையும் உள்ளடக்கியதே தமிழ் தாயக கோட்பாடாகும். தனக்கும் தனது தலைமைக்கும் இடையேயான முரண்பாட்டினைச் சமாளிப்பதற்காக கருணா இக்கோட்பாட்டினை நிராகரித்து தமிழ் தேசியத்தைத் துண்டாடும் நிலைமைக்கு இட்டுச் சென்றது மிகத் துரதிர்ஷ்டமான நிலைமையாகும். எங்கள் இனத்தினதும் அதன் சந்ததிகளினதும் வருங்காலத்தை உங்கள் சொந்தத் தேவைகளுக்குப் பயன்படுத்தாதீர்கள் என்று நாம் அவருக்கும் அவர் சகாக்களுக்கும் உறுதியாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தியைப் பற்றிய உங்கள் கவலைகளை

நீங்கள் மட்டுமல்ல நாங்கள் கூட தமிழ் பேசும் மக்கள் என்கின்ற ரீதியில் எங்கள் நெஞ்சில் சுமந்திருக்கின்றோம். இதுவரை வழக்கிலிருந்த அநீதியான அரசியல் நிர்வாகக் கட்டமைப்புக்களின் பயனாக தோன்றிய பிரச்சினை இது. அதற்காகவேதான் சகலருக்கும் நீதியான முறையில் அபிவிருத்தியினை பங்கிடக்கூடிய ஒரு அரசின் உருவாக்கத்துக்கான இப்போராட்டத்திற்கு எமது ஆதரவினையும் இதுவரைகாலமும் நாம் வழங்கி வந்திருக்கின்றோம். நீதியான கட்டமைப்புக்கள் உள்ள ஒரு அரசின் மூலமாகவே மட்டக்களப்பு உட்பட சகல மக்களின் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்ய முடியுமே தவிர, இராணுவ அணிகளைக் கொண்டுள்ள ஓரிரண்டு தனிநபர்களினால் அல்ல. எனவே கருணாவின் அரசியல் இராணுவ முன்னெடுப்புக்கள் எங்கும் வேகாது.

எந்த விடுதலை இயக்கத்திற்குள்ளும் பிளவுகள் தோன்றுவது சகஜம். அதிகாரத்தைக் கைப்பற்றும் அல்லது தக்கவைத்துக் கொள்ளும் தன்னல நோக்கங்களுடன் இயங்கும் தனிநபர்கள் எங்கும் இருக்கத்தான் செய்வர். அவர்கள் மக்கள் சமூகங்கள் மத்தியில் இருக்கும் பல நூறு பிரிவினைகளைச் சாக்காக வைத்துக் கொண்டு அவற்றின் அத்திவாரத்தில் தமது சொந்த இலக்குகளை எய்த முயற்சிப்பார்கள். அவர்கள் எந்த குறுகிய நோக்கங்களுக்காக தமிழ் மக்கள் போராட்டத்தை உபயோகித்தாலும்கூட அதற்கான அத்திவாரமாக அம்மக்கள் மத்தியிலுள்ள யதார்த்தபூர்வமான முரண்பட்ட நிலைமைகளே காணப்படுகின்றன என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது. இங்கு எமது எதிரிகளும் அதைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தவே முயல்வர். எனவே இந்நிலைக்குத் தீர்வு காண்பதற்கு வன்முறையை நாடுவது முற்றிலும் விவேகமற்ற செயலாகும். இது அரசியல் ரீதியாக வெற்றி கொள்ளவேண்டிய பிரச்சினையாகும். தவிரவும், துப்பாக்கியினால் தீர்வுகளைத் தேடுவது மக்கள் பாதுகாப்பாக வாழும் உரிமையை இல்லாதொழிக்கின்றது. அவர்களின் பாதுகாப்புக்காக ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் அதுவே அவர்களுக்கு அச்சுறுத்தலானால் அப்போராட்டத்தில் அர்த்தமே இல்லாமல் போய்விடும்.

ஆகவே, சகோதரப் படுகொலைகளை உடனடியாக நிறுத்துமாறு நாம் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் கருணா அணியினருக்கும் வேண்டுகோள் விடுக்கின்றோம். இயக்கத்திற்குள் ஏற்படுகின்ற உட்பூசல்கள் அரசியல் ரீதியாகத் தீர்க்கப்படவேண்டும் என விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு வலியுறுத்த விரும்புகின்றோம். தமிழ் தாயகக் கோட்பாட்டை எக்காரணங்கொண்டும் வேரறுக்க நாம் விடமாட்டோம் என்பதையும் கருணா குழுவினருக்கும் அவரை ஆதரிக்கும் ஸ்ரீலங்கா அரசுக்கும் கூறிக்கொள்கின்றோம். எனவே, தமிழ் தாயகக் கோட்பாட்டின் அடிப்படையில், தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை உறுதிப்படுத்தும் நியாயமான தீர்வினைத் தரக்கூடிய பேச்சுவார்த்தைகளில் உடனடியாக ஈடுபடுமாறு நாம் விடுதலைப் புலிகளையும் அரசாங்கத்தினையும் கோருகின்றோம்.

### ஆ. ஊடகவியலாளர் மாநாடு

ஒரு விடயத்தை அல்லது அரசியல் நிலைமையைப் பற்றிய எமது நிலைப்பாட்டை விரிவாகத் தெரிவிப்பதற்கு, அல்லது ஒரு முக்கிய நடவடிக்கை எடுக்கப்படப் போகின்றதெனில் அதனைப் பற்றி அறிவிப்பதற்கு, ஊடகவியலாளர் மாநாடுகள் உதவும். ஊடகவியலாளர் மாநாடு என்பது சகலவித அச்சு மற்றும் மின் ஊடகங்களிலிருந்து ஊடகவியலாளர்களை வரவழைத்து அவர்களை நேரடியாகச் சந்தித்து எமது கருத்துக்களைத் தெரிவிக்கும் செயலாகும். இங்கு கேள்விகள் கேட்டும் விவாதித்தும் தமது சந்தேகங்களை நிவர்த்தி செய்யவும் ஊடகவியலாளர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கின்றன. இக்கலந்துரையாடல்களின் முடிவில் கிடைக்கப்பெறும் கருத்துக்கள் விரிவான செய்திகளாக, சில சமயம் படங்களுடன் இந்த ஊடகங்களில் வெளியிடப்படுகின்றன. இம்மாதிரியான செய்திகள் மக்கள் கருத்தைக் கவரக் கூடியன.

நாம் கூறும் கருத்துக்களை நிலைநிறுத்த அதற்குரிய நபர்களை ஊடகவியலாளர்கள் முன் நிறுத்துவதற்கும் ஊடகவியலாளர் மாநாடுகள் உதவுகின்றன. இதைச் செய்யக்கூடிய விடயத்துக்கு ஒரு உதாரணத்தைக் கூறலாம். 2004 ஏப்ரல் மாதத் தேர்தலில் மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி, யுத்தத்தில் ஊனமுற்ற இராணுவ வீரரொருவர் இவ்வளவு தியாகங்களுக்குப் பின்னும் நாம் விட்டுக் கொடுக்க இயலாது என்று கூறுவது

போன்ற விளம்பரங்களை வெகுசன ஊடகங்களில் அன்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டி ருந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராகப் பரப்பியது. இந்த விளம்பரத்தின் விளை வைக் குறைக்க விரும்பினோமெனில் ஊனமுற்ற இராணுவ வீரர்கள் சங்கத்தினருடன் கலந்துரை யாடி அவர்களில் சில பிரதிநிதிகளுடன் ஊடக வியலாளர் மாநாடு நடத்தலாம். அங்கு அவர்களே நேரடியாக ஊடகவியலாளர்களுக்கு தங்கள் பெயரால் வெளியிடப்படும் இத்தகைய விளம்பரங் களைப் பற்றித் தாம் என்ன நினைக்கின்றனர் என்றும் சமாதானத்தைப் பற்றிய தமது நிலைப்பாடு என்ன என்பதையும் கூற வாய்ப்புண்டு.

ஊடகவியலாளர் மாநாடுகளைக் கூட்டும்போது எடுக்கப்படும் விடயம் சமகாலச் செய்திகளில் முன்னணிச் செய்தியாக விளங்குகின்றதா என்ப தைக் கவனிக்க வேண்டும். அவ்வாறு இல்லை யெனில் ஊடகவியலாளர்கள் அக்கறையுடன் சமூகம் தர மாட்டார்கள். அப்படி வந்தாலும்கூட அச்செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து வெளியிட மாட்டார்கள். இம்மாநாடுகளை ஒழுங்கு செய்ப வர்கள் தங்களைச் சேர்ந்த ஓரிருவரை பிரதான பேச்சாளர்களாக நியமித்துக் கொள்ள வேண்டும். எடுக்கப்படும் விடயத்தின் ஒவ்வொரு அம்சத்தை ஒவ்வொரு பேச்சாளராக கையாளவேண்டும். அதன் இறுதியில் ஊடகவியலாளர்களின் கேள்வி களுக்கான நேரத்தை ஒதுக்கலாம். எடுக்கப்படும் விடயத்தின் சாராம்சத்தினை விளக்கும் ஒரு சிறிய அறிக்கையினையும் மாநாட்டுக்கு வரும் ஒவ் வொருவருக்கும் கொடுத்தல் சாலச் சிறந்தது. இது அதைப் பற்றிய செய்திகளை இலகுவாக எழுது வதற்கு அவர்களுக்கு உதவும்.

**இ. விளம்பரங்களை வெளியிடுதல்**

சில காலங்களுக்கு முன்னர் தேசிய சிறுவர் பாதுகாப்புத் திட்டம் சிறுவர்களை வேலைக் கமர்த்தும் நடவடிக்கைக்கெதிராக ஒரு விளம்பரப் பிரச்சாரத்தில் இறங்கியது. இந்த அலகு, சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பதை தமக்கு உடனுக்குடன் அறிவிப்பதற்கு 444444 என்கின்ற தொலைபேசி இலக்கத்தில் ஒரு தொடர்பையும் ஏற்படுத்தியிருந்தது. எனவே சிறுவர்களை வேலை க்கு அமர்த்துவது ஒரு குற்றம் என்பதைப் பொது மக்களுக்கு உணர்த்துவதோடு, அப்படியான சம்பவங்களை அவர்கள் மேற்குறிப்பிடப்பட்ட எண்ணுக்கு உடனடியாகத் தெரிவிக்கவேண்டும் என்கின்ற நோக்கத்துடனும் இப்பிரச்சார இயக்கம் முடுக்கிவிடப்பட்டது.

இதற்காக அவர்கள் ஒரு தொலைக்காட்சி விளம் பரத்தைத் தயாரித்தார்கள். இதில் ஒரு சிறுவனோ அல்லது சிறுமியோ வீட்டு வேலைக்காரர்களாக சாப்பாட்டுக் கடைகளில் பணியாட்களாக துன்புறுத்தப்படும் ஆறு உதாரணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் காட்டப்பட்டது. ஒவ்வொரு சம்பவத் தின் பின்னும் அங்கு துன்பப்படும் பிள்ளை மெல்ல இரகசியமாகத் திரும்பி பார்வையாளர்களைப் பார்த்து தனது கைவிரல்களினால் நான்கு என்னும் எண்ணைக் காட்டிற்று. இக்காட்சியின் பின்னணி யில் ''கல்வியும் விளையாட்டும் எனதுரிமை. தயவுசெய்து என்னிடமிருந்து அதனைப் பறிக் காதீர்கள்'' என்கின்ற வாசகங்கள் பொறிக்கப் பட்டன. இவ்வாறு 6 நான்குகளை அப்பிள்ளைகள் காட்டி 444444 தான் நாம் சுழற்றவேண்டிய எண் என்பதை உணர்த்தின.

இந்த விளம்பரம் பொதுமக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக பிள்ளைகளை வேலைக்கு அமர்த்தி யிருந்தவர்கள் தாம் சங்கடமான நிலைமைக்குத் தள்ளப்பட்டதுமன்றி அவ்வாறானவர்களைப் பற்றிய தகவல்களும் சிறுவர் பாதுகாப்பு அலகிற்கு ஏராளமாகத் தெரிவிக்கப்பட்டன.

விளம்பரங்களினால் ஏற்படும் நன்மைகளை நாம் மேற்கூறிய உதாரணத்தில் பார்த்தோம். விளம் பரங்கள் கவர்ச்சியானவை. ஒரு சிறிய காலப்பிர மாணத்திலேயே மக்கள் மனதில் பதியக்கூடியவை, தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவை. ஆழமான அர்த்தம் பொதிந்த ஒரு வாசகத்தை விளம்பரங்கள் மூலம் மக்கள் மனதில் இலகுவாகப் பதித்து விடலாம். பெரிய வியாக்கியானங்களைவிட இந்த ஒற்றை வாசகங்கள் மக்களை மாறுதலடையச் செய்யக்கூடியவை. இந்தக் காரணத்தினால்தான் ரஜனிகாந்த் படங்களில் அவர் கருத்தைக் கவரும் ஒரு வரி வசனங்களை அள்ளி வீசுவதைக் காணலாம். "நான் ஒரு தடவை சொன்னா நூறு தடவை சொன்ன மாதிரி" என்றும் "கூட ஆசைப் படுகின்ற ஆம்பளையும் கூட கோபப்படுகிற பொம்பளையும் நல்லா வாழ்ந்ததா சரித்திரமே கிடையாது.'' என்றும் அவர் கூறிய வசனங்கள் எமது நெஞ்சை விட்டு நீங்காதவை. சில

ஆண்டுகளுக்கு முன்னர் இணைந்த கரங்கள் வட -கிழக்கு பெண்கள் வலையமைப்பினர் பெண்கள் அரசியலில் சமமாகப் பங்குபற்றவேண்டும் என்கின்ற கோரிக்கையை முன்வைத்து ஒரு விளம்பரப் பிரச்சாரத்தில் ஈடுபட்டனர். இதற்காக வானொலியூடாக "எங்கள் பார்வையை வரையறுக்காதீர்கள்.... ஏனெனில் அதில் தொலைநோக்குண்டு. எம்மை வீட்டினுள் முடக்காதீர்கள்.... ஏனெனில் எம்மிடம் சிறந்த தலைமைத்துவம் உண்டு..." என்கின்ற வாக்கியத்தைப் பயன்படுத்தினர். இது சமூகப் பொதுத் தளத்தில் பங்கேற்காத வகையில் பெண்களை குடும்பப்பொறுப்புக்களுக்குள் முடக்கும் சமூக வழக்கத்தைச் சாடி நின்ற கோஷமாகும்.

யுத்த நிறுத்தம், சமாதானம், ஜனநாயகம் போன்ற கருவேற்புக்களும் அவற்றின் தேவையும் விளம்பரங்களுக்கூடாக பரப்பக்கூடிய விடயங்களாகும். விடயம் எதுவாக இருந்தாலும் விளம்பரங்களில் கொடுக்கப்படும் செய்திகள் மிக எளிமையான கருத்துக்களாகவும் தெளிவானவையாகவும் இருத்தல் அவசியம்.

**ஈ. இசைத் தொகுதிகளை வெளியிடுதல்.**

இசையினால் மயங்காதவர்கள் யாருமில்லை எனலாம். நாம் கொடுக்க விரும்பும் செய்திகளை கவர்ச்சியான பாடல்கள் மூலம் கொடுப்பதனால் குறிப்பாக இளம் சந்ததியினரைக் கவரலாம்.

**உ. (வாராந்த) கிரமமான வானொலி தொலைக்காட்சி பேட்டி மற்றும் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல்.**

சமூக மட்டத்தில் விவாதத்திற்குரிய விடயங்களில் கிரமமாகக் கலந்துரையாடல்களையும் பேட்டிகளையும் நிகழ்த்துவதனால் பொதுமக்கள் மத்தியில் அவை குறித்த அபிப்பிராயங்களை உருவாக்க முடியும். இப்போதெல்லாம் தனியார் பண்பலை வானொலிகளில் தொலைபேசிகளினூடு தொடர்பு கொள்ளும் நிகழ்ச்சிகள் அன்றாடம் நடக்கின்றன. இதில் ஏராளமான இரசிகர்கள் கலந்து கொள்கின்றார்கள் என்பதுடன், ஒரு விடயத்தைப் பற்றிய கருத்தை அவர்கள் உடனுக்குடன் தொலைபேசியில் அழைத்துக் கூறக் கூடியதாக இருக்கின்றது. எங்கள் கருத்துக்களை எல்லோருக்கும் எடுத்துரைக்கவும் அதைப் பற்றி பொதுவாக மக்கள் என்ன அபிப்பிராயம் வைத்திருக்கிறார்கள் என்று கணிக்கவும் இந்த தொலைபேசி நிகழ்ச்சிகள் உதவுகின்றன.

பண்பலை வானொலிகளின் தொலைபேசி கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது இலகுவானதெனினும், அதற்கும் சற்று நம்மை நாம் தயார்படுத்திக் கொள்வது உதவும். எதைப் பற்றிப் பேச விரும்புகின்றோம் என்பதை அந்நிகழ்ச்சியின் அறிவிப்பாளர்களுக்கு முன் கூட்டியே அறிவிக்கவேண்டும். அவ்விடயத்தைப் பற்றிய விவரங்களை சுருக்கமாக எழுதி அவர்களுக்குக் கொடுப்பதால் அவர்களும் அதைப் பற்றிய அறிமுகங்களை நேயர்களுக்குக் கொடுக்கலாம். குறித்த நேரத்தில் தொலைபேசியில் அழைத்து அவர்களுடன் பேச ஒரு குழுவினரைத் தயார் செய்ய வேண்டும். இவர்களின் தொலைபேசி எண்களையும் அறிவிப்பாளர்களுக்கு கொடுத்தால் ஒழுங்காக ஒவ்வொருவராகக் கருத்துக்களைக் கேட்க அவர்களே உங்களை அழைப்பார்கள். பலர் ஒரு விடயத்தைப் பற்றிப் பேசுவதனால் கணிசமான அளவினர் இந்த விடயத்தில் அக்கறை உள்ளவர்களாக இருக்கின்றனர் என்பதைக் கேட்பவர்கள் அறிய உதவும்.

இதே போன்று தொலைக்காட்சிகளில் சம்பாஷணை நிகழ்வுகள் காட்டப்படுகின்றன. ஒரு விடயத்தைப் பலரை வைத்துக் கலந்துரையாடுவதே கதைக் நிகழ்வுகளாகும். இதில், அதை நெறிப்படுத்துபவர் அங்கு பங்குபற்றுபவர்களுடைய பல கருத்துக்களினூடும் தான் சொல்ல வந்த கருத்தை லாவகமாகப் புகுத்தி விடுவார். பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு தமது கருத்துக்களைச் சொல்லும் காரணத்தினால் இவ்வகையான நிகழ்ச்சிகள் மிகப் பிரபலம் பெற்றன.


**ஊ. தொலைக்காட்சி நாடகங்களைத் தயாரித்தல்**

நாடகங்களும் சினிமாக்களும் மக்களைக் கட்டிப் போடும் பொழுது போக்கு அம்சங்களாகும். எடுக்கப்படும் ஒரு கதையின் போக்கினிலேயே சொல்ல விரும்பும் விடயத்தையும் சொல்லுவது இலகுவான நெறியாகும். ஒரு முரண்நிலை உருவானதன் வரலாறு, அதைப் பற்றி வெவ்வேறு மக்கள் கருதும் எடுகோள்கள், அவர்களின் கண்ணோட்டங்கள், அவற்றைப் பற்றிய விமர்

சனங்கள், சாத்தியமான தீர்வுகளைப் பற்றி மக்கள் கொண்டுள்ள எண்ணப்பாடுகள் போன்றவற்றை தொலைக்காட்சி நாடகங்கள் மூலமாகத் தெரிவிக்க லாம்.

நாடகங்கள் பிரச்சார ரீதியில் இல்லாமல் உண்மையிலேயே மக்களின் உணர்வலைகளைப் பிரதிபலிப்பதாக இருந்தால் மிகவும் நல்லது. ஏனெனில் முரண்நிலைகளிலேயே மக்கள் மத்தி யில் இருக்கக்கூடிய தொடர்பாடல்கள் உடை கின்றன. பயத்தாலும், பிறருடன் சண்டை வந்து விடும் என்ற தயக்கத்தினாலும், அல்லது மற்றவரை முகம் முறிக்க வேண்டாம் என்ற கரிசனையினாலும் மக்கள் தாம் நினைப்பதை எதிர்த்தரப்பினருக்கு சொல்லாமல் விடுகின்றனர். அது மட்டுமன்றி, எதிர்த்தரப்பினர் கேட்க விரும்பும் விடயங் களையே சொல்லிக் கொண்டும் இருக்கின்றனர். இந்நிலையை மாற்றுவதற்கு நாடகங்கள் போன்ற கலை வடிவங்கள் காத்திரமாகப் பங்காற்ற முடியும். போராளிகள், மற்றும் இரு பக்கமும் உள்ள பொது மக்கள், என்ன உணர்வலைகளில் நின்று இயங்குகிறார்கள் என்பதைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டும் தயாரிப்புக்கள் வெற்றி பெறும்.

எதைப் பற்றி மக்கள் ஒரு கணத்தில் அதிக கவனம் செலுத்துகின்றனரோ அதைப் பற்றி அப்போதே அவர்களுடன் தொடர்பாடுவது ஊடக வேலைகளின் முக்கிய அம்சமாகும். நேற்று இந்தியர்கள் நர்மதா அணைக்கட்டினைப் பற்றி அக்கறை கொண்டது உண்மைதான் ஆனால் இன்றோ அவர்கள் கவனம் வரப்போகும் இந்தியத் தேர்தல்களில் மூழ்கிவிட்டது. அவர்களுக்குப் போய் இன்று நர்மதா அணைக் கட்டினைப் பற்றிய பிரச்சினைகளை விவரிப்பதனால் அவர்களைத் தங்கள் தொலைக்காட்சியின் அலை வரிசையை மாற்றி வேறொரு நிகழ்ச்சியைப் பார்க்கத்தான் நாம் தூண்டுவோம். இங்கு குறிப்பிடப் பட்ட உதாரணம் ஊடக வேலைகளில் காலந் தவறாமை எவ்வளவு முக்கியம் என்பதை விவரிக் கின்றது. இன்று மக்கள் எதைப் பற்றிய கரிசனையுடன் இருக்கிறார்களோ அதைப் பற்றி இன்றே அவர்களுடன் பேசவேண்டும். அப்படிச் செய்ய முடியாவிடில் அவர்கள் அக்கறைப்படும் அளவுக்கு அப்பிரச்சினையை செய்திகளின் முன்னணிக்கு என்ன விதப்பட்டும் கொண்டுவரவே வேண்டும். இவையெல்லாம் செய்வதற்கு ஊடக வேலைகளில் பரிச்சயமும் திறமையும் தேவைப்படுகின்றது.



# பின்னிணைப்புக்கள்


# பெண்களின் ஆற்றல்களை

# வலுப்படுத்துதல்



| பெண்கள் தங்கள் வாழ்வில் பொதுவாக எதிர்நோக்கும் பிரச்சினைகள் | அதற்கான தீர்வுகள் |
|---|---|
| • ஆண்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் பொருளாதார ரீதியாக தாழ்ந்த நிலைமை. கடன் முதலீட்டுக்கான வசதிகள் இல்லாத நிலைமை. | • உற்பத்தி வளங்கள் காணி, வினைத்திறனுள்ள ஆளணி, முதலீடு, இயந்திர உபகரணங்கள் போன்றன பெண்களின் தேவைகளுக்கேற்பக் கிடைக்கக்கூடியவையாகவும், கிடைத்தபின், அவர்களின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடியவையாகவும் வேண்டும். (Access to, and control over productive resources) |
| • மட்டுப்படுத்தப்பட்ட கல்வி, தொழிற்கல்விக்கான குறுகிய வாய்ப்புக்கள் | • கல்வி, தொழிற் பயிற்சி, தகவல் தொழில் நுட்பம் போன்றவை கிட்டச் செய்வதன் மூலம் பெண்களின் உற்பத்தித் திறன்கள் அதிகரிக்கப்பட வேண்டும். |
| • தாராள பொருளாதாரக் கொள்கையின் கீழ் உலகமயமாகும் சந்தையில் போட்டியிடும் ஆற்றல் வளர்க்கப்படாமை | • தொழில் மற்றும் வர்த்தகச் சந்தைகளில் பேரம் பேசி தமது தொழில் வாய்ப்புக்களையும் வருமானங்களையும் அதிகரிக்கக்கூடிய ஆற்றல் பெண்களுக்கு வளர்க்கப்பட வேண்டும். |
| • குடும்பத்திலும் சமூகத்திலும் எதிர்நோக்கும் வன்முறை, பாலியல் துன்புறுத்தல்கள் | • சமூகம், வெகுசன தொடர்பூடகங்கள் போன்ற தளங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு பெண்களுக்கெதிரான வன்முறைகள் ஒழிக்கப்பட வேண்டும். |
| • கலை, இலக்கியம் போன்ற துறைகளில் வெற்றிகரமாகப் பங்குபற்றுவதற்கு நேர அவகாசமும் சமூக அங்கீகாரமும் இல்லாமை | • குடும்பப் பொறுப்புக்களை ஆண்களும் ஏற்பதன் மூலம் பெண்களுக்கு பல்வேறு துறைகளில் பங்குபற்றக்கூடிய நேர அவகாசம் கொடுக்கப்பட வேண்டும். |
| • தாம் ஆண்களுடன் இணைந்து பங்குபற்றும் பொதுத் தளங்களில் சுதந்திரமாகப் பேசித் தீர்மானங்கள் எடுக்கும் ஆளுமை இன்மை, அரசியல் சமூகத் தலைமைத்துவம் நிராகரிக்கப்பட்டமை | • அரசியலில் பெண்கள் பங்குபற்றுவதற்கு ஏதுவான கொள்கைத் திட்டங்களை செயற்படுத்தல் |
| • யுத்தத்தினால் பாதிப்பு | • நீதியுடன் கூடியதாக நிலைபேறான சமாதானம் நிலைநிறுத்தப்பட வேண்டும். |

| பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் மூலங்கள் | பிரச்சினை மூலங்களை அகற்றுவதற்கான வழிவகைகள் |
|---|---|
| • வெகுசன ஊடகங்களில் பெண்களைப் பற்றிய படிமங்கள் மேலும் நிலைநிறுத்தப்படுதல் | • ஊடகவியலாளர்கள் மத்தியில் பெண்கள் பிரச்சனை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும், ஊடகத் துறையில் கொள்கைத் தீர்மானம் எடுக்கும் பதவிகளில் பெண்கள் சமபங்கு வகிக்க வேண்டும். |
| • மக்களின் சிந்தனையில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தும் மத, கலாசார பாரம்பரியங்களானவை பெண்களை ஒடுக்கும் கட்டமைப்புக்களை நிலைநிறுத்துதல் | • இறைவரானவர் மத நிறுவகங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதும் மத சம்பிரதாயங்கள் மனிதர்களினால் ஏற்படுத்தப்பட்டவை என்பதும் மக்களால் உணரப்படவேண்டும். கொக்கு பாலையும் நீரையும் பிரித்துண்பதுபோல, மத சம்பிரதாயங்களில் சமூகநீதியை நிலைநிறுத்தும் நம்பிக்கைகளும் வழக்கங்களும் மட்டும் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஏனையவை நிராகரிக்கப்படும் வண்ணம் சமூக மட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும். |
| • சமூகம் உருவாக்கிய படிமங்களின் பயனாக பாரம்பரியமாக விதிக்கப்பட்ட பாத்திரங்களினுள்ளும் அது தொடர்பான வேலைகளுக்குள்ளும் முடக்கம் (கற்புள்ள பெண், குடும்பத் தலைவி, தாய், இத்தியாதி) | • அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்களில் பெண்கள் சமபங்கு வகிப்பதை ஊக்குவிப்பதற்கான தேர்தல் சீர்திருத்தங்களும் கொள்கைத் திட்டங்களும் கொண்டுவரப்பட வேண்டும். |
| • சட்டங்களையும் கொள்கைகளையும் தீர்மானிக்கும் அரசியல் கட்டமைப்புக்களில் மிகக்குறைந்த அரசியல் பிரதிநிதித்துவம் | • ஜனநாயக நல்லாட்சியை ஏற்படுத்தும் அரசியல் கட்டமைப்புக்களையும், சமூக மாற்றங்களையும் உருவாக்குவதற்கான முறைவழிகளில் பெண்கள் சமபங்கு வகிக்க வேண்டும். |
| • அரசிலும் தனியார் துறைகளிலும் திட்டக்கொள்கைகளைத் தீர்மானிக்கும் உயர் பதவிகளில் குறைந்த பதவிகளில் குறைந்த பிரதிநிதித்துவம் | • நிறுவனங்களின் நிர்வாகங்களில் எல்லாம் பால்நிலை தொடர்பான ஒழுகு விதிகள் கொண்டுவரப்பட வேண்டும். |



# தீர்வுகள் .......

- வளங்களைப் பெறுவதாகவோ
    - வாய்ப்புக்களை ஏற்படுத்துவதாகவோ
        - உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் திறன்களை அதிகரிப்பதாகவோ
            - கொள்கைகளை மாற்றுவதாகவோ அல்லது உருவாக்குவதாகவோ
                - சட்டங்களை மாற்றுவதாகவோ அல்லது உருவாக்குவதாகவோ
                    - அரசியல் கட்டமைப்புக்களை மாற்றுவதாகவோ அல்லது உருவாக்குவதாகவோ


## .....இருக்கலாம்

ஆகவே, பெண்களின் வாழ்வில் மாற்றங்கள் காண்பதற்கு, அவர்கள் தமது வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கும், அப்பிரச்சனைகளின் தோற்றுவாயாக இருக்கும் மூலங்களுக்கும் ஒருசேர தீர்வுகள் காணப்படுவது அவசியமாகின்றது.

## தீர்வுகளை அடைவதற்காக மேற்கொள்ள வேண்டிய உபாயங்கள் :

- மெய்நிலையுணர்வறிதல் வேண்டும்
- கொள்கைச் சட்டங்களையும் சமூக மதிப்பீடுகளையும் மாற்றுவதற்கு எடுத்துக் கூறலில் (advocacy) ஈடுபடவேண்டும்
- புதிய நடைமுறைகளைச் செயற்படுத்துவதில் பங்கேற்க வேண்டும்
- எடுத்துக்கூறலில் ஈடுபடுவதற்கும், செயற்படுத்துவதில் பங்கேற்பதற்கும் தேவையான வினைத்திறன்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்
- தகவல், மற்றும் தொழில் நுட்பத் துறைகளில் தேர்ச்சி பெறவேண்டும்.
- சமூகத்தினால் எது முக்கியமாக அறியப்படவேண்டும், எப்படி அறியப்படவேண்டும், பெறப்பட்ட அறிவின் உண்மையான தாற்பரியங்கள் என்ன என்பது போன்ற அறிவு உருவாக்கச் செயற்பாட்டில் செல்வாக்குச் செலுத்த வேண்டும்.

இன்று உலகின் வறிய மக்களைத் தாக்கும் பிரச்சினையாக எயிட்ஸ் நோய் உருவாகியிருந்தபோதும், அது கிட்டத்தட்ட 40 மில்லியன் மக்களைப் பீடித்திருந்தபோதும், இதற்கான மருந்துகளைக் கண்டு பிடிக்கும் ஆய்வுகள் போதியளவில் நடை பெறுவதில்லை. அதை விட்டு செல்வந்தர்களின் தேவையை யொட்டி இளமையாகவும் அழகாக வும் இருப்பது எப்படி என்கின்ற அழகுசாதன தொழிற்றுறைகளி லேயே அதிகமான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இங்கு அறிவு உருவாக்கத்தை எவ்வாறு சந்தை தீர்மானிக்கின்றதென்பதை நாம் பார்க்கலாம்.




### வினைத்திறன்கள் எதற்காக?

- நிறுவனக் கட்டமைப்புக்களை முகாமைத்துவப் படுத்துதற்காக
- எடுத்துக்கூறல் செய்வதற்காக
- புதிய நடைமுறைகள் செயற்படுத்தப்படுதலை ஊக்குவிப்பதற்காக
- இயற்கை மற்றும் தொழில் நுட்ப, சந்தை வளங்களை முகாமைத்துவப்படுத்துவதற்காக
- அரசியலில் பங்கேற்பதற்காக


### மெய்நிலையுணர்வறிதல் எதற்காக?

- தன்னை அறிதற்காக, தனது ஆற்றல்களை உணர்வதற்காக
- தன்னைச் சுற்றியுள்ள சூழயையும், சமூக அரசியல் கட்டமைப்புக்களையும் அறிதற்காக
- தனது உரிமைகளை அறிந்து கொண்டு தனது சமூகப் பொறுப்புக்களை வகிப்பதற்காக

### எடுத்துக்கூறல் எதற்காக?

- சமூக விழுமியங்களை மாற்றுவதற்காக
- அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புக்களில் பெண்கள் சமமாகப் பங்குபற்றுவதற்காக
- அதிகாரவலுவின் அடிப்படையில் இயங்கும் சமூக, அரசியல் பண்பாட்டினை மாற்றுவதற்காக
- பால், இனம், வர்க்கம், மதம் என்கின்ற பேதமின்றி சகலரும் சகல துறைகளிலும் சம வாய்ப்புக்களும் வளங்களும் பெறக்கூடிய வகையில் கொள்கைகள், சட்டங்கள், நீதி முறைகள் ஆகியவற்றைக் கொண்டு வருவதற்காக

## இவற்றைச் செய்வதற்கு பெண்கள் முதலில்................



**அணி திரள வேண்டும்,**

**நிறுவனமயப்படுத்தப்படல் வேண்டும்.**


பெண்கள் தனித்தனியே தத்தமது குடும்பங்களுக்குள் மட்டும் வாழ்ந்து கொண்டிருந்தால் ஒன்றையும் எய்த முடியாது இந்த முறைவழியெல்லாமே பெண்களும் சமூகமும் கூட்டாகக் கற்பதைப் பற்றியதாகும். கூட்டாகக் கற்பதற்கான ஒரு வழிமுறை பயிற்சியாகும்.

### பயிற்சியானது .........

- பெண்களும் ஆண்களும் கூடிக் கற்பதற்கும் இயங்குவதற்குமான மனப்பாங்குகளைப் பெற்றுக்கொள்ளல்
- அவர்கள் தங்கள் வாழ்நிலைகளையும் பிரச்சினைகளையும் ஆராய்தல், பகுப்பாய்வு செய்தல்
- அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தங்களுக்குள்ளேயும் வெளியேயும் என்னென்ன பலங்கள், பலவீனங்கள் இருக்கின்றனவென்று அறிதல், உணர்தல்.
- பலங்களை உபயோகிக்கவும், பலவீனங்களை இல்லா தொழிக்கவும் தேவையான வினைத்திறன்களைப் பெற்றுக் கொள்ளல்
- தாம் நிர்ணயிக்கும் மாற்றங்களை எய்துவதற்குத் தேவையான விழுமியங்களை வரித்துக் கொள்ளல்

### பயிற்சியின் இலக்கானது......

சகல மனிதரும் சம வாய்ப்புக்களையும் வளங்களையும் பெறக்கூடிய சமூக, பொருளாதார, அரசியல் கட்டமைப்புக்களை உருவாக்குவதற்கு ஏதுவான மனப்பாங்குகள், விழுமியங்கள், நடத்தைகள், வினைத்திறன்கள் ஆகியவற்றை பங்குபற்றுனர் பெற்றுக் கொள்ளுவதாகும்.



### பயிற்சியாளர் என்பவர்......

பங்குபற்றுபவர்கள் தமது வாழ்நிலைகள் பற்றிக் கூட்டாகச் சேர்ந்து கற்றலுக்கும், அவற்றை மாற்றுவதற்காகத் தாம் இயங்குவற்கும், ஏதுவான சூழ்நிலைகளையும் மனப்பாங்குகளையும் தோற்றுவிப்பவர்

ஒரு பயிற்சியாளர்,

- எடுக்கப்படும் விடயத்தைப் பற்றிய ஞானம் கொண்டவர்
- ஒரு நீதியான சமூகத்திற்கு அடிப்படையாகவுள்ள விழுமியங்களைத் தனதென வரித்துக் கொண்டவர்
- தொடர்பாடல் திறன்கள் உள்ளவர்
- கள அனுபவம் உள்ளவர்
- பங்குபற்றும் ஒவ்வொருவரும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு ஒருவரிடமிருந்து மற்றவர் கற்பதற்கான சூழ்நிலையைத் தோற்று விக்கும் கலையில் வல்லவர்

**எனவே ஒவ்வொரு பயிற்சியினதும் உள்ளடக்கங்களாவன,**


மெய்நிலையுணர்வறிதல்

பிரச்சினையை விளங்குதல்

பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய இயல்புகளையும் வினைத்திறன்களையும் பெறுதல்

# முரண்நிலைகளை

# உருமாற்றுவதற்கான கருவிகள்



# வன்முறையான முரண்நிலைகளின் படிநிலைகள்

***வன்முறையான முரண்நிலைகளின் படிநிலைகள்:***

- உருவாக்கம்
- அதிகரிப்பு அல்லது தீவிரமடைதல்
- நின்று பிடித்தல்
- தணிதல்
- தீர்வு
- புனரமைப்பு
- மீளிணக்கம்

**உருவாக்கம்**

உள்ளே கொதித்துக் கொண்டிருக்கும் சமூக முறுகல் நிலைகள், அதிருப்திகள், அரசின் அதிகாரத்தில் பங்கு கொள்ளும் கோரிக்கைகள் போன்றன வெளியில் தெரியும் காலம் முரண்பாடுகளின் உருவாக்கம் என்று கருதப்படும். இந்த நிலையில் சமூக மட்டத்திலும் அரசியல் மட்டத்திலும் ஏற்படுகின்ற பொது விவாதங்கள் இரு சாராருக்குமிடையேயுள்ள வித்தியாசங்களைப் பற்றியதாகவே இருக்கும். "அவர்கள் அது, நாங்கள் இது," "அவர்கள் அந்த நோக்கத்துடன் நடக்கிறார்கள் நாங்கள் இந்த நோக்கத்தைத் தான் அடைய விரும்புகின்றோம்" என்றவாறு இவை செல்லும். அரசியல்வாதிகள்தான் அனேகமாக இந்த "நாங்கள்" "அவர்கள்" விளக்கத்தை மக்களுக்குக் கொடுத்த வண்ணம் இருப்பார்கள். ஆனால் வன்முறை இன்னும் தோன்றியிருக்காது. இந்தப் படிநிலையில் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காவிடில் அல்லது அவை தகுந்த முறையில் கையாளப்படாவிடில் முரண்பாடுகள் அதிகரிக்கும்.

"நாங்கள்......."



"அவர்கள்......."




## அதிகரிப்பு

முரண்பாடுகள் அதிகரிக்கத் தொடங்கும். இந்நிலையில் அரசியல் தலைவர்களும் தொடர்பூடகங்களும் வன்முறை கலந்த மொழியைப் பிரயோகிக்கத் தொடங்குவர். கோரிக்கைகளும் அச்சுறுத்தல்களும் கெடு விதித்தலும் பரஸ்பரம் நடக்கும். பொது மக்களும் அவ்வாறே மொழியாடத் தொடங்குவர். இதன் பயனாக மூன்று விளைவுகள் தோன்றுகின்றன.

1. இலக்குகள் மாற்றமடைகின்றன. அனேகமாக அவை முன்னைய கோரிக்கைகளிலும்விட அதி தீவிரம் மிகுந்த கோரிக்கைகளாக வெளிவரத் தொடங்குகின்றன. உ+ம் : இலங்கையில் எழுபதுகளில் தமிழ் மக்களின் சமஷ்டிக் கோரிக்கை தனிநாடு கோரிக்கையாக மாற்றமடைந்தது.

2. சிறு வன்முறைச் சம்பவங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெடிக்கும். இது கடுமையாக ஒடுக்கப்படும். ஒடுக்குமுறை வன்செயல்களை மென்மேலும் அதிகரிக்குமேயொழிய தீர்வுகளைப் பற்றிச் சிந்திக்க விடாது. உ.ம்: எழுபதுகளில் தமிழ் மாணவர் பேரவையின் சிறு குண்டுத் தாக்குதல்கள், பயங்கரவாதத் தடைச்சட்டம்.







3. முரண்பாட்டில் ஈடுபட்டிருக்கும் இரு குழுக்களும் வெளிநாடுகளைத் தமது கோரிக்கைகள் அல்லது நடவடிக்கைகளுக்குத் துணையாக அழைக்க முனைவார்கள். உ.ம் : எண்பதுகளில் ஸ்ரீலங்கா அரசாங்கம் அமெரிக்காவுடனும் இஸ்ரேலுடனும் செய்து கொண்ட பாதுகாப்பு ஒப்பந்தம், எழுபதுகளிலும் எண்பதுகளிலும் தமிழ் கட்சிகள் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் தங்கள் நிலைப்பாட்டை ஆதரிக்க விடுத்த வேண்டுகோள்கள்.

## நின்று பிடித்தல்

இந்நிலையில் யுத்தம் மூண்டிருக்கும். இரு பக்கச் சமூகங்களும் யுத்தம் தொடரும் விதத்தில் தம்மையும் தமது சிந்தனைகளையும் ஒழுங்கமைத்துக் கொண்டிருக்கும். இரு சாராரும் மற்றவரைத்தான் ஆக்கிரமிப்பாளராக உருவகித்திருப்பார்கள். நீதியும் நியாயமும் தங்கள் பக்கத்தில் மட்டும்தான் இருப்பதாக வாதிடுவார்கள். இராணுவ வெற்றி வரும்வரை போராட வேண்டும் என்று உறுதியாக இருப்பார்கள். ஊடகங்களும், குறிப்பாக ஆதிக்கர்களின் ஊடகங்கள், எதிர்த்தரப்புச் செய்திகளை இருட்டித்தவண்ணம் இருக்கும். யுத்தத்திற்கு மக்களின் ஆதரவினைத் திரட்டுவதற்காகப் பொய்ச் செய்திகளைப் பிரசுரிக்கும். இந்த அதிகாரவலுப் போட்டியில் மக்கள் தாங்களும் ஈடுபடுவதனால், பிரசுரிக்கப்பட்ட பொய்களை முழு மனதோடு நம்புவதற்கு விரும்புவார்கள்.

இந்த நிலையில் எதிரியை நிலைகுலையச் செய்ய யுத்த களத்தில் வேறு வேறு அணிகளும் உருவாக்கப்படும். போராடும் குழுவின் ஒற்றுமையைக் குலைக்க அதற்குள்ளேயே ஏற்கனவே இருக்கும் பிரிவினைகள் தூண்டப்பட்டு பூதாகாரமாக ஆக்கப்படும். எப்படியெனில் போராடிக்கொண்டிருக்கும் ஒரு குழுவின் மத்தியிலேயே அதற்குப்

போட்டியாக வரக்கூடிய வேறு குழுக்களுக்கு எதிரணி ஆயுதமும் நிதியும் கொடுத்துதவுவது. அல்லது போராட்டத்தை ஆதரிக்கும் மக்கள் சமூகங்களில் (உ.ம் : முஸ்லிம், தமிழ்) ஏற்கனவே இருக்கக்கூடிய முரண்பாடுகளைத் தூண்டிவிட்டு அவர்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்துவது, இதனால் உருவாகிய முரண்நிலைகள் மேலும் மேலும் சிக்கலடைந்து தீர்க்கவே முடியாதது போன்ற உருவத்தை அடையும். வெளிநாட்டுத் தலையீடும் யுத்தத்தில் ஏற்பட்டிருக்கும்.



ஆயின், காலம் செல்லச் செல்ல, ஒரு முடக்கு நிலை உருவாகும். இரு சாராரும் ஒருவருக்கொருவர் அழிவை ஏற்படுத்தும் பலமான நிலையில் இருந்தாலும் தாம் முற்றாக வெற்றியீட்டுவதற்குத் தேவையான பலத்தைக் கொண்டிருக்க மாட்டார்கள்.

### தணிதல்

நடைபெறும் யுத்தம் மிகப் பயங்கரமான அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டும், வெற்றி கிட்டாதவொன்றாகவும் இருப்பதால் பேச்சுவார்த்தைகளுக்கான முன்னாயத்தங்கள் என்கின்ற பெயரில் வன்முறைகளின் உக்கிரம் தணிய ஆரம்பிக்கும். இந்நிலையின் ஆரம்பத்தில் யுத்த நிறுத்தங்கள் போரை மீள ஆரம்பிப்பதற்கான ஆயத்தக் காலமாக உபயோகிக்கப்படுவது சகஜமாகும். எங்கள் நாட்டிலும் நாம் 1990, மற்றும் 1994ம் ஆண்டுகளின் போர்நிறுத்தங்களின்போது இதனைக் கண்டோம். நாளடைவில் இதுவும் பயன் தராது விடவே யுத்த நிறுத்தங்களை நீடிக்கும் பேச்சுக்கள் ஆரம்பிக்கும்.

இந்த இடத்தில் தமது நிலைப்பாடுகளை விட்டுக்கொடுத்துவிட்டதாக இன்னும் ஒரு சாராரும் கூறமாட்டார். ஆனால் பேச்சுவார்த்தைகளுக்கு இணங்குவதாக வெவ்வேறு சமிக்ஞை மூலம் காட்டுவார். போர்க்கைதிகளை விடுவித்தல், மூன்றாம் தரப்பினரொருவரை இரகசியமாகத் தூது விடுதல், தமது பிரதேசத்தினுள் நுழையும் எதிர்த்தரப்பினரை உபசரிக்கும் விதங்கள் போன்ற நடவடிக்கைகளில் இச்சமிக்ஞைகள் தெரிவிக்கப்படும்.


இதே சமயத்தில் ஊடகங்களும் இருதரப்பு புத்திஜீவிகளும் இந்த அபிப்பிராயங்களைப் பரவலாகத் தெரிவித்துக் கொண்டு வருவதைக் காணலாம். இப்பொழுது இவர்களில் கணிசமான தொகையினர் மற்றைய பக்கத்தில் நியாயமான கோரிக்கைகள் இருப்பதாக ஒத்துக் கொள்வர். அல்லது நியாயத்துக்கு செவி சாய்க்கக் கூடிய நிலைமை இருக்கிறது என்று கூறுவர். ஸ்ரீலங்காவிலும், 1994ம் ஆண்டு சந்திரிகா அரசின் சமாதானத்துக்கான யுத்தம் என்கின்ற கோஷத்தை ஆதரித்த பல சிங்கள முற்போக்குவாதப் புத்திஜீவிகள் 2000ம் ஆண்டிற்குப் பின்னர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகத் தங்கள் நிலைப்பாட்டினை மாற்றிக் கொண்டதை இதற்கு உதாரணமாகப் பார்க்கலாம். இதே போன்று விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்தும் சமாதான உடன்படிக்கையின் தேவை படிப்படியாக உணரப்படுவதை நாம் பார்க்கலாம்.

அரசியல் தலைவர்கள் பதவி மாறுவதனால் இந்த நடவடிக்கைகள் ஊக்குவிக்கப்படலாம். முன்னைய நிலைமையைப் போலல்லாது புதிய தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகளுக்குச் செல்லாம் என மற்றப் பக்கம் தங்கள் நிலைப்பாடுகளை நியாயப்படுத்திக் கொள்ள முடியும். உ.ம் : 2001ம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்க பிரதம மந்திரியானபோது இணக்கப்பேச்சுக்களில் ஏற்பட்ட மாற்றங்கள்.










## தீர்வு



இந்நிலையில் தாங்கள் சில இலக்குகளை விட்டுக் கொடுக்கத் தயாராக இருப்பதாக இருசாராரும் தெரிவிப் பார்கள். அப்படியிருந்தாலும், பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் கட்சிகளினது நலன்களை மட்டும் கவனிப்பதாகத் தீர்வு யோசனைகள் இருப்பின் நிலைபேறான சமாதானம் கிட்டாது. உதாரணமாக, உதயமாகும் புதிய அரசியல் கட்டமைப்பில் இன்னாருக்கு இவ்வளவு பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதில் மட்டும் அக்கறை செலுத்தினால் மட்டும் போதாது. நல்லதொரு தீர்வு பின்வரும் தன்மைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

### தீர்வு

**பூரணமானது** - முரண்பாட்டுக்குக் காலாக இருந்த, இருந்து கொண்டிருக்கும் சகல காரணிகளும் சீர்திருத்தப்பட வேண்டும்.

**ஏற்புடையது** - சகல தரப்பினரும் அங்கீகரிக்கக்கூடிய தீர்வாக அமைய வேண்டும்.

**சுயமாக நிலைக்கக் கூடியது** - மூன்றாந் தரப்பினர் யுத்த நிறுத்தத்தைக் கண்காணிக்கத் தேவையில்லாதவாறு இருக்க வேண்டும்.

**விட்டுக் கொடுப்பு இல்லாதது** - விட்டுக் கொடுப்புத் தீர்வு (compromise solutions) என்ற பெயரில் இரு தரப்பினரினதும் இலக்குகள் பலியிடப்படக்கூடாது.

**புத்தாக்கம் பொருந்தியது** - தோன்றிய முரண்பாடுகளுக் கேற்ற மாதிரியும், இடையில் யுத்தத்தின் பயனாக உருவாகிய மேலதிக இன முரண்பாட்டுச் சிக்கல்களைத் தீர்க்கின்ற மாதிரியும், புது யுக்திகள் கையாளுவதாயும், புத்தாக்கம் நிறைந்ததாய் இருக்க வேண்டும்.

**வற்புறுத்தப்படாதது** - வெளிநாட்டுச் சக்திகளினால் வற்புறுத்தி சுமத்தப்படாததாக இருக்க வேண்டும்.

மேற்கூறிய ஒவ்வொரு நிபந்தனையும் திருப்திப்படுத்தப்பட வேண்டுமானால் அது மிகவும் கடினமான காரியமாகும். எனினும், ஒரு பூரணமான தீர்வுக்கு இவையெல்லாம் முக்கியம் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். ஒரு இலட்சியத் தீர்வை நோக்கி நாம் இலக்கு வைப்பதில் பாதகமில்லையே.

### புனர்வாழ்வு

புனர்வாழ்வுத் திட்டங்கள் ஒழுங்காக செயற்படுத்தப்பட்டால்தான் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சமூகங்களை மீண்டும் கட்டியெழுப்பி அவர்களை நாட்டில் சம அந்தஸ்து உள்ள பிரஜைகளாக பங்கு பெற வைக்கலாம். அத்துடன் இந்த நிலைமையில்தான் பிரிந்த இனங்களுக்கிடையில் இணக்கம் மீண்டும் ஏற்பட வாய்ப்புக்களும் ஏற்படுகின்றன.

புனர்வாழ்வுத் திட்டங்கள் பொதுவாக பின்வருமாறு :

- சமூக பொருளாதார உட்கட்டுமானங்களை மீள நிர்மாணித்தல் (வீடுகள், கிணறுகள், மலகூடங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், பாதைகள், சந்தைகள், தொழிற்சாலைகள் ஆகியவை)
- தொழில் விருத்தியை ஏற்படுத்தல் (சுயதொழில், தொழில் பேட்டைகள், தொழிற் பயிற்சிகள் போன்றவற்றை விருத்தி செய்தல்)
- அரசியல் கட்டமைப்புக்களை இடுதல், தேர்தல் சீர்திருத்தங்களைக் கொண்டுவரல், சிவில் நிர்வாகத்தை நிலைநாட்டல், சுதந்திரமான நீதித்துறையும் பொலிஸ் துறையும் இயங்கச் செய்தல்.
- போராளிகளுக்கான புனர்வாழ்வுத் திட்டங்களை மேற்கொள்ளுதல்.
- சமூக மட்டத்தில் ஆயுதப் பாவனையை படிப்படியாக ஒழித்தல்


### மீளிணக்கம்

யுத்தத்தினால் பிளவுபட்ட இரு குழுக்களிடையே புண்பட்ட உறவுகளை ஆற்றுவது மீளிணக்கமாகும். மீளிணக்கத்தை ஏற்படுத்த கடந்த கால இழப்புக்களும் துன்பங்களும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும், எதிர்காலத்துக்கான ஒரு பொதுவான தரிசனம் மக்கள் மனதில் தோன்ற வேண்டும். சாதாரணமாக, கடந்து போன சோதனைகளை நினைவு கூறுவதனால் தங்கள் மனங்களை ஆறுதற்படுத்துவதோடு வன்முறையினால் ஏற்படும் எதிர் விளைவுகளைப் பற்றி ஒரு சமூகம் கற்றுக்கொள்ளலாம் ; அங்கு பரஸ்பரம் மன்னிப்புக் கோர வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுகின்றன ; இதைக் கொண்டு எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றிய நம்பிக்கையினை மக்கள் மனதில் தோற்றுவிக்க முடியும். நிகழ்காலத்தில், புனர்வாழ்வு நடவடிக்கைகளில் சகல தரப்பினரும் பங்குகொள்வதனாலும் மீளிணக்க முறைவழிகள் துரிதப்படுத்தப்படுகின்றன.

**முரண்நிலைகளை உருமாற்றுவதன் மூலம் அதன் படிநிலைகளை சீக்கிரமாகத் தாண்டி தீர்வையும் மீளிணக்கத்தையும் நாம் அடையலாம். ஒரு நாட்டில் ஏற்படும் முரண்நிலைகளின் உருமாற்றத்தில் சமரசம், தீர்வு, புதிய அரசியலமைப்பு, தேர்தல் சீர்த்திருத்தங்கள் போன்ற பல படிநிலைகள் இருக்கின்றன. இவற்றை நாம் தொடர்ந்து வரும் பகுதிகளில் சற்று விரிவாகப் பார்க்கலாம்.**

**103.**

# சமரசம் ஏற்படுத்தும் முறைகள்




### 1. மீள்பரிசீலனையும் பிரச்சினைத்தீர்வும்

ஒரு பிரச்சினையை நாம் அமைதியாக இருந்து சிந்திக்கும்போது முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான பல கருத்துக்கள் எமது எண்ணத்தில் உதிக்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஆனால் எம்மில் வெகு சிலரே இப்படி சிந்திக்க எத்தனிக்கின்றனர். பெரும்பான்மையானோர் வெறுமனே தம்மைச் சுற்றி நடக்கும் விடயங்களுக்கான எதிர்வினைகளை மட்டும் தெரிவிக்கின்றனர். "என்ன நடந்தது?, "ஏன் அப்படிச் செய்தார்கள்?" , "இதனால் என்ன விளைவுகள் ஏற்படும்?" , "நான் எதற்குப் பயப்படுகின்றேன்?" "எனக்கு என்ன தேவை? என்று ஒவ்வொருவரும் சிந்திக்க ஆரம்பித்தாலேயே குழம்பிய நிலையில் இருக்கும் முரண்பாடுகள் தெளிவடையத் தொடங்குகின்றன. தெளிவடைந்த மக்களே முரண்நிலைகளை உருமாற்றும் நடவடிக்கைக்குத் தயாராவார்கள்.

### 2. ஒரு ஆலோசகரை நாடுதல்

எங்கள் சொந்த வாழ்க்கையில் இதை அனுபவ ரீதியாகக் கண்டிருப்போம். எங்கள் வாழ்க்கையில் எங்களால் தீர்க்க முடியாத முரண்பாடுகள் தோன்றும்போது நாம் ஒரு நம்பிக்கையான வெளி நபரிடம் சென்று ஆலோசனை கேட்பதில்லையா? அவ்வாறே எங்கள் சமூகத்தில் தோன்றும் முரண்பாடுகளைப் பற்றியும் ஒரு நம்பிக்கையான வெளி நபரிடம் சென்று ஆலோசனை கேட்கலாம். அவர் நாம் பார்க்காத கோணங்களிலெல்லாம் அந்தப் பிரச்சனைகளைப் பார்க்க வைப்பதனால் தீர்வைக் கண்டு பிடிப்பதில் உதவி செய்யக்கூடும்.

### 3. உரையாடல்

கலந்துரையாடல் என்பது நேரடியாகவே பிரச்சனைக்குரியவர்கள் தமக்குள் பேசிக்கொள்வது. இது உறவை வளர்ப்பதனால் முரண்நிலைகளின் உக்கிரமான தன்மையைக் குறைக்கும்.

> Dialogue is not possible without a profound love for the world and for the people. Love is both the foundation of dialogue and dialogue itself. Only responsible people - the subjects of their own history - can participate in dialogue, and it cannot exist in a situation of domination. Love is an act of courage, not of fear. Love is committment to other people.... If I do not love the world - love life - love people, I cannot enter into dialogue.
>
> Paulo Freire

### 4. பேச்சுக்கள் அல்லது இணக்கப்பேச்சுக்கள்

முரண்பாட்டில் சிக்கியிருக்கும் சகல தரப்பினரும் தாம் எல்லோரும் வெல்லக்கூடிய தீர்வினைக் காண் பதற்காக ஒருவரோடொருவர் உரையாடுதல். இது ஒரு வித பேரம் பேசுதல் போன்றதாகும். இதைப் பற்றிய விரிவான விளக்கம் பின்னால் தரப்பட்டுள்ளது.

### 5. அனுசரணையும் மத்தியஸ்தமும்

முரண்பாட்டில் சிக்கியிருக்கும் தரப்பினர் ஒருவரையொருவர் நம்பாமலும், ஒருவரோடொருவர் நேரடியாகப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடமுடியாத அளவுக்கு உறவுகள் சிதைந்தும் காணப்பட்டனரெனில் அனுசரணை உதவி செய்யும். இங்கு சகல பகுதிகளும் நம்பிக்கை வைக்கும் ஒரு மூன்றாந்தரப்பினரே அனுசரணையாளராக வருவார். ஒரு அனுசரணை யாளர், முரண் நிலையில் ஈடுபட்டிருப்போர் தங்கள் நிலைப்பாட்டைத் தெளிவாக ஒருவருக்கொருவர் எடுத்துச் சொல்லுவதற்கு உதவுவார். ஒரு பக்கத்தி லிருந்து மற்றப் பக்கத்துக்குச் செய்திகளைக் காவுவார்.

மத்தியஸ்தம் செய்யப்புகும் மூன்றாந்தரப்பினர், அதாவது மத்தியஸ்தர், ஒரு அனுசரணையாளரைவிட பேச்சுவார்த்தைகளில் அதிக பங்கு வகிப்பவராவார். அவர், ஒவ்வொரு பகுதியினதும் நிலைப்பாட்டையும் அதற்கான பின்னணியையும் மற்றப் பகுதிக்கு எடுத்துக் கூறுபவராகவும் இருப்பார். பேச்சுக்களில் ஈடுபடும் குழுவினருக்கிடையில் தொடர்பாடலை ஊக்குவிப் பார், ஒருவர் மற்றவருடைய கஷ்ட நஷ்டங்களைப் புரிந்து கொள்ள உதவுவார், கோரிக்கை வந்தால் மட்டும் தனது ஆலோசனையை வழங்குவார், அத்துடன் எங்காவது பேச்சுக்கள் ஸ்தம்பிதம் அடைந்தால் அதை முன்னோக்கித்தள்ள வழி முறைகளைச் சொல்லித் தருவார். ஆனால் அவர் தம்முடைய சொந்தக் கருத்துக்களை முன்வைக்கவோ, பேச்சுவார்த்தைகளின் போக்கில் செல்வாக்குச் செலுத்தவோ முடியாது.

### 6. நெம்பித்தள்ளும் மத்தியஸ்தம்

இந்த நடைமுறையில் மத்தியஸ்தம் செய்பவர் தனது செல்வாக்கையும் பயன்படுத்தமுடியும். முரண் படும் குழுவினரை ஒரு உடன்பாட்டுக்கு வரும்படி அழுத்தம் கொடுக்க இவரால் முடியும். அதற்காக சில சன்மானங்களையும் இவர் அளிக்கக்கூடும். இதற்கு புருண்டி சமாதான நடைமுறையை உதாரண மாகக் காட்டலாம். இங்கு இடையீடு செய்த திரு. நெல்சன் மண்டேலா அவர்கள், புருண்டியின் அபிவிருத்தித் திட்டங்களுக்கென ஏராளமான நிதிகளை மேற்கு நாடுகளிலிருந்து தருவித்து, ஒரு சமாதானத் தீர்வினை எட்டினால்தான் இந்நிதிகள் வழங்கப்படும் என்னும் நிபந்தனையையும் விதித்து தீர்வு காணலைத் துரிதமாக்கினார்.

### 7. நடுத்தீர்ப்பு

பேச்சுவார்த்தைக்கும் நடுத்தீர்வுக்கும் (Arbitration) உள்ள வேறுபாடுகளை இங்கு அறிதல் முக்கியமானது. நடுத்தீர்வு என்பது முரண்படும் குழுவினர் அதில் சம்பந்தப்படாத மூன்றாந்தரப்பொன்றிடம் தங்கள் வழக்கைக் கொண்டு சென்று அவர் தரும் தீர்ப்பினை ஏற்றுக் கொள்ளுவதாகும். பேச்சுவார்த்தையைப் போலல்லாது நடுத்தீர்வில் ஒரு கட்சிக்குச் சாதகமான தீர்ப்பு அமையலாம். இத்தீர்ப்பு, ஒன்றில் கட்டாயம் ஒழுக வேண்டியதொன்றாக இருக்கலாம், அல்லது அதனை வெறுமனே அவர்கள் கவனத்துக்குக் கொண்டு வருவதாக இருக்கலாம். எதுவென்றாலும் நடுத்தீர்வு பேச்சுவார்த்தைகளுக்கு உதவியாக இருக்கும். ஏனெனில் இதில் கிடைக்கும் தீர்வுகளைக் கொண்டு பேச்சுவார்த்தைகளை முன்னோக்கித் தள்ளும் வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. பேச்சுவார்த்தைகள் முரண்படும் தரப்பினருக்கிடையே இருக்கும் அதேவேளை நடுத்தீர்வில் ஒவ்வொரு தரப்பும் நடுவருடனேயே தனது தொடர்பாடலை மேற் கொள்ளும்.

### நீதித்துறை

நீதிமன்றத்திற்கு வழக்காக எடுத்துச் செல்லல். உதாரணம் காவேரி நீர்ப் பிரச்சனையை தமிழ்நாடும் கர்நாடகா மாநிலமும் நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றது. இங்கு நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு அறுதி முடிவாகின்றது. நடுத்தீர்ப்புப் போலன்றி நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பினை மீற முடியாது.

### அதிகாரவலு

சண்டையிடும் இருதரப்பினரை வலுக்கட்டாய மாகப் பிரித்து வைத்து அவர்களை ஒருவரோடொருவர் பேச வைத்தல் வலுவைப் பிரயோகித்தல் எனப்படும். அமைதி காக்கும் படைகள் இதற்கு உதாரணங்களாகும். ஆயின், வலு என்பது தனியே ஆயுத ரீதியாகத் தெரிவிக் கப்படும் வலு மாத்திரமல்ல. மக்கள் இயக்கங்கள் தெரிவிக்கும் அபிப்பிராயங்களும் சண்டையிடும் இருசாராரைப் பிரித்து வைக்கும் பெருவலுவாகலாம்.

**முரண்நிலைகள் உருமாற்றப்படும் முறை வழிகளைத் தீர்மானிக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சங்கள் :**

- போக்கினை ஸ்தம்பித நிலைக்குக் கொண்டு வரும் விடயங்கள் எவையென்று கணித்தல்
- காலம் கொண்டுவரும் வாய்ப்புக்களை உப யோகித்தல்
- பரஸ்பர நம்பிக்கையை வளர்த்தல்
- நெகிழ்ச்சித் தன்மையோடு இருத்தல்


எப்படியிருப்பினும், இவையெல்லாம் அதிகாரவலு வின் அடிப்படையில் ஏற்படும் முரண்நிலைகளை உரு மாற்ற போதாதவையென்பது கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாகும். ஏனெனில் இம்முரண்நிலைகளின் உருமாற்றத்திற்கு அங்கு அதிகாரம் பகிரப்பட வேண்டும். தமக்கிருக்கும் அதிகாரத்தை விட்டுக் கொடுப்பதற்குத் தயாரானவர்கள் எவருமில்லையே. எனவேதான், அதிகாரவலுவின் அடிப்படையில் ஏற்படும் அரசியல் முரண்நிலைகளை நாம் பல மட்டங்களில். பல யுக்திகளையும் மூலோபாயங்களை யும் ஒருசேரப் பிரயோகித்தால்தான் உருமாற்ற முடி யும்.

அரசியல் தளங்களில் போரிடும் இரு பக்கங்கள் அனேகமாக பேச்சுவார்த்தைகள் மூலம்தான் தீர்வுகளை நாடும் வழக்கம் இருப்பதனால் பேச்சுவார்த்தைகள் நிகழ்த்துவது பற்றி இப்போது விரிவாக நோக்குவோம்.

தமக்கிருக்கும் அதிகாரத்தை விட்டுக் கொடுப்பவர் எவரு மில்லை. அதிகாரவலுவின் அடிப் படையில் உருவான முரண் நிலைகளைத் தீர்ப்பதற்கு, பல மட்டங்களில் பலவிதமான மூலோபாயங்களையும் யுக்திகளை யும் ஒரு சேரப் பிரயோகிக்க வேண்டும். அரசியல் அடிப்படை யிலான முரண்நிலைகள் யாவும் இந்த வகைக்குள் அடங்கும்.

# இணக்க பேச்சுக்கள் நிகழ்த்துவதன் முறைகள்

தற்போது விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் பற்றிய பல சந்தேகங்களை பல மட்டங்களில் மக்களும் சமூகப் பணியாளரும் எழுப்புவதை நாம் பொதுவாகக் காணலாம். அவர்களுக்கெல்லாம் பயனளிக்கும் விதத்தில் இங்கு பேச்சுக்களை நிகழ்த்துவதன் சூட்சுமங்களைத் தருகின்றோம்.




## பேச்சுக்களின் படிநிலைகளாவன,

- பேச்சுக்களுக்காக தயார் செய்தல்,
- பேச்சுக்களை ஆரம்பித்தல்,
- மூலோபாயங்களை வகுத்தல்,
- தீர்மானங்களை எடுத்தல் அல்லது பிரச்சினை களுக்கு ஒன்றொன்றாகத் தீர்வு காணுதல்,
- காணப்பட்ட தீர்வுளைச் செயற்படுத்தல்

## பேச்சுக்களை நடத்துவதைப் பற்றி சுருக்கமாக....

- ➢ பேச்சுக்களுக்கு முன்.... பேச்சுக்களுக்கான பேச்சுக்கள்
- ➢ பேச்சு நிகழ்த்துவதற்குத் தேவையான சட்டகம் உருவாக்கும் முறைகள்
- ➢ பேச்சுக்களின் உருவங்கள்
- ➢ பேச்சுக்களின் போது தகவல் பரிமாற்றமும் தொடர்பாடலும் செய்யும் முறைகள்
- ➢ பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் முறைகள்
- ➢ பேச்சுக்களின் நடைமுறைகளை முகாமைத்து வப் படுத்தல்
- ➢ பேச்சுக்களுக்கான கால வரையறைகளை நிர்ணயிக்கும் முறைகள்
- ➢ பேச்சுக்களின் முடிவில் தீர்மானங்களை மேற்கொள்ளும் முறைகள்
- ➢ பேச்சுக்களை மேற்கொள்ளும் யுக்திகளின் அடிப்படைக் கொள்கைகள்
- ➢ பேச்சுக்களின் ஸ்தம்பித நிலையை உடைக்கும் முறைகள்

ஒரு நல்ல சமாதான முறைவழி யுத்தத்தின் முடிவுக்குப் பின்னாலுள்ள காலத்தில் தோன்றக்கூடிய மேலும் சிக்கலான விடயங்களைக் கையாளுவதற்கான அத்திவாரத்தினை இடுகின்றது.



அனேகமான நாடுகளின் பிரச்சினைகளில் பேச்சுக்களை ஆரம்பிப்பதே ஒரு நீண்ட முறை வழியாகும். இதனை "பேச்சுக்களுக்கான பேச்சுக்கள்" என்று அழைப்பார்கள். இந்தக் கட்டத்தில், எதைப் பற்றிப் பேசுவது, யார் பங்குபற்றுவார்கள், மத்தியஸ்தம் வகிக்க யார் யார் இருப்பார்கள், பேச்சுக்களுக்கான அடிப்படையான கொள்கைகள் என்ன, அதன் நிகழ்ச்சி நிரல் கால வரையறைகள் என்ன, எந்த இடத்தில் நடைபெறவேண்டும் என்பது போன்ற விடயங்களே பேச்சுக்களுக்கான பேச்சுக்களில் கையாளப்படும். முரண்படும் குழுவினர் தங்களுக்குள் தொடர் பாடல்களை அதிகரிப்பதும். நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதும், பேசப்போகின்ற விடயத்தைப் பற்றிய ஒரு விளக்கத்தைப் பெற்றுக் கொள்வதுமே பேச்சுக் களுக்கான பேச்சுக்களின் மறைமுக நோக்கங்களாகும்.

இதே போல் பேச்சுக்களை ஆரம்பிப்பதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும். இதற்கு அதில் ஈடுபடும் ஒவ்வொரு குழுவினரும் கையாளும் யுக்திகள் அவர்கள் பேச்சுக்களினூடாக எய்த நினைக்கும் நோக்கங்களைத் தெளிவுபடுத்தும். பேச்சுக்களில் ஈடுபடும் சகல தரப்பினரும் இலாபம் பெறும் வண்ணம் தங்கள் யுக்திகளைக் கையாளுபவர்களை, நேர்மையாக பேச்சுக்களை அணுகுபவர்கள் என்று ஓரளவு கொள்ள லாம். சகலரும் நன்மை அடையும் வண்ணம் நடத்தப் படும் பேச்சுக்களில் கையாளப்படும் யுக்திகளில் சில :

- பேச்சுக்களை ஆரம்பிக்கும்போதே முக்கிய விடயங்களைத் தொடாமல் பேச்சுக்களின் முறை வழியினைப் பற்றிப் பேசுதல்.
- கொடுக்கக்கூடிய சில சலுகைகளைக் கொடுத்தல்.
- ஒவ்வொரு குழுவினரினதும் தேவைகளை இனம் கண்டு அவற்றைப் பூர்த்தி செய்யும் வகையில் தீர்வுகளைத் தேடுதல்.
- ஏதாவது விட்டுக் கொடுப்பு நிகழ்கின்றதாயின் அதைப் பற்றித் தெளிவாக விளக்குதல்
- கடினமான விடயங்களை வேறுபடுத்தி அவற்றை ஆழமாக ஆராய்ந்து தீர்வுகளைப் பெறும்படி உபகுழுக்களுக்குப் பணிப்புரை வழங்குதல்
- கூடியளவு முரண்பட்டுக்கொண்டிருக்கும் சாராரை ஆரம்பத்திலேயே ஏதும் ஒப்பந்தங்களில் சிக்க வைக்காமலிருத்தல் (அதனால் அவர்கள் பின்பு மனஸ்தாபத்துடன் பேச்சுவார்த்தைகளை உடைக்க முற்படலாம்.)

நல்ல தொடர்பாடலில் கையாளப்படும் சகல யுத்திகளும் பேச்சுக்களுக்கு உதவும். அவைதான் எந்தப் பேச்சுக்களினதும் முக்கிய மூலோபாயங்களாகின்றன. அத்துடன் சேர்த்து முக்கியமாக ஒவ்வொரு குழுவும் பேரம் பேசுதலில் தனக்கிருக்கும் வலு என்ன என்பதைத் துல்லியமாகக் கணக்கிட்டுக் கொள்ளுதல் அவசியமாகும். இவற்றை இன்னும் விரிவாகக் கீழே நோக்குவோம்.




## பேச்சுக்களுக்கு முன்....
## பேச்சுக்களுக்கான பேச்சுக்கள்

பேச்சுக்களுக்கு முன் இரு சாராரும் விடயங் களைக் கலந்துரையாடக்கூடிய சட்டகங்களை (frame-work) தயாரிப்பார்கள். இந்தச் சட்டகம், நடை முறைகள், கட்டமைப்புக்கள், பாத்திரங்கள், நிகழ்ச்சி நிரல்கள் போன்றவற்றை உள்ளடக்கும்.

**பேச்சு நிகழ்த்துவதற்குத் தேவையான சட்டகத்தின் முக்கிய அம்சங்கள் :**

- அடிப்படை விதிகளையும் நடைமுறை களையும் தீர்மானித்தல்
- ஒவ்வொரு பக்கமும் யாரைப் பிரதிநிதித்து வப் படுத்துவது என்பதைத் தீர்மானித்தல்
- பேச்சுக்களுக்கு இருக்கக்கூடிய தடைகள் பற்றியும் விதிக்கப்படக்கூடிய முன்னிபந்த னைகளைப் பற்றியும் கருதுதல்
- பேச்சுக்களுக்குத் தேவையான நிதி மற்றும் ஏனைய வளங்களைப் பெற்றுக்கொள்ளல்

- என்ன ரூபத்தில் பேச்சுக்கள் நிகழும் என்று தீர்மானித்தல்
- பேச்சுக்கள் நிகழப்போகும் நாடுகளையும் இடங்களையும் தேர்ந்தெடுத்தல்
- பேச்சுக்கள் ஈடுபடும் சகல தரப்பினருக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றத்தையும் தொடர்பாடல் முறையையும் மேற் கொள்ளல்
- ஒவ்வொரு நிலைப் பேச்சுக்களின் முடிவிலும் எதிர்பார்க்கப்படும் விளைவுகள் யாதாயி ருப்பினும் அவற்றின் அடிப்படைக் கொள்கை களைக் கலந்துரையாடித் தீர்மானித்துக் கொள்ளல்
- பேச்சின் போக்குகளை முகாமைத்துவப் படுத்தல் எப்படி என்று தீர்மானித்தல்
- கால வரையறைகளைத் தீர்மானித்தல்
- தீர்மானம் எடுக்கும் நடைமுறைகள் பற்றி முடிவுகள் எடுத்தல்
- பேச்சுக்கள் ஸ்தம்பித நிலையை அடையும் போதெல்லாம் அந்நிலையை முறிப்பதற்கான கருவிகளைத் தீர்மானித்துக் கொள்ளல்.
- மூன்றாம் தரப்பினரின் மத்தியஸ்தத்தின் தேவையை நிர்ணயித்தல்.



## பேச்சுக்களின்உருவங்கள்

பின்வரும் ஏதோவொரு முறையிலோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முறைகளிலோ பேச்சுக்கள் வடிவமைக்கப்படலாம்.

- அரசாங்கம், இராணுவம், அரசு அதிகாரிகள் போன்றவர்கள் பங்குபற்றும் பெரிய அளவி லான மாநாடுகள்
- முக்கிய பேச்சாளர்களின் உச்சி மாநாடுகள்
- வட்ட மேசை மாநாடுகள்
- முன்னும் பின்னுமாக சகல தரப்புக்களையும் சந்தித்து கருத்துக்கள் பரிமாற உதவி செய்யும் மத்தியஸ்தம்
- இவ்விரண்டு பகுதியினராக சந்தித்தல்
- உபகுழுக்களை நிறுவி அவற்றில் கலந்துரை யாடி பெறப்பட்ட முடிவுகளை பொதுச் சபையில் கலந்துரையாடுதல்
- பொதுச்சபையில் முரண்படும் சிறிய பகுதியினர் தாமும் தங்கள் கருத்துக்களையும் எல்லோர் கவனத்துக்கும் முன்வைத்தலுக் கேதுவாக 'சிறுபான்மை அறிக்கைகளை'த் தயாரித்தல்.

## பேச்சுக்களின்போது தகவல் பரிமாற்றமும் தொடர்பாடலும் செய்யும் முறைகள்

எந்தப் பேச்சுக்களிலும் ஈடுபடுவர்கள் அரசியல் தலைவர்களாகத்தான் இருப்பார்கள். மக்களின் ஆதரவு எப்பொழுதும் அரசியல் தலைவர்களுக்கு அவசியம் என்பதனால் மக்களின் நாடித்துடிப்பை நோக்கிய வண்ணம்தான் அவர்கள் தங்கள் ஒவ்வொரு அடியை யும் எடுத்து வைப்பர். பேச்சுக்களில் ஈடுபடும் ஆயுதக் குழுக்களுக்கு இது அவ்வளவு முக்கியமில்லா விட்டாலும்கூட ஒரு குறிப்பிட்ட அளவிலாவது தங்கள் ஆதரவுத் தளங்களின் அங்கீகாரங்கள் அவர்களுக்கும் வேண்டுகின்றன. இதனால் பேச்சுக்களின்போது நிகழும்

பேரங்களை வெளியுலகுக்குத் தெரியப்படுத்துவதிலும் பல சூட்சுமங்கள் அடங்கியிருக்கின்றன.

எல்லாவற்றையும் வெளிப்படையாகக் கூறினால் சமூக மட்டத்தில் தீவிரவாதக் கொள்கை உள்ளவர்களினால் பேச்சுக்கள் குழப்பப்படலாம். எல்லாவற்றையும் இரகசியமாக வைத்திருந்தாலும் நிறைய விட்டுக் கொடுப்புக்கள் நிகழ்கின்றனவோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்து அவர்கள் பேச்சுக்களுக்கான ஆதரவு கொடுப்பதில் பின்வாங்கி அவற்றை முறிக்கலாம். ஆகவே பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொருத்தமான முறைகளில் பேச்சுக்களைப் பற்றி தகவல் பரிமாற்றங்கள் நிகழ வேண்டும். இத்தகவல் பரிமாற்றங்களுக்கான வெவ்வேறு முறைகள் கீழே கோடு காட்டப்படுகின்றன:

- யாருக்கும் தெரியவராத இரகசிய பேச்சு வார்த்தைகள்
- மறைவில் நிகழும் பேச்சுவார்த்தைகள், சகல தரப்பினரின் அனுமதியுடனும் இடைக் கிடையே வெளியுலகத்துக்கு விடப்படும் அறிக்கைகள், பேச்சுக்களில் ஈடுபடும் சகல தரப்பினரின் ஒத்துழைப்புடனும் செயற் படுத்தப்படும் ஊடகத்தடை
- ஒவ்வொரு பகுதியினரும் தமக்கு விரும்பிய முறையில் ஊடகங்களுடன் தொடர்பு கொள்ளுதல்
- பேச்சுக்களுக்குத் தலைமை வகிப்பவரையும் மக்களுடனான தொடர்பாளர் ஒருவரையும் தேர்ந்தெடுத்தல்
- எல்லோர் சார்பிலும் ஊடகத்துடன் தொடர்பு களை வைத்துக் கொள்ள நிரந்தரமான ஒரு ஊடக செயலகத்தினை தாபித்தல்
- ஒரு செயலக மையத்தினை எல்லோருக்கும் பொதுவாக தாபித்து சகல தகவல்களும் அதற் கூடாக எல்லாரையும் போய்ச் சேரும்படி வகை செய்தல்.
- பேச்சுக்களில் பங்குபற்றும் தரப்பினர்களுக் கிடையில் தொடர்புகளைப் பேணுவதற் கென உபகுழுக்களை நியமித்தல்.






**பேச்சுக்களுக்கான நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்கும் முறைகள்**

அ. பேச்சுக்களுக்கு முன்பான முறைவழிகளைத் தீர்மானித்தல். இது சிறிய எண்ணிக்கையுடைய பிரதிநிதிகளுடன் இரகசியமாகவோ பகிரங்கமாகவோ நிகழும்

ஆ. முறையான பேச்சுவார்த்தைகளை ஏற்பாடு செய்து நிகழ்ச்சி நிரலைத் தீர்மானித்தல்

இ. முக்கியமானதும் முரண்பாடுகள் தோன்றக் கூடியதுமான விடயங்களின் அடிப்படையில் பேசும் விடயங்களை அடுக்கிக் கொள்ளல்

ஈ. ஒரு நீண்ட நோக்குடைய பேச்சுவார்த்தைத் தொடர்களைத் தீர்மானித்துக் கொள்ளல். இது ஒன்றின் பயன்விளைவுகளிலிருந்து அடுத்ததை முன்னெடுத்துச் கொண்டு போகும்.



## பேச்சுக்களின் நடைமுறைகளை முகாமைத்துவப்படுத்தல்

பின்வரும் ஏதோவொரு பொருத்தமான முறையில் பேச்சுக்களின் நடைமுறைகளை முகாமைத்துவப் படுத்தலாம். பேச்சுக்களில் ஈடுபடும் இருசாராரும் எந்த அளவில் முரண்பட்டிருக்கின்றனர் என்பதைச் சார்ந்தே இது தீர்மானிக்கப்படும்.

அ. பேச்சுக்களின் தலைமை ஸ்தானத்தை சகல தரப்பினரும் பங்கிடுவதன் மூலம் யாரும் ஒருவர் அனுகூலம் அடையாவண்ணம் பாதுகாத்தல்

ஆ. சகலரும் ஆகக் குறைந்த பட்சம் ஏற்றுக் கொள்ளும் தரப்பினைத் தலைமை வகிக்கத் தேர்ந்தெடுத்தல்

இ. தலைமை வகிப்பவருக்குத் தேவையான வினைத் திறன்கள் எவையென்று தீர்மானித்து அதற்காக அவரைத் தயாரித்தல்

ஈ. முரண்பாடான கருத்துக்கள் அடிக்கடி தோன்றிய வண்ணம் இருந்தால் அந்நிலையை ரத்துச்செய்து பேச்சுக்களைத் திரும்ப நடைமுறைக்குக் கொண்டு வரத் தேவையெனில் அதற்குரிய அதிகாரம் உடையவரைத் தேர்தெடுத்தல்.

உ. பேச்சுக்களை எப்படியாவது தக்கவைத்து ஒத்துழைப்பைப் பெறுவதுதான் முக்கிய தேவை யெனில் அதற்குரிய பலம் குறைந்த தரப்பினரைத் தலைமை தாங்க விடுதல்

## பேச்சுக்களுக்கான காலவரையறைகளை நிர்ணயிக்கும் முறைகள்

காலவரையறையை முதலிலேயே எல்லோர் மத்தியிலும் தீர்மானித்துக் கொள்ளல் அல்லது கால வரையறை இல்லாமல் பேச்சுக்களைத் தொடருதல்

- யதார்த்தபூர்வமான வரையறைகளை ஆராய்ந்து நிர்ணயித்தல்
- ஒரு பூரணமான தீர்வைப் பெறும் திட்டங்களை இடுதல்
- உரிய முடிவுகளுக்கு பேச்சுக்கள் வராவிடில், தொடர்ந்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுப் பதற்கான காலத்தைத் திட்டமிடல்.

## பேச்சுக்களின் முடிவில் தீர்மானங்களை மேற்கொள்ளல்

ஒவ்வொரு பேச்சுக்களின் முடிவிலும் அதை யொட்டி எவ்வாறு தீர்மானங்கள் மேற்கொள்ளப்படப் போகின்றன என்பதை முன்கூட்டியே முடிவு செய்தல் முக்கியமாகும்.

அ. பேச்சுக்களில் கலந்து கொள்ளும் சகலரும் ஒத்துக்கொண்டால்தான் தீர்மானங்கள் நிறைவேற முடியும் என்று கொள்ளல்

ஆ. ஒரு எளிய பெரும்பான்மை போதுமாக இருத்தல்

இ. எல்லோரையும் ஒரு நிலைக்குக் கொண்டுவர சமரச முயற்சி செய்து அதன்பிறகே அத் தீர்மானத்தை மேற்கொள்ளல்

ஈ. போதுமான அளவு சமரசத்தினைக் கருதுதல்

உ. இரகசிய வாக்கெடுப்பு நிகழ்த்துதல்

ஊ. பகிரங்க வாக்கெடுப்பு நிகழ்த்துதல்

எ. மக்கள் வாக்குக்கணிப்பு நிகழ்த்த ஒத்துக்கொள்ளல்

## பேச்சுக்களை மேற்கொள்ளும் யுக்திகளின் அடிப்படைக் கொள்கைகள்

**அ. பரஸ்பர நம்பிக்கையை மேற்கொள்ளும் யுக்தி களின் அடிப்படைக் கொள்கைகள்**

- பேச்சுக்களின் அந்தரங்கத்தன்மையைப் பேணுதல்
- பேச்சுக்களைத் தொடர்ந்து நடத்தும் திறனைக்காட்டலும், அதில் அர்ப்பணிப்பை வெளிக் காட்டலும்
- எதிர்த்தரப்பினரின் நிலைப்பாட்டினை அனுதாபத்துடன் விளங்கிக் கொள்ளல்
- தீர்வொன்றில் முழு நம்பிக்கை வைத்தல்

ஆ. தெளிவை ஏற்படுத்தல்

திறந்த கேள்விகளைக் கேட்டல். அதாவது முதலிலேயே பதிலை அனுமானித்துக் கொண்டு கேள்விகளைக் கேட்காமல் மற்றவருடைய நிலைப்பாட்டினை விளங்கும் நேர்மையான முயற்சியை மேற்கொள்ளல்.



### பேச்சுக்களின் ஸ்தம்பித நிலையை உடைத்தல்

அ. பேச்சுக்களில் விசுவாசமாக இருக்கும் தரப்பினர்களைக் கொண்டாவது ஒரு உட்கூட்டணியை அமைத்தல்.

ஆ. உத்தியோகபூர்வமற்ற முறைகளில் நட்பின் அடிப்படையில் சந்தித்து பேச்சுக்களில் முடிவு காண எத்தனித்தல்

இ. உப குழுக்களை அமைத்து அவை மூலமாக ஏதேனும் தீர்வுக்கு வர முயற்சித்துப் பார்த்தல்

ஈ. மத்தியஸ்தம் வகிப்பவருடனோ அல்லது பேச்சுக்களுக்குத் தலைமை தாங்குபவருடனோ ஒவ்வொரு தரப்பினரையும் தனித்தனியாக பேச வைத்து அவர்கள் தங்கள் நிலைப்பாடுகளைத் தெளிவாக்கவும், குறிப்பிட்ட விடயத்தைப் பற்றிய தத்தமது எதிர்பார்ப்புக்கள் தேவைகளைத் தெரிவிக்கவும் வாய்ப்புக்களைத் தருதல். இது ஒவ்வொருவரும் தத்தமது இடங்களில் இருந்து கொண்டும் செய்யலாம், அல்லது பேச்சுக்கள் நடக்கும் இடத்தில் அருகருகே வசித்துக் கொண்டும் செய்யலாம்.

உ. ஒவ்வொரு தரப்பினரும் தங்கள் ஆதரவாளர்கள், மக்கள் தொகுதியினர் (Peoples constituency) மத்தியில் அங்கீகாரம் தேட அவகாசம் கொடுத்தல். இது ஆலோசனையை நாடுவதாகவோ, கருத்துக் கணிப்பு நடத்துவதாகவோ இருக்கலாம்.


சமாதான முறைவழி சாதாரணமாகவே பல வருடங்களுக்கூடாக செயற்படுத்தப்படுவதாகும். இது யுத்தம் அல்லது வன்முறை நிகழ்ந்துகொண்டிருக்கும் காலகட்டத்திலேயே ஆரம்பிக்கலாம். அவ்வாறு ஆரம்பித்தது யுத்த நிறுத்தம் மற்றும் பேச்சுவார்த்தைகள் என்கின்ற படிநிலைக்கூடாகத் தொடர்ந்து வன்முறை முடிவுற்று தீர்வுகள் செயற்படுத்தப்படும் காலம் வரையிலும் நீடிக்கும். யுத்தத்தின் முடிவுக்குப் பின்னாலுள்ள காலத்தில் தோன்றக்கூடிய மேலும் சிக்கலான விடயங்களைக் கையாளுவதற்கான அத்திவாரத்தினை ஒரு நல்ல சமாதான முறைவழி இடுகின்றது.

**பேச்சுக்களின் அந்தரங்கத் தன்மையைப் பேண வேண்டும்.**

**எதிர்த்தரப்பினரின் நிலைப்பாட்டை அனுதாபத்துடன் விளங்கிக் கொள்ள வேண்டும்.**

**தீர்வொன்றில் முழு நம்பிக்கை வைத்து பேச்சுக்களில் எமது அர்ப்பணிப்பைக் காட்ட வேண்டும்.**

## அபிவிருத்திப் பணிகளில் முரண்நிலைகளை உருமாற்றும் தேவைகள்




இதுவரை முரண்நிலைகள் அரசியல் தளங்களில் தோன்றுவதைப் பற்றி நாம் பார்த்தோம். ஆனால் முரண்நிலைகள் அரசியல்துறையில் மட்டுமல்ல, அபிவிருத்தித் துறையிலும் பரவலாகக் காணப்படும் நிலையாகும். அரசியல் அபிவிருத்தியைவிடவும் உயர் மட்டங்களில் நடத்தப்படுகின்றதெனினும் அரசிய லுக்கும் அபிவிருத்திப் பணிகளுக்கும் பல ஒற்றுமைகள் உண்டு.

பரந்து பட்ட மக்கள் தொடர்பு

பாரிய நிதிகளைக் கையாளுதல்

இவையிரண்டினதும் விளைவால்..... அதிகார வலுவை உருவாக்கல்.

இவற்றிலெல்லாம் அரசியலும் அபிவிருத்தியும் ஒரேமாதிரி தொழிற்படுகின்றன.

இன்னும் கூறப்போனால் அபிவிருத்தித் துறைகளில் உள்ளவர்கள் அரசியல்வாதிகளாக மாறும் சாத்தியக் கூறுகளும் நிறைய உண்டு எனவும் கூறலாம். எனவே அரசியலில் காணப்படும் அதிகாரப் போட்டிகள், முரண்பாடுகள், அவற்றின் பயனாக விளைந்த முரண்நிலைகள் யாவையும், அரசியலை விட குறைவென்றாலும், அவை அபிவிருத்தியிலும் உண்டு. அபிவிருத்தித் துறையில் காணப்படும் முரண்நிலைகளை பின்வரும் அம்சங்களாகப் பிரிக்கலாம்:

- நிறுவனங்களுக்கிடையேயான போட்டி
- தனிநபர்களுக்கிடையே தமது செல்வாக்கு தொடர்பாகவோ அல்லது நிதி கையாளுதல் தொடர்பாகவோ ஏற்படும் போட்டிகள் அல்லது முரண்நிலைகள்
- கருத்தியல் ரீதியான முரண்பாடுகள்
- சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்கும் வர்த்தக(சுய இலாப) நலன்களுக்கும் இடையிலான முரண்பாடு
- வெவ்வேறு திட்டங்களுக்கு கோரிக்கை விடுக்கும் வெவ்வேறு சமூகத்தவர்களுக்கிடையில் தோன்றும் முரண்பாடுகள்
- அரசியல்வாதிகள் தங்கள் சொந்த நலன் குறித்து பாரபட்சம் காட்டி அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்துவதால் மக்கள் குழுமங்கள் மத்தியில் ஏற்படும் முரண்பாடுகள்

இம்முரண்நிலைகள் தீவிரமடைந்து எமது சமூக வாழ்வில் தீராத வடுக்களை ஏற்படுத்தாது தடுக்க வேண்டுமாயின், அவை தீர்க்கப்படக்கூடிய தளங்களை நாம் உருவாக்குவது அவசியமாகும்.

**அபிவிருத்தித் திட்டங்களின் முரண்நிலைகள் தீர்க்கப்பட்டக் கூடிய தளங்கள்:**

1. **அரசின் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றிய மக்கள் அபிப்பிராயங்களை ஆவணப் படுத்தும் பொது மன்றங்கள் (Public Hearings)**
2. **நடுத்தீர்ப்பு**
3. **அரசு சாரா நிறுவனங்களின் ஒன்றியங்கள் நியமிக்கும் இணக்கக்குழு**
4. **வெகுசன தொடர்பூடகங்கள்**

### 1) பொது மன்றங்கள்

பொது மன்றங்கள் அவற்றின் பெயருக்கேற்ப, பொது மக்களின் கருத்துக்களைச் செவி மடுத்து ஆவணப்படுத்தும் நிறுவகங்களாகும். இவை அரசாங்கம் அல்லது ஒரு தனியார் நிறுவனம் செயற்படுத்தப்போகும் திட்டங்களையொட்டி மக்கள் கருத்துக்களை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படலாம் அல்லது ஒரு விடயம் தொடர்பாக மக்களின் கருத்துக்களைக் கணிக்க ஏற்பாடு செய்யப்படலாம்.

பொது மன்றங்கள் அனேகமாக சட்ட வல்லுனர்களின் உதவியுடன் ஒரு நீதிபதியின் தலைமையிலேயே நடத்தப்படுகின்றன. ஆயினும் இவற்றிற்கு சட்டரீதியான அதிகாரங்கள் எதுவுமில்லை. மக்கள் கருத்துக்களைத் தொகுத்து உள்ளூர் சட்டங்களின் அடிப்படையில் அவ்வபிப்பிராயங்களின் தாற்பரியங்கள் என்ன என்பதை விளக்கி அரசாங்கத்திற்கும் சம்பந்தப்பட்ட அமைப்புக்களுக்கும் அறிக்கையாகத் தெரிவிப்பதே இதன் நோக்கமாகும்.

பொது மன்றங்களின் அறிக்கைகளைக் கவனத்தில் எடுத்து நிவர்த்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் பொறுப்பு அரசாங்கத்துடையதே. அதற்குரிய கட்டமைப்புக்களை அது தன்னகத்தே தாபிக்கவேண்டும்.

அத்துடன், தாம் தெரிவித்திருக்கும் நியாயபூர்வமான கோரிக்கைகளுக்கு அரசு செவிமடுக்காவிடில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான விழிப்புணர்வையும் அதற்குத் தேவையான ஆலோசனையையும் இந்த அறிக்கை மக்களுக்கு வழங்குகின்றது. இதனை வழக்கிற்கான ஓர் ஆதாரமாக நீதி மன்றத்தில் சமர்ப்பிக்கலாம்.

### 2) நடுத்தீர்ப்பு

அரசோ தனியார் நிறுவனங்களோ மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்கள் மக்களின் காணி மற்றும் நீர் வளங்களை அபகரித்தாலோ, அவர்கள் ஜீவனோபாயங்கள் பாதிக்கப்பட்டாலோ, அல்லது அவர்கள் சூழலை மாசுபடுத்தினாலோ நடுத்தீர்ப்புக்குச் செல்வது நன்று. நடுத்தீர்ப்பு சட்ட ரீதியான அதிகாரம் உள்ளது. அது நீதிமன்றங்களை விட மிக இலகுவாகவும் விரைவாகவும் செயற்படுத்தப்படக்கூடியது. உடனடியான நிவாரணத்தையும், தேவையெனில் தடையுத்தரவினையும் பெற்றுத் தரும்.

### 3) அரசு சாரா நிறுவனங்களின் ஒன்றியங்கள் / கூட்டமைப்புக்களின் இணைக்கக் குழுக் கள்

அவை எண்ணிறந்த சமாதானப் பட்டறைகளில் கலந்து கொண்டென்ன, அரசு சாரா நிறுவனங்கள் மத்தியில் எங்கும் போட்டிகளும் பூசல்களும் நிறைந்திருப்பதைக் காணலாம். இப்போட்டிகள், நிறுவனங்களுக்கிடையிலானதாகவும் அல்லது, அதிலுள்ள தனிநபர்களுக்கிடையிலானதாகவும் காணப்படலாம்.. சாதாரண போட்டிகளில் ஆரம்பிக்கும் இம்முரண்பாடுகள் பல திட்டங்களின் வளர்ச்சியைப் பாதிக்கும் அளவுக்கு தீவிரம் அடையலாம். அதற்காக அவை தம் மத்தியிலேயே பிணக்குகள் தீர்க்கும் உபகுழுக்களை நியமித்தல் நன்று.

### 4) வெகுசன தொடர்பூடகங்கள்

மனக்குறைகள் இருக்கும் தரப்பினர் வெகுசன ஊடகங்களில், குறிப்பாக பத்திரிகைகளில் தெரிவிப்பதன் மூலம் அவர்கள் பிரச்சினைகள் அது தொடர்பாக தீர்மானம் எடுப்பவர்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்படுகின்றது. தமது தவறுகள் பகிரங்கப்படுவதால் உடனடியான தீர்வுகளைக் காண்பதற்கான அழுத்தங்கள் அவர்களுக்கு அங்கு பிரசன்னமாகின்றன. அதனால் ஒன்றில் தீர்வுகளைக் காணத் தள்ளப்படுகின்றனர் அல்லது தீர்வுகளைத் தர முடியாததற்கான காரணங்களையாகிலும் சொல்லத் தலைப்படுகின்றனர்.

அரசியல் களமாக இருந்தாலும் சரி, அபிவிருத்திக் களமாக இருந்தாலும் சரி அங்கு முரண்நிலைகளைத் தீர்க்கப் புகும்போது சிறந்த தொடர்பாடல் திறன்கள் தேவையாகின்றன. அவை என்ன என்பதை அடுத்த பகுதியில் நோக்குவோம்.

# இணக்கப் பேச்சுக்களுக்குத் தேவையான தொடர்பாடல் திறன்கள் (Communication)

ஒருவருக்கு பயம், தேவை போன்ற உணர்வுகள ஏற்படும்போது அதை அவர் மனந்திறந்து சொல்லக் கூடியதாயிருந்திருந்தால், அவர் சொல்லுவதை மற்றவர்கள் செவிமடுக்கக்கூடியவர்களாய் இருந்திருந்தால், அவர்களிருவரும் தத்தமது பிரச்சினைகளை எடைபோட்டு சமரசத்திற்கு வந்திருக்கக்கூடியவர்களாய் இருந்திருந்தால்.... அங்கு ஒவ்வொருவரும் வித்தியாசமாய் சிந்தித்துக் கொண்டிருக்கலாம், தங்கள் கருத்துக்களை சுதந்திரமாக எடுத்துக்கூறிக் கொண்டேயிருக்கலாம்.

தமது தேவைகள் திருப்திப்படுத்தப்பட வழிகளும் பொறிமுறைகளும் இருக்கின்றன என்று மனிதர்கள் உணர்வார்களேயானால் அவர்கள் ஒருவரையொருவர் காயப்படுத்தக் கிளம்ப மாட்டார்கள். பேசிக்கொண்டு இருப்பார்கள். அவர்களுக்கிடையிலான கருத்து வேற்றுமைகள் இருவர் மீதும் மாறி மாறி செல்வாக்குச் செலுத்தி மனப்பாங்குகளில் மாற்றத்திற்கும், பல்வேறு சமூக மாற்றங்களுக்கும் இட்டுச் சென்றிருக்கும். நாம் எங்கள் வாழ்க்கையிலும் அதைக் கண்டிருக்கின்றோம். ஒருவர் ஒரு கருத்தைக் கூற அதைக் கவனமாக செவிமடுக்கும்போது, "அடேடே அவர் கூறுவதும் சரிதானே...." என்கின்ற உணர்வு எங்களுக்கு எத்தனை முறை தோன்றியிருக்கின்றது. நாம் வாழ்க்கையில் சந்தித்து அளவளாவும் மனிதர்களே எங்கள் குண இயல்புகளை உருவாக்குகின்றனர் என்று சொல்வது மிகையாகாது. அந்த அளவுக்கு பிறர் கூறும் கருத்துக்கள் எங்களைப் பாதிக்கின்றன.

முரண்பாடுகளினாலும் வன்செயல்களினாலும் பிளவுண்டு போயிருக்கும் மக்கள் மத்தியில் பணி புரிந்தால் என்ன, அரச நிர்வாகம் மட்டத்தில் பணி புரிந்தால் என்ன அல்லது நீதித்துறையுடன் சம்பந்தப்பட்டவர்களுடன் பணி புரிந்தால் என்ன, எங்கேயும் முரண்நிலைகளை உருமாற்றுவதற்கு தொடர்பாடல் திறன்கள் எங்களுக்குத் தேவையாகின்றன. அவை என்னென்ன என்று நோக்குவோம்.

> The important role of dialogue continues through the whole of a person's life
>
> We come to be who we are through conversations with others.
>
> This is true on the level of information and it is also true on the deeper level of self - Knowledge and values of life.
>
> We listen to others in the family, the school. The community, our friends, and our adversaries, and our consciousness continues to created by our response to the reality addressing us.
>
> We are created through ongoing communication with others.
>
> Gregory Baum

**பிறருடன் தொடர்பாடும் போது நினைவில் வைத்திருக்கவேண்டிய உண்மைகள்**

- எல்லோரும் மனிதர்கள் என்பதனால் அவர்களுக்கும் எங்களைப்போன்றே ஒரே விதமான உணர்வுகளும் அச்சங்களும் உண்டு.
- எதிரணியினர் எங்கள் அணியினரைப் போலவே வித்தியாசமான அபிப்பிராயங்களும் இயல்புகளும் கொண்ட நபர்களின் கூட்டு.

முரண்படும் இரு தரப்பினர் தங்களுக்கிடையில் கருத்துப் பரிமாற்றம் செய்ய வேண்டுமெனில் அல்லது அவ்வாறு அவர்களைச் செய்ய வைக்க வேண்டுமெனில், அங்கு சரியான முறையில் மேற்கொள்ளப்படும் தொடர்பாடல் அவசியம் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை. குடும்பங்களிலும் அலுவலகங்களிலும் இடம்பெறும் பலவிதமான சண்டை சச்சரவுகளையும் நாம் கூர்ந்து அவதானித்தோமானால் அவற்றில் பெரும்பாலான சம்பவங்கள் இரு சாராரும் ஒருவரோடொருவர் பேசிய முறையாலேயே வந்ததேயொழிய அவர்களுக்கிடையில் அப்படிப் பாரதூரமான கருத்து முரண்பாடுகள் இருக்கவில்லையென்பது தெரிய வரும். இவ்வகையான ஏதாவதொரு சண்டையை நீங்கள் அவதானித்து அது எந்த நிலையிலிருந்து எந்த நிலைக்குச் சென்றது. இதன் மத்தியில் அங்கு வார்த்தையாடப்பட்ட விடயங்கள் என்ன என்று குறித்துக்கொண்டு ஆராய்ந்தீர்களானால் அங்கு நடந்தது அனேகமாகப் பின்வரும் தொடர்பாடலாகத்தான் இருக்கும்.

- மற்றவர் என்ன சொல்கின்றார் என்று முழுமையாகக் கேட்காமல் இருப்பது
- தன்னுடைய கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் கூறுவதிலேயே முழுக் கவனத்தைச் செலுத்துவது மட்டுமன்றி மற்றவர் அவரது கருத்துக்களைக் கூறவிடாமல் இடைமறிப்பது.
- மற்றவர் கூற வந்த விடயம் இதுவாகத்தான் இருக்கும் என்று அனுமானித்துக் கொண்டு தனது பதில்களை அதற்கேற்றவாறு சொல்லுவது
- மற்றவர் என்னதான் பேசினாலும் தனது அபிப்பிராயங்களை "சொன்னால் சொன்னதுதான்" என்கின்ற மாதிரி ஒரு சிறிதளவும் மாற்றாமல் திரும்பத் திரும்பக் கூறுவது.
- மற்றவர்தான் பிழை முழுவதும் செய்தவர் என்று குற்றம் சாட்டி தான் பிழையொன்றுமே செய்தறியாதவர் போலப் பேசுவது
- எந்த அபிப்பிராயங்களிலும் பல்வேறுபட்ட நிலைகள் நிலைப்பாடுகள் உண்டு என்பதை உணராமல் கறுப்பா வெள்ளையா என்று விவாதிப்பது
- தான் கூறும் கருத்துக்களைப் பற்றித் தனக்கு சந்தேகங்கள், அல்லது குழப்பங்கள் இடையில் தோன்றினாலும் கூட அதை மறைத்துப் பூசி மெழுகி மிகவும் அதிகார பூர்வமாகப் பேச முயற்சிப்பது.
- மற்றவர் இன்ன நோக்கத்துடன்தான் இப்படிச் செய்தார் என்று தானே அனுமானித்துக்கொண்டு அதனை நிச்சயப்படுத்த ஒரு முயற்சியும் எடுக்காமல் தனக்குள் மறுகிக்கொண்டு கிடப்பது.

இந்த வகையான தொடர்பாடல் நிச்சயம் அதிருப்தியான உணர்வுகளுக்கும் சண்டைக்கும் இட்டுச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

- மற்றவர்கள் என்ன கோணத்திலிருந்து எடுக்கப்பட்ட பிரச்சனையை அணுகுகின்றனர் என்று அறியும் ஆவல்
- எந்தப் புதிய கருத்துக்களையும் சிந்தனைகளையும் உள்வாங்கும் திறந்த மனப்பான்மை
- மற்றவர்கள் நிலையில் ஓர் அனுதாபம், தன்னைப் போல்தானே அவருக்கும் உணர்வுகள் இருக்கும் என்கின்ற இரக்கம்
- நேர்மை, அடக்கம், பணிவு

## தொடர்பாடல் திறன்கள் :

உணர்வுபூர்வமாகச் செவிமடுத்தல்

தெளிவாகப் பேசுதல்

கூறப்படும் விடயங்களை ஆக்கபூர்வ மாக அல்லது புத்தாக்க ரீதியாக எதிர் கொள்ளல்

நிலைமையை சம்பந்தப்பட்ட விடயங்கள் தெளிவாகத் தெரியும் வண்ணம் மீள உருவகித்தல்

பிரச்சினைக்கு தீர்வு காணும் அணுகு முறையை ஊக்குவித்தல்

மாற்று வழிகள், விருப்பத் தேர்வுகளை முன்வைத் தல்

உடன்பாட்டுக்கு வருதல்.

நல்ல தொடர்பாளர்கள் பின்வரும் முறையில் மற்றவர்களுடன் அளவளாவுவார்கள் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

1. உணர்வுபூர்வமாகச் செவிமடுத்தல்
2. தெளிவாகப் பேசுதல்
3. கூறப்படும் விடயங்களை ஆக்கபூர்வ மாக அல்லது புத்தாக்க ரீதியாக எதிர் கொள்ளல்
4. நிலைமையை சம்பந்தப்பட்ட விடயங் கள் தெளிவாகத் தெரியும் வண்ணம் மீள உருவகித்தல்
5. பிரச்சனைக்கு தீர்வு காணும் அணுகு முறையை ஊக்குவித்தல்
6. மாற்று வழிகள், விருப்பத் தேர்வுகளை முன்வைத் தல்
7. உடன்பாட்டுக்கு வருதல்.

## 1. உணர்வு பூர்வமாகச் செவிமடுத்தல் (Active listening)



உணர்வு பூர்வமாகச் செவிமடுத்தல் தொடர் பாடலில் மிக மிக முக்கியமான அம்சமாகும். ஒருவிதமான தலையீடும் மேற்கொள்ளாது, பேச வந்தவர் தான் கூற வந்த தனைத்தையும் கூறும்போது, அவருடைய சொற்களையும் அதனுடன் சேர்ந்து அவருடைய சொற்களுக்குப் பின்னாலுள்ள உணர்வு களையும் அவதானிப்பதே உணர்வுபூர்வமாகச் செவிமடுத்தலாகும். கருத்துக் களைச் சொல்பவருக்கு அதை ஒழுங்காகச்சொல்ல போதிய அவகாசத்தையும் வாய்ப்பையும் உணர்வு பூர்மாகச் செவிமடுத்தல் கொடுக்கின்றது. அவரிடம் முழுக்கவனத்தையும் செலுத்துவதனால் அவருக்குரிய மரியாதையை தெரிவிப்பதனூடு அவரை வலுவுணரவும் செய்கின்றது. இதனால் அவர் முழுமையாகத் திருப்தி அடை கின்றதுடன் தன் கதையைக் கேட்கின்றவரைப் பற்றிய நல்லெண்ணத்தையும் அவருக்குள் ஏற்படுத்துகின்றது. சில நேரங்களில், முழுமையாகச் செவிமடுத்தலி னாலேயே பேசுபவர் தான் கூற வந்த கருத்தின் சாதக பாதகங்களைத் தான் கூறும்போதே தன்பாட்டில் உணரவைக்க முடியும். இவையெல்லாம் இரு சாராரும் ஒன்றிணையும் வாய்ப்புக்களை நிச்சயமாக உருவாக்கும். உணர்வுபூர்வமாகச் செவிமடுத்தலில் பல அம்சங்கள் உண்டு. அவையாவன:

- கேட்பவரின் அவதானம் முழுக்க சொல்பவர் பக்கமே திரும்பியிருத்தல்
- கிரகித்தல்
- பேசுபவரின் நிலையில் தன்னை இருத்திய அனுதாபத்தை (Empathy) வெளிக்காட்டல்
- பேசுபவரை மேலும் பேச ஊக்கமளித்தல்
- அவர் ஏதுமொரு கணத்தில் தற்காலிகமாக நிறுத்தினாரெனில், அவர் கூறிய விடயங்களைச் சுருக்கமாகத் தொகுத்தளித்தல்
- இந்தத் தொகுப்பில் அவர் சொற்களால் கூறிய விடயங்களையும் அவருடைய உணர்வுகளையும் சேர்த்துக் கொள்ளல்
- அவருக்கு வழங்கப்பட்ட தொகுப்புக்கு அவர் கொடுக்கும் பதிலுரைக்கு ஏற்ப அத்தொகுப்பை மேலும் செம்மையாக்கல்.
- அவர் கூறியது கேட்பவர் வைத்துள்ள கருத்துக்கு மாறானதாக இருப்பினும், அவற்றுள் அவர் ஒத்து கொள்ளும் விடயங்களைக் குறித்துச் சொல்லல்.

இவையெல்லாவற்றிலும், ஒன்றுமே பேசாது அமைதியாகக் கேட்டுக் கொண்டிருத்தலே மிகவும் கஷ்டமான காரியமாகும். கேட்கும்போது காதைக் கொடுப்பது மட்டுமல்லாமல் முகபாவனையிலும் அங்க அசைவுகளாலும் கேட்பவர் தனது அவதானத்தைத் தெரியப்படுத்த வேண்டும். இப்படிக் கேட்டுக் கொண்டிருந்தால் தன்னாலேயே ''அடடா'', ''அப்படியா'' ''ச்சு'' போன்ற சத்தங்களும் தொனிகளும் கேட்பவரிடமிருநது உதிர்க்க இது சொல்பவரை

இன்னும் ஊக்கப்படுத்துவதாக இருக்கும். இடைக்கிடையே சந்தர்ப்பம் கிடைக்கும்போது கேள்விகளையும் கேட்டல் நன்று. ஏதுமொரு அபிப் பிராயத்துக்கு அதனை விளக்க உதாரணம் கேட்கலாம். ஆயினும் எதைக் கேட்கும்போதும் சொல்கின்றவரைச் சவாலுக்குள்ளாக்காத வகையில் கேட்க வேண்டும்.

**Listening is an Art, a skill and a Discipline**

உணர்வுபூர்வமாகக் கேட்டலில் உணர்வுகளை அவதானித்தல் என்கின்ற விடயம் அடிக்கடி வருவதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். ஒருவர் உண்மையாக என்ன கூற விழைகின்றார் என்பதை விளங்குவதற்கு அவர் என்ன உணர்வுடன் அதைத் கூறுகின்றார் என்று அறியவேண்டியது அவசியமாகும். சிலநேரங்களில் மனிதர்கள் தங்கள் உணர்வுகளை நேரடியாகவே தெரி வித்து விடுவார்கள். ஏனைய நேரங்களில் அவர்களின் உணர்வை அவர்கள் சொல்லும் பாங்கிலேயே அறியக் கூடியதாக இருக்கும். இந்த உணர்வுகளைத் தொகுத்து அவர்களுக்குக் கூறும்போது கேட்டவர்கள் தாம் சரியாக அனுமானித்திருக்கிறார்களா என்று அறியக் கூடும். தாம் அனுமானித்த உணர்வுகளை நிச்சயப் படுத்திக் கொள்ள உதவுவதுபோல, கேட்கப்பட்ட விடயங்களைத் தொகுத்தளித்தலும், அவற்றை தாம் முழுமையாக விளங்கிக் கொண்டாரா, என்பதையும் நிச்சயப்படுத்த உதவும். இப்படித் தொகுத்தளிக்கும் போது விளங்காமல் இருக்கும் சில விடயங்களை கேட்டறிந்து கொள்ள வாய்ப்பும் உண்டு. “இது சரி தானா? இதைத்தானா கூறினீர்?'' என்று விளக்கம் கேட்டுக் கொள்ளலாம். ஆனால் இதைவிட, தொகுத் தளிப்பது கூறப்பட்ட விடயத்தைப் பற்றிய மேலோட்ட மான படத்தை வழங்கும். அனேகமாக சொல்லு கின்றவர் நீண்டதாகத்தான் தனது கதையைச் சொல்ல முயல்வார். அக்கதையின் வெவ்வேறு அம்சங்களை, அதற்குரிய முக்கியத்துவத்துடன் நிரல்படுத்தித் திரும்பத் தொகுத்துக் கூறும்போது கதை சொல்லுபவர் தான் சொன்ன விடயம் முழுமையாகக் கிரகிக்கப்பட்டு விட்டது என்ற திருப்தியான உணர்வோடு தனது அடுத்த விடயத்துக்கு வருவார்.

கேட்கும் விடயத்தை நிச்சயித்துக் கொள்ள அதைத் திரும்ப சொல்லிப் பார்ப்பதும் உதவும் “அதாவது....” என்று அதை வேறு சொற்களில் மீண்டும் சொல்லிக் காட்டலாம். இதை அடிக்கடி செய்தல் எரிச்சலை மூட்டுமாகையால் பொருத்தமான இடங்களில் மட்டும் கையாளவேண்டும்.

பேசுபவர் எப்படியும் கேட்பவரின் பக்கத்தின் வாதத்தை அல்லது அது சார்ந்தோரை விமர்சிக்கவே செய்வார். விமர்சனங்களைப் பொறுமையுடன் கேட்டல் பலருக்கு இயலாத காரியமாகும். அவருக் குள்ளே என்ன தேவைகள் அல்லது பயங்கள் இருக் கின்றன என்பதை ஆராய்வதில் கவனம் செலுத்தினால் விமர்சனங்களைப் பொறுமையுடன் செவிமடுக்கும் தன்மை எளிதாகக் கைவரும்.

## 2. தெளிவாகப் பேசுதல்

ஒருவர் பேசுவதை அனுதாபத்துடனும் அவதானிப் புடனும் கேட்க வேண்டுமென்றால் அதற்காக அவர் சொல்லுவதையெல்லாம் ஒத்துக்கொள்ள வேண்டும் என்பதில்லை. மற்றவர் மனத்தைப் புண்ணாக்காமல், அவர் தெளிவாக விளங்கும் வண்ணம் எதிர்க்கருத்தைக் கூறுவதும் ஒரு கலையாகும். கருத்தைக் கூறுபவர் தனது தேவைகளைப் பற்றிய உறுதியான நம்பிக்கை உடைய வராக அதே சமயம் மற்றையவரின் அபிப்பிராயத்துக் கும் மதிப்புக் கொடுப்பவராக இருந்தால் எந்தக் கருத்தையும் அழகாகச் சொல்லி முடிக்கலாம்,

முதலில் நிலைமையை எவ்வாறு தான் விளங்கிக் கொள்கின்றார் என்றும் அதில் தன்னுடைய நோக்கங்கள் என்ன என்பதையும் தெளிவாக விளக்க வேண்டும். அதன்போது, கோரிக்கைகளை முன்வைப்பதைத் தவிர்த்து அவற்றையே தன் விருப்பங்களாகத் தெரிவிப்பது நல்லது. மேலும், “நீங்கள் அப்படி நீங்கள் இப்படி'' என்று மற்றவரைச் சாட்டிக் கூறுவதைத் தவிர்த்து “நான் இப்படி நம்புகின்றேன், நான் இப்படி உணர்கின்றேன், எனக்கு இது தேவை'' என்று எமது நிலைமையை விளக்க முயற்சிக்க வேண்டும். கோபம், ஏமாற்றம், விரக்தி போன்ற உணர்வுகள் இருப்பின் அவற்றை உணர்வுகளாகக் காட்டாமல் சொற்களால் விளக்குவது நன்று. உதாரணமாக, கோபத்தில் சத்தம் போடாமல் ‘எனக்கு சரியான கோபம் வந்தது’ என்று விளக்குவது நன்று.

### 3. ஆக்கபூர்வமாக எதிர்கொள்ளல்

நினைத்த விடயங்களை நேடியாகச் சொல்லுவதென்றால் எல்லோருக்குமே தயக்கந்தான். ஆளைப் போகவிட்டுப் பின் அவருக்கு சொல்லவேண்டியதை மற்றவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருப்பது நம்மவர்களுக்குப் பழக்கமாகும். ஆனால் இப்படிச் செய்வதனால் உண்மைகள் சொல்லப்படாமலே போவதும் பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இழுபடுவதுமே விளைவுகளாகும். எவ்வளவுதான் கடினமென்றாலும் நேரடியாகச் சொல்லவேண்டும். அதற்கு சில உபாயங்கள் இருக்கின்றன.

முதலில், சொல்ல வேண்டிய விடயங்களையும் அவற்றின் ஒழுங்கினையும் தீர்மானித்து வைத்துக் கொள்ள வேண்டும். அதைச் சொல்வதற்கு இரு சாராருக்கும் ஏற்புடையதான நடுநிலைமையான இடத்தையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளல் நன்று. நாம் எங்கிருக்கின்றோம் என்பது நாம் சொல்லுகின்ற கருத்துக்களில் செல்வாக்குச் செலுத்துவதை எமது அன்றாட அனுபவங்களில் கண்டிருக்கின்றோம். இதனால் நாம் உரையாடப்போகும் சூழலைக் கவனமாகத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தங்கள் கருத்துக்கு மாறாக ஏதும் சொல்லிவிட்டால் அதைச் சொல்லியவருடன் கோபமாக இருப்பது நம்மவரின் இன்னொரு ஆகாத பழக்கமாகும். பிரச்சனைகளை ஆட்களிடமிருந்து பிரித்துப் பார்க்கப் பழக வேண்டும். அதாவது "எனக்கு உன்னோடு ஒரு பிரச்சனையும் இல்லை. ஆனால் இங்கு எடுக்கப்பட்ட விடயம் இதுதான்...." என்பது போல் கண்ணோட்டம் இருக்க வேண்டும். கருத்தைக் கூறுபவருடன் இருக்கும் நட்பு வேறு அவர் கருத்து வேறு என்று எடுத்துக் கொள்ளும் பண்பு தேவை. சிலசமயங்களில் அதில் சம்பந்தப்பட்ட ஆள்தான் பிரச்சனையெனினும், அவரை ஒட்டுமொத்தமாகத் தாக்காமல் அவருடைய குறிப்பிட்ட நடத்தையை விமர்சிக்கலாம்.

மிகவும் நேர்மையாக நிலைநாட்டும் வகையில் எடுக்கப்பட்ட நிலைப்பாட்டை விளக்கலாம். அதில் பாதகமில்லை. மற்றவருடைய கருத்துக்கு மரியாதை கொடுக்கும் அதே வேளை தங்கள் கருத்தினை வலியுறுத்தும் மிடுக்கும் இங்கு தேவையாகின்றது. ஆனால்... அதே போன்று மற்றவர்கள் செய்வதையும் எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

### 4. நிலைமையை விளக்குமுகமாக மீள உருவகித்தல்

ஒரே விடயத்தை பல விதமாகக் கூறலாம். ஒரு இணக்கப்பாட்டைத் தோற்றுவிப்பதற்கு உதவியாக ஒரு நிலைமையை இன்னொரு வகையில் விளக்குவதே மீள உருவகிக்கும் இந்த முறையாகும். மீள உருவகித்தலாவது.

- "எனக்கு நீ எதிர்" என்பதை "எங்களிருவருக்கும் ஒரு பிரச்சினை உள்ளது" என்பதாக வடிவமைப்பது.
- "எனது நிலைப்பாடு இதுதான்" என்பதை "இந்தத் தேவைகள் இந்தப் பயங்களின் அடிப்படையில் எனது நலன்கள் இவை" என்று கூறுவது
- கடந்த காலத்தில் நடந்த அநீதிகளைப் பற்றிய கவனத்தை, நிகழ்காலத்தில் அதற்கு எடுக்கக்கூடிய நிவர்த்திகள், எதிர்காலத்தில் இவற்றைத் தவிர்க்கக் கூடிய முறைகள் என்ற விதத்தில் மாற்றுவது
- "பாதிக்கப்பட்டவர்கள்" என்று உணர்ந்து கொண்டிருப்பவர்களை, அவர்கள் தங்கள் எதிர் காலத்தைத் தேர்ந்தெடுக்கக்கூடிய ஆற்றலுள்ள "தெரிவாளர்கள்" என்று நம்ப வைப்பது.

ஒரே விடயத்தை தீர்வுக்கு வரக்கூடிய சாதகமான முறையில் மீள உருவகித்தவுடன் அங்கு முதலில் கோபங்கள் தணிகின்றன. உதாரணமாக, எங்களிருவருக்கும் ஒரு பிரச்சினை உள்ளது என்று கூறும்போது முரண்படும் இரு தரப்பினரும் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருப்பதை விட்டு பிரச்சினையை நோக்குவதில் தங்கள் கவனத்தைச் செலவிடுவார்கள். அதே போல், பாதிக்கப்பட்டவர்கள் அப்பாதிப்புக்களின் காரணிகளை நிவர்த்தி செய்யக் கூடியதொரு எதிர்காலத்தை நிர்ணயிக்கக்கூடியவர்களாக இருக்கின்றனர் என்று உணரும்போது அவர்கள் மனம் ஓரளவேனும் ஆறுகின்றது,

### 5. பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அணுகுமுறையை ஊக்குவித்தல்

எவ்வளவுதான் சுமுகமான முறையில் விவாதித்தாலும் கடைசியில் எப்படியும் முன்னாலுள்ள சிக்கல் மிகுந்த பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். அதற்கு

குறுக்குவழி இல்லை. இது செய்வதற்கு முதலில் சில அடிப்படைகளை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எல்லோரும் மனிதர்கள் என்பதனால் அவர்களுக்கு ஒரேவிதமான உணர்வுகளும் பயங்களும் உண்டு என்பதுதான் முதல் உண்மையாகும். எம்மை எதிரணியின் இடத்தில் வைத்து கற்பனை பண்ணிப் பார்த்தல் நன்மை பயக்கும். அப்படியென்றால்தான் அவர்களுடைய எண்ணக்கோர்வைகளை நாம் விளங்கிக் கொள்ளலாம்.

அடுத்து, எதிரணியினரும் வித்தியாசமான அபிப்பிராயங்கள் இயல்புகள் கொண்ட நபர்களின் கூட்டு என்பதை அறிந்து கொள்ள வேண்டும். ஆகவே அவர்கள் சார்பில் யார் பேசுகின்றனர், இவ்வாறு பேசுகின்றவர்களை ஆதரித்துப் பின்னால் நிற்கின்ற வர்கள் யாவர் என்று துப்பறிதல் வேண்டும். இவர்களைத் தவிர வேறு படிநிலைகளில் 'அபிப்பிராயங் களை வைத்துக் கொண்டிருப்பவர்கள் யார் யார் என்பதையும் தகவல் திரட்டி வைத்துக் கொள்ள வேண் டும். இது யாருடன் எதைப் பற்றிப் பேசவேண்டுமென்ற அறிவைத் தரும்.

தொடர்பாடல்களின் உள்ளடக்கம், பிரச்சினை யின் காரணிகள், அதன் அறிகுறிகள், விளைவுகள் என்ப வற்றை கிரமமாக எடுத்துரைப்பதாக இருக்கலாம். இப்பிரச்சினையில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவருடைய நலன்களையும் (அவர்கள் தேவைகளையும் பயங்களை யும் உள்ளடக்கியது), அவர்களின் விழுமியங்களையும், தெளிவாக்குவதாகவும் விளங்கப்படுத்துவதாகவும் இருக்கவேண்டும்.

*How can I enter into a dialogue if I always imgine that others are ignoant, and never become conscious of my own ignorance? How can I enter into dialogue if I see myself as a person apart from others - if I see them only as "its" and never a "I"? How can I enter into dialogue if I consider myself a member of an "in group", the owners of truth and knowledge, the "pure people"?*
*If I am closed to, and even offended by, the contribution of others; if I fear being displaced, how can I have a dialogue?*
*At the point of encounter there are neither utterly ignorint people , nor perfectly wise people There are only those who attempt together to learn more than they now know.*


*Paulo Freire*

### 6. மாற்று வழிகளை முன்வைத்தல்


ஏதாவதொரு இணக்கமோ உடன்பாட்டையோ பற்றிப் பேச்சை ஆரம்பிக்குமுன்னர், தீர்வுக்கான பரந்த அளவிலுள்ள பல்வேறு மாற்றுவழிகளை சிபாரிசு செய்வது நல்லது. ''இதைச் செய்யலாம் ஆனால்'' என்னும் வாக்கியத்தை ''இதைச் செய்யலாம் இதனுடன்'' என்ற வாக்கியமாக மாற்ற முயற்சிக்க வேண்டும். இதனால் மற்றவர்கள் உண்டென்றால் உண்டு இல்லையென்றால் இல்லை என்ற ரீதியில் அதிதீவிரமான முடிவுகளுக்கு வரும் சந்தர்ப்பங்கள் குறையும். அதிபொருத்தமான மாற்று வழியொன்றைத் தெரிவு செய்யும் வாய்ப்புக்களை அதிகரிக்கும்.

### 7. உடன்படுதல்


மேற்கூறிய எல்லா வழிகளையும் பின்பற்றினால் உடன்பாட்டுக்கு வருதல் எளிதாகும். உடன்பாடுகளை உருவாக்கும்போது பொதுவான விழுமியங்களை இனங்கண்டு அதற்கேற்ப அவற்றை வரைதல் நன்று. இதற்கான இணக்கத்தினை வாக்களித்தல் மூலமோ அல்லது சம்பந்தப்பட்ட எல்லாருமே விவாதித்து ஒத்திசைதல் மூலமோ கொண்டு வரலாம். கூடிய நேரம் எடுத்தாலும் எல்லோரும் ஒத்திசைந்து ஏற்படுத்தும் ஒருமைப்பாடே சிறந்ததாகும்.




## ஒரு ஜனநாயக அரசின் கட்டமைப்புக்கள்










எவ்வளவுதான் நல்ல முறைவழிகளைப் பின்பற்றி இணக்கப் பேச்சுக்களைத் தொடர்ந்தாலும் அவற்றின் முடிவில் தீர்வு என்ன உருவில் இருக்கப்போகின்றது என்பதை அறியாமல் அல்லது சிந்திக்காமல் இருப்பது திசைகாட்டியின்றி கப்பலைச் செலுத்துவதற்கு சமனாகும். எவ்வளவு திறமையாகச் செலுத்தினாலும் கடைசியில் அது கரை வந்து சேரவேண்டுமே. அத்தியாயம் 2இல் நல் இணக்கப்பேச்சுக்கள் என்கின்ற சமுத்திரத்தின் கரை, அதாவது நிலைபேறான சமாதானம், ஒரு ஜனநாயக அரசினைத் தாபிப்பதன் மூலமாகவே அடையாலம் என்பதை நோக்கினோம். இந்த பின்னிணைப்பில் அத்தகையதொரு ஜனநாயக அரசின் வகைகளும் இயல்புகளும் என்ன என்பதை நோக்குவோம்.

ஒரு ஜனநாயக அரசியல் இறைமை என்பது மக்களில்தான் அடங்கியுள்ளது என்போம். இதன்படி, தமது நாட்டின் எல்லைகளை வகுத்து, அதன் சட்டங்களை இயற்றி நிறைவேற்றி, சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டி இவ்வாறு தங்கள் நாட்டை பரிபாலிக்கத் தேவையான சகல ஏற்பாடுகளுக்கும் மக்களே பொறுப்பாளிகள் ஆவர். அதாவது தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத வகையினர் என்பதையே இறைமை சுட்டிக் காட்டுகின்றது. இப்பொறுப்புக்களை யெல்லாம் நிறைவேற்ற மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்தல்கள் மூலம் தெரிந்து அனுப்புகின்றனர். அப்பிரதிநிதிகள் ஒருவருக்கும் பங்கம் ஏற்படா வண்ணம் நாட்டின் நிர்வாகத்தையும் ஆட்சியையும் கூட்டாகக் கொண்டு நடத்துவதை வரையறை செய்யும் அடிப்படைக் கொள்கைகளை, அதாவது தமது அரசியலமைப்பை வரைகின்றனர். இவற்றையெல்லாம் மீள்பரிசீலனை செய்யக்கூடிய நீதி நிர்வாகத்தை நிலை நாட்டுகின்றனர். ஆகவே, தேர்தல் முறைமைகள், அரசியலமைப்புச் சட்டம், சுதந்திரமான நீதித்துறை என்பவற்றினூடாக மக்களின் இறைமை வெளிக்காட்டப்படுகின்றது.

ஆனால், ஒரு ஜனநாயகக் கட்டமைப்பில் ஒத்திசைந்து செயற்படுவதற்கு மக்கள் ஒரியல்பு கொண்ட ஒரினத்தினர் அல்லர். அவர்கள் மத்தியில் பல்வேறு நலன்களை பிரதிபலிக்கும் பல்வேறு பிரிவினர் இருக்கின்றனர். இவர்களில் ஒவ்வொரு பிரிவினரும் தமது எண்ணிக்கை, பொருளாதார பலம், தாம் கொண்டிருக்கும் சமூக அதிகாரவலுவின் அளவு போன்ற இயல்புகளில் வேறுபடுகின்றனர். ஆகவே இவர்கள் அனைவரும் இணைந்து ஆட்சியை நடத்தும் பொழுது நிச்சயமாக அதிகாரவலு மிகையாகப் பெற்ற குழுவினர் ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்புக்கள் உண்டு.

இக்காரணங்களினால்தான் ஜனநாயகக் கட்டமைப்புக்கள் சகல மக்கள் பிரிவினரும் சம வலுவுடன் இயங்கும் பொறிமுறைகளைத் தமக்குள் தாபிப்பது முக்கியமாகின்றது. அரசியலமைப்புச் சட்டங்களில் மனித உரிமைகளைப் பொறித்தல் ; செல்வந்தரோ வறியவரோ, ஆணோ பெண்ணோ, பெரும்பான்மையினரோ சிறுபான்மையினரோ சகலரும் சமமாகப் பங்குபற்றுக்கூடிய தேர்தல் நடைமுறைகளை நிர்ணயித்தல்; சகலவிதமான மக்களுக்கும் சமவலுவான பிரதிநிதித்துவம் தரும் வகையில் சட்டவாக்க மன்றங்களின் கட்டமைப்பையும் இச்சட்டங்களைச் செயற்படுத்தும் அரசின் கட்டமைப்பையும் உருவாக்குதல்; இவையெல்லாம் குறிப்பிட்ட இப்பொறிமுறைகளாகின்றன.

பொதுவாக எந்த நாடுகளிலும் பெரும்பான்மையான எண்ணிக்கையுள்ள மக்கள் குழுவினரே அதிகவலுவுடன் செல்வாக்குச் செலுத்தக்கூடியவர்களாக இருப்பதனால் சிறுபான்மையினர் பெரும்பான்மையினருடன் சமவலுவுடன் இயங்குவதற்கான பொறிமுறைகளுக்கே ஒவ்வொரு ஜனநாயக அமைப்பிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப் படுகின்றது. இதனுடன், இன்றைய காலகட்டத்தில், கூடியளவில் பெண்கள் ஆண்களுடன் சமவலுவோடு இயங்கு வதற்கான கட்டமைப்புக்களிலும் கவனம் செலுத்தப்படுகின்றது. மேற்கூறிய அம்சங்கள் அடங்கிய ஜனநாயக அமைப்பின் வகைகள் என்னவென்று பார்ப்போம்.



தங்கள் நாட்டைப் பரிபாலிக்கத் தேவையாக சகல ஏற்பாடுகளுக்கும் மக்களே பொறுப்பாளிகள். ஆனால் இதற்காக ஒத்திசைந்து செயற்படுவதற்கு அவர்கள் ஒரே இயல்பு கொண்ட ஒரே நலன்கள் கொண்ட ஓரினத்தினர் அல்ல. சகல மக்கள் பிரிவினரும் சமவலுவுடன் இயங்கும் பொறிமுறைகளைக் கொண்டதே ஜனநாயகக் கட்டமைப்பாகும்.

## ஜனநாயகத்தின் வகைகள்

ஜனநாயக அரசுகள் பொதுவாக மூன்று வகைப் படும்.

- **மத்திய அரசாங்கத்தில் அதிகாரப் பகிர்வினை ஏற்படுத்தல்,**
- **இனக்குழுக்களுக்கான சுயாட்சியினை வழங்குதல்,**
- **இனக்குழுமங்களை அடிப்படையாக வல்லாத கூட்டணி ஆட்சிகளை ஏற்படுத்தல்**

என்று அவற்றை சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

- **அதிகாரப்பகிர்வுள்ள அணுகுமுறை**


இந்த வகையான அமைப்பில் சகலரும் ஒத்திசைவதால் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மத்திய அரசாங்கத்திலேயே சகல இனங்களும் சிறுபான்மையினரும் பங்குபெறுகின்றனர். அவர்கள் கொள்கைச் சட்ட வரைபில் செல்வாக்குச் செலுத்த முடியும்.

- **ஒருங்கிணைந்த அணுகுமுறை**

இம்முறையின் கீழ் அரசியல் தலைவர்கள் பிரிவினைவாதக் கோஷங்கள் தொடர்பாக மிதவாதத்தைக் கைக்கொள்ள ஊக்குவிப்புக்கள் கொடுக்கப் படுகின்றது. சிறுபான்மைக் குழுக்கள் பெரும்பான்மையினரின் தீர்மானங்களில் செல்வாக்குச் செலுத்தவும் வைக்கின்றது. இதில் கைக்கொள்ளும் தேர்தல் முறைகளானவை பிரதான அரசியல் கட்சிகள் தேர்தல்களுக்கு முன்னர் சிறுபான்மைக் குழுக்களின் கட்சிகளுடன் ஒப்பந்தம் செய்ய நிர்ப்பந்திக்கின்றன. அத்துடன் இன அடிப்படையில் அல்லாத சமஷ்டி அரசு முறையையும் கைக்கொள்ளுவதனால் இன அடிப் படையிலான அதிகார மையங்கள் உருவாவதையும் தடுக்கின்றது.

- **தனிக்குழுக்கள் அமைப்புக்களைக் கட்டும் அணுகுமுறை**

இதில் இனக்குழுக்கள் வசிக்கும் பிரதேசங்களுக்கு சமஷ்டி முறை செயற்படுத்தப்படுகின்றது. மத்திய அரசாங்கத்தின் சட்டவாக்கத்தின் மீது தேவையெனில் சிறுபான்மை இனத்தவர் தடை (Veto) வாக்குப் போடலாம். மந்திரிசபை ஒரு கூட்டணியாக உருவாக்கப்படும். அரச சேவையிலும் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திலும் இனங்களின் விகிதாசாரத்திலேயே தொழில் வாய்ப்புக்களும் வளங்களும் பகிரப்படும்.



## ஒரு ஜனநாயக ஆட்சி வெவ்வேறு வகைகள்

ஒரு ஜனநாயக அரசின் அம்சங்கள் வெளிக் கொணரப்படுவதற்கு வெவ்வேறு முறைகளில் ஆட்சிகள் அமைக்கப்படலாம்.

### 1. சமச்சீரான சமஷ்டி ஆட்சி

அதிகாரம் ஒரு நாட்டின் சகல பிரதேசங்களுக்கும் சமமாகப் பகிரப்படுகின்றது. அவை ஒவ்வொன்றும் மத்திய அரசாங்கத்துடன் ஒரே வகையான உறவைப் பேணுகின்றன.

### 2. சமச்சீரற்ற சமஷ்டி ஆட்சி

ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சமஷ்டி அலகுகள் விசேடமான அதிகாரங்களைச் கொண்டு இயங்குதல். இது அவற்றின் பண்பாடு கலாசாரங்களைப் பேணும் விசேட தேவைகளுக்காக ஏற்பாடு செய்யப்படுவதாகும். இதற்கு கனடா நாட்டின் க்யூபெக் மாநிலத்தையும் இந்தியாவின் காஷ்மீர் பிரதேசத்தையும் உதாரணமாகக் காட்டலாம்.

### 3. சுயாட்சி

ஒரு பிரதேசம் தனது விவகாரங்களை முழுவதும் கட்டுப்படுத்தக்கூடிய அதிகாரங்களைப் பெற்றிருத்தல். சமஷ்டி ஆட்சியில் பிரதேசங்கள் தேசிய ஆட்சியிலும் கொள்கை உருவாக்கத்திலும் பங்குகொள்ளுபவையாக இருக்கும். அதற்கு மாறாக, சுயாட்சியில் குறிப்பிட்ட பிரதேசம் தேசிய நிறுவகங்கள் ஒன்றிலும் பங்குபெற மாட்டாது. சீனாவின் ஹொங்கொங் தீவு சுயாட்சிக்கு ஒரு உதாரணமாகும்.

### 4. உள்ளூராட்சி அமைப்புக்கள்

உள்ளூராட்சி அமைப்புக்கள் சுயாட்சியையும் சமஷ்டியையும் போலல்லாது அரசியலமைப்புச் சட்டத்தில் உத்தரவாதம் கொடுக்கப்படாதனவாகும். ஆயினும், இவை பொதுவாக ஒரு சிறிய பிரதேசத்தை உள்ளடக்குவனவாகவும், அதில் வாழ்பவர்கள் அனேகமாக ஒரு இனக்குழுவைச் சேர்ந்தவர்களாகவும் இருப்பதனால் முரண்நிலைகளை அதிகளவு தவிர்த்து அடிமட்ட மக்கள் தங்கள் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்யும் வாய்ப்புக்கள் இங்கு அதிகரிக்கின்றன.

மேலே காட்டப்பட்டவற்றைத் தவிர இன்னும் எண்ணிறந்த முறைகளில் அரசாங்கத்தை அமைக்கலாம். இனம், மொழி, மதம் போன்றவற்றின் அடிப்படையில் பிரிந்து வாழும் சமூகங்கள் ஒரு அரசாங்கத்தினுள் பதவி வகிப்பது மட்டுமன்றி அவை ஒவ்வொன்றினதும் அங்கீகாரமும் ஒத்திசைவும் இல்லாது எந்த சட்டங்களும் நிர்வாக நடைமுறைகளும் உருவாக்க முடியாத நடைமுறைகளும் உண்டு. இதனை ஆங்கிலத்தில் Consociationalism என்பார்கள். இதைத் தவிர பெருங் கூட்டமைப்புக்களும் உண்டு. இதில் நிறைவேற்று அதிகாரத்தை சகல இனக்குழுமங்களும் பகிர்ந்து கொள்ளும். அதாவது அமைச்சரவையில் அங்கத்துவம் வகிக்கும். சிறிய குழுக்கள் எவையும் தமக்கென கூடிய சுயாட்சியினைக் கோரினால் அவர்களுக்கு மட்டும் பொருந்தக்கூடிய துண்டுபட்ட உள்ளக சுயாட்சியினை வழங்கலாம். அல்லது அரசசேவையின் நியமனங்கள், பொது நிதிகள், வளப்பயன்பாடுகள் அனைத்தையும் இன விகிதாசார அடிப்படையிலே முதலிலேயே பிரித்தெடுத்துக் கொள்ளலாம்.

இவையெல்லாம், நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு என்ன விதமான தீர்வுகளையும் நாம் கண்டுபிடிக்க முடியும் என்பதையே காட்டுகின்றன. வைத்தால் குடுமி, சிரைத்தால் மொட்டை என்று நாம் முரண்பட்டுக்கொண்டிருக்கத் தேவையே இல்லை. புதிய தீர்வுகளைக் கண்டு பிடித்து முரண்நிலைகளை உருமாற்றுவதற்கு, ஒரு பொற்காலமான எதிர்காலத்தைப் பற்றிய தரிசனமும் அதற்கு இட்டுச் செல்ல வகைசெய்யும் புத்தாக்கமான சிந்தனையுமே எமக்குத் தேவை. எமது ஒவ்வொரு தீர்மானங்களுக்குமான விளைவுகள் உண்டு என்பதை மறவாதீர்கள். உதாரணமாக, இனக்குழுமங்கள் சகலதும் ஒத்திசையும் அரசமைப்பை நாம் உருவாக்கினால், அது அவற்றினிடையே உள்ள அதிகாரவலுவினை சமப்படுத்தினாலும்கூட, இன ரீதியான அரசியலுக்கு இட்டுச் செல்லக்கூடும். இதனால் சகல காரணிகளையும் சமப்படுத்தும் நடைமுறைகளை நாம் கண்டுபிடிக்க வேண்டும்.

## சமஷ்டி அல்லது சுயாட்சி முறைகளின் அனுகூலங்கள்

வெறுமனே பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தைக் கொண்டு ஆனால் கொள்கைத் தீர்மானத்திலோ அல்லது வளங்களின் பகிரலிலோ ஒருவிதப் பங்களிப்பும் இல்லாமல் சிறுபான்மையினர் இருப்பதை இந்த அமைப்பு மாற்றுகின்றது. அவர்களுக்கு சட்டவாக்கம்,

நிறைவேற்று, மற்றும் வரி வசூலிக்கும் அதிகாரங்களைத் தருகின்றது. சிறுபான்மையினர் தங்களது கலாசாரத்தைப் பேணுவதற்கான சகல வாய்ப்பு வசதிகளையும் கொடுக்கின்றது. உள்ளூரில் உருவாகும் பிரச்சினைகள் ஒரு தேசிய பிரச்சினையாக ஆக்கப்படாது உள்ளூரிலேயே தீர்க்கப்படும் தளங்கள் இங்கு அமைக்கப்படுகின்றன. மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் வெகுவாகக் குறைக்கப்படுவதனால் பிராந்திய மக்களின் நலன்களும் ஏதோவொரு வகையில் பாதுகாக்கப்படும் தன்மைகள் அதிகரிக்கின்றன.

உண்மையில் பிரிவினைக் கோரிக்கைகளை சமஷ்டி அல்லது சுயாட்சி அமைப்புமுறை தடுக்கலாம். ஏனெனில் இதன்மூலம் வெவ்வேறு இனக்குழுக்கள் பிரதான அரசியல் நீரோட்டத்தில் போட்டி போடவும் இணையவும் வாய்ப்புக்கள் உண்டு. இதற்கு உதாரணமாக இந்தியாவை எடுக்கலாம். அங்குள்ள மாநிலக் கட்சிகள் மத்திய அரசாங்கத்தில் போட்டி போட்டு அவற்றின் பிரதிநிதிகள் ஆட்சியமைப்பைத் தீர்மானிப்பவர்களாகவும், பிரதம மந்திரியாகவும் ஜனாதிபதியாகவும் அமருபவர்களாகவும் இருந்தால், அவை பிரிவினைக் கோரிக்கைகளை முன்வைக்கமாட்டன அல்லவா? அப்படியான அரசியல் போட்டிகள் ஏற்படும்போது மாநில மட்டத்தில் உள்ள இன அடிப்படையிலான கட்சிகளும் தங்களுக்குள் பிளவுண்டு தாம் ஒன்று சேர்ந்து ஒருபோதும் பிரிவினைக்குச் செல்லாதவகையில் வேறு வேறு துருவங்களாகின்றன. இதற்கு உதாரணமாக, தமிழ் நாட்டின் தி.மு.க, அ.தி.மு.க. ம.தி.மு.க போன்ற கட்சிகளைக் காட்டலாம். தேசிய கட்சிகளுடன் மாறி மாறி கூட்டுச் சேருவதே இவற்றிற்கிடையிலுள்ள போட்டாபோட்டிகளின் சாராம்சமாக இருப்பதைக் காணலாம்.

சுயாட்சி முறைகள் மத்திய அரசாங்கத்திற்கும் பிராந்திய அலகுக்கும் இடையிலுள்ள உறவை, அதிகாரங்களையும் தெளிவாக வேறுபடுத்துவதன் மூலமும், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதன் மூலமும், சுயாதீனமான நிறுவகங்களைக் கட்டுவதன் மூலமும் வரையறுக்கின்றது. இது அரசியலமைப் பாக்கத்திற்கு உதவுகின்றது.

## சுயாட்சி முறைகள் குறித்த எதிர்ப்புக்கள்

சுயாட்சி அமைப்பு முறைகளின் பயனாக தங்கள் வாக்கு எண்ணிக்கை இழந்துவிடும் அச்சம் பெரும்பான்மைத் தலைவர்களுக்கு உண்டு. உதாரணமாக இலங்கையில், ஒற்றையாட்சியின் கீழ் வடக்கு கிழக்குப் பிரதேசங்களிலும் தேசியக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா கட்சி என்பன வாக்குகள் பெற்று பலம் வாய்ந்தனவாகத் திகழலாம். ஆனால் சுயாட்சி வந்தால் அனேகமாக இந்த வாக்குகள் அனைத்தும் பிராந்தியக் கட்சிகளுக்கே இடப்படும் வாய்ப்புக்கள் இருக்கின்றன. இதனால் தேசியக் கட்சிகளின் வாக்குப்பலம் குறைக்கின்றது.

சுயாட்சி வழங்கினால் அது தனியாட்சிக்கு இட்டுச் செல்லாம் என்கின்ற பயமும் பெரும்பான்மையினருக்கு உண்டு. விசேடமாக, சுயாட்சி கோரும் குழுவினர் தங்கள் பிராந்தியத்திலிருந்து தொடரும் அயல் நாட்டில் வசித்தனர் எனில் இந்தப் பயம் பன்மடங்காகும்.

ஒரு சிறுபான்மையினரின் பிரதேசத்துக்கு சுயாட்சி வழங்கப்படுமிடத்து, அந்தப் பிரதேசத்தில் இனி புதிய சிறுபான்மையினர் தோன்ற வாய்ப்புக்கள் உருவாகின்றன. இச்சிறுபான்மையினரும் பின்பு சுயாட்சி கோரக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன என்று பெரும்பான்மையினர் அஞ்சுகின்றனர். மேலும், சிறுபான்மையினரின் கலாசார விழுமியங்களை அங்கீகரித்து அவற்றைச் சட்டமாக்கினால், ஒரு அரசின் அடிப்படை விழுமியங்கள் பாதிக்கப்படலாம் என்கின்ற அச்சமும் பொதுவாகக் காணப்படுகின்றது. இது அனேகமாக இஸ்லாமிய மதத்தைத் தழுவுகின்ற சமூகங்களுடன் காணப்படும் அச்சமாகும். இஸ்லாமிய சட்டங்களின் பெயரினால் இன்று நிறைவேற்றப்படும் பெண்கள் தொடர்பான சட்டங்களும், குற்றமிழைத்தவர் தொடர்பான சட்டங்களும் அடிப்படை மனித உரிமைகளின் பேணலுக்கு அச்சுறுத்தலாக வருகின்றன. அவை அனேகமாக ஒரு நாட்டின் பொது அரசியலமைப்புச் சட்டத்துக்கு ஒவ்வாததாகவும் இருக்கலாம்.

மொத்தத்தில், சுயாட்சி அல்லது சமஷ்டி ஆட்சி முறைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படவேண்டுமெனில் அங்கு கூடிக் கலந்து ஆலோசிப்பதும் விட்டுக்கொடுப்பைச் செய்வதுமான பாங்குடைய அரசியல் கலாசாரம் மலரவேண்டும். இந்த அரசியல் கலாசாரம் இல்லாத நாட்டின் சுயாட்சி இயங்காமல் போகும் அல்லது தனியாட்சிக்கு இட்டுச் செல்லும் (உ-ம் : முன்னாள் யூகோஸ்லாவியா). ஆதலால் இந்நடைமுறை என்ன நடக்கும் என்றே எதிர்வுகூற இயலாத நடைமுறையாகும். இதுவும் அரசியல் தலைவர்கள் மனதில் இது குறித்த அச்சத்தைத் தோற்றுவிக்கும் காரணியாகும்.

## சட்டவாக்க முறைகளின் கட்டமைப்புக்கள்

சட்டவாக்க மன்றங்கள், ''ஒத்துழைக்கும் எதிராளிகளை'', அதாவது எதிர்க்கட்சிகளை சுமுகமாக இயங்க வைக்கும் அமைப்புக்களாகும். இந்த எதிராளிகள் கொள்கையளவில் வேறுபட்டாலும் தங்களுக்கிடையில் உள்ள முரண்பாடுகளை வெளிப் படுத்தத் தேவையான கட்டமைப்புக்களின் அடிப்படை களை ஒன்றாகச் சேர்த்து தீர்மானிக்க வேண்டும். அதன் மூலமேயே அம்முரண்பாடுகளுக்கான தீர்வுகளையும் காணவேண்டும். இவை பொதுவில் மூன்று வகைப் படும்:

1. **பாராளுமன்ற அமைப்பு :**

 சட்ட உருவாக்கத்திற்கும் அதன் நிறைவேற்று தலுக்குமான பிரதான அதிகாரமாக பாராளு மன்றம் இயங்குகின்றது.

2. **ஜனாதிபதி அமைப்பு :**

 சட்டவாக்கத்திற்கு பாராளுமன்றம் பொறுப்பாக இருக்கும் அதேவேளையில் அதன் நிறைவேற்று தலுக்குரிய அதிகாரத்தினை ஒரு ஜனாதிபதியும் அவரின் அமைச்சரவையும் கொண்டிருத்தலாகும்.

3. **கலப்பு ஜனாதிபதி அமைப்பு:**

 இங்கு சட்டங்களை செயற்படுத்தும் அதிகாரம் பாராளுமன்றத்தின் தலைவரான பிரதம மந்திரியிடமும் ஜனாதிபதியிடமும் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றது.

---

**புதிய தீர்வுகளைக் கண்டு பிடித்து முரண்நிலைகளை உருமாற்றுவதற்கு...**


☞ பொற்காலமான எதிர்காலம் ஒன்றைப் பற்றிய தரிசனம்

☞ புத்தாக்கமான சிந்தனை

இவை இரண்டுமே தேவை

**சட்டவாக்க மன்றங்கள், அல்லது சட்டவாக்கப் பதவிகள், "ஒத்துழைக்கும் எதிராளிகளை", அதாவது எதிர்க்கட்சிகளை, ஒன்றாக இயங்க வைப்பதற்கான விதிகளைக் கொண்டு இயங்குவன.**

# தேர்தல் முறைகள்




**தே**ர்தல் - மக்களாட்சியின் மிக சக்தி வாய்ந்த ஆயுதம். மக்கள் தங்கள் ஆணையை மேற்கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையாகும். தேர்தல் என்பது தம்மை ஆளுபவர்களைத் தீர்மானம் செய்யும் நடவடிக்கை என்றே பொதுவாக எல்லோரும் நினைக்கின்றனர். உண்மையில் அதுவல்ல.

ஒரு நாட்டின் சகல விடயங்களையும் சுதந்திரமாகத் தீர்மானிக்கும் அதியுயர்ந்த அதிகாரம் மக்களின் இறைமை ஆகும். இந்த அதிகாரத்தைப் பிரயோகித்து ஒரு நாடு நடத்தப்படுவதற்கான அடிப்படைக் கொள்கைகளை அவர்கள் தாம் தீர்மானிக்கவேண்டும். இதுதான் ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டமாகும். அது மட்டுமன்றி, நாட்டின் நிர்வாக முறைகளையும் கொள்கைத் திட்டமிடல் செயலாக்கங்களையும் உண்மையில் அவர்களே மேற்கொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் சமூகங்களில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும். ஆனால் எல்லோரும் ஆயிரக்கணக்காக சேர்ந்து ஒன்றாக இந்த வேலைகளைச் செய்ய முடியாதென்பதனாலேயே அவர்கள் இவற்றைச் செய்யவெனத் தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்து அனுப்புகின்றனர். இவ்வாறு தெரிவு செய்யும் முறையே தேர்தல்களாகும்.

மக்கள் தெரிவு செய்யும் இந்தப் பிரதிநிதிகள் பாராளுமன்றம் என்கின்ற மன்றினுள் சென்று எமது நாடு நிர்வகிக்கப்படும் முறையையும், சட்டம் ஒழுங்கு பேணப்படும் முறையையும், பொருளாதார சமூக உறவுமுறைகள் பேணப்படும் முறையையும் நிர்ணயிக்கும் சட்டங்களை உருவாக்குகின்றனர். இவை எமது அரசியலமைப்புச் சட்டமாகவும், எமது சிவில் குற்றச் சட்டங்களாகவும், பொருளாதாரக் கொள்கைச் சட்டங்களாகவும் உருவாகின்றன. இதைச் சட்டவாக்க அதிகாரம் என்போம்.

இதைத் தவிர, இச்சட்டங்கள் செயற்படுத்தப்படும் விதங்களை அமைச்சரவைகளையும் திணைக்களங்களையும் ஸ்தாபிப்பதன் மூலம் தீர்மானிக்கின்றனர். இதை நிறைவேற்று அதிகாரம் என்போம்.

சட்டவாக்க அதிகாரமும் நிறைவேற்று அதிகாரமும் எமது அரசியலமைப்புச் சட்டத்திற்கமைய செயற்படுத்தப்படுவதைக் கண்காணிக்கவே நீதித் துறை இருக்கின்றது.



சட்டவாக்க அதிகாரமும் நிறைவேற்று அதிகாரமும் நீதித்துறையும் மக்களின் இறைமையின் பெயரால் சில குறிப்பிட்ட தெரிவு செய்யப்பட்ட, மற்றும் நியமிக்கப்பட்ட நபர்களினால் செயற்படுத்தப் படுகின்றது.

இந்த அமைப்பில், ஒரு நாட்டின் சகல மக்களையும் இந்தச் சில நபர்கள் உரிய முறையில் பிரதிநிதித்துவம் செய்யவேண்டும். அந்த ஒவ்வொரு பிரதிநிதியும் தன்னை அனுப்பிய மக்களின் சார்பில் தான் இயங்கு வதற்கான சம-அதிகாரத்தைக் கொண்டிருக்கவேண்டும். இவ்விரண்டு நிபந்தனைகளையும் திருப்திப்படுத்தும் நோக்கில்தான் தேர்தல் சட்டங்கள் உருவாக்கப் படுகின்றன.

## உலகில் காணப்படும் தேர்தல் முறைகள்

### 1. பன்முகப் பெரும்பான்மை அடிப்படையிலான தேர்தல் முறைகள்

அ. ஆகக்கூடிய வாக்குகளைப் பெற்றவர் வெல்லுதல் (First past the Post) போட்டியாளர்களில் ஆகக் கூடிய வாக்குகளைப் பெற்றவர் வெல்லும் எளிய முறையாகும்.

ஆ. குழும வாக்கு (Block Vote)

இந்தத் தேர்தல் முறை சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாக்க முயற்சிக்கும் ஒரு தேர்தல் தொகுதியில் எத்தனை ஆசனங்கள் இருக் கின்றனவோ அத்தனை வாக்குகள் அங்குள்ள மக்களுக்குத் தரப்படும். இந்த வாக்குகளை ஒவ் வொருவரும் தாம் விரும்பிய ஒரே வேட்பாளர் களுக்கும் போடலாம் அல்லது வெவ்வேறு வேட் பாளர்களுக்கும் போடலாம். கூடிய வாக்குகள் பெற்ற வேட்பாளர்கள் தேர்தலில் வெற்றிபெற்ற வராகக் கருதப்படுவார்.

குழும வாக்கு முறையில் கூடிய ஆசனங்கள் உள்ள தொகுதிகளில் (அதாவது பொதுவாக நகர்ப்புறத் தொகுதிகளில்) உள்ள மக்களுக்கு அதிக வாக்குகள் தரப்படுவதனால் இதனை ஒரு சிறந்த ஜனநாயக முறை என்று கூற முடியாது.

இ. மாற்று வாக்கு (Alternative Vote)

இந்த முறையில் வாக்காளர்களுக்கு மூன்று விருப்பு வாக்குகள் தரப்படும். வாக்குகளை எண்ணும் முதல் சுற்றில் முதலாவது விருப்பு வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் தெரிவு செய்யப்படுவார். இவர் வாக்காளர்களின் மொத்த எண்ணிக்கையின் ஐம்பது வீதத்திற்குக் கூடிய வாக்குகளைப் பெற்று விட்டாரெனில் வெற்றி பெற்றவராகக் கணிக்கப் படுவார். ஆனால் அவ்வாறு பெறவில்லையெனில், இரண்டாம் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு முதல் விருப்பு வாக்குகளுடன் சேர்க்கப்படும். இதிலும் ஒருவருக்கும் ஐம்பது வீதத்திற்குக் கூடிய வாக்குகள் பெறப்படவில்லையாயின் மூன்றாம் விருப்பு வாக்குகள் எண்ணப்பட்டு அவற்றின் எண்ணிக்கையும் முதலிரண்டு விருப்பு வாக்கு களின் எண்ணிக்கையுடன் சேர்க்கப்படும்.

### 2. விகிதாசார தேர்தல் முறை

இது, கட்சி தனிநபரைவிட முக்கியத்துவப் படுத்தப்பட்ட முறையாகும். ஒரு கட்சி நாடு முழுவதும் பெற்ற வாக்குகள் பாராளுமன்றத்தில் அதன் பிரதிநிதித்துவத்தில் பிரதிபலிக்கவேண்டி கொண்டு வரப்பட்ட முறையாகும். ஆகவே, இங்கு ஒவ்வொரு தொகுதியிலும் ஒவ்வொரு கட்சியும் பெற்ற வாக்குகளின் வீதங்களின் அடிப்படையிலேயே அவற்றின் ஆசனங்கள் பிரிக்கப்படும்.

விகிதாசாரத் தேர்தல் முறை ஏதாவது ஒரு கட்சி அறுதிப் பெரும்பான்மை எடுப்பாதைத் தடுத்து நிற்கும். இதனால் கூட்டணி ஆட்சியே பெரும் பாலும் பேணப்படும். இக்காரணங்களி னால் ஸ்திரமான ஆட்சி அனேகமாக இருக்காது. ஆயினும் அரசியல் கட்சிகளிடையே ஒத்துழைப் பினைக் கூடியளவு வேண்டி நிற்கும். வாக்காளர் கள் கட்சியை முதன்மைப்படுத்தியே தங்கள் வாக்குகளை வழங்குவதாலும், ஒரு குழு வேட் பாளர்கள் ஒரு பிரதேசம் முழுவதிலும் போட்டி போடுவதனாலும் வாக்காளர்களுக்கும் அவர் களின் பிரதிநிதிகளுக்குமிடையேயான தொடர்பு கள் இங்கு வெகுவாகக் குறைகின்றன. பிரதிநிதி களும் தமக்கு வாக்களித்தவர்களுக்கு கணக்குக் காட்ட வேண்டிய தேவையின்றி இயங்கத் தலைப்படுவர்.

### 3. கலப்பு விகிதாசார முறை

இம்முறையில் பன்முகப் பெரும்பான்மை முறை களும் விகிதாசார முறைகளும் கலந்திருக்கும். இதன்படி பாராளுமன்றத்திலுள்ள அங்கத்தவர் களில் ஒரு சிலர் விகிதாசார முறைப்படி தேர்ந்

தெடுக்கப்பட ஏனையோர் தொகுதிவாரியாக பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**4. இன விகிதாசார முறை**

இம்முறையில் ஒவ்வொரு தொகுதியிலும் தெரிவு செய்யப்பபடும் அங்கத்தவர்களின் இன விகிதா சாரம் முன்னரேயே தீர்மானிக்கப்பட்டிருக்கும். ஆகவே வாக்காளர்கள் இனத்தைத் தவிர்ந்த காரணிகளையொட்டியே தமது வாக்குகளைக் கொடுப்பர். இதன் மூலம் இனரீதியான போட்டி கள் குறைக்கப்படுகின்றன.

| | பாராளுமன்றம் | ஜனாதிபதி | கலப்பு ஜனாதிபதி |
|---|---|---|---|
| அனுகூலங்கள் | நிறைவேற்று அதிகாரத்தில் சகல குழுக்களும் பங்கு பற்றச் செய்யலாம்<br><br>அதிகாரவலுக்கள் வெவ்வேறு படிநிலைகளிலும் ஒன்றையொன்று சமப்படுத்தப்படுத்திக் கொண்டிருக்கும்<br><br>நெகிழ்ச்சித் தன்மையுடையது. பாராளுமன்ற கூட்டமைப்புக்கள் புதிய தேர்தல்களின்றியே மாற முடியும். | நாட்டையும் சகல தேசியங்களையும் ஒன்றிணைக்கும் பதவியாகும்.<br><br>வாக்காளர்களால் அடையாளம் காணப்பட்ட, நேரடியாக அவர்களுக்கு கணக்குக் காட்ட கடமைப்பட்ட தலைமைத்துவம்<br><br>வாக்காளர்களுக்குக் கூடிய தெரிவு தரக்கூடியது<br><br>கொள்கை வகுத்தலில் கூடிய தொடர்ச்சி | பாராளுமன்ற முறையிலும் ஜனாதிபதி முறையிலும் இருக்கின்ற அனுகூலங்களை இணைத்துக் கொள்ளலாம்<br><br>பாராளுமன்றத்தினதும் ஜனாதிபதியினதும் ஒத்தியங்கல் தேவைப்படும். |
| பிரதிகூலங்கள் | இயங்குவதற்குத் தேவையான பெரும்பான்மையில்லாவிடில், அல்லது ஏதும் மசோதாவினால் அவ்வகையான நெருக்குதல் உண்டானால் ஸ்தம்பிதம் அடையலாம்.<br><br>தீர்மானங்கள் கூட்டாக ஒரு அமைச்சரவையின் மூலம் எடுக்கப்படுவதால் நேரடியாக ஒரு தலைமைத்துவம் கணக்குக் காட்டுகின்ற தன்மை குறைவு. ஸ்திரத்தன்மை குறைவு | அதிகாரம் ஒருவரில் குவிக்கப்பட்டிருக்கும்<br><br>பெரும்பான்மை வாக்காளரினால் தெரிவு செய்யப்படுபதனால் பெரும்பான்மையினரின் பிரதிநிதியாக இருக்கும் அபாயம்<br><br>அனேகமான நாடுகளில் ஜனநாயகம் வீழ்ச்சியடைவதற்கான ஒரு காரணியாக இருப்பது. | ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்கும் இடையிலான அதிகாரப் போட்டியினால் ஸ்தம்பித நிலை<br><br>ஆட்சியதிகாரம் இரண்டுக்குள்ளும் எவ்வாறு பங்கிடப்பட்டுள்ளது என்பது தெளிவில்லாத தன்மை |

**உசாந்துணை :**


*Doucet, lan. Consultant editor. Resource Pack for Conflict Transformation International Alert - Nov 1996*

*Harris, Peter; Reilly, Ben ed. "Democracy and Deep-Rooted Conflict: Options for Negotiations"*

*International Institute for Democracy and Electoral Assistance - 1998. Ljubljana*

*Abarbanel, Joyce. Manual on Conflict Management*

*Hunt, Swanee. Posa, Cristina; "Women Waging Peace" Cernegie Endowment for International Peace. 2001*


**பதப்பிரயோகங்கள்**

| | | |
|---|---|---|
| விடயப்பிரச்சினை அல்லது எழுபொருள் | - | Issue |
| வகிபங்கு | - | Role |
| அதிகாரவலு | - | Power |
| எதிர்வினை | - | Response |
| தன்னடையாளம் | - | Self Identity |
| உருத்து | - | Legitimacy |
| முறைவழி | - | Process |
| எடுத்துக் கூறல் | - | Advocacy |
| கணக்குக் காட்டல் | - | Accountability |
| திட்டமுன் மொழிவு | - | Project Proposal |
| ஒழுகு விதிகள் | - | Code of Ethics |
| பொறி முறைகள் | - | Mechanisms |
| கட்டமைப்புக்கள் | - | Structures |
| சம்பாஷணை நிகழ்வுகள் | - | Talk Shows |
| மெய்நிலையுணர்வு | - | Awareness |
| கருத்தேற்பு | - | Concept |
| அனுசரணை | - | Facilitation |
| மத்தியஸ்தம் | - | Mediation |

# விழுது பற்றி. . . . . .

ஒரு விருட்சம் கிளை பரப்பி திக்கெட்டும் அகன்று வளர எவ்வாறு அதன் விழுதுகள் ஆதரிக்கின்றனவோ, அவ்வாறே மக்களின் வலையமைப்புக்கள் கிளை விட்டுப் பலம் பெற்றுப் பரவுவதற்கான ஆதரவை நல்க விழுது என்னும் நிறுவனம் உருவானது.

## எங்கள் தொலைநோக்கு. . . .

மக்கள் நெறிப்படுத்தி கண்காணித்துப் பங்குகொள்ளும் ஜனநாயகம் உள்ள சமூகம்

## எங்கள் பணி நோக்கு. . . .

மனித ஆற்றல்களை வளப்படுத்துவதற்கூடாக, அரச தனியார் மற்றும் அரசு சாரா நிறுவகங்களுக்குள் ஜனநாயகப் பண்பாட்டை வளர்த்து, மனிதர்களின் பங்கேற்புக்கான பொறிமுறைகளை தாபிக்க உதவுதல்.

## எங்கள் அணுகுமுறை . . . . . . .

- மக்கள் நிறுவனங்களையும் துறை சார்ந்த அமைப்புக்களையும் நிறுவுதலும், ஊக்குவித்தலும்
- அபிவிருத்தி சார்ந்த பயிற்சியும், களத்திலான திட்டச் செயற்பாட்டு உதவியும் வழங்கல்
- தொடர்புகளை உருவாக்கி கருத்துக்களினால் போஷித்து நிறுவனங்கள் மற்றும் குழுக்களின் வலையமைப்புக்களுக்கு அனுசரணையாயிருத்தல்
- சமத்துவமும் சமானத்துவமும் கொண்டுவரும் கொள்கைச் சட்ட மாற்றங்களுக்காக எடுத்துரைத்தல்
- ஆய்வுகள் மற்றும் வெளியீடுகள் மூலம் அறிவு உருவாகத்திலும் அதன் பரப்புதலிலும் ஈடுபடல்
- வறுமையினாலும் கல்வியின்மையினாலும் தாழ்த்தப்பட்டு இருக்கும் சமூகத்தினருக்கு எழுத்தறிவு, அரங்கச் செயற்பாடு, மற்றும் கலை நடவடிக்கைகளுக்கூடாக அவர்களின் பிரச்சினைகளுக்கான குரல் கொடுத்தல்.

## எங்கள் உபாய மார்க்கங்கள் . . . . . . .

கல்விச் சமூகத்தின் விழிப்பு

சிவில் சமூகத்தின் இயக்கம்

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் அரசியல் அமைப்புக்களின் ஜனநாயகக் கட்டமைப்புக்களில் வளர்ச்சி

பால்நிலை அபிவிருத்தி

அரங்கக் கலையின் மலர்ச்சி

தனியார் துறையினரின் விருத்தி

சமாதானம் வேண்டும் என்று ஏங்கித் தவிக்கும் எங்கள் சமூகத்தில் "அதை அடைவதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்" என்று கேட்டால் "அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச வேண்டும். நாங்கள் என்ன செய்யலாம்?" என்று சொல்லக் கேட்டிருக்கிறோம்

சமாதானம் என்பது வெறுமனே ஒப்பந்தங்களுடன் வந்து விடும் விடயமல்ல. அது பல தளங்களில் பலரின் பல்வேறு முயற்சிகளினூடாக நடைமுறைக்கு வரும் தொடர் தேடல்.

இத்தேடல் முறைவழியொன்றின் அடிநாதமாக ஜனநாயப் பண்புகளும் விழுமியங்களும் இருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார் சாந்தி சச்சிதானந்தம். மக்கள் மத்தியில் தோன்றும் அதிருப்திகளையும் அநீதிகளையும் தோற்றுவிக்கும் காரணிகளைக் கண்டுபிடித்து அவற்றை மாற்றும் கட்டமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும் என்பதோடு, இந்த மாற்றத்தை ஏற்படுத்துவதில் ஆண்களும் பெண்களும் சரிநிகர் சமானமாக பங்கெடுக்கும் நிலையைத் தோற்றுவிக்க சில வழிமுறைகளை சுட்டிக் காட்டுகிறார்.

இரண்டு தசாப்தங்களாக யுத்தம் நடந்த இந்நாட்டில் சமாதானம் மலரவேண்டுமெனில் எங்கள் அரச கட்டமைப்புக்கள் மாற வேண்டும். இலங்கையில் சமூகங்கள் எவ்வாறு வாழவேண்டும் என்ற ஒரு புத்தாக்க தரிசனம் உருவாக வேண்டும்.

விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகம் பற்றிய யோசனைகள் ஒரு புத்தாக்க சிந்தனையை அரசியல் கட்சிகளிடமும் மக்கள் மத்தியிலும் ஏற்படுத்தத் தூண்டுவதற்கான ஒரு கருவி. அதை அப்படித் தான் பார்க்க வேண்டும் இப்படியான ஒரு புத்தாக்க சிந்தனையை ஏற்படுத்தும் பொறுப்பை அரசியல் வாதிகளிடம் மாத்திரம் விட்டுவிடாமல் சிவில் சமூகமும் பொறுப்பு எடுக்க வேண்டும்.

"நாங்கள் என்ன செய்யலாம்" என்பதின் பல பரிமாணங்களைச் சுட்டிக்காட்டும் அதே நேரத்தில் அச் சமாதான முறைவழியில் பங்கேற்க வேண்டுமெனில் ஆர்வலர்கள் எப்படி, எவ்வாறான திறன்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதை பயிற்சிகளினூடாக காட்டுகிறார் ஆசிரியர்.

தமிழில் சில மொழிபெயர்ப்பு நூல்கள் இருந்தாலும், பெரும்பாலும் தமிழ் மொழியில் சிந்தித்து எழுதப்பட்ட இந்நூல் சமாதான முறைவழியில் இணைந்து கொள்ள யோசிக்கும் சகலருக்கும் ஒரு சிந்தனைப் பாலமாக அமையும்.

